
# அந்த 18 நாட்கள்

(எதார்த்த நாவல்)




கலையார்வன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


26

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்த 18 நாட்கள்

(எதார்த்த நாவல்)




**கலையார்வன்**

259789

பொது சன நூலகம்
21 NOV 2017
மாநகர சபை
யாழ்ப்பாணம்

KOHA

வெளியீடு

**திருமறைக் கலாமன்றம்**

238, பிரதான வீதி,

யாழ்ப்பாணம்.

259789 CC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

894.8113

**அந்த 18 நாட்கள்**

நாவல்

**நாவலாசிரியர் :**
கலையார்வன் (கு. இராயப்பு)

**வெளியீடு :**
திருமறைக் கலாமன்றம்
238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

**அட்டை, கணினி மற்றும் வடிவமைப்பு :**
ஜெயந்த் சென்ரர்

**அச்சுப்பதிப்பு :**
யே. எஸ். பிரின்டர்ஸ்

**முதற்பதிப்பு :**
ஐப்பசி 2017

**பதிப்புரிமை :**
ஆசிரியர்

**பக்கங்கள் :**
XVI + 152

**விலை :**
350/=

**Anthe 18 Naalkkal**

Novel

**Novelist :**
Kalayarvan (K. Rayappu)

**Published by :**
Centre For Performing Arts
238, Main Street, Jaffna.

**Cover, Computer and Layout :**
Jeyanth Centre

**Print by :**
J.S.Printers

**First Edition :**
October 2017

**Copy Right :**
Author

**Pages :**
XVI + 152

**Price :**
350/=

International Standard Book Number
ISBN 978-955-0197-07-1

**இந்நூலுக்கான நிதியுதவியை வழங்க முன்வந்த**
**கனடாவை வதிவிடமாகக்கொண்ட**
**பத்திநாதர் பீற்றர் (நவின்சந்திரன்)**
**அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்**
**கொள்ளுகின்றோம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



KOHA
JPL

அந்த 18 நாட்களில் துன்பத்தை அனுபவித்து
தற்போது எம்மை விட்டுப் பிரிந்தவர்களான
எட்வாட்டர், ஜேக்கப், யேசுராசா
ஆகியோருக்கு இந்நூல் அர்ப்பணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவல் எழுதுவதில் முன்னைய நூல்களில் கடந்துவந்த அனுபவ வெளிப்பாடு 'அந்த 18 நாட்களில்' இன்னும் துலங்கும்

**கி. செல்மர் எமில்**
(ஊடக இணைப்பாளர், திருமறைக் கலாமன்றம்)

திருமறைக் கலாமன்றத்தின் நூல் வெளியீட்டு வரிசையில் மற்றுமொரு வரவாக கலையார்வன் கு. இராயப்புவின் 'அந்த 18 நாட்கள்' என்ற நாவலை வெளியீடு செய்வதில் பெருமகிழ்வடைகின்றோம். இது திருமறைக் கலாமன்றம் வெளியீடு செய்கின்ற இரண்டாவது நாவல். இதற்கு முன்பாக கொழும்பு திருமறைக் கலாமன்றத்தின் வெளியீடாக எஸ். ஏ. உதயனின் 'வாசாப்பு' என்ற நாவல் 2010 ஆம் ஆண்டில் வெளியீடு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கலை, இலக்கியத் தளத்தில் அரை நூற்றாண்டைக் கடந்து பயணிக்கும் திருமறைக் கலாமன்றம், அரங்கச் செயற்பாடுகளுடன் மட்டும் நின்றுவிடாது பல்வேறு வகையான செயற்பாடுகளையும் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றது. இதன் ஒரு பகுதியாகவே நூல் வெளியீடுகள் அமைகின்றன.

இதுவரை, நாடகம், நாட்டுக்கூத்து சார்ந்த நூல்களையே மன்றம் அதிகளவில் வெளியிட்டிருந்தாலும் அவ்வப்போது கவிதை, சிறுகதை, காவியம் என பல்வேறு துறைசார்ந்த நூல்களையும் வெளியீடு செய்துள்ளது. இவ்வாறு வெளியீடு செய்யப்பட்ட நூல்களின் ஆசிரியர்கள் ஏதோ ஒரு வகையில் திருமறைக் கலாமன்றத்துடன் தொடர்புபட்டவர்களாக இருந்துள்ளார்கள் என்பது கவனத்துக்குரியது.

இந்நூல்களில் பலவற்றை மன்றம் முழுமையாகப் பொறுப்பேற்று வெளியிட்டிருந்தாலும், ஏனைய பலவற்றை நூலாசிரியர்கள் அச்சிட்டு திருமறைக் கலாமன்றத்தின் வெளியீடாக தமது நூல் வெளிவரவேண்டும் என்ற பெருவிருப்புடன் வெளியிட்டுள்ளார்கள். இந்த இரண்டாவது வகைக்குள் அடங்குவதே 'அந்த 18 நாட்கள்' நாவல் ஆகும்.

கலையார்வன் கு. இராயப்பு ஆர்ப்பாட்டமில்லாது அமைதியாக இருந்து பல்வேறு பணிகளை ஆற்றிவருகின்ற ஒருவர். தான் சார்ந்த குருநகர் சமூகத்தின் மீது ஆழ்ந்த பற்றும் பாசமுமுள்ளவர். மிகக் குறுகிய காலத்தில் பல நூல்களை எழுதி இலக்கிய உலகிற்கு தந்துள்ள இவரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல நூல்கள் குருநகர் மண்ணோடு தொடர்புபட்டவை. இவற்றுக்கூடாக கடந்தகால யுத்த அனர்த்தங்களின்போது அந்த மண் சந்தித்த கொடுமையான அனுபவங்களை எதிர்கால தலைமுறையினருக்கு கையளிக்கக்கூடிய வகையில் ஆவணமாக்கியவர். இப்போது வெளியிடப் படுகின்ற இந்த நாவலின் கதை யுத்தத்தோடு தொடர்புபட்டதல்ல. ஆனால், குருநகர் மண்ணின் மனிதர்கள் சிலர் சந்தித்த வரலாற்றில் மறக்கப்பட முடியாத சம்பவமொன்றின் பதிவு இந்நாவலில் வெளிக்கொணரப் படுகின்றமையைக் காணலாம்.

திருமறைக் கலாமன்றத்திற்கும் கலையார்வனுக்கும் இடையிலான தொடர்பு நீண்ட காலத்தைக் கொண்டது. மன்றத்தின் ஆரம்பகாலப் பணிகளில் - அரங்கச் செயற்பாடுகளில் தன்னை அர்ப்பணித்து நின்ற இவர், பின்னைய காலங்களில் புலம்பெயர்ந்த வாழ்க்கை உள்ளிட்ட பல காரணங்களால் மன்றத்தின் பணிகளில் இணைந்துகொள்ள முடியாத சூழ்நிலை ஏற்பட்டபோதிலும் அதன் ஆதரவாளனாகத் தொடர்ந்தும் இருந்து வருகின்றார். குறிப்பாக கடந்த 2005 ஆம் ஆண்டு முதல் எமது வெளியீடான 'கலைமுகம்' சஞ்சிகையின் தயாரிப்புப் பணிகளில் கணினி சார்ந்து அவர் ஆற்றிவருகின்ற பணி போற்றுதலுக்குரியது. அதன் வடிவமைப்பு சார்ந்து நாம் எடுக்கின்ற எல்லா முயற்சிகளுக்கும் மனங்கோணாது, சலிப்படையாது பூரணமான ஒத்துழைப்பை வழங்கி வருபவர். இத்தகைய ஒருவரின் நூலை திருமறைக் கலாமன்றம் தனது வெளியீடாக வெளிக்கொண்டு வருவதில் மனநிறைவு கொள்கின்றது.

'அந்த 18 நாட்கள்' கலையார்வனின் நான்காவது நாவலாகும். இதற்கு முன்பாக 'உப்புக்காற்று', 'வேப்பமரம்', 'வெள்ளைச்சேலை' ஆகிய மூன்று நாவல்களை வெளிக்கொணர்ந்துள்ளார். நாவல் எழுதுவதில் இந் நூல்களில் கடந்துவந்த அனுபவ வெளிப்பாடு 'அந்த 18 நாட்களில்' இன்னும் துலங்கும் என எதிர்பார்க்கலாம்.

கலையார்வன் கு. இராயப்பு தொடர்ந்தும் பல நூல்களை எழுதி இலக்கிய உலகிற்கு தருவதுடன், குருநகர் மண்ணிற்கு மேலும் பெருமை சேர்க்க வேண்டும் என எதிர்பார்த்து அவரை வாழ்த்தி நிற்கின்றோம். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிரோடு இரண்டறக் கலந்துவிட்ட 155 நாட்கள்

**பத்திநாதர் பீற்றர்**
(நவின்சந்திரன்)

நாங்கள் ஐந்து பேர், 1963 ஆனி 14 அன்று முல்லைத்தீவில் இருந்து தொழிலுக்குச் சென்றது முதல் 1963 கார்த்திகை 17 இல் வீடு வந்து சேரும்வரை உள்ள 155 நாட்களில், 18 நாட்கள் ஆழ்கடலிலும் ஏனைய நாட்கள் அந்நிய நாட்டிலும் அனுபவித்த இன்னல்கள் ஏராளம். தவிப்புகள், ஏக்கங்கள் கணக்கில் அடங்காதவை. அவை அப்பொழுது பெரும் அதிர்வை ஏற்படுத்தியபோதும் எந்தவொரு பதிவுகளும் இல்லாமல் நாளடைவில் மறக்கப்பட்டதாக ஆகிவிட்டன.

அதிர்ச்சியும் அதிசயமும் நிறைந்த, மனதைவிட்டு அகலாது உயிரோடு இரண்டறக் கலந்துவிட்ட 155 நாட்களின் நிகழ்வுகளை மறந்தவர்க்கு நினைவூட்டலாகவும், அறியாதவர் அறிந்துகொள்வதற்கு ஏதுவாகவும் வெளிப்படுத்த வேண்டுமென்ற எண்ணம் நீண்ட நாட்களாக என்னுள் வளர்ந்துகொண்டே வந்தது.

கனடாவில் வசித்துவரும் நான், ஆனி மாதம் விடுமுறையில் வந்திருந்த போது, என் எண்ணத்தை வெளிப்படுத்தியதும், 155 நாள் நிகழ்வுகளையும் மிகக் குறைந்த காலத்தில் நாவலாக எழுதுவதற்கு 'கலையார்வன்' (கு.இராயப்பு) எடுத்துக்கொண்ட முயற்சியால், எனது பத்து வருடக் கனவு மரமாகக் கண்டேன். அளவிட முடியாத மகிழ்ச்சியடைகிறேன்.

இதுவரை குருநகர் மக்கள் அனுபவித்த துன்ப, துயரங்களை பல நூல்களில் 'கலையார்வன்' வெளிக்கொண்டு வந்திருக்கிறார். அந்நூல்களில் சிலவற்றை வாசித்துமிருக்கிறேன். அவற்றில் ஒன்றாக இந்நூலும் அமைந்திருக்கின்றது. இதேபோன்று மறக்கப்பட்ட, மறைக்கப்பட்ட நிகழ்வுகளை கண்டறிந்து வெளிக்கொண்டுவர வேண்டுமென்பது என்னைப் போன்று புலம்பெயர் நாடுகளில் வாழும் பலரதும் ஆவலாகும். மேலும், கலையார்வனின் கலைப்பணி சிறப்புடன் தொடரவும், இவ்வாண்டு 'எழுத்துத்துறையின் சிறந்த பங்களிப்பிற்கான வாழ்நாள் சாதனையாளர்' விருதை பெற்றுக்கொண்டமைக்காகவும் உளமார வாழ்த்துகிறேன், நன்றி. ■

Peter Pathinathar
Main & Danforth, Av. 2526, AP. 705, M4C1L2, Toronto, ON, Canada.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மைச் சம்பவங்களை நாவலாக எழுதுவதென்பது மிகவும் சவாலானது...

**யோ. யோண்சன் ராஜ்குமார்**
(ஆசிரியர், எழுத்தாளர்)

ஈழத்தின் கலை இலக்கிய புலத்தில் தனது இடைவிடாத தொடர் படைப்புக்களால் இன்று நன்கு அறியப்பட்டு வருகின்ற குருநகரைப் பிறப்பிடமாகக் கொண்ட 'கலையார்வன்' அவர்கள். சிறிய வயதில் இருந்தே கலை இலக்கிய துறையில் நுழைந்தவர். இடையில் அவர் புலம்பெயர்ந்து சென்றாலும் தன் எழுத்துப் பணிகளை கைவிட்டு விடவில்லை. ஆனால், புலப்பெயர்வில் இருந்து மீண்டதன் பின்னரே அவர் ஒரு தொழில்முறை எழுத்தாளனைப்போன்று தொடர்ந்து எழுதி வருகின்றார். இத்தனை படைப்புக்களையும் எழுத இவரால் எப்படி முடிகின்றது என வியக்க வைக்கின்றார். எழுதி எழுதி அவரது எழுத்து பட்டை தீட்டப்பட்டிருக்கின்றது. ஒரே தன்மையான எழுத்தாளனாக, அல்லது ஒரு 'வகைமையாளனாக' இல்லாது அறிவியல், கவிதை, கூத்து, நாடகம், சிறுகதை, நாவல், கவிதை, கட்டுரை, வரலாறு, ஆய்வு எனப் பல துறைகளில் தன்னை நிலைநிறுத்தியுள்ள இவர், 'ஒரு படைப்பாளனால் எப்படி எல்லாத் துறை களுக்குள்ளும் நுளையமுடிகின்றது' என ஆச்சரியப்படவைக்கின்றார்

குறிப்பாக குருநகர் என்ற கிராமம் அவருக்கு அதிகமதிமாக நன்றிக்கடன் பட்டிருக்கின்றது. எத்தனையோ கல்விமான்களும் படைப் பாளர்களும் உருவாகிய மண்ணில் அவர்கள் யாரும் செய்யாத பணிகளை இவர் ஆற்றி இருக்கின்றார். குருநகர் மக்களின் கலை - இலக்கிய முயற்சிகள், பண்பாடு, ஆன்மீகம், தொழில்சார் முறைமைகள் அதன் சமூகவியல் சூழல் அனைத்தையும் தனது எழுத்துக்களால் படம் பிடித்துக்காட்டி இருப்பதுடன் அக் கிராமத்தினை தன்னால் இயன்றளவுக்கு பதிவாக்கி தனது அடுத்த சந்ததிக்கு கடத்துகை செய்துவிட்டிருக்கின்றார்.

'குருநகர் கலைமாட்சி', 'கடலலைகள் கொஞ்சும் நகர்', 'ஆன்மீகத்தில் குருநகர் மக்கள்' போன்ற அவரது நூல்களும், பல்வேறு மலர்களிலும் அண்மைக் காலங்களில் வெளியிடப்பட்ட அவரது கட்டுரைகளும் அந்த வகையில் முக்கியத்துவம் பெறுகின்றன. அது மட்டுமன்றி அக்கிராமம் சுமந்த அவலங்கள், யுத்த காலத்தில் எதிர்கொண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சவால்கள், குண்டு வீச்சுக்கள், வார்த்தையில் அடக்க முடியாத படுகொலை நினைவுகள் போன்றவற்றினை 'குருதிக்குளியல்', 'ஆகுதி', 'அறுவடை', 'உப்புக்காற்று' போன்ற படைப்புக்களினால் காலங்கடந்து வாழும்வண்ணம் எழுத்தாவணப்படுத்தியுள்ளார்.

தமிழர்களின் கூத்துக்கலைக்கு அணிசேர்க்கும் வகையில், 'களம்தந்த களங்கம்', 'கூத்துக்கள் ஐந்து', 'குறுங்கூத்துக்கள்' என பல புதிய கூத்துக்களை ஆக்கி அளித்திருக்கின்றார். அதுமட்டுமன்றி கணினிக் கல்வி அறிமுகமாகிய அக்காலத்தில் அது தொடர்பான தமிழ் நூல்கள் இல்லை என்றிருந்த காலத்தில் 'கணிப்பொறி 2000' என்ற நூலைப் படைத்து அறிவியல் தேவை நிறைவு செய்துள்ளார். அவ்வாறே புலமைப் பரிசில் சிறார்களுக்கு உதவுவதற்கு 'முன்னோடிக் குறிப்புக்கள்' என்ற நூலையும் வெளியீடு செய்துள்ளார். இத்தோடு நிற்காது தனது புலம் பெயர்ந்த வாழ்வின் அனுபவங்களையும் பயணங்களின் தரிசிப்பினையும் 'கடல் கடந்த நாட்கள்' என்னும் பயணக் கட்டுரையாக பதிவு செய்துள்ளார். அவரது படைப்புக்கள் பலவும் சாஹித்ய விருதுகளையும், வடமாகாண இலக்கிய விருதுகளையும், பல்வேறு விருதுகளையும் பெற்று நிற்பது, அவரது ஆக்கச் செம்மைக்கு சான்றாகின்றது. அதுமட்டுமன்றி அவருக்கு அண்மையில் தேசியமட்ட தமிழ்மொழித்தின நிகழ்வில் 'எழுத்துத்துறையின் சிறந்த பங்களிப்பிற்கான வாழ்நாள் சாதனையாளர்' என்ற விருது வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளமையும் அவரது படைப்புக்களுக்கான அங்கீகாரமாக காணப்படுகின்றது.

இத்தகைய பன்முக வெளிப்பாடுகளில் தன்னை ஸ்திரப்படுத்திய கலையார்வன் தனது நாவலாக்கத் திறனுக்கு தற்போது களமமைத்து வருகின்றார். 'குருதிக்குளியல்' என்ற மூன்று குறுநாவல்களுடன் ஆரம்பமாகிய அவரது முயற்சி, தற்போது நான்கு முழு நாவல்களை வெளிக்கொணர்ந்துள்ளது. அவரது நாவல்கள் உண்மை வரலாறுகளை அடியொற்றியவையாக இருக்கின்ற காரணத்தினால் அவையே அவரின் நாவல்களின் பலமும் பலவீனமுமாகின்றன.

கடலும் கடல் சார்ந்த வாழ்வும் மனித் சிக்கல்கள் நிறைந்தது. உலகப் புகழ்பெற்ற பல இலக்கியங்களில் கடலும் கடல் சார்ந்த நெய்தல் நில வாழ்க்கை சித்திரிக்கப்படுகின்றது. தகழி சங்கரப்பிள்ளையின் 'செம்மீன்' உட்பட பல நாவல்கள் இன்றும் பேசப்படுகின்றன். ஈழத்தில் அ.கைலாச நாதனின் 'கடற்காற்று', செங்கை ஆழியானின் 'வாடைக்காற்று', மன்னார் உதயனின் 'லோமியா' என நெய்தல் நிலத்தோடு தொடர்புடைய பல நாவல்கள் வெளிவந்துள்ளன. அந்த வகையில் 'கலையார்வன்' கு.இராயப்பு அவர்கள் 'உப்புக்காற்று' 'வெள்ளைச்சேலை' போன்ற நாவல்களை மீனவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களின் வாழ்வியலோடு படைத்துள்ளார். அவரது மூன்றாவது முழுநீள நாவலாகிய 'அந்த 18 நாட்கள்' என்ற இந்த நாவல், நாவல் இலக்கிய புலத்தினுள் மிக முக்கியமானதொரு வருகையாகக் காணப்படுகின்றது. உண்மைச் சம்பவங்களை நாவலாக எழுதுவதென்பது மிகவும் சவாலானது. அத்தகைய சவாலான பணியினை கலையார்வன் மிகவும் லாவகமாச் செய்துள்ளார்.

1963 ஆம் ஆண்டு குருநகரில் இருந்து முல்லைத்தீவுக் கடற் பரப்பின் ஆழ்கடலுக்குச மீன்பிடிக்கச் சென்று இயந்திரக் கோளாறால் செயலற்று, காற்றில் அகப்பட்டு, சமுத்திரத்தில் பலநாட்கள் தத்தளித்து ஒரிசாவுக்கு இழுத்துச் செல்லப்பட்ட ஐந்து மீனவர்களின் உண்மை வரலாறே, கலையார்வனின் கைவண்ணத்தில் நாவலாக உயிர்பெற்று நெடுங்கதை வடிவத்தில் எழுத்து வடிவம் பெற்றுள்ளது. அந்த மீனவர்கள் கடலில் தவித்த 18 நாட்கள்தான் நாவலின் பெயர். ஆனால், மீனவர்கள் வீட்டில் இருந்து புறப்படுவது தொடக்கம் மீளும் வரையான 161 நாட்களை நாவலின் கதைக்களம் கொண்டுள்ளது.

மீனவ மக்களின் வாழ்வனுபங்களை நன்கறிந்த கலையார்வன், அந்த கடற்காற்றும் அதற்குள் வாழும் வாழ்வனுபவத்தின் வர்ணிக்கமுடியாத மனித சோகங்களும் வாசகனின் மனங்களில் வீசுகின்ற அளவுக்கு தனது எழுத்தோவியத்தினால் இந்நாவலைப் படைத்துள்ளார். கடல் தொழில் சார்ந்த நுணுக்கங்கள், கடலின் இயல்புகள், காற்றுக்களின் இயல்புகள், தொழில் முறைகள், அக்கால வாழ்க்கை முறைகள், கிறிஸ்தவ சடங்கு சம்பிரதாயங்கள் என்ற பல்வேறு பண்பாட்டினடியான கூறுகள் நாவலுக்குள் உறைந்து கிடக்கின்றன. அதேவேளை ஒரு மர்ம நாவலைப்போன்று அடுத்து என்ன நடக்கப்போகின்றது என்ற எதிர்பார்ப்பினை இறுதி வரையும் வாசகருக்கு ஏற்படுத்தி சிறப்பாக கதையை நகர்த்திச் சென்றிருக்கின்றார்.

மகாகவி உருத்திரமூர்த்தி அவர்கள் எழுதிய 'புதியதொரு வீடு' நாடகம் இவ்வாறானதொரு கதையையே தனது பாடுபொருளாகக் கொண்டுள்ளது. அக் கதையானது கற்பனையானது. ஆனால், இந்த நாவலின் கதை உண்மையாக நடந்தது மட்டுமன்றி அந்த சம்பவத்தோடு தொடர்புடையவர்களில் இருவர் இன்னும் உயிரோடு வாழுகின்ற சூழலில் இந்நாவலின் யதார்த்தம் முக்கியத்துவப் படுத்தப்படுகின்றது. கடலுக்குச் சென்றவர்களை காணவில்லை என்று தேடி இறுதியில் அவர்கள் இறந்து விட்டார்கள் என்று இறுதிச் சடங்கை முன்னிறுத்தி, ஏழாம் நாள் 'செலவு'ச் சடங்கை நிறைவேற்றுகின்ற குடும்பங்களின் சோகத்தையும், பலநாட்களாக கடல் நீரையும், சிறுநீரையும் சுவைத்து சமுத்திரத்தில் தத்தளித்துக் கொண்டிருக்கின்ற ஜீவன்களின் அங்கலாய்ப்பையும் முரணணிகளாக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதையை நகர்த்தியுள்ளார். கடல்தொழில் வாழ்க்கை எந்தளவு ஆபத்தானது என்ற பயத்தினை நாவல் தந்துவிடுகின்றது.

உண்மைப் பாத்திரங்களையே கதை மாந்தர்களாக படைத்த முறையிலும், இடர்பாடான சந்தர்ப்பங்களையும் அவற்றில், மனித அவலங் களை 'இரத்தமும் சதையுமான' உணர்வுப் பரிணாமத்துடன் சித்திரித்த முறையிலும், இருவேறு களங்களையே (கடல், தரை) கதைக்கான நிகழ்வுகளின் தொகுதியாக்கி இரண்டின் முரணணியானது நாவலின் நகர்வின் உயிரோட்டமான ஊடுபொருளாக மாறும் வகையில் ஆக்கிய முறையிலும், 'சஸ்பென்ஸ்' எனப்படும் முடிவறியாப் போக்கினை தொடர்ந்து தக்கவைத்த வகையிலும், லாவகமான மொழிக் கையாட்சியை பின்பற்றிய வகையிலும் நாவலாக்க முறையில் கலையார்வன் ஏனைய நாவல்களி லிருந்து முன்சென்றிருக்கிறார் என்று கூறமுடியும்.

இந்நாவலில் படைக்கப்பட்டுள்ள எல்வாட்டர், ஜேக்கப், நவீன் சந்திரா, யேசுராசா, இராசகுலம் ஆகிய கடலில் தவித்த ஐந்து பாத்திரங் களும் மனங்களில் நிற்கின்றன.

குறிப்பாக நவீன்சந்திரா தலைமைத்துவமுடைய பாத்திரமாக வெளிப்படுகின்றார். ஒவ்வொரு பாத்திரங்களினதும் தனித்துவம் ஓரளவுக்கு இனங்காட்டப்படுகின்றது. உதாரணமாக, ஜேக்கப் மது மயக்கம் தீராத நிலையில் லோமியாவுக்கு டீசல் விடாதமை, இயந்திரத்தின் டீசல் ராங்கின் கீழ்ப்பகுதியிலுள்ள கொக்கை சரியாக பூட்டாமை போன்ற கவனயீனமான செயல்களே மாபெரும் அனர்த்தத்திற்கு காரணமாகும்போது அந்தப் பாத்திரத்தில் வாசகர்களுக்கு இயல்பாகவே வெறுப்பு ஏற்படுகின்றது. ஆனால், கடலில் பல நாட்களாக தத்தளித்து தரையே தெரியா சமுத்திர வெளியில் சஞ்சரித்துக்கொண்டு கிடந்தபோது; *"வள்ளம் இப்பிடியே போய்க் கொண்டிருந்தால் நாங்க எங்க போய்ச் சேருறது.. எங்கட முடிவு இதோட தானாக்கும் மனிசி பிள்ளைகள்தான் அனாதையாகிவிடும்"* என அவர் அழும்போது எமக்கும் கண்ணீரை வரவளைத்து விடுகின்றார்.

சம்மாட்டி என்பவர் உறுதியான 'முதலாளி', 'சுயநலம்மிக்கவர்' என்று எங்கள் மனங்களில் இருக்கும் படிமத்தினை இங்கு சம்மாட்டி செல்வநாயகம் உடைத்து விடுகின்றார். திரும்பி வராத தொழிலாளர் களுக்காக அவர் வருந்துவதும், அவர்களை தேடுவதற்கு எடுக்கின்ற நடவடிக்கைகளாலும், குடும்பத்தினருக்கு பதில் சொல்லமுடியாது அங்கலாய்க்கும்போதும் மனங்களில் உயர்ந்து விடுகின்றார்.

அதுமட்டுமன்றி *"அண்ணே எப்பிடியும் வீட்டபோயிடுவம் தானே?" விம்மலுடன் அழுதான் இராசகுலம். அதைப்பார்த்து நவீன்சந்திரா அழுதார்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*தொடராக ஏனையோரும் அழுதனர். "அப்பா எனக்குச் சின்ன சைக்கிள் வேணும்." "முல்லைத்தீவுக்கு தொழிலுக்குப் போறன் அங்க கனக்க உழைப்புக் கிடைக்கும் வந்த உடன உனக்குத்தான் முதலில சைக்கிள் வாங்கித்தருவன். நீ குழப்படி இல்லாமல் அம்மாவட சொல்லக் கேக்க வேணும்." விம்மி விம்மி அழுதார் ஜேக்கப்..'*

போன்றதான பிரதான பாத்திரங்களின் மன அங்கலாய்ப்புக்களை கலையார்வன் வெளிப்படுத்திய சில சந்தர்ப்பங்கள் மனதில் ஆழ நிலைக் கின்றன. உயிர் பிழைத்து ஒரிசாவில் வந்து இறங்கிய நிலையிலும் அங்கு உணவுக்காகப் பிச்சை எடுக்கின்ற நிலைக்கு தள்ளப்பட்ட அவர்கள னைவரையும் மிகவும் பரிதாபத்துக்குரியதாக படைத்து விட்டிருக்கின்றார்.

"குறிப்பிடத்தக்க ஒரு செய்தியைப் பற்றியதாகவும், மாந்தர்களையும் ஆழ்ந்த நோக்கினையும் அடித்தளமாக உடையதாகவும், உரைநடையில் அமைகின்ற புனைகதைதான் நாவல்" (சேம்பர் கலைக்களஞ்சியம்) (ரமேஸ்) என்ற நாவல் பற்றிய எண்ணக்கருவுக்கு அமைய இந்நாவல் அமைந் திருப்பது குறிப்பிடத்தக்கது.

வெறுமனே கதை சொல்வதென்றில்லாது மீனவத் தொழிலுடன் தொடர்புடைய கலைச் சொற்களுக்கு விளக்கம் தருகின்ற வகையிலும், சமுத்திரத்தின் இயல்புகள் காற்றின் இயல்புகள் போன்ற பல்வேறு அறிவியல்சார் விடயங்களை சொல்லிச் செல்லுகின்ற முறை எடுத்துக் காட்டாக,

*"அண்ணே கடல் அலையைக் கவனியுங்க அது நேரத்தான் போகுது. காத்து எங்களுக்கு இடப்பக்க கன்னத்திலதானே விழுகுது. சோழகக் கொண்டலெண்டால் வள்ளம்போற மாதிரிக்கு எங்களுக்குப் பிடரியிலயெல்லா விளவேணும் இது ஏதோ குறுக்கு நீரோட்டத்தின்ர வேலைதான்." "தம்பி குறுக்கு நீரோட்டமெண்டால் இந்த இடம் குடாவாக இருக்கவேணும்."*

அவ்வாறே ஒரிசா மாநிலம் பற்றிய தகவல்கள் அதன் புவியல் அமைப்பு, ஊர்களின் பெயர்கள் அரசியல் அலகு, முக்கிய இடங்கள், போன்றதான விபரங்களையெல்லாம் அவர் அறிந்துகொண்டு, நாவலோடு இணைத்துக்கொண்டு செல்லும் முறைமையானது மிகவும் சிறப்பாகவுள்ளது. மொழி தெரியாத இடங்களிலும் மனிதாபிமானத்தோடு இயங்கும் மாந்தர் களைப் படைத்து சமூகம் பற்றிய பிடிப்பினை ஏற்படுத்துகின்றார்.

*'எழுதப்பட்ட காலத்தின் உண்மையான வாழ்க்கையினையும் வாழ்வின் பழக்க வழக்கங்களையும் வெளியிடும் ஓவியம்தான் நாவல்"* என்ற கிளாரா ரீவீயின் கருத்துக்கமைய 'அந்த 18 நாட்கள்' வரலாற்றில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியம் பெறுகின்றது. காணாமல்போன ஐந்து மீனவர்களும் 161 நாட்களின் பின்பு கிராமத்தினை அடைந்தபோது அங்கு ஏற்படும் மகிழ்ச்சி விவிலியத்தில் கூறப்படும் 'காணாமல்போன மகனின்'உவமையை கண்முன்கொண்டு வருகின்றது அதுமட்டுமன்றி 'யுத்தத்தின் பெருவெளியில் தமது உறவுகளைத் தொலைத்துவிட்டு இன்றும் இறுதிச் சடங்குகளை நிறைவேற்றவும் முடியாமல், உயிரோடு இருப்பார்கள் என்பதனையும் முழுமையாக நம்பவும் முடியாமல் புலம்பிக் கொண்டிருக்கும் எமது உறவுகளுக்கு இத்தகைய மகிழ்ச்சி கிடைக்காதா என்ற அங்கலாப்பும் எழுகின்றது.

இந்த நாவல் 'நாவல் என்ற புனைமம்' போல இலக்கியமாய் இனிக்கின்ற அதேவேளை குருநகர் மக்கள் வாழ்வில் நடந்த உண்மை வரலாற்றுக்கான ஆவணமாகவும் விளங்குகின்றது. கடலை நம்பி வாழும் மக்களின் 'மரணத்துள் வாழும்' வாழ்வை தெளிவாக எடுத்துக்காட்டு கின்றது. இயற்கை என்ற மாபெரும் சக்தியோடு போராடி வாழவேண்டி மனித வாழ்வுக்கான அடிப்படையினை கோடிட்டுக்காட்டி நிற்கின்றது.

எல்லாவற்றுக்கும் மேலாக கலையார்வன் 18 நாட்களை எமது தொன்மங்களுடன் தொடர்புபடுத்தி, நாவலின் கதைக்கருவை அழுத்தம் செய்ததனுடாக தேர்ச்சி மிக்க படைப்பாளியாக மேற்கிளம்பி நிற்கின்றார். அவர் தொடர்ந்து படைக்கவேண்டும் என அவரை மனம் வாழ்த்தி நிற்கின்றது.

*"பதினெட்டு நாட்களில் முடிவுற்ற குருக்ஷேத்திரப் போரைப்போன்று அமைந்துவிட்டது இவர்களின் நிலை. குருக்ஷேத்திரப் போரில் பல்வகைப் பலங்கொண்ட கௌரவ சேனையை, ஆதரவு நாட்டுப் படைகளை எதிர்த்து நின்றனர் பாண்டவர்கள். இவர்களோ சீறிடும் காற்று, பொங்கி எழும் கடல், சுட்டெரிக்கும் வெயில், கொட்டும் மழை, சுழன்றுவீசும் சூறாவளி, பட்டினி, தாகம் போன்ற இயற்கை எதிரிகளை எதிர்த்து நின்றனர். அங்கே தர்மம் வென்றது. இங்கே நம்பிக்கையும் உறுதியும் வென்றது."* ■

**பிரதி இயக்குநர்**

**திருமறைக் கலாமன்றம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எவரையும் பற்றிய புகழ்ச்சியோ, எவரதும் பெருமையைப் பறைசாற்றும் தொகுப்போ அல்ல...

**கலையார்வன்**

(கலாபூஷணம் கு. இராயப்பு)

ஐம்பத்தி நான்கு வருடங்களுக்கு (1963) முற்பட்ட உண்மை நிகழ்வைத் தாங்கி, குருநகர் மக்களின் துன்ப வெளிப்பாட்டின் ஒரு அங்கமாக வெளி வருகின்றது 'அந்த 18 நாட்கள்'. இது எனது இருபதாவது நூலாக வெளிவருவதையிட்டு பெரு மகிழ்வு அடைகின்றேன். இதனோடு சேர்ந்து 'எழுத்துத்துறையின் சிறந்த பங்களிப்பிற்கான வாழ்நாள் சாதனையாளர்' விருது கிடைத்தமையும் மகிழ்வைத் தருகின்றது.

குருநகர் வாழ் மக்களிடையே இனங்கண்ட வாழ்வியல் சிக்கல்கள், பல்வகை சிறப்புக்கள், பண்புகள், வரலாற்றுப் பார்வைகள், போர்க்கால உயிரிழப்புகள், அங்கங்களின் இழப்புகள், சொத்தழிவுகள் பற்றியதாகவே இதுவரை என்னால் வெளிக்கொண்டுவரப்பட்ட ஆக்கங்களில் பல இருந்தன.

2007 ஆவணி மாதம் வெளிவந்த 'குருதிக் குளியல்' என்னும் நூலில்;

10.06.1986 இல் கரைவலைத் தொழிலுக்குச் சென்ற தொழிலாளர்கள் 31 பேர், மண்டைதீவு முனைக் கடலில் கூண்டோடு கொல்லப்பட்ட நிகழ்வு.

10.10.1987 - 22.10.1987 வரையிலான இரு வாரகால இடப்பெயர்வின்போது புனித ஆரோக்கியநாதர் ஆலயச் சூழல், முகத்துவாரக் கடற்பகுதி, புனித பத்திரிசியார் கல்லூரிச் சூழல், யாழ். வைத்தியசாலை முன் வீதி, அராலி கடற் பகுதி ஆகிய இடங்களில் 38 பேர் கொல்லப்பட்ட நிகழ்வுகள்.

13.11.1993 - 05.12.1993 வரை குருநகரில் புனித யாகப்பர் ஆலயம், சின்னக்கடை சந்தை, சென் றோக் சனசமூக நிலையம் ஆகியவற்றை இலக்கு வைத்து நடத்தப்பட்ட விமானக்குண்டு தாக்குதல்களால் சிதறுண்ட கட்டடச் சிதைவுகளில் சிக்குண்டு 27 பேர் கொல்லப்பட்ட நிகழ்வுகள் என்பவற்றை மூன்று குறுநாவல்களாக வெளிக்கொண்டு வந்திருக்கிறேன்.

இவற்றைப் போன்றதொரு வெளிப்படுத்தல்தான் 'அந்த 18 நாட்கள்'...

இது, எவரையும் பற்றிய புகழ்ச்சியோ, எவரதும் பெருமையைப் பறைசாற்றும் தொகுப்போ அல்ல...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழ்கடல் முதல் அந்நிய தேசம் ஈறாக ஐந்தரை மாதங்கள், ஐந்து தொழிலாளர்கள் எதிர்கொண்ட இன்னல்களின் உள்ளடக்கம்.

இவற்றை என்றோ வெளிக்கொண்டுவந்திருக்க வேண்டும். ஆனால், எனது எழுத்துத்துறை நூலாக்கமாக வெளிவரத் தொடங்கிய 1993 இன் பின்னர், சிறுவயதில் நிகழ்ந்த, அறிந்துகொண்ட இந்தச் சம்பவத்தை வெளிப்படுத்துவதற்கு ஏற்புடைய உறுதியான தகவல்களைத் தரக்கூடியவர்கள் சந்திக்கவில்லை. நான் பல ஆண்டுகள் புலம்பெயர்ந்திருந்ததும் ஒரு காரணமாக இருக்கலாம். அப்போது சாத்தியமாகாத ஆவல், எனது இருபதாவது நூலில் நிறைவேறுகின்றது.

இந்நூல் வெளிப்படுத்தும் ஐந்தரை மாதங்களை உள்ளடக்கிய சம்பவத்தில், சம்பந்தப்பட்டவர்கள் ஐந்து பேர். அவர்களில் பத்திநாதர் பீற்றர் (நவின்சந்திரன்), செபமாலை இராசகுலம் ஆகிய இருவரையும் தவிர ஏனைய மூவரும் தற்பொழுது எம்முடன் இல்லை.

நீண்ட காலமாக கனடாவை வதிவிடமாகக்கொண்ட பீற்றர், இவ்வாண்டு விடுமுறையைக் கழிக்க இங்கு வந்திருந்த குறுகிய காலப்பகுதியில், அவரால் வெளிக்கொண்டுவரப்பட்ட, ஏற்றுக்கொள்ளக்கூடிய கணிசமான தகவல்களே நாவலை எழுதுவதற்கான உந்துதலைக் கொடுத்தது.

சம்பவம் நிகழ்ந்தபோது இராசகுலத்திற்கு 17 வயது. அவரால் அன்று நிகழ்ந்தவற்றை ஞாபகத்தில் வைத்திருந்து கூற முடியவில்லை. இருப்பினும், நவின்சந்திரனிடமிருந்து பெறப்பட்ட தகவல்களைக் கூறுகின்றபோது அவற்றை நினைவிற் கொள்ளத்தக்கவராகவும், அவற்றோடு சம்பந்தப்பட்ட மேலும் சிலவற்றை நினைவுகூரக்கூடியவராகவும் இருந்ததால் நிகழ்வை நிதர்சனமாக எழுதத் துணைபுரிந்தது.

1998 ஆம் ஆண்டு நான் சுவிற்சர்லாந்திலிருந்து இங்கு வந்திருந்தபோது, இச்சம்பவம் பற்றிய வெளிப்படுத்தல் ஒன்றின் தேவைக்காக, ஆசீர் யேசுராசாவிடம் (2000 ஆண்டு காலமானார்) கேட்டு அறிந்துகொண்டு வெளிப்படுத்திய தகவல்களில் நினைவில் நிற்பவையும் கைகொடுத்தன.

இச்சம்பவம் நிகழ்ந்த ஆண்டில் நான் எட்டாம் வகுப்பில் கல்வி பயில் கிறேன். இச்சம்பவத்துடன் சம்பந்தப்பட்டவர்களின் வீடுகள் பாடசாலைக்கு அண்மையிலுள்ள மத்திய கிழக்கு வீதியை அண்டியதாகவே இருந்தன. அதனால் பலரும் இந்நிகழ்வு பற்றி உரையாடும் களமாக, கூடும் இடமாக மத்திய கிழக்கு வீதி அமைந்தது.

இந்தச் சம்பவத்தையொட்டி மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள், வெளியாகும் தகவல்களை அறிந்துகொள்ளும் ஆவல் காரணமாக, சில வாரங் களாக எனது நேரக்கழிவு அந்த இடமாகவே இருந்ததால் பலரது கருத்துக்கள், தகவல்களில் கிரகித்துக்கொண்ட விடயங்கள் என் மனப்பதிவைவிட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகலவில்லை. அத்துடன் இத்தொழில்முறை மற்றும் முல்லைத்தீவு கடற்பகுதி பற்றிய முன்னறிவும் இதற்கு உதவியாக இருந்தது என்றும் சொல்லலாம்.

இவற்றைத் தவிர, இச்சம்பவம் தொடர்பாக இங்கு நடந்த நிகழ்வுகளை நினைவில் வைத்திருப்பவர்கள் மிகவும் அரிதாகவே இருந்தனர். உறவினர்களாலுங்கூட மீட்டெடுப்பது கடினமாக இருந்தது. இருப்பினும், பலருடனான உரையாடல் பயனுள்ளதாகவே அமைந்தது.

காலங்கடந்த முயற்சி என்றாலுங்கூட அறிந்ததை, தெரிந்ததை, உணர்ந்ததை வெளிக்கொண்டு வருவதே காலத்தின் தேவை. அந்தத் தேவையின் அடிப்படையில், மறக்கப்பட்ட நிகழ்வாகிச் செல்லும் நிலையில், அந்த 18 நாட்களை நாளைய சந்ததிக்கு கொடுக்க சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு மகிழ்வடைகிறேன். இதற்குக் காரணராயிருந்த நவின்சந்திரன் அண்ணன் அவர்களை மறைக்கவோ, மறக்கவோ முடியாது.

அந்த வகையில்; பல்வேறு சிரமங்களுக்கு மத்தியிலும் கேட்டவுடன் மறுக்காது வழங்கிய வாசிப்புக் குறிப்பானது நூலுக்கு மகுடம் சூட்டிவது போல மதிப்பளிக்கிறது, அலங்கரிக்கிறது. இவ்வாறு பொருத்தமான குறிப்பினை வழங்கிய ஆசிரியர் யோ. யோண்சன் ராஜ்குமார். மற்றும் வெளியீட்டுக் குறிப்பினை வழங்கிய கி. செல்மர் எமில்...

அந்த 18 நாட்களில் அனுபவித்தவற்றை இயன்றவரை வெளிப்படுத்தி நாவலுக்கு உருவம் கொடுக்க ஊக்குவித்ததுடன் அனுசரணை வழங்கிய நவின்சந்திரன்...

நாவலில் நுழைய முனைகையில் சில ஆலோசனைகளை வழங்கியதுடன் எழுத்துக்களுடன் ஒட்டிக்கொண்ட பிழைகளை கண்டறிந்து திருத்திடத் துணை நின்ற எழுத்தாளர் தேவி பரமலிங்கம் மற்றும் றோ.க.கில்பேட்...

கணினி சார்ந்த வேலைகள், அட்டை முதல் பக்க வடிவமைப்பினை மேற்கொண்ட ஜெயந்த் சென்ரர்... குறுகிய காலத்தில் சிறப்பாக அச்சிட்டு வழங்கிய பண்டத்தரிப்பு யே.எஸ்.பிரின்டேர்ஸ்...


மற்றும் இன்னோரன்ன உதவிகளைச் செய்தவர்கள் என அனைவருக்கும் நெஞ்சம் நிறைந்த நன்றிகளைத் தெரிவிப்பதில் மகிழ்வும் பெருமிதமும் அடைவதுடன், அவரவர் கரங்களையும் அன்புறவுடன் பற்றிக் கொள்கின்றேன்...

*'என்னைக் காத்தனன் இறைவன் ஏற்றபணி செய்வதற்கே!'*

இல. 165, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
அலைபேசி : 077 724 9536, மின்னஞ்சல் : kalayarvan@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





நாவலிலுள்ள தடித்த எழுத்துச் சொற்களின் விளக்கம்,
'பின்னிணைப்பு' பக்கங்கள் 147, 148.

நாவல் சார்ந்த நினைவுக் குறிப்புகளைக் குறித்துக் கொள்ளுதல்,
பக்கங்கள் 151, 152.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அந்த 18 நாட்கள்

## ( எதார்த்த நாவல் )

## 01

**வெ**றித்தனமாக வீசி, தூசியை அள்ளி விசிறியவாறே ஊரையே புரட்டியெடுத்து, மக்களை ஒதுங்கிடச் செய்துகொண்டிருந்தது 'சோழகக் காற்றின்' 'தலைக்காற்று'.

நாட்டுக்கூத்தில் அரசனின் வரவு, வீரமான பாடலாலும், துள்ளல் ஆட்டத்தாலும் பார்வையாளரைத் திரும்பிப் பார்க்கச் செய்வதைப் போல, சோழகக் காற்றின் வரவாக வீசும் தலைக்காற்றும் மக்களைத் திரும்பிப் பார்க்கவே செய்யும். இதனாலேயே 'சோழக ராசா வந்திற்றார்' என்று இவ்வூர் மக்கள் சொல்வதுண்டு. மேலும், நாட்டுக்கூத்து கல்வெட்டு பாடல்களில் 'கோடையிடி கொண்டல் கச்சான்...' என்னும் பாடல் வரிகள் சோழகக் காற்றையே 'கோடை இடி' எனக் குறிப்பிடுகின்றது.

குருநகரின் தெற்குப் பக்க விரிந்த கடற்பகுதியிலிருந்து வீசி, உப்புத் தன்மையை காவியவாறு கரையை ஆக்கிரமிக்கும் இக்காற்றின் உந்தலால் உண்டான பாரிய அலைகள், கடல் நீரை நடனமாடச் செய்வதைப் போலவே இருந்தது.

காற்றின் வேகத்தை ஏற்ற கடல்நீர் அடுக்கு அலைகளாகி, வீரியத்துடன் வருகையில் குருநகரின் இறங்குதுறை (ஜெற்றி)யின் அணை தடுத்திட, ஆத்திரத்தை வெளிப்படுத்துவதைப்போல அணைமீது வேக மாக மோதி, உயர எழுந்து இறங்குதுறையை தோய்த்துக் கொண்டிருந்தது.

ஆங்கிலேயர் காலம் முதல் பல்வகைத் தேவைகளுக்கும் பயன் படுத்தப்பட்ட இறங்குதுறை, இப்போது படகுகளை கட்டுவதற்கும், தொழில் உபகரணங்களை ஏற்றி இறக்குவதற்குமே பயன்படுகிறது...

***

தொழிலுக்குச்சென்ற தனது படகு திரும்பி வரத் தாமதமானதால்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலுக்குச் சென்றுவந்து இறங்குதுறையில் தரித்துக்கிடந்த வேறு படகுத் தொழிலாளர்களிடம் விசாரித்தறியும் நோக்கில், கடலணையின் அணைப்புடன் கூடிய கடற்கரை வீதியால் விரைந்து வந்தார் நவின்சந்திரன்...

இறங்குதுறை வீதியோரம் கட்டிக் கிடந்த படகுகளில் நின்ற தொழிலாளரிடம் தனது படகு பற்றி விசாரித்தபோது, அதுபற்றி அவர்கள் அறிந்திருக்காமையால், இறங்குதுறையின் முனைக்குச் சென்றார், படகு வருவதை அவதானிப்பதற்காக...

காற்றினால் எழுந்து வீழும் அலைகளுக்கு நடுவே கம்பீரமாய் இருக்கும் 'சிறுத்தீவு' பசுமை மாறாத நிலையில் தெரிந்தது. அத்தீவில் இருந்த 'லூர்துமாதா சிற்றாலயம்' பசுமையின் மத்தியில் உயரமாகத் தெரிந்திட, மீளமுடியாத அவரது கண்கள் அதனையும் கடலலையையும் மாறிமாறிப் பார்த்து இரசித்தன.

அந்த இரசனையினூடே தனது இளமைக் காலத்தில் எத்தகைய காற்றின் மத்தியிலும் நீச்சல் தடாகத்தில் துள்ளிக் குதித்து நீந்துவதைப் போல கடலில் பாய்ந்து, நீந்தி விதம் விதமாக சாகசம் செய்த காலங்கள் நினைவைத் தொட்டுச் சென்றன...

நீந்தத் தெரியாதவரை கடலில் தள்ளிவிட்டு, பின்னர் குதித்து காப்பாற்றும் பயமறியாப் பருவங்கள்...

ஆழமான அந்தக் கடலில் நாலைந்து பேர் இணைந்து நீந்தியவாறு பந்தை எறிந்து, பிடித்து, களைக்கக் களைக்க விளையாடிய இளமைத் துடிப்புகள்...

அவர் கண்களில் படிந்த ஓவியங்களாகத் தெரிந்தன...

முகம் மலர, வாலிப மிடுக்குடன் மார்பை நிமிர்த்தியவாறு, படகு வருகிறதாவென கடலில் நெடுந்தூரம் உற்றுப் பார்க்கையில், காற்றின் மிதமிஞ்சிய வேகத்தின் உந்தல் அவரைப் பின்னோக்கித் தள்ளியது...

அதனை எதிர்கொண்டு காற்றின் வேகத்துக்கு ஈடு கொடுத்தவாறு நிற்கையில், சீறியெழுந்த கடலலையின் நீர்த்துளிகளால் தோய்ந்திடத் தேகம் சிலிர்த்தது...

அடுத்த கணம்...

அந்த நேரத்து நினைவுகள் அவர் வந்திருந்த நோக்கத்தையே புறந் தள்ளியது...

உணர்வுகள் எல்லாம் ஒன்று திரண்டதுபோல, மனப்பதிவிலிருந்து வெளிப்பட்ட உரசல்கள், பல ஆண்டுகளுக்கு முன்னரான நினைவை வலிந்து இழுத்தது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த நினைவனூடாக இதேபோன்றதொரு வேகமான சோளகக் காற்றை, சீறிப்பாய்ந்த கடலலைகளை எதிர்கொள்ள முயன்ற முல்லைத் தீவு கடற்பிராந்தியத்தை மனக்கண்முன் கொண்டுவந்தது...

அனுபவித்தவை ஒவ்வொன்றாய் நினைவுகளில் தோற்றம் பெற்றிட, அந்தக் காற்றின் மத்தியிலும் உடல் உஷ்ணம் கண்டது...

அக்கணம்... எதிர்கொண்ட இன்னல்கள், உயிர்காக்கத் தவித்த தவிப்புகள், கலங்கிடச்செய்த துன்பங்கள், உருப்பெற்ற மன அழுத்தங்கள், விரயமான நாட்கள் என யாவும் ஒன்றித்து விழித்திரையில் திரைப் படமாக விரியத் தொடங்கியது...

'1963 ஆனி மாதம் 14 ஆம் திகதி...'

அவரது செவிகளில் எதிரொலியாக பல தடவைகள் ஒலித்து, செவிப்பறையில் ரீங்காரமிட்டன...

ஆம், அந்தநாள் வரலாற்றில் பதிவான மறக்கமுடியாத நாள்...

***

1963 ஆம் ஆண்டு...

**'வளிச்சல்'** என்று கூறப்படும் ஆழ்கடல் நைலோன் வலைத் தொழில் குருநகரில் முனைப்புப் பெற்றிருந்த காலம்...

ஆழ்கடலுக்கென்றே வடிவமைக்கப்பட்ட இயந்திரப் படகுகள் பாவனைக்கு இல்லாத நிலையால், அதற்கான தயாரிப்புகள் இயந்திர வேகத்தில் நிகழ்ந்துகொண்டிருக்கையில், ஏற்கெனவே 'கரைவலை'த் தொழிலுக்கு பயன்படுத்தப்பட்டு வந்த 'குழி வள்ளம்' என்னும் இயந்திர வள்ளத்தில் நைலோன் வலைத் தொழிலைச் செய்துகொண்டிருந்தனர்.

அவ்வள்ளம் பெரும்பாலும் 35 அடிகள் வரையான நீளமும், 6 அடிகள் வரையான அகலத்தையும்கொண்ட உள்ளிணை இயந்திரம் பொருத்தப்பட்டதாக இருந்தது.

சோழகக்காற்று வேகமாக வீசுகின்ற காலத்தில் குருநகரிலுள்ள ஆழ்கடல் தொழிலாளர்கள் ஊர்காவற்றுறை, மயிலிட்டி, தாளையடி, சேந்தாங்குளம், மன்னார், முல்லைத்தீவு போன்ற இடங்களுக்குச் சென்று தங்கியிருந்து தொழில்செய்து வருவதை வழமையாகக் கொண்டிருந்தனர்.

குருநகரின் அமைவிடம் காரணமாக ஆழ்கடல் பகுதிகள் வெகு தூரத்திலேயே இருக்கின்றன. வள்ளங்கள் அப்பகுதிகளைச் சென்றடைய வும், தொழில் முடித்து திரும்பி வரவும் அதிகமான நேரத்தை செலவிட வேண்டியிருப்பதால், கடலில் **'வலை படுக்கும்'** நேரம் வெகு குறைவாக இருந்தது. அத்தோடு நீண்ட தூரத்துக்கு சோளகக்காற்றை எதிர்கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்று தொழில் செய்து திரும்பி வருவதில் பெரும் சிரமத்தையும், உடல் உபாதையையும் எதிர்கொள்ளவேண்டியும் இருந்தது.

இத்தகைய கஷ்டங்களைத் தவிர்க்கும் நோக்கிலேயே ஆழ் கடலுக்கு அண்மிய கரையை உடைய வேறு ஊர்களுக்குச் சென்று வாடியமைத்துத் தங்கியிருந்து தொழில் செய்வதில் நாட்டம் காட்டுகின்றனர்.


இவற்றில் ஒன்றாக வஸ்தியாம்பிள்ளை பிரான்சீஸ் (செல்வநாயகம்) சம்மாட்டியின் 'விஜயன்' வள்ளத் தொழிலாளர்கள், இம்முறை தாங்கள் முல்லைத்தீவு சென்று தொழில் செய்வதற்கான விருப்பத்தை சம்மாட்டியிடம் தெரிவித்தனர். அவர் சம்மதம் தெரிவித்ததும் அதற்கான ஆயத்தங்கள் ஆரம்பமாகின.

முல்லைத்தீவில் சோளகக்காற்று கரையிலிருந்து கடல் நோக்கி சாய்வாக வீசுகின்ற காரணத்தால் அதன் நேரடித் தாக்கம் குறைவாக இருப்பதுடன், பரந்து - விரிந்த - ஆழமான கடற்பகுதியாகவும் இருக்கின்றது.

இதனால், தொழிலுக்குச் செல்லும் பயண நேரம் வெகுவாகக் குறைந்து வலை படுக்கும் நேரம் போதியளவு இருக்கிறது. அத்துடன் பல கடற்பிரிவுகளின் கலப்பு காரணமாக அதிக மீனினங்கள் பிடிக்கக்கூடிய அனுகூலங்களும் உள்ளன. இவற்றை அறிந்திருந்ததாலேயே, 'விஜயன்' வள்ளத் தொழிலாளர்கள் முல்லைத்தீவைத் தெரிவு செய்திருந்தனர்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 02

***1963*** *ஆனி 08 ஆம் திகதி சனிக்கிழமை...*

*கிழக்கு வெளுத்து, கீழ்வானம் சிவந்து காணப்பட்டது...*

சோழகக்காற்று தனது வேகத்தில் சிறிதும் மாற்றமின்றி இருந்ததால், இறங்குதுறை **'ஒதுக்கில்'** கட்டிக் கிடந்த வள்ளத்தின் இயந்திரம், கடவுள் வணக்கத்துடன் இயக்கப்பட்டது...

சிறிது நேரத்தால் சம்மாட்டியின் வழியனுப்பலுடன் முல்லைத் தீவுக்கான பயணத்தை ஆரம்பித்தது 'விஜயன்' இயந்திர வள்ளம்...

ஆழமான கடற் பிரதேசத்திற்கேற்ப உயரமாக இணைக்கப்பட்ட நைலோன் வலைகள், சிறிய 'பரல்'களில் டீசல், தங்கியிருந்து தொழில் செய்வதனால் சமைப்பதற்கு தேவையான உலர் உணவுப் பொருட்கள், பாத்திரங்கள், பாய்மரம் மற்றும் **'கூறைப்பாய்'** ஆகியவற்றுடன், ஒல்லாந்தர் காலத்தில் வெட்டப்பட்ட ஆழமான பகுதியால் மேற்கு நோக்கிச் சென்றுகொண்டிருந்தது...

தொழில் செய்வதற்கென தம்பு எட்வாட்டர் (எல்வாட்டர்), தம்பு ஜேக்கப், பத்திநாதர் பீற்றர் (நவின்சந்திரன் அல்லது நவின்சந்திரா), ஆசீர் யேசுராசா, செபமாலை இராசகுலம் ஆகியோருடன் வாடியில் தங்கி யிருந்து சமைப்பதற்கென அந்தோனிப்பிள்ளை ஆசீர் (யேசுராசாவின் தந்தை), சேதமுறும் வலைகளை திருத்தம் செய்வதற்கென முஸ்லிம் மதத்தைச் சேர்ந்த அபூபக்கர் என ஏழுபேர் வள்ளத்தில் இருந்தனர்.

இந்த குழுவினரில் நவின்சந்திரா **'மண்டாடி'**யாகவும், **'தண்டையல்'** ஆகவும், இயந்திரத்தைக் கையாளுபவராகவும் இருந்தார்.

இவற்றுக்கேற்ற ஆற்றல் அவரிடம் இருந்தது... சம்மாட்டியின் நெருங்கிய உறவினராக இருப்பதால் சில சந்தர்ப்பங்களில் பதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்மாட்டியாகவும் செயலாற்றும் இவர், தொழிலாளரைக் கண்டிக்க வேண்டிய நேரங்களில் கண்டித்தும், அணைக்க வேண்டிய இடங்களில் அணைத்தும், அனுசரித்துப் போவதால் அவர்களும் நண்பனைப் போலவே பழகுவர்.

“தம்பி! இஞ்சினைக் கொஞ்சம் கூட்டிவையுங்களன். அப்பதான் நேரத்தோட ஓடலாம்.”

“ஓமுங்கண்ணே!”

இதுவரை பயணித்து வந்ததை விட ஆழமான கடற்பகுதிக்கு வந்த பின்னரும் சாதாரண வேகத்தில் செல்வதுகண்டு, எல்வாட்டர் கூறியதும் இயந்திரத்தின் விசைப்பிடியை நவின்சந்திரா உயர்த்த, முன்னரைவிட வேகமாக ஓடத் தொடங்கியது வள்ளம்.

அதில் இருப்பவர்களிடையே கேலிப் பேச்சுக்கள், சிவாஜி கணேசன் நடித்த திரைப்படங்கள் சிலவற்றின் சிறப்புப் பார்வைகள், அவரவர் எதிர்பார்ப்புகள் என உரையாடல் சங்கிலித் தொடராய் நீண்டு கொண்டேயிருந்தன.

மற்றவர்களைச் சீண்டிப் பார்ப்பதில் யேசுராசா கில்லாடி. அவரது சீண்டல்களால் கலகப்பு உச்சமாகவே இருந்தது.

“முல்லைத்தீவில உள்ள தொழிலுகளுக்கெல்லாம் நல்ல மீன் படுகுதாமெண்டு நேற்று கதைச்சாங்க.”

“சோழகக்காத்துக்கு அங்க மீன் படும்தானே! நாங்கதான் இந்த முறைதான் போறம். இதுக்கு முன்னையும் சிலபேர் போயிருக்கிறாங்க.”

“இவ்வளவு தூரத்துக்கு வாறம். மீன் பட்டாத்தானே நாலு பணம் உழைக்கலாம்.”

“படாம எங்க போகப்போகுது. மற்றவங்களப்போல எங்க ளுக்கும் கிடக்காமலாபோகும்!”

“இண்டைக்கு எட்டாம் திகதியெல்லா? என்னும் ரெண்டு மூண்டு கிழமைக்குள்ள சோழகக்காத்தும் ‘ஆனித் தூக்கம்’ போட்டிடும். அப்ப நாங்க ஊருக்கு போவோமெல்லா!”

“அதுக்குள்ள மனிசியின்ர நினைப்பு வந்திற்றா!”

“அதுக்கில்ல, மனிசி பிள்ளகள் ஆடி மாசம் ரெண்டாந்திகதி மடுமாதா திருநாளுக்கு போகவேணுமெண்டு சொன்னவங்க.”

“அப்பிடியே புல்லாவெளிக்கும் போவீங்க. அங்க இருக்கிற பத்தைக் காடுகள்தானே எல்லாத்துக்கும் வசதி...”

சிரிப்பொலி கடல் இரைச்சலையும் மீறி ஒலித்தது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்ட பயணத்தின் பின்னர், அன்று பிற்பகல் ஐந்து மணியளவில் முல்லைத்தீவில் குறித்த இடத்தின் கரையை வள்ளம் தொடும் முன்னரே நங்கூரத்தை கடலில் இறக்கிய யேசுராசா, அதன் கயிற்றை **'கடையாலில்'** உள்ள **'திரட்டுக்காலில்'** சுற்றிப் பிடித்ததும், நங்கூரத்தின் பொறுப்பில் வள்ளம் திரும்பியது.

நவின்சந்திரா இயந்திரத்தின் இயக்கத்தை நிறுத்தியதைத் தொடர்ந்து, கடலலையின் **'மடக்கடி'** யால் **'அணியம்'** கரைக்கு நேராகத் திரும்பியது. வள்ளம் கிடந்த இடம் ஆழமாக இருந்ததால், அணியம் இடுப்பு வரையான நீரளவுக்குக் வரும்வரை நங்கூரக் கயிற்றை இளக்கி கடையால் திரட்டுக் கட்டையில் கட்டிவிட்டார் யேசுராசா.

முதல் முறையாக வந்திருக்கிறபடியால் வள்ளத்தில் நின்றவாறு கடற்கரையை நோட்டமிட்டனர். அப்பகுதி வெண்மணலாக தெரிந்தது. கடல் மட்டத்திலிருந்து மூன்று அடிக்கும் மேற்பட்ட உயரத்தில் தரை இருந்தது. கரை நெடுகிலும் தென்னை மரங்கள் செறிவாகக் காணப் பட்டன. வெண்மணலோடு இணைந்து தெரிந்த தென்னை மரங்கள் கண்ணுக்கு விருந்து படைக்கத் தவறவில்லை.

தாம் விரும்பிய இடத்தை வந்தடைந்த மகிழ்வுடன் சிறிய 'பரல்' களில் இருந்த 'டீசலினால்' இயந்திரத்தின் 'டீசல் ராங்'கை நிரப்பிவிட்டு வெற்றுப் பரல்கள் மற்றும் சமையல் பொருட்களுடன் இறங்கினர்.

கடலை நோக்கி திசையில் காற்று சரிவாக வீசியதால் அதன் தாக்கம் கரையை அண்டிய பகுதியில் குறைவுபோலத் தெரிந்தாலும் அலை யின் ஆர்ப்பரிப்புக்கு குறைவில்லை. அலைகள் வந்து கரையில் மோதும் போது ஏற்படும் 'மடக்கடி' மற்றும் **'வீவல்'** அவர்களைத் தள்ளாடச் செய்ததுடன் கடலடி மணலில் கால்கள் புதையவும் செய்தது. இவற்றைக் கடந்து வெண்மணல் தரைக்கு வந்தனர்.

ஏற்கெனவே ஏற்பாடு செய்தற்கமைய தொழிலாளர் தங்கு வதற்கென அமைக்கப்பட்டிருந்த வாடியில் காத்திருந்த மீன் வியாபாரி சின்னப்பு, வந்தவர்களுக்கு குளிர்பானம் கொடுத்து வரவேற்றார்...

பிடிபடும் மீன்கள் வியாபாரிக்கே விற்கப்படுவதால் தொழி லாளருக்குத் தேவையான உதவிகளை, தேவைகளை வியாபாரியே முன்னின்று செய்துகொடுப்பது வழமை. செலவாகும் பணத்தை இவர்கள் கணக்கிலிருந்து கழித்தெடுத்துக் கொள்வார்.

தொழிலாளர் களைப்புற்றிருந்ததால் வாடியில் ஓய்வெடுத்துக் கொள்ள, சின்னப்பு விடைபெற்றார். சிறிது நேர ஓய்வின் பின்னர், அண்மையிலிருந்த கிணற்றில் குளித்துவந்து, ஆசீர் போட்டுக் கொடுத்த தேநீரை சுவைத்துக் குடித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“இங்கத்தைய நடைமுறைகள், தொழில் செய்யப்போற இடங்கள் பற்றி ஒண்டும் தெரியயில்ல. ஆரட்டையும் விசாரிச்சுத்தான் பார்க்க வேணும்.”

நவின்சந்திரா மற்றவர்களைப் பார்த்துக் கூறினார்.

“எங்களுக்கென்ன வளிச்சலுக்குப் போறது புதுசா! அவங்கட்ட என்னத்தக் கேட்பான்!”

யேசுராசாவின் பதில் நவின்சந்திராவுக்கு எரிச்சலைக் கொடுத்தது.

“யேசுராசா! நாங்க இப்பத்தானே முதல் முறையா வந்திருக்கிறோம். இங்கத்தய நடப்புகளை கேட்டறிஞ்சா என்ன தப்பு? நாங்க ஊரில ஆருக்காவது மீன்பட்டா, மீன்பட்ட இடம் பற்றி தொழிலாளிகளட்ட விசாரிக்கிறயில்லையா? அதுபோலதானே இதுவும். எங்களுக்கு என்ன குறையப்போகுது!”

“சரி! என்னண்டாலும் செய்யுங்க.”

யேசுராசாவின் பதிலோடு மௌனம் நிலவியது.

இரவு எட்டு மணியளவில் சின்னப்பு உணவுடன் வந்தார்.

“பசியாய் இருப்பீங்க, சாப்பிடுங்க... தேவையான சமையல் சாமான்கள காலமைக்கு வாங்கி அனுப்புறன்.”


“சின்னப்பண்ணே! எங்கட்ட ஒரு கிழமைக்குத் தேவையான சாமான்கள் இருக்குதுங்க.”

“சரி தம்பி! அப்ப நான் போயிட்டுவாறன். காலமைக்கு வாடிக்கு வந்து கறிக்கேத்த மீனை எடுத்துக் கொள்ளுங்க. சட்டி பானை ஏதும் தேவையெண்டாலும் சொல்லுங்க”

வியாபாரி சென்றதும் உணவருந்தி, நீங்காத உடல் அலுப்பினால் உறக்கத்தை அணைத்துக் கொண்டனர்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 03

*1963 ஆனி மாதம் 09 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை...*

விடியலுக்கு சற்று முன்னர் எழுந்தவர்கள், கரியால் பல் துலக்கி, நன்நீரால் வாய் கொப்பளித்து, உடலைக் கழுவிக் கொண்டனர்.

ஆசீர் போட்டுக் கொடுத்த கோப்பியால் உருவான உற்சாகத்தில், வியாபாரி கூறிய குறிப்பின்படி அவரது மீன் வாடி நோக்கிச் செல்லும் போது நன்றாக விடிந்துவிட்டது...

விசாலமாகக் காணப்பட்டது மீன்வாடி... ஆச்சரியத்தில் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

“வியாபாரி பெரிய முதளைபோல இருக்கு...”

யேசுராசா கூறிட இணைந்து சிரித்தனர்.

தொழிலுக்குச் சென்ற வள்ளங்கள் கரைக்கு வரத் தொடங்கியதால் மீன்களை நிறுத்தெடுக்கும் வேலையும் தொடங்கிவிட்டது.

வந்திருந்த வள்ளங்கள், இடுப்பு வரையான நீரளவில் நங்கூரமிட்டிருந்தன. ஒவ்வொரு வள்ளத்திலும் கடலில் நின்ற நால்வர், விசேடமாகத் தயாரிக்கப்பட்ட ‘சுருக்கு மடி’யை விரித்துப் பிடிக்க, வள்ளத்தில் நிற்பவர்கள் அம்மடிக்குள் பெரிய மீன்களை ஓரளவு போட்டதும், மடியின் வாய்ப் பகுதியைச் சுருக்கி, அதனை மீன் நிறுத்தெடுக்கும் இடத்திற்கு இழுத்துச் சென்றனர். சாதாரண அளவுள்ள மீன்களை கூடைகளில் நிரப்பியும் தூக்கிச் சென்றனர்...

வாடி சுறுசுறுப்பாக இயங்கியது. கொழும்புக்கு ஏற்றுமதி செய்வதற்கென மீன்களை பெட்டிகளில் அடுக்கி, அதற்குள் பனிக்கட்டிகளை நிரப்பிக் கொண்டிருந்தனர் சிலர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருவாட்டுக்கு ஏற்ற வகையில் மீன்களை வெட்டிப் பிளந்து உப்பிட்டு அடுக்கிக்கொண்டிருந்தனர் சிலர். கணிசமானோர் வேலை செய்யும் இடமாக இருந்தது.

தொழிலாளர் எடுத்துவரும் மீன்களை வியாபாரியின் கூலியாட்கள் கூடைகளிலிட்டு நிறுப்பதை வியாபாரியும், தொழிலின் சம்மாட்டியும் குறித்துக் கொண்டிருந்தனர்.

தலைமன்னாரில் தங்கியிருந்து தொழில் செய்கையில் தாங்களும் இவ்வாறே நடந்துகொண்டதை நினைத்துக்கொண்ட இவர்கள், வந்த வள்ளங்களிலெல்லாம் மீன்கள் தாராளமாக இறக்கப்பட்டதை அவதானித்து உள்ளூர மகிழ்ந்தனர்.

"நாங்களும் நாளைக் காலமைக்கு இப்பிடி மீன்களக் கொண்டு வருவோம்தானே..."

வயதில் இளையவனும், பதினேழு வயதினனுமான இராசகுலத்தின் கூற்று மற்றவர்களையும் மகிழ்வித்தது.

மீன்களை இறக்கிய வள்ளங்கள் செல்ல, மேலும் சில வள்ளங்கள் அந்த இடத்தை நிரப்பிக் கொண்டன. அவற்றிலிருந்த மீன்களையும் இறக்கி முடிய காலை ஒன்பது மணியாகிவிட்டது.

இதற்கிடையில், நவின்சந்திரா அங்கு நின்ற தொழிலாளரிடம் தொழில் செய்யும் கடற்பகுதி, செல்லவேண்டிய திசை, வள்ளம் ஓட வேண்டிய நேரம் போன்றவற்றை விசாரித்து அறிந்து, ஒரு வரைபை வரைந்துகொண்ட நவின்சந்திரா, மண்டாடியாய் தனது பணியில் கருத்தாக இருந்ததை மற்றவர்கள் அறியவில்லை.

மீன் நிறுத்தெடுக்கும் வேலை முடிவுற்றதும், கடற்கரையில் நின்ற ஐவரையும் அழைத்தார் வியாபாரி.

"இஞ்ச கிடக்கிற மீனில எதையெண்டாலும் கறிக்கு எடுத்துக் கொள்ளுங்க. வேற ஏதும் தேவையெண்டா கூச்சப்படாம கேளுங்க. மற்றது, ராவைக்குத் தொழிலுக்கு டீசல் தேவையெல்லா? மத்தியானம் ஒரு பெரிய 'பரல்' குடுத்து விடுகிறன். அதில எடுத்துக் கொள்ளுங்க."

கறிக்குத் தேவையான பாரை மீனுடன், கட்டா கருவாடும் எடுத்துக்கொண்டு வாடிக்குத் திரும்பினர்...

வாடியில் காலை உணவுக்குத் தேவையான சோறு காய்ச்சி, வடித்துப் புழுங்க வைத்துவிட்டு தேங்காய் துருவலில் பால் பிழிந்து கொண்டிருந்தார் ஆசீர்.

"ஏனண்ணே பால்?"

"இப்ப சாப்பிடக் கறி காய்ச்சத்தான்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“கறி வேணாம். பிழிஞ்ச பால சோத்தில விட்டுக் கருவாடு சுட்டுச் சாப்பிடுவோம்.”

“பழஞ்சோறும் கிடக்குத் தம்பி.”

“அது இன்னும் நல்லாயிருக்குமே. பழஞ்சோறு எல்லாருக்கும் காணுமா?”

“குறைவாகத்தான் இருக்கு.”

“அதோட இதையும் கலந்துவிடுங்க.”

சம்மதித்த ஆசீர், பிழிந்த பாலுடன் அரிந்த வெங்காயம், பச்சை மிளகாயுடன் தேசிக்காயும் பிழிந்து, சோற்றில் கலந்து, கருவாட்டை துண்டாக்கி சுட்டெடுத்துக் கொடுக்க, காலை உணவை சுவைத்துச் சாப்பிட்டனர்.

ஒரு மணியளவில் வியாபாரி கொடுத்தனுப்பிய பெரிய டீசல் பரல் கிடைத்ததும் வெற்றுப் பரல்களில் அதனை நிரப்பிக்கொண்டனர், தொழிலுக்கு எடுத்துச் செல்வதற்காக.

மதிய உணவருந்தி ஓய்வெடுத்துக் கொண்டு, பிற்பகல் மூன்று மணியளவில் தொழிலுக்குப் புறப்பட ஆயத்தமானார்கள். இரவுக்குத் தேவையான உணவாக; அலுமினியப் பானையில் சோறு, வேறொரு பானையில் கறி, பரலில் குடிநீர், தேநீர் வைப்பதற்கு சிறிய அலுமினியப் பானை, பகிர்ந்து சாப்பிடுவதற்கு அலுமினியச் சட்டிகள் மற்றும் டீசல் நிரப்பிய பரல்களை வள்ளத்தில் ஏற்றிக் கொண்டனர்.

பாய் மரமும், கூறைப்பாயும் வள்ளத்துக்குள்ளேயே இருந்தன. பீடி, வெற்றிலை, பாக்கு, புகையிலை, தீப்பெட்டி, ஊதுபத்தி, மண்ணெண்ணெய், குக்கர் போன்றவற்றையும் தம்வசம் எடுத்துக் கொண்டனர்.

ஜேக்கப் ‘லோமியா’வுக்கு டீசலை விட்டுக்கொண்டார். அது அவரது வேலையாக இருந்தது.

சிறிது நேரத்தால் நவின்சந்திரா இயந்திரத்தை இயங்கச் செய்ய, யேசுராசா நங்கூரக் கயிற்றைப் பிடித்து இழுத்து நங்கூரத்தையும் கயிற்றையும் வள்ளத்தில் ஏற்றியதும் ஐவருடனும் புறப்பட்டது வள்ளம்.

அனுபவமற்ற கடற்பரப்பு... பயம் இருக்கவே செய்தது.

இயந்திரம் குறைந்த வேகத்தில் இயங்கினாலும் காற்றுக்கு சாய்வான ஓட்டம் என்பதால், அதன் உந்தலில் வள்ளம் வேகமாகச் சென்றுகொண்டிருந்தது.

நவின்சந்திரா திசையறிகருவியின் உதவியுடன் ‘சுக்கானை’ப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடித்தவாறு, போகவேண்டிய திசை நோக்கி வள்ளத்தைச் செலுத்தினார்.

ஆங்காங்கு பல வள்ளங்கள் தொழிலுக்குச் சென்றுகொண்டிருப்பது இவர்களுக்கு உதவியாகவும் அச்சம் தவிர்ப்பதாகவும் இருந்தது.

ஒரு மணித்தியாலம் வரை பயணித்தது வள்ளம்...

உயர்ந்த தரை அமைப்பைக்கொண்ட முல்லைத்தீவுப் பகுதி அடிவானில் சிறு கோடாகத் தெரிந்தது. சுற்றிவர வேறு தரைப் பகுதியை பார்க்க முடியவில்லை.

பரந்து, விரிந்த, கரைதெரியாத அந்தப் பகுதி சர்வதேச கடற்பரப்பு என அறிவர். அத்துடன் இக்கடற்பரப்பில், வெவ்வேறு திசைகளிலிருந்து ஓடிவரும் பல கடல்களின் கலப்பு காரணமாக, நீரோட்டம் இரண்டு மடங்காக இருக்கும் என்பதையும் அறிவர். அதனால், அச்சத்தைப் போக்கிட கடவுளை வேண்டிக்கொள்ள மறக்கவில்லை.

**'பாகக் கயிற்றை'** கடலில் இறக்கிப் பார்த்தனர். மிகவும் ஆழமாக இருந்ததால் கயிற்றின் நீளம் போதாமையால் இரும்புக்குண்டு தரையைத் தொடவில்லை. தேவை ஏற்படும் சந்தர்ப்பத்தில் நங்கூரமிட்டு வள்ளத்தை தரித்து வைத்திருப்பதற்கு தங்களிடமுள்ள நங்கூரக் கயிற்றின் நீளம் போதாது என்பதை, பாகக் கயிற்றின் மூலம் அறிந்தபோது மேலும் பயம் ஏற்பட்டது.

இவர்களுக்கு முன்னர் சென்ற வள்ளங்கள் வலை இறக்குவதை அவதானித்து அவர்களுக்கு ஏற்ற இடம்விட்டுச் செல்கையில், கடல் நீரைக் கோலி **'அணியக் கொம்பை'** கழுவிய எல்வாட்டர், தாங்கள் வரும்போது கொண்டுவந்த **'பாதங் கழுவிய தண்ணீரை'** அணியக் கொம்பில் ஊற்றி, வலைகளுக்கும் தெளித்தார்.

தொடர்ந்து இவர்களுக்கு முன்னர் வலை இறக்கத் தொடங்கிய வள்ளத்துக்கு நிர்ணயிக்கப்பட்ட அளவில் இடைவெளி விட்டுத் தாங்களும் வலை இறக்க ஆயத்தமாகினர்...

சிவப்புக்கொடி கட்டப்பட்ட உயர்ந்த தடியின் அடிப்பகுதியில் பாரமான இரும்புத் துண்டும், சற்று மேலே சதுரப் **'போயா'**வும் கட்டப்பட்டுள்ள கொடித் தடியை ஆரம்ப வலையின் முனையில் கட்டி கடலில் இறக்கினர்..

தொடராக இறக்கப்பட்ட இருபத்தி நான்கு வலைகளில் ஆரம்ப கொடித்தடியைப் போன்று இடையில் மேலும் இரண்டு கொடித்தடிகள் வலையோடு கட்டி இறக்கப்பட்டன. ஒவ்வொரு வலையின் இணைப்பிலும் ஒன்றரை அடி விட்டமுள்ள வட்டப் **'போயா'**, **'மோவலை'**க் கயிற்றுடன் கட்டப்பட்டு மிதக்கவிடப்பட்டது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

253789

இருபத்தி நான்கு வலைகளும் கடலில் அமிழ்ந்தும், மூன்று கொடித் தடிகள் நீர் மட்டத்துக்கு மேலாக உயர்ந்தும், வட்டப் போயாக்கள் நீர் மட்டத்திலும் கிடந்தன.

இக்கொடித் தடிகள்தான் வலை படுக்கப்பட்டுள்ளது என்பதன் அடையாளம். பகலில் கணிசமான தூரத்திலிருந்தே இக்கொடியை அடையாளம் காணமுடியும்.

இறுதி வலையின் முனைக்கயிறுடன் இருபத்தைந்து யார் வரையுள்ள நீளமான கயிறு இணைக்கப்பட்டு, அதன் முனையை அணியத்தின் திரட்டுக் கட்டையில் கட்டியதுடன் வலை படுக்கும் வேலை முடிவுற்றது...

அடுத்து வலை கிளப்பத் தொடங்கும் வரை ஐவருக்கும் எந்த வேலையும் இல்லை.

நீரோட்டத்தின் இசைவுக்கும் அதன் வேகத்துக்கு ஏற்ப வலைகள் வள்ளத்துடன் சேர்ந்து வழிந்து செல்லத் தொடங்கின. அதனைத் தொழிலாளர் உணர்ந்துகொண்டாலும், இவ்வாறு வழிந்து எங்கு, எவ்வளவு தூரம் செல்லும் என்பதை இவர்களால் திட்டமிட முடியாது. எப்படியும் வலை வழியக்கூடிய தூரம் ஐந்தாறு மைல்களுக்கு குறைவாக இருக்காது. நீரோட்டத்தின் வேகமும், அதன் மாற்றமுமே அதைத் தீர்மானிக்கும்.

வலைகளோடு சேர்ந்து நீரோடும் திசைக்கு வள்ளம் இழுபட, காற்று வீசும் திசை சிலவேளை எதிராகவும், இடையில் சார்பாகவும் மாறும். எவ்வாறு இருந்தாலும் படுக்கப்பட்ட இரண்டு மைல்களுக்கும் மேற்பட்ட நீளத்தைக்கொண்ட வலைகள், கடலின் ஆழத்தின் பாதிவரை அமிழ்ந்துகொள்வதால் நீரோட்டத்தின் அழுத்தத்தால் இழுபடும் இழுவையே பலமானதாக இருக்கும். இதனால், வள்ளம் காற்றுக்கும், வலைகளின் இழுவைக்கும் ஈடுகொடுக்க முடியாமல் கெழிந்து, சரிந்து ஆட்டம் போட்டுக்கொண்டே மிதக்கும்.

இந்த ஆட்டம் புதியவர்களுக்கும் அனுபவமற்றவர்களுக்கும் வாந்தியையும் தலைச்சுற்றையும் நிச்சயம் ஏற்படுத்தும்.

ஓய்வாக இருந்தவர்கள், உற்சாகத்திற்காக தாம் கையாழும் வழியை மாற்றிடாமல் அரட்டையடிப்பதும், தொழில் சார்ந்த தர்க்கங்களில் ஈடுபடுவதுமாக இருந்தனர்.

சினிமாப் பாடல்களும் களைகட்டின.

மண்ணெண்ணெய் குக்கரில் பானையை வைத்து தேநீர் போட்டுக் குடித்த பின்னர், தனக்கு நன்கு பரீட்சையமான கூத்துப் பாடலை ஜேக்கப் பாட, மற்றவர்கள் அலுமினியச் சட்டியில் தாளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போடுவதும் பக்கப்பாட்டு பாடுவதுமாக நேரம் போனதே தெரியாமல் இருந்தனர்.

இருளானது...

எத்தகை காற்றுக்கும் அணையாது நிற்கும் 'லோமியா'வை கொழுத்தி அதனை, இயந்திரக்கூட்டு முகப்பின் வெளிப்பக்கத்துக்கும் 'ஓட்டத்'துக்கும் இடையிலுள்ள ஒரு அடி வரையிலான அகலம்கொண்ட தட்டில், உள்ள துவாரத்தில், தடியைச் செருகி உயரமாக கட்டிவிட்டனர்.

லோமியாவின் ஒளி வள்ளத்தில் இருப்பவர்களுக்குப் போது மானது மட்டுமல்ல இரவில் பயணித்துவரும் வள்ளங்கள், படகுகளுக்கு அடையாளமாகவும் இருக்கும்.

"எல்லாரும் சாப்பிடுவோம், நேரத்துக்கு எழும்பயெல்லா வேணும். வலை கிளப்பி கரைக்குச் செல்ல எப்பிடியும் குறைஞ்சது மூன்று மணித்தியாலத்துக்கு மேலாகும். இண்டைக்கு முதல் நாளெண்டபடியால கெதியா எழும்பிப் பாப்போம்..."

நவின்சந்திரா கூறியதை ஏற்றுக்கொண்டனர்...

எதிர்க் காற்றில் செல்கையில் நேரம் அதிகமாகச் செல்லும் என்பதால் தாமதியாது வலை கிளப்பவேண்டுமென்ற எண்ணம் இயல்பாகவே அவர்களிடமிருந்தது.

அலுமினியச் சட்டியை இராசகுலம் எடுத்துக் கொடுக்க, தமக்குத் தேவையான அளவில் சோறையும் கறியையும் எடுத்துக் கொண்டனர்.

நவின்சந்திரா கடையால் தட்டிலும் (சுக்கானுக்கு அருகாமை), ஏனையோர் இயந்திரக் கூட்டின்மேலும் இருந்தவாறு உணவருந்திய பின்னர், அந்தத்த இடங்களிலே படுத்தும் கொண்டனர்.

மணிக்கூட்டில் வைத்த அலாரம் இரவு பன்னிரெண்டு மணிக்கு அடித்ததும் எழுந்த நவின்சந்திரா, குரல் கொடுக்க எல்லோரும் எழும் பினர். எல்வாட்டர் தேநீர் வைக்க, இருவர் பரல்களில் இருந்த டீசலால், இயந்திரத்தின் டீசல் ராங்கை நிரப்பினர்.

தொடர்ந்து பானையில் மிச்சமாகக் கிடந்த சோறையும் கறியையும் குழைத்துச் சாப்பிட்டு, தேநீரும் குடித்து முடிந்ததும் நவின் சந்திரா சுக்கானுக்குச் செல்ல ஏனைய நால்வரும் வலை கிளப்ப ஆயத்த மானார்கள்.

வயதில் மூத்தவரான எல்வாட்டர் அணியத்தில் நின்று கடவு ளிடம் வேண்டுதல் செய்துகொண்டு அணியத்தில் கட்டப்பட்ட வலையின் கயிற்றை அவிழ்த்ததும், நால்வரும் இணைந்து உற்சாகமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலையை இழுத்துக் கிளப்பி, வள்ளத்தின் நடுப் பகுதியில் ஏற்றத் தொடங்கினர்.

ஜேக்கப் 'மடவலை'யைப் பிடித்து இழுக்க, யேசுராசாவும் எல்வாட்டரும் 'மோவலை'யைப் பிடித்து இழுத்தனர்.

மோவலையில் மொத்தக் கயிறு தொடராக இணைக்கப் பட்டுள்ளது. அக்கயிற்றைப் பிடித்து இழுப்பதன் மூலம் வள்ளத்தை முன்னோக்கி இழுக்க முடியும். அதனால்த்தான் அதற்கு இருவர் தேவைப் படுவர்.

இவர்களின் தேவைக்கு ஒத்திசைவாக வள்ளம் செல்லும் வகையில் சுக்கானைப் பிடித்துக்கொண்டிருந்தார் நவின்சந்திரா

வள்ளத்தினுள்ளே இழுத்துப்போடும் மோவலையுடனான கயிற்றையும் கூடவே வரும் போயாக்களையும் ஒழுங்காக அடுக்கும் வேலை இராசகுலத்தினுடையது. மீன்கள் சிக்குண்டு வருகையில் ஒருவர் மோவலையை இழுத்துப் பிடிக்க ஏனையோர் விரைந்து மீன்களைக் கழற்றி எடுத்துவிட்டு முன்னரைப்போலவே தொடருவர்.

ஆவலுடன் இழுக்கத் தொடங்கியவர்கள், முதலாவது கொடித் தடி வரை உள்ள வலைகளில் சில கட்டாப் பாரைகள் மாத்திரமே சிக்குண்டு வந்ததால் உற்சாகம் குறைந்தவர்களாகக் காணப்பட்டனர்.

கொடித்தடிக்கு அடுத்த வலையும் அவ்வாறே!...

அதற்கு அடுத்த வலையை இழுக்கையில் கிளப்பக் கடினமாக இருந்தது.

ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டு ஒருமித்து மூர்க்கமாக இழுத்தனர்...

என்ன ஆச்சரியம்!

அவர்கள் கண்களையே நம்ப முடியவில்லை...

தொடராகக் கட்டாப் பாரைகள் வரத்தொடங்கின.

தொகையாக சிக்குண்டுள்ளதன் அடையாளமாக வலையோரம் நீளத்துக்கு கதிராக இருந்தது.

உள்ளம் குளிர்ந்தவர்களாய், அணியப் பக்கம் உள்ள வெற்றிடத்தி லும், இயந்திரக் கூட்டின் முன்பக்கம் உள்ள வெற்றிடத்திலும் மீன்களைக் கழற்றிப் போட்டவாறு, பல மடங்கு உற்சாகத்துடன் இழுக்கலாயினர்.

அவசரத்தில் கைநழுவிக் கடலில் செல்லும் மீனை ஒருவர் கொக்கி போலுள்ள கூரான 'மட்டுக்கம்பி'யினால் கொழுவி எடுத்தார்.

மூன்று வலைகள் வரை செறிவாக சிக்குண்டிருந்த மீன்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் கிளப்பிய வலைகளில் காணப்படவில்லை.

இரண்டாவது கொடியையும் கடந்து ஆரம்ப வலைக்கும் வந்து விட்டனர். பின்னைய வலைகளில் மீன்கள் குறைவாகவே சிக்குண்டிருந்தன.

கட்டாப்பாரைகள் கூட்டமாக நிரைகட்டி வந்ததால் அவை வந்த பாதையில் குறுக்கிட்ட வலைகள் சிலவற்றில் சிக்குண்டுள்ளன. இவற்றின் ஆதிக்கத்தால் உண்டான கடல்நீரின் அமுக்கத்தால் ஏனைய மீனினங்கள் அந்தப் பகுதியிலிருந்து தற்காலிகமாக அகன்றுவிட்டன என்பதே அவர்களின் எண்ணமாக இருந்தது.

வலை இழுத்து முடிந்ததும் வலையின் பொறுப்பிலிருந்து வள்ளம் விடுபட்டு காற்றுக்கு விலங்காகச் சென்றுவிடுமென்பதால் இறுதியாகக் கிளப்பவேண்டிய வலையை இழுக்கத் தொடங்கியதும் வழமைபோல் இயந்திரத்தை இயங்கச் செய்த நவின்சந்திரா, வலை இழுத்து முடிந்ததும் முன்னோக்கிச் செல்லும் 'கியரை'ப் போட்டு திசையறிகருவியின் உதவியுடன் வள்ளத்தை கரை நோக்கிச் செலுத்தினார்.

வலை இழுத்த நால்வரும் கடல் நீரை பட்டையால் கோலி உடலில் படிந்த மீன் செழும்பைக் கழுவிக் கொண்டனர்.

யேசுராசாவை அழைத்த நவின்சந்திரா, சிறிது நேரம் சுக்கானைப் பிடிக்குமாறு கூறிவிட்டு, லோமியா வெளிச்சத்தில் வள்ளத்திற்குள் கிடந்த மீன்களைப் பார்த்தார்.

"எல்வாட்டரண்ணே! இன்னுமொரு வலையில இப்பிடிப் பட்டிருந்தா வள்ளத்தில ஏற்றவே எலாது போலிருக்கு..."

மகிழ்வுடன் கூறிவிட்டு, முகத்தைக் கழுவிக்கொண்டு மீண்டும் சுக்கானைப் பிடித்திடச் சென்றார்.

வள்ளத்தில் கணிசமான நீர் தேங்கிக் கிடந்தது.

இயல்பாகவே வலைகளோடு ஒட்டிவரும் நீர், வள்ளத்தின் **'வங்குகளுக்கு'** இடையில் சேர்ந்து கொள்ளும். வள்ளத்தின் உயர்ந்த முற்பகுதியில் வீழுகின்ற நீர், இயந்திரத்தின் பாரத்தால் உண்டான கடையாலின் பதிவு காரணமாக வங்குகளின் துவாரத்தால் பின் நோக்கி ஓடிவரும். இதனால் இயந்திரக் கூட்டுக்குப் பின் பக்கமுள்ள வங்கு வெளியினால் உள்ளே கிடக்கும் நீரை முழுமையாக வெளியேற்ற முடியும்.

ஒருவர் மாறி ஒருவராக பட்டையால் கோலி நீரை வெளியேற்றி விட்டு இயந்திரக் கூட்டின்மேல் படுத்து உறங்கியவர்கள், நவின்சந்திராவின் குரல்கேட்டு உறக்கம் கலைந்தவர்களாய் எழுந்தனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலை ஏழு மணியளவில் வியாபாரியின் மீன் வாடிக்கு முன்னால் நங்கூரம் போடப்பட்டதும் இடுப்பளவு நீரில், மடக்கடிக்கும் வீவலுக்கும் இடையில் வள்ளத்தில் கிடந்த கட்டாப் பாரைகளை இறக்கி, கூடைகளில் அடுக்கியும், சுருக்கு மடியில் போட்டும் வியாபாரியிடம் கொண்டுவர, குருநகரிலிருந்து வந்திருந்த சம்மாட்டி செல்வநாயகத்துக்கு தலை, கால் புரியாத சந்தோஷம்.

வியாபாரி நிறுத்தெடுக்கும் கணக்குகளை உற்சாகத்துடன் எழுதிக்கொண்டிருக்க, தொழிலாளர் இயந்திர வேகத்தில் இயங்கிக் கொண்டிருந்தனர்.

இவர்கள் வலை படுத்த இடத்தின் சுற்றாடலில் தொழில் செய்தவர்களுக்கெல்லாம் கட்டாப்பாரைகளே பட்டிருந்தன. யாருக்கு அதிகமாகப் பட்டுள்ளது என்பது வியாபாரிடம் கேட்டுத்தான் அறிய முடியும். எவ்வாறாயினும் இவர்கள் மனநிறைவுடனே இருந்தார்கள் என்பதை அவர்களது உற்சாகமும், உரையாடலும் உணர்த்தியது...

தொடர்ந்த நாட்களில் வழமையான நடைமுறையின்படி தினமும் பகலில் உறங்கி, இரவில் தொழில் செய்துகொண்டிருந்தனர்.


எல்லா நாட்களிலும் மீன்பிடி ஒரேமாதிரி இல்லாது போனாலும் தாராளமான வருவாய் கிடைத்தது. இதனால், முல்லைத்தீவுக்கு வந்ததன் பயனை அனுபவித்துக் கொண்டிருந்தனர்...

இவ்வாறு ஐந்து நாட்கள் வரை தொழில் செய்து வருவாயைப் பெருக்கிக் கொண்டிருந்தபோதுதான் அந்த நாளும் வந்தது...

அந்த நாள் மட்டும் வராமல் இருந்திருந்தால்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## 04

*1963* ஆனி மாதம் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை...

முல்லைத்தீவுக்கு வந்த நாளிலிருந்து வீசிய வேகத்தைவிட அன்று அதிகாலை முதல் மிகவும் வேகமாக இருந்தது காற்று...

மிதமிஞ்சிய காற்றின் அழுத்தத்தையும், வேகமான நீரோட்டத்தையும் தாங்கமுடியாமல் கடல் நீர் அதற்கேற்ப இரைச்சலுடன் ஆட்டம் போட்டது...

சோளகக் காற்றின் உக்கிரத் தன்மையை இவர்கள் அறிந்தும் அனுபவித்தும் இருப்பதால் இவை அச்சத்தையோ, தொழிலுக்குச் செல்வதற்குத் தயக்கத்தையோ கொடுக்கவில்லை.

ஆழ்கடலுடனும், அலையுடன், காற்றுடன், இயற்கையுடன் போராடி உறுதிபெற்ற உள்ளத்தையும், மனவலிமையையும் கொண்டவர்களான இவர்கள், வழிவழிவந்த வைரம் பாய்ந்தவர்களாகவே இருந்தனர்.

அந்த மனோநிலையில் அன்று, காற்றின் வேகரம் காரணமாக சில வள்ளங்கள் குறுந்தூரம் வரையான இடங்களுக்குச் சென்று வலை படுக்க எத்தனிக்கையில், இவர்களது வள்ளம் நெடுந்தூரத்திலுள்ள 'பேய்ப் பாறைப்பிட்டி' என்ற கடற்பகுதியைத் தேடிச் சீறிப் பாய்ந்தது.

இதுவரை இவர்கள் தொழிற்செய்த கடற்பகுதியைவிடத் தூரமானது மட்டுமல்ல, ஆழமானதுங்கூட....

வயதில் முதியவரும், ஓய்வில் உள்ளவருமான தொழிலாளி ஒருவருடன் ஏற்படுத்திக்கொண்ட உரையாடலின்போது இந்தப் பேய்ப்பாறைப்பிட்டியைப் பற்றி அறிந்துகொண்டார் நவின்சந்திரா.

அதுமுதல் அங்கு சென்று வலை படுக்கவேண்டுமென்று உந்திய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவல், அன்று நிறைவேறப்போகின்ற மகிழ்ச்சி அவருக்கு...

அந்தப் பிட்டியில் இதுவரை பிடிபட்ட மீன்களைப் பற்றிய கதைகள் பலவற்றை பலரிடமும் கேட்டு தமக்குள்ளே மனக்கோட்டையை கட்டியிருந்த தொழிலாளர்களிடையே அது சார்ந்த உரையாடல்கள், கற்பனைகள்...

"இண்டைக்கு வெள்ளியெல்லா, நாளைக்குத்தான் மச்சான்ர கலியாணம்."

ஏதோ யோசனையிலிருந்த இராசகுலம் திடீரெனக் கூறினான்.

"எந்த மச்சான்?"

"ஐயாவட அக்காவட மகன்."

"நீ போகயில்லையா?"

"என்னண்டண்ணே போற?"

"இப்படித்தான் எனக்கும் செய்வாயாக்கும்."

யேசுராசாவின் கேள்வி மற்றவர்களையும் திரும்பிப் பார்க்க வைத்தது.

"ஓ! உனக்கும் பெண் பாக்கிறதாகக் கேள்விப்பட்டனான் அதுதான் சொல்லாமச் சொல்லுறியாக்கும்."

எல்வாட்டரின் கூற்று யேசுராசாவை நாணிடச் செய்தது.

"அதுக்கில்லையண்ணே இவனுக்காகச் சொன்னான். என்னட கலியாணத்துக்கு நாலாஞ் சடங்கு மட்டும் ஒருத்தரும் தொழிலுக்குப் போகவே கூடாது."

"அப்ப நாலு நாளும் தண்ணிவென்னி எல்லாம் உன்னோட தானாக்கும்."

"இல்லையா பின்ன...!"

கூறிவிட்டுத் திரும்புகையில் ஜேக்கப் மட்டும் அவற்றில் கலந்து கொள்ளாமல் உறக்கத்தில் கிடப்பது அவர்களுக்குச் சங்கடமாக இருந்தது. இங்கு வந்தநாளில இன்றுதான் இப்படி நடந்திருக்கு.

"நாங்க எவ்வளவு சந்தோஷமா கதைக்கிறம். இஞ்சபார், மூக்கு முட்ட குடிச்சிட்டு பிரண்டுபோய்க் கிடக்குது."

உறக்கத்திலிருக்கும் ஜேக்கப்பின் உடலை உலுப்பியபடி கூறினார் யேசுராசா...

"யேசுராசா! விடு... அவர் வெறி முறிஞ்சு எழும்பட்டும்."

நவின்சந்திரா கூறியதும் ஜேக்கப்பை எழுப்புவதை விடுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்த உரையாடல் கடல் மீது திரும்பியது...

சுற்றிவரை பார்த்துவிட்டு ‘இன்னும் தூரமா?’ என்று கேட்பதைப் போல ஒருவவரின் பார்வையும்.

முதியவர் கூறியபடி திசையறிகருவியின் பாகையில், இனங் காணக்கூடிய அடையாளத்தை நோக்கி செலுத்தப்பட்டது வள்ளம்.

காற்றின் வேகம் காரணமாக, கணக்கிட்டதைவிட விரைவாகவே அந்தப் பகுதியை நெருங்கிவிட்டனர்.

குறித்த கரை மறையும் குறிப்பும், திசையறிகருவி சுட்டும் இலக்கும் சரியாக இருந்த அந்தப்பகுதி, கருமை நிறத்தை மிகுதியாக வெளிக்காட்டும் கடற்பகுதியாகத் தெரிந்தது.

இயந்திரத்தின் வேகத்தைக் குறைத்து வலை படுக்க ஆயத்தம் செய்கையில் ஜேக்கம் இன்னமும் எழும்பாமல் கிடப்பதைக் கண்ட யேசுராசா, கடல்நீரைக் கோலி அவர் முகத்தில் ஊற்றிவிட்டார். திடுக்குற்று எழுந்தவர், சமாளித்துக்கொண்டு எதுவும் கூறாமலே அவர்களோடு இணைந்துகொண்டார்.

என்றும்போல் இருபத்திநாலு வலைகளை கடலில் இறக்கி, வலையின் முனையை வள்ளத்தின் அணியத்திலுள்ள திரட்டுக் கட்டையில் கட்டிவிட்டு, அவை வழிந்து செல்வதை அவதானித்தவாறு ஓய்வெடுத்துக் கொண்டனர்.

இருள் முற்றாகச் சூழ்ந்துகொண்டது.

மது மயக்கத்தில் ஜேக்கப் உற்சாகமிழந்து இருப்பினும் வழமை போன்று அவரே லோமியாவை எரிய வைத்தார்.

“எல்வாட்டரண்ணே! இண்டைக்கு எத்தினையாம் பிறை?”

மேற்கு அடிவானில் பிறைச் சந்திரனைப் பார்த்த நவின்சந்திரா, கேட்ட பின்னர்தான் மற்றவர்கள் அதனைப் பார்த்தனர்.

“நாலாம பிறை தம்பி!”

“நாலாம் பிறையா...! சரிதான்போங்க நாயலைச்சல், பேயலைச் சல் தானாக்கும்.”

யேசுராசா வேடிக்கையாகக் கூறினாலும், நாலாம் பிறையைப் பற்றி ஊரில் பலரும் பேசிக்கொள்வதை கேள்வியுற்றிருந்த நவின்சந்திரா வின் இதயத்தை ஏதோ ஒன்று தாக்கியதைப் போலிருந்தது...

அதைப்பற்றி எதுவும் கூறாது இயந்திரக் கூட்டில் அமர்ந்து கொண்டார்.

“என்னண்ணே யோசிக்கிறீங்க?”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிது நேரம் நிலவிய அமைதி யேசுராசாவின் கேள்வியால் குழம்பியதும், உணவு அருந்திவிட்டு உறங்கச் சென்றனர்.

குழம்பிய குட்டையாக மனதிருந்ததால் நவின்சந்திராவுக்கு உறக்கம் வர மறுத்தது... வலிந்து உறக்கத்தை அணைத்துக்கொண்ட அவர், அலாரம் ஒலிக்க எழுந்து, குரல் கொடுத்ததும் மற்றவர்களும் எழுந்து, தேநீர் குடித்த பின்னர் வலையைக் கிளப்பத் தொடங்கினர்.

காற்றின் வேகம் சிறிதேனும் குறைந்ததாகக் காணப்படவில்லை...

அதன் தாக்கத்துக்கு ஈடுகொடுத்தவாறு, வலை இழுப்பதற்கு இசைவாக வள்ளம் செல்லும் வகையில் சிரமப்பட்டே சுக்கானைப் பிடித்துக் கொண்டிருந்தார் நவின்சந்திரா.

வேகமாக வலை இழுவையில் ஈடுபட்ட தொழிலாளரின் மகிழ்ச் சிக்கு அளவே இல்லை. ஆரம்ப வலையிலிருந்து தொடராக சிறிய வகை சுறாக்கள், பாரை இனங்கள், மண்ணா, கொக்குத் திருக்கை, மையக் கண்ணி (யாழ்ப்பாணத்தில் இம்மீன் விற்கப்படுவதில்லை) எனப் பலவகை மீனினங்கள் வலைகளில் சிக்குண்டு வந்து கொண்டிருந்தன...

காற்று திடீரென உச்சத்துக்கு வீசத் தொடங்கிய காரணத்தால், கடல் நீரோட்டத்தில் மாற்றத்தை ஏற்படுத்தி, கடலடியைக் கலக்கி நீரைக் கலங்கச் செய்துள்ளது. இதனால் சிதறுண்ட இவ்வகை மீனிங்கள், கலப்பாகச் சிக்குண்டுள்ளன.

இதற்கு முன்னர் இவ்வாறு பட்டிராத காரணத்தால் இடை யிடையே திரும்பி வள்ளத்தில் கிடக்கும் மீன்களை லோமியாவின் வெளிச்சத்தில் பார்த்துக் கொண்டனர்.

'இதுவரை இழுத்தெடுத்த ஆறு வலைகளில் இவ்வளவு மீன்களென்றால் ஏனைய வலைகளில்...!'

நினைத்த கணம் அந்தரத்தில் பறப்பதுபோன்ற உணர்வு... மனதார கடவுளுக்கு நன்றி கூறிக்கொண்டு மகிழ்வாலும், ஆவலினாலும் பிறந்த உற்சாகத்தில் தம்மை மறந்து இடறுப்பட்டும், விழுந்தெழுந்தும் இழுகலாயினர்.

இப்போது அணியத்திலுள்ள வெளியிலும் இயந்திரக்கூட்டுக்கு முன்னாலுள்ள வெளியிலும் பெரும்பகுதி மீன்களால் நிறைந்து விட்டன...

பார்க்கப் பார்க்க அதிகரித்த உற்சாகத்தில், கொடிகட்டிப் பறந்த கற்பனையில் கணங்கூடத் தாமதிக்கக்கூடாது என்ற வைராக்கியம் அவர்களின் இழுவையில் தெரிந்தது.

இப்போது இருபது வலைகள் வரை இழுத்துவிட்டனர்.

அந்நேரம், எவரும் எதிர்பாராக்காத நிகழ்வு...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லோமியாவின் ஒளி அணைந்தது...

திரி புகையத் தொடங்கியது...

இருள் மூடிக் கொண்டது...

இதயத்தை இடி தாக்கிதைப்போல உணர்ந்தனர்...

இதன் அதிர்ச்சியிலிருந்து விடுபட முடியாமற்போனது மட்டுமல்ல, அக்கணம் கண்கள் திரையிடப்பட்டது போல் மங்கி எவற்றையும் பார்க்கமுடியாமல் போய்விட்டது...

உடனடியாக எதுவும் செய்ய முடியாத நிலையால் அசையாது அந்தந்த இடத்திலேயே நின்றனர்.

டீசல் இல்லாமை ஒன்றைத் தவிர வேறு காரணத்தால் லோமியா அணையாது என்பதை எவரும் அறிவர்.

“ஜேக்கப்பண்ணே! சூழ்லாம்புக்கு டீசல் விடயில்லையா?”

திடீர் இருளின் திண்டாட்டத்தின் மத்தியில் உண்டான கோபத்தின் உச்சத்தால், உரத்துக் கேட்டவாறு சுக்கானின் ‘கானாத்தடி’யைப் பிடிப்பதை விடுத்து இயந்திரக் கூட்டுக்கு மேலே வந்துவிட்டார் நவின் சந்திரா.

“.........”

ஜேக்கப்பின் மௌனம் அவருக்கு எரிச்சலைக் கொடுத்தது.

“ஏன் இவ்வளவு நேரமும் விடாம இருந்தனீங்க!... உங்களுக்கு அந்த யோசினையே இல்லையா? எல்லாம் மத்தியானத்து வெறிசெய்த வேலைதான். இனிமேல் வெறியில வந்தா என்ன செய்யிறனெண்டு பாருங்களன்!”

அவரிடம் பதில் வரவில்லை.

“கெதியாப்போய் டீசலை விட்டு சூழ்லாம்பை எரிய வையுங்க... போங்க, கெதிப் பண்ணுங்க...”

அப்போதைய தேவையை உணர்ந்து சமாளித்தவராய் கோபத்தை அடக்கிக் கொண்டாலும், தான் சுக்கான் பிடிப்பதை விட்டு வந்துள்ளதை மறந்துவிட்டார்.

சில நேரங்களில் இவ்வாறு கானாத்தடியின் பிடியைவிட்டு, சில நிமிடங்கள் வேறு தேவைக்காக செல்வதுண்டு. ஆனால், இன்றைய காற்றின் வேகம் அதற்கு உசிதமானதாக இருக்கவில்லை.

லோமியா அணைந்து காரிருள் ஏற்பட்ட களேபரத்தில் வலை இழுப்பவர்களின் கவனமும் சிதறியதால், வலையை இழுக்காமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழுத்துப் பிடிப்பதைத் தவிர வேறு வழி இருக்கவில்லை.

தொடர்ந்து இழுத்துப் பிடிக்க முடியாமையால், கண்கள் ஒளி பெற்றதும் மோவலைக் கயிற்றை அணியத்து திரட்டுக் காலில் சுற்றிப் பிடித்தனர்.

வலை தொடராக இழுபடாமல் நிறுத்தப்பட்டதால் ஏற்பட்ட மாற்றத்துடன், காற்றின் வேகமும் சேர்ந்ததால் வள்ளம் சிறிது நேரம் தடுமாறியது. அந்தத் தடுமாற்றத்துடன் சுக்கானின் கட்டுப்படுத்தலும் இல்லாமற்போக, காற்றுக்கு விலங்காகத் திரும்பியது வள்ளம். இதை எவரும் எதிர்பார்க்கவில்லை.

விலங்காக வந்த வள்ளம், காற்றின் வேகத்துக் ஈடுகொடுக்க முடியாமல், அலைகளின் உந்தலால் ஒருபக்கம் கெழிந்து, அடுத்து கணம் உயர்ந்து - மறுபக்கம் கெழிந்து ஊஞ்சலாட்டம் போட்டது...

கடையால் பக்கம் இயந்திரம் இருப்பதாலும், இயந்திரக் கூட்டுக்கு முன்னால் மீன்களும் வலைகளும் ஏற்றப்பட்டதாலும் பின்பக்கம் வழமையைவிட அமிழ்ந்து நீர் மட்டத்திலிருந்து இரண்டு அடிகள் வரையே வள்ளத்தின் மேல் மட்டம் இருந்தது. இதனால் வள்ளம் கெழிந்த கணத்தில், காற்றின் வேகத்தால் எழுந்த அலைகளால் கடல் நீர் வள்ளத்தை மூடிப் பாய்ந்தது.

விரைந்து சமாளிக்க முயன்று, திரட்டுக்கட்டையில் சுற்றிப் பிடித்த மோவலைக் கயிற்றைக் கழற்றி, நால்வரும் இணைந்து இழுக்க, நவின்சந்திரா சுக்கானைப் பிடிக்கத் தொடங்கியும் வள்ளத்தைக் கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவருவது கடினமாக இருந்தது.

கடவுள்மீது வைத்த நம்பிக்கையுடன் எடுத்துக்கொண்ட கடின முயற்சியின் பின்னர், நிகழவிருந்த விபரீதம் தடுக்கப்பட்டு வள்ளத்தை ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்...

மிகையான சலசலப்புச் சத்தத்துடன் கூடிய வள்ளத்தின் ஆட்டம் நிற்காமல் தொடர்ந்தது.

வள்ளத்தை கடல் மூடிப் பாய்ந்ததால் தேங்கிவிட்ட நீரும் இதற்கு ஒரு காரணம்.

தனது தவறை உணர்ந்த ஜேக்கப், இருளில் தடுமாறினாலும் தாமதியாமல் லோமியாவை கழற்றியெடுத்து, இயந்திரக் கூட்டில் நுழைகையில் காரிருள் இடையூறாகவே இருந்தது.

வள்ளத்தின் ஆட்டம் மற்றும் இருளுக்கு மத்தியில் இயந்திரக் கூட்டின் உள்பகுதிச் சட்டங்களில் பிடித்துக்கொண்டு டீசல் ராங்கின் அடிப்பகுதியிலுள்ள டீசல் வெளியேறும் 'கொக்'கை திறந்து லோமியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில் டீசலை நிரப்புகையில், செய்யத் தவறியதன் குற்ற உணர்வு அவரைத் தாக்கி பலவாறாகச் சிந்திக்கத் தூண்டியது...

அந்த வேதனையுடன் வள்ளத்தின் ஆட்டத்துக்கு ஈடுகொடுத்த வாறு அவதானமாக டீசலை நிரப்பியவருக்கு ஒரு கணமும் ஒரு மணித்தி யாலமாகத் தெரிந்தது. இயந்திரக் கூட்டிலிருந்து விரைந்து வெளியேற வேண்டுமென்ற துடிப்பு...

டீசலை நிரம்பிய மறுகணம் வெளியேறி, லோமியாவைப் பற்ற வைத்து, முன்னைய இடத்தில் கட்டிவிட்டார்.

வெளிச்சம் கிடைக்கும் வரை மெதுவாக வலையை இழுத்துக் கொண்டிருந்தவர்கள், லோமியா வெளிச்சத்தில் பிடிபட்ட மீன்களை திரும்பிப் பார்த்து, மகிழ்வுடன், மீண்டும் உற்சாகமாக இழுக்கத் தொடங்கினர்.

அந்நேரம் இராசகுலத்தை அழைத்த நவின்சந்திரா, வள்ளத்தின் 'வங்கு'களுக்கு இடையில் தேங்கிக் கிடக்கும் நீரை, அள்ளி வெளியேற்று மாறு கூறிவிட்டு சுக்கான் பிடிப்பதில் கவனத்தைச் செலுத்தினார்.

சற்றுமுன் கடல் மூடிப் பாய்ந்த நீராலும், இழுத்த வலைகளோடு சேர்ந்துகொண்ட நீராலும் வள்ளத்துக்குள் வழமையைவிட அதிகமாக நீர் தேங்கிவிட்டது என்பதை அவர் அறியாமலில்லை. அவரது தவறும் அதில் இணைந்திருந்தது.

இயந்திரக் கூட்டுக்குப் பின்பக்க வெளியால் பட்டையால் நீரைக் கோலி கடலில் ஊற்றிக் கொண்டிருந்தான் இராசகுலம்...

"அண்ணே!"

"என்னடா?"

"தண்ணியோட டீசலும் கலந்து வருகுதண்ணே."

"டீசலா! என்னண்டடா?"

"தெரியயில்லையண்ணே கனக்கையாத் தெரியிது."

"டீசல் பரல் ஏதும் சரிஞ்சு ஊத்துண்டுதோ தெரியா போயப் பார்த்துவா."

உடனேயே சென்று பார்த்து வந்தான்.

"பரல்கள் அப்படியே கட்டினபடி இருக்குதண்ணே."

"என்னண்டு தெரியயில்ல... தண்ணி கனக்கக் கிடக்கெல்லா மினக்கடாம அள்ளி ஊத்து பார்ப்போம்."

ஒருவாறாக வள்ளத்தினுள்ளே கிடந்த நீரையள்ளி வெளியேற்றி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யதும் இதுவரை இருந்த சலசலப்புச் சத்தம் குறைந்து விட்டது.

இறுதி வலையை இழுக்கத் தொடங்கினர். வழமைபோல் சுக்கானை கண்காணித்தபடி, கைபிடியை இயந்திரத்தில் செருகி அதனை இயக்குவதற்காகச் சுற்றினார் நவின்சந்திரா.

253789

அது இயங்கவில்லை...

மூன்று தடவைகள் முயற்சித்தும் இயங்காமையால் இனம் புரியாத பதட்டம்...

"யேசுராசா! இஞ்சின் ஸ்ராட் வருகுதில்ல. கொஞ்சம் மெதுவா வலையை இழுங்க. எல்வாட்டரண்ணைய இஞ்ச வரச்சொல்லு."

வலை இழுவை மெதுவாக இருந்தாலும் வலையின் பொறுப்பி லிருந்து வள்ளத்தை விலக விடவில்லை.

சுக்கானைப் பிடிக்குமாறு எல்வாட்டரிடம் கொடுத்துவிட்டு மீண்டும், மீண்டும் கைபிடியைச் சுற்றி இயங்கச் செய்ய முயற்சித்த போதும் அவரால் இயக்க முடியவில்லை.

அவரது அனுபவத்தில் இது முதல் தடவை என்பதால் இயந்திரம் இயங்காமலிருப்பதற்கான காரணம் புரியவில்லை.

இரவு டீசல் ராங்கில் டீசல் நிரப்பியதை அவர் அறிந்திருந்த போதும், சந்தேகத்தில் இயந்திரக்கூட்டில் நுழைந்து டீசல் ராங்கின் கொக்கைத் திறந்து பார்த்து உறுதிசெய்ய முனைந்தார்...

கொக்கில் கையை வைத்ததும் பல சம்மட்டிகள் ஒன்றாய் இதயத்தைத் தாக்கியதைப் போலிருந்தது அவருக்கு...

என்ன செய்வதெனப் புரியாமல் தடுமாறினார்...

'கொக்' பூட்டுப்பட்டிருக்கவில்லை...

மீண்டும் தொட்டுப்பார்த்து உறுதிசெய்துகொண்டார்.

கொக்கினூடாக டீசல் வெளியேறி ராங் வெறுமையாகி விட்டதை உணர அதிகநேரம் ஆகவில்லை.

வள்ளத்திற்குள் கிடந்த நீரை அள்ளி வெளியே ஊற்றுகையில் இராசகுலம் கூறியது நினைவுக்கு வந்தது.

"வள்ளத்துக்குள் கிடந்த நீரோடு டீசல் கலப்பதற்கு இதுதான் காரணம்... தானாக திறபடக்கூடிய அமைப்பில் 'கொக்' இல்லை. யாரோ ஒருவர்தான் திறந்திருக்க முடியும்."

வாய் முணுமுணுத்தது...

லோமியாவுக்கு டீசல் எடுப்பதற்கென ஜேக்கப் இயந்திரக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டுக்குள் சென்றது அப்போது அவரின் நினைவில்...

'கொக்'கைப் பூட்டிவிட்டு வெளியேறினார்.

"ஜேக்கப்பண்ணே...!"

கோபத்தின் உச்சத்துடன் வந்தது குரல்...

விபரம் புரியாமல் விழித்தார் ஜேக்கப்...

"ராங்கில இருந்து டீசல் எடுத்தனீங்களெல்லா?"

"ஓம்தம்பி...!"

"கொக்கப் பூட்டினனீங்களா?"

"பூட்டாம வருவனா தம்பி!"

"பூட்டியிருந்தா ஏன் ஒழுகப் போகுது? ...... ....."

கோபத்தில் வார்த்தைகள் கட்டுப்பாடின்றி வெளியேறின.

"எனக்கு வாற கோபத்துக்கு உங்கள என்ன செய்வேனெண்டு தெரியாமலிருக்கு. எல்லாம் சாராயத்தின்ர வேலை. கரைக்கு வாங்க, சம்மாட்டி நிற்பார்தானே! அங்க பேசிக் கொள்ளுறன்... இராசகுலம்! கிடக்கிற டீசலை எடுத்துக் கெதியா விடு..."

கூறிவிட்டுத் திரும்பிய நவின்சந்திரா, தான் சுக்கானைப் பிடித்துக் கொண்டு எல்வாட்டரை வலை இழுக்க அனுப்பியதும், இராசகுலம் விரைந்து ராங்கில் டீசலை ஊற்றினான்.

அதன் பின்னரும் நவின்சந்திராவால் இயங்கச்செய்ய முடிய வில்லை. திரும்பத் திரும்ப முயற்சித்தும் சாத்தியப்படவில்லை.

இயந்திரம் இயங்காததற்கு டீசல்தான் காரணமென்றால், அதனை நிரப்பியும் இயங்க மறுப்பது ஏனென்று தெரியவில்லை... என்ன செய்வதென்று புரியாத நிலையால் ஜேக்கப் மீதே கோபம் அதிகமானது.

தனது கோபத்தை வெளிப்படுத்துவதன் மூலம் சாதிக்க ஒன்று மில்லையென்பதை உணர்ந்து அடக்கிக்கொண்டார்...

இன்னமும் சிறிது நேரத்தால் வலை இழுத்து முடிந்துவிடும் அதன் பின்னர் வள்ளத்தை கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியாநிலை ஏற்படு மென்ற கவலை பேரிடியாக நவின்சந்திராவை தாக்கியது.

மாற்றுவழி பற்றி சிறிதுநேரம் சிந்தித்த அவர், யேசுராசாவை அழைத்தார்.

"யேசுராசா! நங்கூரத்தை அரைவாசிக் கயிறுவரை கடலில் இறக்கி அணியத்தில கட்டிவிடு."

"கயிறே நீளங் காணாது. அதுக்குள்ள அரைவாசியில கட்டினா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னண்டண்ணே...!"

"நான் சொல்லுறதச் செய்..."

கோபத்தில் வந்த வார்த்தையால் மேற்கொண்டு எதுவும் கூறாது, சொன்னதைச் செய்துவிட்டு அவரண்டை வந்தார்.

"இனிமேலும் பாத்துக்கொண்டிருக்க ஏலாது யேசுராசா. வலையும் இழுத்து முடியப்போகுது. நான் சுக்கானைப் பிடிச்சு வள்ளம் காற்றுக்கு விலங்க வராம கொஞ்ச நேரத்துக்குச் சமாளிப்பன். வலை முழுக்க இழுத்ததும் நீ மினக்கடாம எப்படியும் வலையின்ர முனையை நங்கூரக் கயிற்றோடு சேர்த்து முடிஞ்சுபோட்டு நங்கூரக் கயிற்றை அவிட்டுவிடு..."

நவின்சந்திராவின் எண்ணம் இப்போது யேசுராசாவுக்குப் புரிந்தது...

இறுதியான வலையின் முனை மேலே வந்ததும், கொடித் தடியை எல்வாட்டர் அவிழ்க்க, வலையின் முனையைக் கூட்டிப் பிடித்து, நங்கூரக் கயிற்றுடன் சேர்த்து முடிந்து, அணியத்தில் கட்டியிருந்த நங்கூரக் கயிற்றை அவிழ்த்து விட்டார்.

இப்போது கயிற்றையும், தொடர்ந்து வலையையும் இழுத்துக் கொண்டு கடலினடி நோக்கி அமிழ்ந்தது நங்கூரம்...

தொடராய்ச் சென்றுகொண்டிருந்த வலையை இடையிடையே இழுத்து நிறுத்திப் பார்த்து, நங்கூரம் கடலினடித் தரையைக் கௌவிக் கொண்டதை உறுதிசெய்த யேசுராசா, வள்ளத்தில் அதனைக் கட்டி விட்டார்.

சிறிது நேரம்வரை தள்ளாடிய வள்ளம், காற்றுக்கு விலங்காக வந்தபோதும் அடுத்த நிமிடமே ஆரவாரமில்லாமல் நங்கூரத்தின் பொறுப்பில் தரித்துச் சாய்வாகத் திரும்பியது.

எடுத்துக்கொண்ட சிரமத்துக்குப் பயன் கிடைத்த மகிழ்வில், நவின்சந்திராவின் அனுபவத்தையும், சமயோசித புத்தியையும் மனதாரப் பாராட்டி மகிழ்ந்தனர்.

வள்ளம் நிறைந்த மீன்கள்... செல்ல வேண்டிய தூரமோ அதிகம்... அதற்குள்ளே இயந்திரத்தில் பழுது...

எல்லோருக்குமே பெரும் தாக்கமாக இருந்தது.

லோமியா வெளிச்சத்தில் இயந்திரத்தை இயங்கச் செய்வதற்கான முயற்சியை ஆரம்பித்த நவின்சந்திரா, 'எயார்' எடுத்திருக்கலாம் எனக் கருதி, கைவசம் இருந்த சாவியைக்கொண்டு கழற்றியபோது அந்தத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துவாரத்திலிருந்து காற்றுக்குப் பதில் நீர்த்துளிகளே தெறித்தன.

சிறிது நேர யோசனையின் பின்னர் கைப்பிடியை இயந்திரத்தில் செருகி, காதுகளை கூர்மையாக்கிக்கொண்டு மெதுவாகச் சுற்றினார். அதனுள் வழமையாகக் கேட்கும் ஒயில் சத்தத்துடன் நீர் சலசலப்புச் சத்தமும் கலந்து கேட்டது.

காரணம் புரிந்தது...

வள்ளம் கெழிந்து கடல்நீர் வள்ளத்தை மூடிப் பாய்ந்தபோது 'சைலன்சர் பைப்'பினால் இயந்திரத்தினுள்ளே புகுந்த நீர் 'ஒயிலு'டன் கலந்துவிட்டது.

முடிவு உறுதியானது...

இயந்திரம் இயங்கிக்கொண்டிருந்தாலோ, வள்ளம் பாதிக்கு மேல் அமிழ்ந்த நிலையில் எதேச்சையாக விலங்காக வராமல் இருந்திருந்தாலோ சைலன்சருக்குள் நீர் புக வாய்ப்பிருந்திருக்காது. இன்று இரண்டுமே முறைமாறியதால் நீர் உட்புகுந்து இயந்திரம் இயங்க மறுக்கிறது...

எட்டப்பட்ட முடிவால், மண்டாடியாகிய தன்னால் ஒன்றுமே செய்ய முடியாத நிலையை எண்ணி மனதுக்குள் புழுங்கியவாறு இயந்திரக் கூட்டின் மேல் அமர்ந்துகொண்டார்.

இந்த விபரீதத்தால், மேற்கொண்டு எதுவும் செய்யமுடியாது என்பதால் உடலும் உள்ளமும் களைப்படைந்த நிலையிலேயே எல்லோரும் இருந்தனர்.


வள்ளம் நிரம்பக் கிடந்த மீன்கள், இவர்களின் கவனத்தை ஈர்க்கவில்லை. உதவிக்கு வள்ளம் ஏதேனும் வராதா என்ற நினைவே மேலோங்கி இருந்தது.

இருள் மூடிய பூமியில், ஆழியின் நடுவே, எங்கு - எவ்வளவு தூரத்தில் வள்ளம் கிடக்கிறது என்பதைக்கூட அறிய முடியாத இக்கட்டான நிலை இவர்களுக்கு...

இந்த நிலை ஏற்படுவதற்கு எந்த லோமியா காரணமோ, அந்த லோமியாதான் அடையாளமாவும், ஒளியாகவும் வள்ளத்தில் இருந்தது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 05

*1963* ஆனி மாதம் *15* ஆம் திகதி சனிக்கிழமை...

*01*ஆம் நாள்...

பூமியின் நிகழ்வுகளை அவதானிக்க வருபவன்போல சூரியன் அடிவானில் பிரசன்னமாகினான்...

தமது நிலையை எண்ணிய தவிப்பில் அதிகாலை மூன்று மணியிலிருந்து உறக்கமற்று இருந்தவர்களுக்கு சூரியஒளி கண் எரிவைக் கொடுத்தது.

காற்று மாற்றமின்றி இருந்ததால் பாரத்தால் அமிழ்ந்திருந்த வள்ளம் மேலெழுந்து வீழ்கையில் கடல்நீர் கோலவும் செய்தது.

கண் எரிவு மட்டுமல்ல, இதனால் உடல் - உள வேதனையும் வெகுவாகத் தாக்கியது.

ஒளி கண்டதால் லோமியாவை அணைத்தான் இராசகுலம்.

தன் முயற்சியைக் கைவிட விரும்பாத நவின்சந்திரா, யேசுராசாவுடன் சேர்ந்து, ஓயிலில் கலந்துவிட்ட தண்ணீரை இயந்திரத்திலிருந்து வெளியேற்றி இயங்கச் செய்வதற்கு ஏதேனும் வழியிருக்கிறதா என முயன்று பார்த்தும் முடியவில்லை. இயந்திரம் திருத்துனர்களால் மாத்திரமே செய்யக்கூடிய வேலையது...

இதனை யேசுராசா தெரியப்படுத்தியதும் பலவாறான சிந்தனையில் ஒவ்வொருவரும்.

முதல் நாள் இரவு சாப்பிட்ட சோற்றையும் சாமத்தில் குடித்த தேநீரையும் தவிர எவையும் சாப்பிடாமல் வெற்று வயிறாக இருந்ததனால், தேநீர் வைத்துக் குடிக்க குக்கரைத் தேடினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயந்திரக் கூட்டுக்கு முன்னால் மீன்களோடு சேர்ந்தாற்போல் தாங்கு கம்பிகளில் ஒன்று கழன்ற நிலையில் கிடந்தது.

வள்ளத்தின் ஆட்டத்துடன் சேர்ந்து ஆடியதில் குக்கர் விழுந்து தாங்குகம்பி உடைந்துள்ளது.

தாங்கு கம்பியைத் தேடியெடுத்து இலகுவாகச் சீர்செய்து கொண்டு, குக்கருக்குள் மண்ணெண்ணெய் விட்டு, பானையில் தண்ணீரை எடுத்து குக்கரின் மேல் வைத்துவிட்டு, தீப்பெட்டியை தேடிய போது, வைத்த இடத்தில் மூன்று தீப்பெட்டிகளும் இல்லாமல் வள்ளத்துக்குள் எஞ்சிக் கிடந்த நீரில் சிதைந்து மிதந்தன.

தேநீர் வைக்கும் முயற்சியும் கைவிடப்பட்டது.

ஓரளவேனும் பசியைப்போக்குவதற்கு வள்ளத்தில் கிடந்த மீனை அவித்துச் சாப்பிடக்கூட முடியவில்லை.

வானத்தையும் கடலையும் மாறிமாறிப் பார்த்தவாறு ஏக்கத் துடன் இருந்தனர்.

சூரியன் உச்சத்துக்கு வர பசியும் உச்சத்தை தொட்டது... தண்ணீர் ஒன்றே அப்போதைய உணவு.

கரை தெரியாக் கடலில் தத்தளிக்கும் தம்மைத்தேடி வள்ளங்கள் வருகின்றதா என்ற பார்வையால் கண்கள்கூட பூஞ்சணம் கட்டி விட்டன. ஆனாலும், சளைக்காமல் பார்த்துக்கொண்டேயிருந்தனர்.

நேரமாக நேரமாக மீன்கள் பழுதடைந்து மணம் வீசத் தொடங்கியது... ஒன்றித்து நின்று அவற்றைக் கடலில் வீசினர்.

ஒரு பாரை பழுதடையாமல் இருந்ததால் (நேரம் தாழ்த்தி சிக்குண்டிருக்க வேண்டும்) வள்ளத்தில் இருந்த கத்தியைக்கொண்டு அதனைத் துண்டுகளாக வெட்டி, கடல் நீரில் நன்றாகக் கழுவி, வெயிலில் உலர்வதற்காக வள்ளத்தின் அணியப்பக்கத் தட்டில் போட்டு வைத்தான் இராசகுலம்.

நேரம் அதிகமாக பசி விஸ்வரூபம் எடுத்தது 'கடற்பசி பேய்ப் பசி' என்று சொல்லுவதை அறிந்திருந்தபோதும் அந்தப் பசியின் தன்மையை இப்போதுதான் உணர முடிந்தது.

சற்றும் குறையாத பசியுடன் இருள் சூழத் தொடங்கியது. லோமியாவைக்கூட எரியவைப்பதற்கு தீப்பெட்டி இல்லாத நிலை. ஐந்தாம் பிறை மறையும் வரை இருந்த ஒளியைத் தவிர இருளே தஞ்சமானது.

இரவாகி ஒரு மணித்தியாலம் வரையான நேரத்தின் பின்னர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளிர் கடுமையாகத் தாக்கியது. பகலில் உச்ச வெயில் இரவில் கடுங்குளிர்...

சாரம் ஒன்றே அணிவதற்கும், குளிர்காக்கப் போர்ப்பதற்கும் ஏற்றதாக இருந்தது... அந்தக் குளிருக்கு அதுவும் ஏற்புடையதல்ல. அதனால், ஐவரும் ஒன்றித்து கூறைப்பாயினால் முடிக்கொண்டனர்.

இதுபோன்ற குளிரை தொழில் செய்யும் நேரங்களில் பெரிது படுத்துவதில்லை... தெரிவதில்லை என்றும் சொல்லலாம்.

தற்போதைய நிலை முற்றிலும் மாற்றமானது.

குளிர் பனியாகக் கொட்டும் நிலை,

பசி எல்லையற்று கிளர்ந்தெழும் நிலை,

உள்ளத்தில் அமைதி இல்லாத நிலை,

அடுத்து என்ன நிகழப் போகின்றது என்ற ஏக்க நிலை...

இவற்றால் குளிரின் தாக்கம் மட்டுமல்ல உறக்கம் வரவும் மறுத்தது... விழித்திருந்தனர், உதவிக்கு வள்ளங்கள் ஏதேனும் வரலா மென்ற நம்பிக்கையில்...

வெளித்தெரியும் அடையாளம் இல்லாததால் வள்ளத்தைத் தேடி எதுவும் வருவதற்கான அறிகுறியே இல்லை...

***

சம்மாட்டி செல்வநாயகம், ஆசீர் மற்றும் அபூபக்கரும் மதியம் வரை வள்ளத்தை எதிர்பார்த்துக் காத்திருந்திருந்தனர்.

அதிகாலை வந்திருக்கவேண்டிய வள்ளம் இதுவரை வரவில்லை. அதற்கான அறிகுறியும் இல்லை...

பேய்ப்பாறைப்பிட்டிக்குப் போவது பற்றி அறிந்திருக்கிறார்கள். வராமைக்கான காரணத்தை அறியவில்லை. ஏமாற்றமும், வேதனையும் கலந்த நிலையில் இவர்கள்.

நேரம் அதிகரித்துச் செல்ல இருப்புக்கொள்ள முடியாமல் அங்க லாய்த்தனர்... வரத் தாமதிப்பதற்கான காரணத்தை தீர்மானிக்க முடியாது விட்டாலும் இவர்களால் தாமதிக்க முடியவில்லை.

வியாபாரி சின்னப்புவின் உதவியுடன் முதல் நாள் தொழிலுக்குச் சென்ற வள்ளங்களின் தொழிலாளரைச் சந்தித்து விசாரித்துப் பார்த்தனர். பேய்ப்பாறைப்பிட்டிக்கு எவரும் சென்றிருக்கவில்லை. அதனால், எந்தத் தகவலையும் அவர்களிடமிருந்தும் பெறமுடியவில்லை.

"இந்தக் காத்துக்குள்ள ஏன்தான் பேப்பாறைப்பிட்டிக்குப் போனாங்களோ? அது என்ன கொஞ்சத் தூரமா?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னப்பு, செல்வநாயகத்தைப் பார்த்துக் கேட்டாலும் அவரிடம் பதிலிருக்கவில்லை.

அன்று மாலை தொழிலுக்குச் செல்கின்ற தொழிலாளர்களிடம் கெஞ்சலாகக் கேட்டுக்கொண்டனர். தாங்கள் செல்லுமிடங்களில் அவதானித்துப் பார்ப்பதாக கூறிச் சென்றமை அவர்களுக்கு ஆறுதலைக் கொடுத்தது.

தொழிலாளர்களிடமிருந்து வேறு எந்தப் பதிலையும் எதிர்பார்க்க முடியாது. ஏனென்றால், அவர்கள் வலை படுக்கும் இடம் வேறு வழிந்து சென்றபின் வலை கிளப்பும் இடம் வேறாக இருப்பதால் அவர்கள்தான் என்ன செய்யமுடியும்? வரும் பாதையில் எதிர்ப்பட்டாலன்றி வேறு எதுவும் செய்யமுடியாது.

இரவு நெடுநேரமாகக்கண்விழித்துக் காத்திருந்தனர் மூவரும் எப்படியும் வள்ளம் வந்துவிடும் என்ற எதிர்பார்ப்பில்...

***

*02 ஆம் நாள்...*

பசி, உச்ச வெயில், உறக்கமின்மையால் கண்கள் சிவந்து எரிவைக் கொடுத்தது...

காற்றின் வேகத்திலும் மாற்றமிருக்கவில்லை.

இவ்வாறு வேகரம் கொள்ளும் காற்று, எவ்வாறேனும் ஒரு வாரம் நெருங்கும் வரை மாற்றமின்றி வீசும் என்பதை தொழிலாளர் அறிவர்.

காற்றின் அமைதிக்காகவும் காத்திருந்தனர், விடிவு பிறக்கக் கூடுமென்ற நம்பிக்கை இழக்காத எதிர்பார்ப்பில்...

தாகம், பசி இரண்டும் போட்டிபோட்டு வாட்டியது.

தாகத்திற்கும், உணவுக்கும் ஈடாக குடிநீர் மட்டுமே இருந்தது. சிக்கனமாகக் குடித்தாலும் இன்று வரைதான் கைவசமுள்ள நீர் போதுமானது.

நாளை...!

"கடவுளட சித்தம்..."

ஆற்றாமையால் பாரத்தை கடவுள்மீது போட்டனர்

***

செல்வநாயகத்தின் தவிப்பு கட்டுப்பாடின்றி இருந்தது...

14 ஆம் திகதி தொழிலுக்குச் சென்ற வள்ளம் இரண்டு நாளாகியும் வரவில்லை. தொழில் வளங்களை இழந்தாலும் ஐவரும் உயிருடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டாலே பொதுமென்ற எண்ணம் அவரிடம். அண்மையிலிருந்த அந்தோனியார் ஆலயத்துக்குச் சென்று விண்ணப்பத்தை கண்ணீருடன் முறையிட்டார்... நேர்த்தியை முன்வைத்தார்...

கிடைத்த மன ஆறுதலில் நம்பிக்கையைத் தளரவிடாத செல்வ நாயகம், தகவலை ஊருக்குத் தெரியப்படுத்தாமல் இருப்பது தவறு என்று கருதியதால், அன்று பிற்பகல் யாழ்ப்பாணம் சென்ற ஒருவரிடம் விபரத்தைக் கூறி, அவர் சம்மதித்தற்கமைய தனது வீட்டு முகவரிக்கு கடிதம் எழுதிக் கொடுத்துவிட்டார்.

✶✶✶

*03 ஆம் நாள்...*

எதிர்பார்ப்பின் விடியலே இல்லாமல் விடிந்தது...

வெயிலின் தாக்கம் அதிகரிக்க தாகமும் அதிகமானது.

கைவசம் இருந்து இதுவரை தாகத்தை தீர்த்த குடிநீர் இப்போது தீர்ந்துவிட்டது.

திரும்புகிற திசையெல்லாம் கடலென்பதால் அப்போதைய தாகத்தைத் தணிக்க கடல் நீர் மட்டுமே தெரிவாக இருந்தது. அதைக் குடிப்பதைத் தவிர வேறு வழியில்லையென்ற எண்ணமே மேலோங்கியது.

இவர்கள் கடலில் இறங்கவேண்டிய அவசியம் இருப்பதில்லை. சில வேளை அத்தகைய சந்தர்ப்பம் ஏற்படுகையில் சொற்பமாக கடல் நீர் வாயினுள் செல்வதுண்டு. அதற்கே பல தடவைகள் காறித் துப்புபவர்கள், தவிர்க்க இயலாத சூழலில் அதனையே குடிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குள்ளாயினர்...

பட்டையால் கோலி, வெகுவாகச் சிரமப்பட்டு ஒரே தடவையில் குடித்து, வாழ்வில் முதற் தடவையாக உப்பு நீரால் வயிற்றை நிரப்பினர்.

நிறைந்த வயிறால் நிம்மதியாக இருந்தவர்கள், சில வினாடிகளில் குமட்டியபோது ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர்.

அடி வயிறு நோகும் வரை ஓங்காளம்...

திரும்பத் திரும்ப ஓங்காளித்தனர்...

சற்றுமுன் குடித்த நீர் அனைத்தும் வாந்தியாய் வெளியேறியது.

வாயின் கசப்பு மேலும் குமட்டலை தோற்றுவித்தது.

சிறிதுநேரம் தலை கவிழ்ந்து, வாயைத் திறந்தபடி, சுரந்த உமிழ் நீரை வெளியேறவிட்டு, வாயினுள் இருந்த கசப்புத் தன்மையைப் போக்க முயற்சித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கசப்புத் தன்மை நீங்கியபோதும் தொண்டை வரட்சிகாணத் தொடங்கியது. அதனையும் உமிழ்நீரே தீர்த்துவைத்தது.

வாந்தி எடுத்ததால் களைப்புற்று அமர்ந்திருக்கையில் மீண்டும் தாகம். அந்நேரம் கடலைப் பார்க்கவே குமட்டுவதுபோல இருந்தது... இந்த நேரத்தில்தான் எல்வாட்டர் முன்வைத்த யோசனை மற்றவர்களைச் சிந்திக்க வைத்தது...

நோய் தீர்க்கும் மருந்தாக ஓரிருவர் அருந்தியதை அறிந்திருப் பதால் ஆபத்துக்குப் பாவமில்லை என்று தோன்றினாலும் நிறைவற்ற விருப்பத்துடனே நால்வரும் ஏற்றுக்கொண்டனர்.

இவர்களின் தயக்கத்தை அவதானித்த எல்வாட்டர், தானே தொடக்கிவைக்க முடிவெடுத்தார்.

"அவசியத் தேவையின் நிமித்தம் தனது சிறுநீரைத் தானே குடிக்கலாம். சில நோய்களுக்கு சிறுநீர் குடிக்கும்படி நாங்களே சொல்லு றோம். எதுவும் செய்யாது" என்று ஒருதடவை வைத்தியர் கூறியதை நினைத்துக்கொண்டு தயக்கமில்லாமல், சாப்பாட்டுச் சட்டியில் சிறுநீரைக் கழித்து அதனைக் குடித்தார்.

முன்மாதிரிகையாய் குடித்து, ஆரம்பித்து வைத்த எல்வாட்டர், வைத்தியர் முன்பு கூறியதை நால்வருக்கும் கூறியதும் மனதைக் கல்லாக்கிக்கொண்டு தனித்தனிச் சட்டியில் சிறுநீரைக் கழித்துக் குடித்தனர். சிறுநீர் குறைவாகவே இருந்ததால் அருவருப்பு பெரிதாக இருக்கவில்லை.

நிறைவாகத் தண்ணீர் குடிக்காதிருக்கின்றமை மற்றும் வெயிலின் அகோரத்தால் உண்டாகும் வியர்வையாய் உடல்நீர் வெளியேறுகின்றமை யினால் சிறுநீரை அதிகமாக எதிர்பார்க்க முடியாதல்லவா!

சிறிது நேரம் கழித்து தாகம் எழுந்தது. சிறுநீர் வருவதற்குச் சாத்தியமேயில்லை. மீண்டும் கடல் நீரைத் தேடவேண்டியிருந்தது. குடிக்காமல் கட்டுப்படுத்த முயற்சித்தும் முடியாத நிலையில் அந் நீரைக் கோலி, முன்னரைப் போலல்லாமல் சிறிது சிறிதாக இடைவெளிவிட்டுக் குடித்தனர். இதனால் குமட்டல் ஏற்பட்ட போதும் ஓங்காளம் இருக்கவில்லை.

அந்நேரம் இவர்களை வருத்திக்கொண்டிருந்த பசியும் பழகி விட்டதைப்போன்று மெல்லக் குறைந்து சென்றது. மீனுக்கு உப்பிட்டு இறுக வைப்பதைப்போல, கடல் நீரை உணவாக ஏற்று வயிறும் இறுகத் தொடங்கிவிட்டதா?

***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதியத்துக்குப் பின்னர்தான் செல்வநாயகம் கொடுத்தனுப்பிய கடிதம் அவரது மனைவியிடம் கிடைத்தது...

அடுத்த நிமிடம் அழுகுரலின் ஆக்கிரமிப்புக்குள் வீடு...

வள்ளத்தில் சென்றவர்கள் சம்மாட்டியின் உறவினர் என்பதால் உணர்ச்சியைக் கட்டுப்படுத்த முடியாத கதறல்...

பதறியபடி பக்கத்து வீட்டார்...

ஆர்வத்துடன் அயலவர்...

கண்கலங்க ஓட்டத்தில் உறவினர்...

சம்மாட்டியின் வீடு மரணவீடுபோலத் தெரிந்ததுடன், குருநகரின் மூலை முடுக்கெல்லாம் தகவல் தீயாய்ப் பரவியது...

சரியான விபரம் அறியாத நிலையில் தொழிலுக்குச் சென்றவர்களின் குடும்ப உறவுகள்...

இயல்பான வேதனை இருள்போலச் சூழ்ந்தது...

சம்மாட்டியின் வீட்டிலும், முன்பக்க மத்திய கிழக்கு வீதி, தொடராக உள்ள முச்சந்தியில் தண்ணீர்தாங்கி வரையிலும் கூட்டம் நிரம்பியிருந்தது, தகவல் அறிவதற்காய் - ஆறுதல் கூறுவதற்காய்...

"மூன்று நாள் ஆனதால உயிரோடு இருக்கிறதுக்கு வாய்ப்பே இல்லை."

"எங்கையாவது கரையில ஒதுங்கியிருப்பாங்க. மைபோட்டுப் பார்த்தா கண்டுபிடிக்கலாம்."

"முல்லைத்தீவுக் கடல் பயங்கரக் கடல், அதில ஏதும் நடந்து தப்பி வாறண்டா கஷ்டம்."

"வள்ளம் தாண்டிருந்தா ஆக்கள நீரோட்டம் எங்கெங்க இழுத்துப் போகுதோ!"

"இந்தியக் கரைக்குப் போயிருந்தாங்களெண்டா நேவிக்காரர் பிடிச்சிருப்பாங்க"

கலப்புக் கருத்துக்கள் அந்தப் பகுதியில் தாராளமாய் உலவின...

"படையாளி (தூய யாகப்பர்) கைவிடமாட்டார்."


தொழிலுக்குச் சென்றவர்களின் குடும்ப உறவுகள் காதில் விழுந்த எவரது கருத்துக்களையும் ஏற்றுக்கொள்ளவில்லை...

கடவுளை துணைக்கழைத்தனர்... உள்ளத்தின் ஆற்றாமை வார்த்தையானது...

"என்ன ஆனார்களோ?..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 06

*1963 ஆனி மாதம் 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை...*

*04 ஆம் நாள்...*

எத்தகைய உதவியுமின்றி, எதுவித மாற்றமுமின்றி விடிந்தது அன்றை பொழுது...

மாற்றம், தொழிலாளரின் உடலிலும் உள்ளத்திலும்...

எதிர்பார்ப்புகள் பயனற்று, ஏமாற்றம் கோலோச்சிய நிலை...

நம்பிக்கைகள் தகர்ந்து, உறுதி சோர்வடைந்த நிலை...

உடல் மெலிந்து, வயிறு குழிவிழும் நிலை...

எந்நேரமும் மரணபயத்தை எதிர்கொள்ள வேண்டிய நிலை...

வேறு தெரிவில்லாமையால் இடையிடையே சிறுகச் சிறுக கடல் நீர், சிறுநீரைக் குடித்தே உயிர் வாழும் நிலை...

செய்வதறியாது ‘கடவுளே’ என்று உரத்துக் குரல்கொடுத்தனர், கரங்களை வான்நோக்கி உயர்த்தியவாறு...

எதிரொலிகூட இவர்களது குரலை ஏற்க மறுத்ததைப்போல எவ்வித அரவமுமின்றியிருந்தது.

ஆனால், வானம் ஏற்றிருக்க வேண்டும், காற்று ஏற்றிருக்க வேண்டும் போலத் தோன்றியது.

அதனால்தானோ என்னவோ, மதியம் கடந்த பின்னர் தன் வேகத்தை மெல்லக் குறைத்துக் கொண்டது காற்று...

“இண்டைக்கு அட்டமியெல்லா? அதுதான் காத்து சீர் விழுந்தி ருக்கு போல இருக்கு.”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமாவாசை, அட்டமி, பவுர்ணமி தினங்களில் இயற்கையின் மாற்றத்தை அவதானித்து அதற்கேற்ப தொழில் செய்பவர்களாகையால் எல்வாட்டரின் கூற்று அனைவரும் அறிந்த ஒன்றாகவே இருந்தது.

இந்த நேரத்தில்தான் ஒரு ஆலோசனையை முன்வைத்தார் நவின்சந்திரா...

"இப்படியே எத்தினை நாட்களுக்கு இதில கிடக்கிறது. இதை விட, பாய் இழுத்துச் சென்றால் எங்கையெண்டாலும் ஒரு கரையை அடையலாம்தானே."

அவர்கள் அனுபவித்துக்கொண்டிருக்கும் உடல் வேதனைக்கும் உள்ளத்தின் தாக்கத்துக்கும். அவர் கூறியது சரியெனப்பட்டதால் சம்மதித்துச் செயலில் இறங்கினர்.

வள்ளத்தின் நடுவிலுள்ள **'கூத்துவாரி'**யில் பாய்மரம் நிறுத்தி வைக்கப்பட்டது. கூறைப்பாயை முற்றிலுமாய் விரிக்காமல், பாயில் இணைக்கப்பட்டுள்ள **'பருமலில்'** பாதிவரை சுற்றி, **'ஆஞ்சான் கயிற்றில்'** கட்டி இழுத்துக் கொண்டனர்.

நங்கூரக் கயிறு இழுக்கப்பட்டு, நங்கூரம் மேல்நோக்கி வரத் தொடங்கியதும் வள்ளம் காற்றுக்கு விலங்காகத் திரும்பியது. அதனைப் பெரிதுபடுத்தாத நவின்சந்திரா, சுக்கானை லாவகமாகப் பிடித்து விலங்காக வந்த வள்ளத்தை காற்றுக்கு இசைவாகத் திருப்ப, ஏனையோர் கூறைப் பாயை பாதிவரை உயர்த்தி இழுத்துக் கட்டிவிட்டனர்.

காற்றின் சாய்வுக்கு இசைந்து வள்ளம் தன் பயணத்தை தொடர்ந்ததும் நங்கூரம் வள்ளத்தில் ஏற்றப்பட்டது.

சிறிது நேரம் வள்ளம் காற்றுக்கு சாய்வாக பயணித்தபோதும், வீசிக்கொண்டிருந்த காற்றுக்கு ஏற்ற வேகம் காணப்படாமை ஆச்சரிய மாக இருந்தது.

வலைகளின் பாரத்தால் வள்ளம் அமிழ்ந்திருப்பதே அது முன் நோக்கிச் செல்வதற்குத் தடையாக இருக்கிறது என்பதை அவதானித்த எல்வாட்டர், நவின்சந்திராவுடன் கதைத்து எடுத்த முடிவின் பின்னர், நால்வரும் இணைந்து வள்ளத்திற்குள் குவியலாய்க் கிடந்த வலைகளை கடலில் இறக்கத் தொடங்கினர்.

ஆபத்துக்கு உதவலாம் எனக்கருதி, நங்கூரக் கயிற்றுடன் முடியப் பட்டிருந்த வலைகளையும், ஒன்றரை அடி விட்டத்தையுடைய பத்து போயாக்களையும், ஒரு கொடித்தடியையும் வைத்துக்கொண்டு ஏனைய வற்றைக் கடலில் வீசினர். நங்கூரக் கயிற்றில் முடியப்பட்டிருந்த வலை களின் மடவலையில் கட்டிக்கிடந்த கற்களையும் அறுத்து எறிந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது வள்ளம் பாரமற்று மிதந்தாலும், இவர்களின் இலக்கு, தீர்மானம் இல்லாத நிலையில் காற்றுக்கு இசைவாக மட்டுமே சென்று கொண்டிருந்தது.

பாய் இழுத்திருப்பதால் காற்றுக்கு விலங்காக வள்ளம் வந்துவிடின் சரிந்து அமிழவும்கூடும் என்பதால் நேரே செலுத்துவதற்கு சுக்கானின் தேவை இருந்தது. அதனால், நவின்சந்திரா சுக்கானில் கவனம் செலுத்தினார்.

சூரியன் மறைந்த பின்னர் தென்பட்ட அட்டமி நிலவின் ஒளியில் வள்ளத்துப் பயணம் இனிமையாகத் தெரிந்தாலும், அதை இரசிக்கும் நிலையில் எவருமில்லை.

குளிர் வெகுவாகத் தாக்கியது... குளிரைத் தடுக்கப் பயன்படுத்திய பாயும் வள்ளத்தில் கட்டப்பட்டதால் பயன்படாமல் போயிற்று. அணிந்திருந்த சாரமே போர்வையாகவும் ஆனது.

நள்ளிரவானதும் இதுவரை ஒளி தந்த பாதி நிலவும் தன் பயணத்தை முடித்துக்கொண்டது.

அந்நேரம் மூடிக்கொண்ட இருளில் உறங்கச் சென்றாலும், எங்கே போகிறது - எதுவரை போக முடிகிறது என்பதற்கான பதில் எவரிடமும் இல்லை...

***

*05ஆம் நாள்...*

அதிகாலை இருள் விலகும் முன்னரே திரளான மக்கள்...

சம்மாட்டியின் வீடும் மத்திய கிழக்கு வீதியும் நிரம்பியிருந்தன, தகவல் அறியவென வந்தவர்களால்.

இறவாத விவாதங்களே வழமைபோல் தொடர்ந்தன... கற்பனைகள், சந்தேகங்கள், வேண்டுதல்களால் அந்தப் பகுதி களை கட்டியது.

தொழிலுக்குச் சென்றவர்கள் வீடுகளிலும் சம்மாட்டி வீட்டிலும் எவருக்கும் உறக்கமில்லை.

அழுகுரல் எழுந்தும், சில வினாடிகள் வரை நீடித்தும், முடங்கியும் கொள்ளும் நிலையே காணப்பட்டது.

வேதனையில் மூழ்கிய அவர்களின் வீடுகளில் ஆறுதல் கூறிட உறவினர், அயலவர், அறிமுகமானவர்கள்...

அறிந்தவற்றை மறைத்திட விரும்பாமல் கூறவும் முனைந்தனர் வந்தவர்கள்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவையெல்லாம் உண்மை இருக்காதெனினும், கதையாடல்களால் உருவான சந்தேகம் ஊதிப் பெரிதாகி இதயத்தை வருத்தவே செய்தது...

உறுதிப்படுத்தப்படாத உண்மையின் வெளிப்பாடுகள், உள்ளத்தை உறுத்துவதை தவிர்க்கமுடியவில்லை.

உறுதியாய் நிற்பவர் உள்ளமும் கலங்கிடச் செய்யும் நிலை...

"காணாமல் போன ஐந்துபேரும் திசை தெரியாது சீனன் குடாவில் பசியோடு அலைகிறார்கள்..."

புதிய தகவலை ஏந்திக்கொண்ட காற்று குருநகரை ஒரு தடவை வலம் வந்தது...

திடீரென வெளியான செய்திப் பரவலால் தாமதமின்றி புறப்பட்டு வந்த தொழிலுக்குச் சென்ற தொழிலாளரின் குடும்ப உறவுகள், உறவினர், அயலவர் மற்றும் அறிமுகமானவர்களால் வீதியில் கூட்டம் அதிகமானது.

"சீனன்குடாவில ஆக்கள் நிக்கிறாகெண்டு ஆரோ பேய்ப் பரியாரி மைபோட்டுப் பார்த்துச் சொன்னவராம். அதால அவரையும் கூட்டிக் கொண்டு காரில போறாங்க. எப்பிடியும் கண்டுபிடிச்சிடுவாங்க."

அங்கு நின்ற முதியவர் ஒருவரின் கூற்றால் உறவுகளின் உள்ளத்தில் மகிழ்ச்சி. கலங்கிய கண்களைத் துடைத்துக்கொண்டனர்...

"சீனன் குடா எங்க இருக்குதுங்க!"

"திருகோணமலையில ஒரு பகுதியிலதான் இருக்கு..."

"திசை தெரியாம அலையிறாங்களெண்டும் சொல்லுறாங்க 'தியக்கூட்டில' மிதிச்சிருக்கிறாங்களோ?"

"அப்படியும் இருக்கும்."

"தியக்கூடா? அப்படியெண்டா என்னவுங்க?"

"அது ஏதோ காட்டில கிடக்கிறதாம். அதில மிதிச்சா அவங்களுக்குத் தெரியாமலே அலைக்களிக்குமாம். பேய் எண்டும் சொல்லுறாங்க. ஆருக்கும் சரியாத் தெரியாதாம்."

"அது எங்கெங்க கொண்டலையுதோ?"

***

பகலில் நெடுநேரம் நவின்சந்திராவும் இரவில் எல்வாட்டரும் சுக்கான் பிடித்து வள்ளத்தைச் செலுத்துவது ஏனையோருக்குச் சங்கடமாக இருந்ததால், கலந்து பேசி பகலில் இருவரும், இரவில் மூவரும் என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரத்தைப் பங்கிட்டு சுக்கான் பிடிக்க இணக்கம் கண்டனர்.

தத்தளிப்பதும், செல்வதுமாக இருந்த பயணத்தில் சோர்வும் களைப்பும் அதிகரித்திட, சுக்கானின் கானாந்தடியை ஒரு கையால் பிடித்தவாறு கடையாலில் அமர்ந்திருந்தார் நவின்சந்திரா.

வள்ளம் எங்கு செல்லவேண்டுமென்பதை இப்போது சுக்கான் பிடிப்பவர் தீர்மானிக்கவில்லை.

காற்றேதான் திசையைத் தீர்மானிக்கிறது.

அதுவே செல்ல முடிந்த திசையாகவும் இருக்கும்...

காற்றுக்கு சாய்வாகவன்றி பிசகாது வள்ளம் செல்வதை அவதானிப்பது ஒன்றே சுக்கான் பிடிப்பவரின் வேலையாக இருந்தது.

ஏனையோர் கடையால் இயந்திரக்கூட்டின் மேல் அமர்ந்திருந்து, தத்தமது உள்ளத்து வேதனைகளைப் பரிமாறிக் கொண்டிருந்தனர்.

சகோதரர்களான எல்வாட்டரும், ஜேக்கப்பும் திருமணம் செய்தவர்கள். எல்வாட்டருக்கு மூன்று பிள்ளைகள், ஜேக்கப்புக்கு இரண்டு பிள்ளைகள். அவர்களின் நினைவு இவர்களை வருத்தவும் செய்தது.

பிள்ளைகள் ஒவ்வொருவரினதும் குறும்புகள், அதுகண்டு மனைவியின் கண்டிப்புகள் அவர்களிருவரின் உள்ளத்தில் ஓய்வின்றி உயிர்பெற்றுக்கொண்டே இருந்தன.

நவின்சந்திராவும், யேசுராசாவும் திருமணத்தை எதிர்பார்த்து இருப்பவர்கள். இராசகுலம் பதினேழு வயது வாலிபன். இவர்களின் உள்ளத்து வேதனை பெற்றோர், சகோதரரைப் பற்றியதாகவும் தமது எதிர்கால வாழ்வு பற்றியதாகவும் இருந்தன.

இவைகளனைத்தினதும் கலவையாகவே அப்போதைய உரை யாடல் இருந்தாலும் உள்ளத்தின் ஏக்கம், உணவு அருந்தாத வாட்டம், தண்ணீர்த் தாகத்தின் தாக்கம் படகில் திசையின்றிச் செல்லும் இவர் களைப் பெரிதும் பாதிக்கவே செய்தது.

உளப் பாதிப்பால் வெவ்வேறு கோணத்தில் இருந்தவர்களுக்கு இரண்டு நாட்களாய் குறைந்து காணப்பட்ட பசி, மீண்டும் முன்னரைப் போல் தாக்கத் தொடங்கியது.

காரணம் புரியாமல் தோன்றிய பசியின் அதிகரிப்பால் எழுந்த வயிற்றின் அழற்சியால் சுருண்டனர்...

அடுத்தடுத்து சிறிதாகவேனும் கடல் நீரை அருந்தியதால் ஏற் பட்ட வயிற்றுப் போக்கே பசியின் உக்கிரத்துக் காரணமாக இருக்கலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெனக் கருதினார்களாயினும், வேறு தெரிவற்ற நிலையே அவர்களுக்கு...

பசி அதிகரித்துச்சென்ற அந்த நேரத்தில், அணியத்தில் இராசகுலத்தால் உலரவைக்கப்பட்ட மீன் துண்டுகள்மீது கவனம் திரும்பியது. அதையாவது சாப்பிடுவோமெனத் தெரிவித்ததையடுத்து இராசகுலமும் எல்வாட்டரும் அணியத்துக்குச் சென்று மீன்துண்டுகளை எடுத்துப் பார்த்தனர்.

கருவாடுபோல உலர்ந்து இறுகவில்லையாயினும் பச்சையாக இல்லாமலிருந்தது. ஆனாலும் மணம் இருந்தது.

ஏதாவது சாப்பிட்டே ஆகவேண்டுமென்ற நிலையில் வெற்று பரலை எடுத்து அதன்மேலே மீன் துண்டுகளைப் பரவி வெயிலில் வைத்தனர்.

இதுவரை உலரவைத்திருந்த பலகையைவிட தகரப் பரல் அதிக வெப்பத்தை உள்வாங்கிக்கொள்ளும் என்பதாலே அவ்வாறு செய்தனர்.

சூரிய வெப்பம் மேற்பக்கத்தால் மீனை உலர்த்த, தகரத்தின் இரட்டிப்புச் சூடு கீழ்ப் பக்கத்தால் மீனை வறட்ட போறணையில் வைத்த நிலையில் மீன் பதநிலையை அடையலானது.

பசியை வலிந்து அடக்கிக்கொண்டு, ஒரு மணித்தியாலம் வரை உலரவைத்த பின் அவற்றைப் பகிர்ந்தெடுத்தனர்.

நீரிலோ அன்றேல் நெருப்பிலோ வேகவைக்காமல் எந்த சேர்க்கையுமின்றி வெயிலில் மட்டும் உலரவைக்கப்பட்ட மீன் துண்டுகளென்பதால், சாப்பிடுவதற்காய் வாய் வரை கொண்டுசெல்கையில் மணம் வீசிட, அருவருப்பு உடலை நெழியச் செய்தது.

பசியினால் உண்ணுவதா? அருவருப்பினால் வீசுவதா என்ற திரிசங்கு நிலையில் அவர்கள்...

நாலாம் பிறையன்று சாப்பிட்டதைத் தவிர, தொடர்ந்த ஐந்து நாட்களும் பட்டினியாய் இருந்தவர்களுக்கு மீனைக் கையில் வைத்திருக்க பசி இரட்டிப்பாக தாக்கியது. 'ஆக்கப் பொறுத்தவன் ஆறப் பொறுக்க மாட்டான்' தானே!

எது, எப்படி இருந்தாலும் பசிக்காக உண்ணலாம் என்ற பக்குவ நிலைக்கு வரவேண்டிய தேவை அவர்களுக்கிருந்தது.

"கடல் தண்ணியில தோச்சு சாப்பிட்டா ஓரளவு சாப்பிடலாம் போல இருக்கு."

எல்வாட்டர் கூறியதும் பரீட்சித்துப் பார்க்கும் முயற்சியில், கடல் நீரைக் கோலி, அதனில் தோய்த்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

‘வேறு வழி இல்லை’ என்பதைப்போல் ஒருவரை ஒருவர் பார்த்துவிட்டு, கடினமாக்கிய மனத்துடன் முகர்வதைத் தவிர்த்துச் சாப்பிட்டனர்...

விக்கியது...

கடல் நீரே மருந்தாகி குறைத்தது...

அவ்வாறே தொடர்ந்தனர்...

விரும்பியோ, விரும்பாமலோ, வேறு தெரிவில்லாமலோ தாகத்தைத் தணிக்க, மிகக் குறைவாகவேனும் கடல் நீரைக் குடித்தனர்... பசியைப் போக்க முறையாகப் பதப்படுத்தப்படாத மீனைச் சாப் பிட்டனர்...

ஐந்து நாட்கள் சாப்பிடாத வெற்று வயிற்றுக்குள் நுழைந்த சொற்ப உணவால் பெரும் போராட்டமே நடப்பதுபோலிருந்தது. செய்வதறியாது வயிற்றை அழுத்திப் பிடித்தனர்.

இந்த ஆரவாரத்துடன் சூரியன் மதியத்தை கடந்தான்...

மேகத்தின் தடுப்பெதுவும் இல்லாமையால் தன்னொளியை வெப்பமாக்கி தாராளமாய் அள்ளி வீசினான் சூரியன்...

அகோரம் உச்சத்தை தொட்டது. இதுவரை காணப்படாத அகோரமாகவும் இருந்தது.

திடீரென ஏற்பட்ட மிதமிஞ்சிய வெப்பம் ஆச்சரியத்தைக் கொடுத்ததால், ஏதோவொரு மாற்றம் நிகழவுள்ளதன் அறிகுறியாக கருதினர்.

வெப்பத்திலிருந்து உடலைக் காத்திட இயந்திரக் கூட்டின் நிழலில் ஒதுங்குவதைத் தவிர வேறு தெரிவு இருக்கவில்லை.

“எல்லாம் உங்களால வந்ததுதான்... இவ்வளவு கஷ்டப்பட வேண்டியதாயிருக்கு.”

ஜேக்கப்பைப் பார்த்துக் கூறினார் நவின்சந்திரா.

“நானென்ன செய்தனான்?”

“என்ன செய்தனீங்களா? சூழ்லாம்புக்க டீசல் விட்டிருந்தா இப்படியெல்லாம் நடந்திருக்குமா?”

“ஏதோ மறதியில பிழை நடந்துபோச்சு...”

“மறதியில்ல வெறிச்சேட்டை எண்டு தெரியாதா? அந்தப் பிழையாலதானே சூழ்லாம்பு நூர்ந்தது, வள்ளம் விலங்க வந்தது, தண்ணி கோலினது. இப்ப தத்தளிச்சுக்கொண்டு அடையிறோம்...”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இப்படி நடக்குமெண்டு நான் நினைச்சனானா..."

இவர்களது வாக்குவாதத்தை தொடராமல் தடுப்பதைப்போல சூரிய ஒளியை கருமேகம் தடுத்தது.

திடீரென குளிர் கண்டது தேகம், குளிரான காற்றால்...

சிறிது நேரத்தால் மழை பெய்ய தொடங்கியது...

இல்லை மழை கொட்டத் தொடங்கியது...

இதுதான் திடீர் வெப்பத்துக்குக் காரணமென கூறியவர்கள், அனைத்தையும் மறந்து மழையில் தோய்தனர்.

பாயை விரித்துப் பிடித்து, மழை நீரைத் தடுத்து, அதனால் வடியும் நீரை, பரல் மற்றும் பானைகள், சட்டிகளில் நிரப்பினர்.

கைகளால் அந்நீரை ஏந்திக் குடித்தனர்...

உப்பு நிரைக் குடித்தவர்களுக்கு நன்நீர் கிடைத்து வயிற்றைக் கழுவுவது போல எல்லை கடந்த ஆனந்தம்.

"வானம் எங்கட நிலையப் பார்த்துத்தான் இரக்கப்பட்டு மழையைத் தந்திருக்கு."

எல்வாட்டர் கூறிட, மற்றவர்களுக்கும் சரியெனப்பட்டது.


"எல்லாம் கடவுளட செயல்தான்!"

பத்து நிமிடங்களுக்கு மேலாகப் பெய்த மேற்காவுகை மழை, விடைபெற்று திரும்பவும் வெயிலுக்கு இடங்கொடுத்தது...

நன்றாக மழையில் தோய்ந்த மகிழ்வு, அதனால் உடல் அடைந்த சுகத்துடன் தொடர்ந்தது இலக்கில்லாப் பயணம்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 07

*1963 ஆனி மாதம் 20 ஆம் திகதி வியாழக்கிழமை...*
*06ஆம் நாள்...*

முல்லைத்தீவில் நின்ற சம்மாட்டியால் எடுக்கப்பட்ட முயற்சிகள் எவையும் கைகூடாத நிலையில், ஆசீர் மற்றும் அபூபக்கரும் வாடியில் வைத்திருந்த வலைகள் உட்பட ஏனைய பொருட்களை உளவு இயந்திரத்தில் ஏற்றிக்கொண்டு வீடு திரும்பினர்.

முல்லைத்தீவுக்கென சென்றவர்களும், சீனன்குடாவுக்குச் சென்ற வர்களும் எந்தத் தகவலும் கிடைக்காமல் வீடு திரும்பினர்.

அத்துடன் நிற்காமல் அறிமுகமானவர்கள் சொல்கிறபடி கட்டு கூறுபவர், சாஸ்திரிமார், குறி சொல்வோர், அபூர்வ சக்திவாய்ந்த பக்திமான்கள் என ஆங்காங்கு சளைக்காமல் தேடி அலைந்தனர்.

அவர்களும் தமது கண்டுபிடிப்புகளை ஆணித்தரமாக வெளிப் படுத்தினர்.

'எல்லோரும் உயிரோட இருக்கிறதாக' ஒருவர்...

'வள்ளம் தாண்டிற்று அவர்களில் வயதில் முடியவர் அணியக் கொம்பில பிடிச்சுக்கொண்டு கிடக்கிறதாக' ஒருவர்...

'போன ஆட்கள் தப்பமாட்டார்கள் முயற்சி எடுத்தும் பிரயோசனமில்லையென' ஒருவர்...

'கோயில் முனையில் வள்ளத்தோட அடைஞ்சு கிடக்கிறதாக' ஒருவர்...

'எப்படித் தேடினாலும் கிடைக்கமாட்டார்கள். அவர்கள் மூலமாக மட்டும்தான் தகவல் வருமென' ஒருவர்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என, ஒன்றுக்கொன்று முரணாக வெளிக்கொண்டுவரப்பட்ட முடிபுகள் விசித்திரமாகவும், ஏற்கக் கடினமாகவும் இருந்தபோதும் நம்பி செயலாற்ற வேண்டிய நெருக்குவாரம்...

மிகவும் ஆழமான அந்தச் சமுத்திரப் பகுதியில் உள்ளிணை இயந்திரம் பொருத்திய வள்ளம் நிலத்தடிதேடி அமிழ்ந்து கிடந்தால், அதன் அணியக் கொம்பு எவ்வாறு கடல் மட்டத்துக்கு மேலே உயர முடியும் என்பதையோ, இலங்கையின் கிழக்குப் பக்கத்திலுள்ள முல்லைத் தீவு ஆழ்கடற் பிராந்தியத்தில் தொழில் செய்கையில் காணாமல் போன வர்கள் இலங்கையின் மேற்குப் பக்கத்தில் புத்தளத்துக்கும் கற்பிட்டிக்கும் இடையிலுள்ள கோயில் முனைக்கு, சோழகக் காற்றுக்கு எவ்வாறு அடைந்துவர முடியும் என்பதையோ, முல்லைத்தீவிலிருந்து சோழகக் காற்றுக்குச் சாய்வாகச் சென்றவர்கள் எவ்வாறு திருகோணமலையிலுள்ள சீனன்குடாவுக்கு அடைந்து வரமுடியும் என்பதையோ சிந்திந்துப் பார்க்க அவகாசம் இல்லாமல், உணர்வு மேலீட்டால் அங்கங்கெல்லாம் சென்றனர் தேடிப்பார்க்க.

மன்றாட்டுக்கள், நேர்த்திகள், சாஸ்திரங்கள், மைபோட்டு பார்ப்புகள், கட்டுக் கேட்டல்கள் என பல மட்டத்தாலும் மேற்கொள்ளப் பட்ட நடவடிக்கைகள் எல்லாம் பயனற்ற நிலையாகக் காணப்பட்டன.

அழுகை, ஆறாத் துயரங்கள், ஏக்கங்களுடன் நம்பிக்கையும் தொடர் கதையானது...

எந்தத் தீர்மானத்தையும் எடுக்கமுடியாத, எட்ட முடியாத நிலை...

முல்லைத்தீவிலிருந்து சம்மாட்டி வந்துள்ளதை அறிந்த தொழிலுக் குச் சென்றவர்களின் குடும்ப உறவினர் அவரைத் தேடி வந்திருந்தனர்.

வாடிய முகத்துடன் அமர்ந்திருக்கும் சம்மாட்டியைப் பார்த்ததும் எதையோ விளங்கிக்கொண்டவர்கள்போல முகத்தைப் பொத்தியவாறு அழுதனர்...

அடுத்த கணம் சம்மாட்டியின் காலடியில் அமர்ந்து தலை கவிழ்ந்து கதறினர்...

ஆறுதல் கூறமுடியாமல் சம்மாட்டியும் அழுதார்...

தலையிலடித்துப் புலம்பும் அவர்களை தடுத்திட முடியாத தவிப்பில் அவர்...

"என்னங்க! அங்கயிருந்து வந்திருக்கிறீங்க. ஏதும் அறிஞ்ச னீங்களா?"

சம்மாட்டியால் மாமி என அழைக்கப்படும் உறவு முறையான நவின்சந்திராவின் தாய் கண்ணீருடன் கேட்டாள்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“நான் எவ்வளவோ முயற்சி செய்தனான் மாமி... அங்கத்தய வள்ளங்கள் ரெண்டைப் பிடிச்சு தொழிலுக்குப்போன இடமெல்லாம் தேடிப் பாத்தனான். ஒவ்வொரு நாளும் தொழிலுக்குப் போற வள்ளக் காரரட்ட எல்லாம் சொல்லித் தேட முயற்சி எடுத்தனான் மாமி...”

“அப்ப என்ன ஆனார்களெண்டு தெரியாதாங்க.”

“இப்போதைக்கு ஒண்டும் சொல்ல ஏலாது. பொறுத்திருந்துதான் பாக்கவேணும்.”

“அவங்க காணாமப்போயும் ஆறேழு நாளாச்சு... அப்படியிருக்க இன்னும் பொறுக்கிறதாங்க? அவனும் ஆடி மாசம் ரெண்டாம் திகதி மடுமாதாவட்ட போகவேணுமெண்டவன். அதுக்குள்ள எப்படியும் வந்திடுவானாங்க?”

“அவங்களுக்கு ஆபத்தொண்டும் நடக்காதெண்ட நம்பிக்கை எனக்கு இருக்குது மாமி...”

பக்கம் நின்று கேட்டுக்கொண்டிருந்த உறவினர்கள் திடீரென அழுதனர்...

இவர்களது அழுகை சொல்லாத செய்தியை சொல்லிட முனைவதாய் இருந்ததால் வெளியே நின்றவர்களும் அழுதனர்.

கல்லான இதயமும் கசிந்திடச் செய்திடும் குரலொலியாக இருந்தது...

★★★

அழுதவாறிருந்தார் எல்வாட்டர்...

“ஏனண்ணே அழுகிறீங்க?”

ஜேக்கப், தனது சகோதரனிடம் வாஞ்சையோடு கேட்டார்.

“வள்ளம் இப்படியே போய்கொண்டிருந்தா நாங்க எங்க போய்ச் சேருறது...? எங்கட முடிவு இதோடதானாக்கும்... மனிசி பிள்ளைகள் தான் அநாதையாகிடும்.”

“ஏனண்ணே அப்படி நினைக்கிறீங்க.?”

“இண்டையோட எத்தின நாளாச்சு? சாப்பாடு இல்லாம எத்தின நாளைக்கு இப்படியே கிடக்கிறது. ஏதோ மழை பெஞ்சதால ரெண்டு நாளைக்குத் தண்ணியிருக்கு அதுக்குப் புறகு...!”

“அண்ணே! நம்பிக்கையை தளரவிடாதேயுங்க. நீங்கதான் வயதில மூத்தவங்க நீங்களே தளர்ந்தா நாங்க என்னமாதிரியண்ணே!”

பேச்சைத் தொடராமல் மௌனமானார் எல்வாட்டர். ஆனால்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றைக் கேட்டுக்கொண்டிருந்த மற்றவர்களுக்கும் உறவுகள் பற்றிய சிந்தனை மேலெழ கலக்கமும், கண்ணீரிலும் மூழ்கியவர்களானார்கள்... இதற்கு ஜேக்கப்பும் விதிவிலக்கில்லை...

***

*07ஆம் நாள்...*

வள்ளத்தில் இருக்கும் தொழிலாளரை பசி மாற்றமின்றித் தாக்க, இரவு உறங்கவும் முடியாமல் தவித்தனர். அடிக்கடி தண்ணீர் குடிப்பதால் பசியைக் குறைத்து உயிர்வாழ முயற்சித்துக் கொண்டிருந்தனர்.

தத்தளித்துக்கொண்டிருக்கும் நிலையில் பசி உச்சத்தை தொடுகிற சந்தர்ப்பங்களில் உருவாகும் வேதனையினால் உறவுகளின் சிந்தனை ஆர்ப்பரித்து எழவே செய்தது...

"என்னட உழைப்பையே நம்பியிருக்கிற அப்பா, அம்மா, தங்கச்சி, தம்பிமார் சாப்பிட்டுதுகளோ தெரியா. ஒரு நாளைக்கு தொழில் வரப்பிந்தினாலே சாப்பிடாம வாசலில இருக்கிற அம்மா என்ன செய்வாங்களோ?"

இராசகுலம் நவின்சந்திராவைப் பார்த்துக் கேட்டான்.

"உன்னட நிலையிலதான் நானும் இருக்கிறன் இதுக்கு நான் என்னத்தச் சொல்ல."

"எத்தின நாளண்ணே செல்லும் நாங்க வீட்டுப்போக..."

பதில் சொல்ல முடியாத நிலையில் நவின்சந்திரா.

"பாக்கிற இடமெல்லாம் ஒரே மாதிரித்தான் இருக்குது. கடலை விட கரையைக் காணவேயில்லையே! நாங்க இப்ப கரைக்கு சரியான தூரத்திலதானே நிக்கிறோம்."

"மூண்டு நாளாக காத்தில வழிஞ்சு போறோம். எவ்வளவு தூரமெண்டு எனக்கெப்படி தெரியும் இராசகுலம்."

"அண்ணே எப்பிடியும் வீட்ட போயிடுவோம்தானே!"

விம்மலுடன் அழுதான்.

அதைப்பார்த்து நவின்சந்திரா அழுதார். தொடராக ஏனையோரும் அழுதனர்.

"அப்பா! எனக்கு சின்னச் சைக்கிள் வேணும்."

"முல்லைத்தீவுக்கு தொழிலுக்குப் போறன். கனக்க உழைப்பு கிடைக்கும். வந்த உடன முதலில உனக்குத்தான் சைக்கில் வாங்கித் தருவன். நீ குழப்படி இல்லாம அம்மாவட சொல்லக் கேக்க வேணும்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“கட்டாயம் வாங்கித் தருவீங்கதானே!”

விம்மி விம்மி அழுதார் ஜேக்கப்... மற்றவர்களுக்கு விபரம் புரியாது விட்டாலும் பிள்ளைகளின் சிந்தனை வந்திருக்கவேண்டுமென்று கருதினர்...

இவர்களின் நிலையை உணர்ந்து நவின்சந்திராவும் யேசுராசாவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர், தண்ணீரில் அழுதிடும் மீன்களின் நிலையாக...

இருவரும் ஒன்றுவிட்ட சகோதர முறையானவர்கள். ஊரிலே அருகருகான வீடுகளில் இருப்பவர்கள்.

தாங்களும் நம்பிக்கையை இழந்து சோர்ந்துபோனால் மற்றவர் களை சமாளிக்க முடியாது என்பதால் உள்ளத்து வேதனைகளை வெளிப்படுத்தாமல் மறைக்க முயல்கின்றனர்...

***

“மகனே...!”

தலையில் அடித்தவாறு சம்மாட்டியில் வீடுதேடி ஓடிவந்தாள் இராசகுலத்தைப் பெற்றவள்...

“போகவே மனமில்லாம இருந்த உன்னை போவென்று சொல்லி அனுப்பி வைச்சேனே! மறுப்புச் சொல்லாம வெளிக்கிட்டுப் போனாயே. மனம் குளிர்ந்தனடா அப்ப. இப்ப அடிவயிறு நெருப்பா எரியுதடா.”

நிலவில்லா வானமாய், நீரில்லா நதியாய், நிழலின்றி நிற்கும் நிலையில் தாயவள். சிலையில்லா கோயிலாய் இல்லிடம் ஆனதால் சிதறிய உள்ளத்தின் சிதறலாய் நிற்கும் இவள், வாரி அணைத்த கைகளை வானோக்கி உயர்த்தி வேதனையில் கதறினாள்...

மூன்று பிள்ளைகள் அணைத்திட, நாதியற்ற நிலையினை உணர்த் தும் வகையில் சோர்வுடன் வந்தாள் எல்வாட்டரின் மனைவி...

விரித்த கூந்தல் முடியவில்லை...

கனமழை போலவே கண்களில் கண்ணீர்...

நடந்து நடந்து கல்லடித்து சிவந்து கன்றின கால்கள்...

தந்தையைக் காணாத கடுந்துயரில் பிள்ளைகள்...

“கடவுளே இந்தப் பிள்ளகளப் பாத்தாவது மனமிரங்கும்... நீர் நினைச்சா உம்மால ஆகாதது ஒண்டுமேயில்லை...”

தலைநிமிர்த்திக் கூறிவிட்டு, மூத்தவன் தோளில் தலை வைத்த நிலையில் சிறகு இழந்த பறவையைப்போலத் துடித்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகள் கட்டுப்படுத்த முடியாமல் தொடராய் அழுதனர், ஆறுதல் கூறிட எவரும் முன்வராத நிலையில்... அவர்களுக்கென இருக்கும் ஒரே ஆதாரம் அன்னையவள்தான்.

அன்னையும், துணையற்ற அன்புச் செல்வங்களும் பார்த்தவர் உள்ளத்தை உருக்கியே நின்றனர்...

வாய்விட்டுக் கதறிட வீரியம் இல்லாமையால் வார்த்தைகள் வெளிவர மறுத்திடத் தவித்தாள் ஜேக்கப்பின் மனைவி...

பிள்ளைகள் இருவரும் பக்கம் வர, பொங்காத பெருங்கடல் பொங்கி வந்ததுபோல் பொங்கிய உளத்தினள் புலம்பினாள் துயரில்...

"புள்ளை சைக்கில் கேக்கிறான் வாங்கித் தாறெண்டு சொன்னீங்களே!... கடனைக் குடுத்திட்டு வீடு திருத்த வேண்டுமென்று சொன்னீங்களே! எப்ப வந்து இதையெல்லாம் செய்யப்போறீங்க..."

"நான்தான் படிக்காட்டியும் உழைச்சு, குடிக்காம இருந்து பிள்ளகப் படிக்கவைப்பேன் எண்டீங்களே இனி நாங்களெங்க போறது காசுக்கு..."

நின்றவரில் அழாதார் எவருமேயில்லையென்ற நிலை.

"போயிற்று வாறேனெண்டு சொல்லிவிட்டுப் போனாயே! இவ்வளவு நாளும் எங்க போனாய்? கலியாணம் கேட்டு முற்றான சந்தோஷத்தில நாங்க இருக்க, நீ எங்கு நிற்கிறாய்? அப்பாவும் உன்னோடதான் நிண்டார் அவரட்டையாவது சொல்லியிருக்க கூடாதா?"

சம்மாட்டி செல்வநாயகத்தின் சகோதரியான யேசுராசாவைப் பெற்றவள், தலையில் கைவைத்தவாறு தனது வீட்டிலிருந்து சகோதரன் வீட்டைத் தேடி அழுதவாறு ஓடிவந்தாள்.

கண்ணாடிப் பாத்திரத்தில் கல்லெறி பட்டதுபோல கலங்கினாள் வாழ்வில் நிகழ்ந்ததை எண்ணி... எண்ணத் தேன்கூட்டில் எறிகணை வீழ்ந்ததுபோல ஏதிலியாய் கதறினாள் மகனது எதிர்கால வாழ்வுக்காய்...

அனலில் மெழுகாக உருகிடும் உறவுகளின் நிலைகண்ட அங்குள்ளவர் நெஞ்சம் துயரத்தின் களமாக மாறியது...

* * *

எதுவித மாற்றமின்றி இருந்தது ஐந்து பேரின் நிலை...

பசி, தாகம், வெயில், குளிர், காத்திருப்பு, எதிர்பார்ப்பு, ஏக்கம், கற்பனை என அவர்களின் வாழ்க்கைச் சக்கரம் சுழன்றுகொண்டேயிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாயந்தரம் கடலுக்குள் தன்னை மறைத்துக்கொள்ளும் முன்பே கரு மேகத்தால் சூழப்பட்டுக் காணப்பட்டது சூரியன்.

நேற்றையைப்போல் இன்றும் மழை பெய்யப் போகின்றது என்ற எண்ணம் ஐவரையும் குதூகலத்தில் ஆழ்த்தியது.

வெற்று பரல் மற்றும் சட்டிகளை தயார் நிலையில் வைத்துக் கொண்டு மழையின் வரவுக்காய் காத்திருந்தனர்.

தோன்றிய இருளானது சிறிது நேரத்தால் குளிர் காற்றாய், தலைமுடி நனையாத் தூறலாய் வீசத் தொடங்கியதும் அவர்களிடமிருந்த குதூகலம் விடைபெறலானது.

காற்றின், மழையின் போக்கு புயலுக்குக் கட்டியம் கூறுவது போலவே இருந்தது.

நேரம் செல்லச் செல்லக் காற்றின் வேகரத்தால் வானம் கனைத்தது. நிலையான காற்றாக இல்லாமல் அதனில் ஏற்பட்ட மாறு பாட்டால் வள்ளம் தள்ளாடியது...

"நேச்சல் சரியில்ல, புயல்தான் வீசப் போகுது. கெதியா பாயை அவிட்டு வையுங்க..."

எல்வாட்டர் கூறியதும் காத்திருந்ததைப்போல உடனடியாகச் செய்து முடித்தனர்.

மெல்ல வீசத் தொடங்கிய காற்று நேரமாக ஆவேசம் கொண்ட தாய், புயற்காற்றாக சுழன்று வீசியவாறு அகலக்கால் விரித்ததை உணர்ந்தவர்கள் கிலி கொண்டவரானார்கள்...

மின்னல் பளீர்ரென்னும்போது தவிர, வழமைக்கும் மீறிய காரிருளாக இருந்தது.

இடையிடையே பாம்பு நகர்வதைப்போல் வரிக் கோடாகவும், இடையிடையே மிகை ஒளியாகவும் காணப்பட்ட மின்னலால் வானத்தைப் பார்க்கவிடாமல் பயம் தடுத்தது.

வானம் பிளந்ததுபோல இடியின் சத்தம்...

நான்கு திசைகளிலும் ஒருசேர ஒலிப்பதுபோல் கேட்ட இந்தச் சத்தத்தால் காதுகள் அடைப்பது போலிருந்தது.

இடைக்கிடை இடியின் ஒலியும், மின்னலின் மிகையொளியும் சேர்ந்து வான்பரப்பில் விரிந்திட கடல் நீரில் காணப்பட்ட பளபளப்பின் பிரதிபலிப்பு, இடியின் அதிர்வுத் தழும்பலால் கண்கள் கூசவும் செய்தது.

இத்தனைக்கும் மத்தியில் பதிந்து, உயர்ந்து, சுழன்று வீசும் தன்மைகளை உணர்த்தும் வகையில் வீசிய காற்றினால், மனதில் பயம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துளிர்விடத் தொடங்கியது.

அடுத்த கணம் மலைபோல் எழுந்தது அலை...

தொடரான சீறல் மழை இலக்கின்றிப் பெய்திட, ஒவ்வொரு கணமும் நீண்ட நேரமாகத் தெரிந்தது...

காற்றின் பந்தாட்டத்துக்கும் அலையின் எத்தலுக்கும் ஒத்திசைந்த மேளமாக மாறியது வள்ளம். காற்றின் அழுத்தத்துக்கேற்ப சரிந்து நிமிர்ந்து கெழிந்து திரும்பிக்கொண்டிருந்தது.

எதுவும் செய்ய முடியாத, கைமீறிச் செல்லும் நிலையால் ஐவருக்கும் மரணபயம் எல்லை மீறியது...

புயலின் கோரமுகத்தை எதிர்கொள்ள முடியாத ஆற்றாமை மற்றும் மழைத் தூறல்கள், நொய்ந்த உடலில் பட்டதும் ஊசிகளால் குத்துவதைப்போல இருந்தமை இவர்களை இயந்திரக் கூட்டுக்குள் புகவைத்தது...

வெளியே எட்டிப் பார்க்க முடியாமல் அதற்குள்ளே முடங்கினர்.

காற்றின் வேகத்தால் கோலி வீழ்ந்த கடல் நீர் மற்றும் மழை நீர் வள்ளத்துக்குள் கணிசமாகத் தேங்கி, இயந்திரக் கூட்டுக்குள்ளே குந்தி இருந்த இவர்களின் வயிறு வரை உயர்ந்துவிட்டது.

மேற்கொண்டு வள்ளம் தாக்குப் பிடிக்காது என்ற எண்ணம் தோன்றிட, மரணம் கண்முன்னே நிற்பதை உணர்ந்தனர்.

சிறிது நேரத்தால் கடலில் அமிழப் போகின்றோம், மீன்களுக்கு உணவாகப்போகின்றோம் என்ற எண்ணமே எல்லோருக்கும். அதை நினைத்து இப்போது அச்சம் கொள்ளவில்லை... இறப்பது நிச்சயம் என்ற முடிவிற்குப் பின்னர் எது நடந்தாலும் ஒன்றுதான் என்ற நிலையில் உரமேறிய உள்ளமாக மாற்றிக்கொண்டனர்...

இறுதியாகக் கண்களை மூடியவாறே இருந்தனர், மரணத்தை அணைக்கத் தயார் நிலையில்.

சற்று நேரத்தால், எதிர்பாராத நிலையில் உணரப்பட்ட காற்றின் அமைதி, கண்களைத் திறக்கவைத்தது. தங்களைத் தாங்களே நம்ப முடியாமல் வெளியே எட்டிப் பார்த்தனர்.

இவ்வளவு விரைவாக சூறைக்காற்றின் உக்கிரம் தணிந்திடும் என்பதை கற்பனை செய்தும் பார்க்கவில்லை.

இதுவரை இருந்த பீதி நிலையும் சவர்க்கார நுரையைப்போல அடங்கத் தொடங்கியது.

அசுர பலத்துடன் தாக்கி, கலங்கச்செய்த சூறைக்காற்று, திடீரென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதியானபோதும் அதனால் உண்டான கடல் கொந்தளிப்பு முற்றுப் பெறாமையால் வள்ளத்தின் தள்ளாட்டம் தொடரவே செய்தது.

பட்டை, பானைகள் கொண்டு வள்ளத்தின் பாதிவரை தேங்கிக் கிடந்த நீரைக் கோலி வெளியேற்றிய பின்னர் நிம்மதி ஏற்பட்டபோதும் விரக்தி நிலை விலகிச் செல்லவில்லை...

புயலாக எந்தக் காற்று மாறியது என்பதை அறியவோ இனங் காணவோ முடியாமையால், புயற்காற்று வள்ளத்தைத் தள்ளிச்சென்ற திசையையும் அறிய முடியவில்லை.

வாடை, கச்சான், கொண்டல் காற்றுகளில் எந்தக் காற்று புயலாக மாறினாலும் அதன் வேகம் தணித்து, அமைதி அடைகையில் சோழகக் காற்று வீசுவதே வழமை. சிலவேளையில் கச்சான் காற்று புயலாக மாறினால், அமைதி அடைகையில் கொண்டல் காற்றும் வீசுவதுமுண்டு.

வானத்தின் இருள் முற்றாக நீங்கியதும் நிலவு கலங்கலற்றுத் தெரிந்திட, அதன் இருப்பைக் கொண்டு வள்ளம் கிடக்கும் திசையை அடையாளம் கண்டதில் மனதுக்கு ஆறுதல் கிடைத்தது போலிருந்தது.

சிறிது நேரத்தின் பின்னர் காற்று முற்றாக அயர, வள்ளத்தின் தள்ளாட்டம் அடங்கியது... இரண்டாவது முறையாக இத்தகைய இடரிலிருந்து காப்பாற்றிய கடவுளுக்கு மனதுருக நன்றி கூறினர்.

மிகக் குறைந்த காற்றாக இருந்ததால் எந்தக் காற்று என்பதைத் தீர்மானிக்க முடியாவிட்டாலும், முன்னரைப்போல் பாயை பாதிவரை கட்டிவிட்டனர், எங்கு சென்றாலும் ஒன்றுதான் என்ற விரக்தியில்...

ஆனால், நிலவின் இருப்பு, அவர்கள் இதுவரை வந்த சரியான திசையிலேயே வள்ளம் நகர்வதை உணர்த்தியது...

***

*08 ஆம் நாள்...*

திசை இல்லாத நிலையில் தேடல்கள் இருந்தன...

ஆலோசனைகள், முன்வைப்புகள், வேண்டுகோள்கள் என பாதிக்கப்பட்ட மற்றும் அனுதாபிகள் பலரது கோரிக்கைகளுக்கேற்ப, செலவைக் கருத்திற்கொள்ளாது தேடியலைந்து, களைப்புற்ற நிலை குருநகரில் காணப்பட்டது.

இவ்வளவு நாளாகியும் காணாமல் போனவர்கள் கண்டுபிடிக்கப் படாமையால் அவர்களில் எவரும் உயிருடன் இல்லை என்னும் முடிவுக்கே, பலரும் வரவேண்டிய நிலைக்கு உள்ளானார்கள்.

பேச்சளவில் மட்டுமன்றி உறவுகளால் இதனை ஜீரணிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாத நிலையும் காணப்பட்டது...

வருவார், வருவார் என்ற எதிர்பார்ப்பு அவர்களின் ஆழ்மனப் பதிவாக மாறிவிட்டது. அதனாலேதான் இறந்தவருக்குச் செய்யப்படும் ஏழுச் செலவை செய்யுமாறு அனுதாபிகள் சிலர் கேட்டும் அதை மறுத்து விட்ட அவர்கள், சம்மாட்டியிடம் நிலைமையைக் கேட்டறிய வந்தனர்...

சோர்வுடன் வரும் இவர்களது வரவு கண்டதும் எழுந்தவரின் இதயத்தில் வேதனை புத்துயிர் பெற்றிட, கண்கள் கலங்கின...

வந்தவர்கள் காலடியில் இருந்து தேம்பித் தேம்பி அழத் தொடங்கினார்.

சம்மாட்டியும் அவர்களோடு சேர்ந்து அழுதார்...

அவரது கைகள் குறுக்காக கட்டப்பட்டிருந்த கொடிக் கயிற்றைப் பற்றியிருந்தது... வேதனை மிகுதியால் மிகவும் உணர்ச்சிவசப்பட்டவராக இருந்தார்...

"யாருக்கு நான் தீங்குசெய்தேன் இறைவா - நாட்டில் / யார் குடியை நான்கெடுத்தேன் இறைவா..."

அழுதவாறு, திரைப்பட பாடல் வரிகளை உச்சரித்ததும் காணமல் போனவர்களின் குடும்ப உறவுகள் மட்டுமல்ல, கூடி நின்ற சொந்த பந்தங்களுமே உரத்துக் குரல்கொடுத்து அழுதன...

அழுகை உச்சகட்டத்திலிருந்ததால் தாங்கள் கேட்கவந்த விடயத்தையும் விடுத்து வேதனைச் சுமையுடன் வெளியேறினர்.

இந்நிலையில்தான், ஏற்கெனவே செனட்டர் பதவி வகித்த நல்லையாவுடன் தொடர்புகொண்டு சம்மாட்டி எடுத்துக்கொண்ட முயற்சிக்கு பலன் கிடைத்ததைப்போல், 'ஐந்து பேருடன் தொழிலுக்குச் சென்ற வள்ளம் காணாமல்போன விடயம்' நாடாளுமன்றம் வரை சென்ற தகவல் கிடைத்தது.

வேதனையிலும் ஓர் ஆறுதல்...

இது இவர்களால் எடுத்துக்கொள்ளப்படும் இறுதி முயற்சி என்று சொல்லும் அளவுக்கு களநிலைமை இருந்தது...

***

சற்றுத் தாமதமாகவே எழுந்தனர்...

உறக்கம் அவர்கள் விரும்பாமலும் அணைத்திருந்தது.

இரவு வீசிய புயற்காற்றின் உதைப்பும், மழை மற்றும் கடல் நீரில் தோய்ந்த அலுப்பும் உறக்கத்துக்கான காரணமாகவும் இருக்கலாம்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புயலைத் தொடர்ந்து காற்று மிகக் குறைவாகவே வீசிட, பாய் சோர்ந்து தொங்கிக்கொண்டிருந்ததால், வள்ளம் நின்ற இடத்திலேயே நிற்பதுபோலவே இருந்தது.

வெயில் வழமைக்கு மாறாக காலையிலேயே சுட்டெரித்ததுடன், கடலும் '**மான்பாடு**' ஆகவே கிடந்தது...

இத்தகைய சந்தர்ப்பத்தில் கடல் நீரோட்டமே வள்ளத்தை தனது ஆளுமைக்குள் வைத்திருந்து தனது போக்கிற்கு இழுத்துச் செல்லும். கரை அல்லது நிரந்தரமான அடையாளம் இல்லையெனில் அதன் வேகம், திசையை இலகுவாக இனங்காண முடியாது...

இயல்பாக, பூமியின் சுழற்சித் தன்மையால் ஆறு மணித்தியாலங்களுக்கு ஒரு தடவை '**வடு**', '**வெள்ளம்**' என நீரின் உச்சத்தில் மாற்றமிருக்கும்.

காலை ஆறு மணிக்கு உச்ச வடுவாக இருந்தால், அந்நேரம் முதல் பன்னிரண்டு மணிக்கு வெள்ளம் உச்சத்தை அடையும் வரை மெல்ல மெல்ல உயர்ந்து வருகையில் ஏற்படும் மாற்றம் வெள்ள நீரோட்டமாக இருக்கும். அவ்வாறே பன்னிரண்டு மணிக்கு உச்ச வெள்ளமாக இருந்தால், அந்நேரம் முதல் மாலை ஆறு மணிக்கு வடு உச்சத்தை அடையும் வரை மெல்ல மெல்ல குறைந்து வருகையில் ஏற்படும் மாற்றமே வடு நீரோட்டமாக இருக்கும்.


இரண்டு உச்ச நேரங்களையும் நெருங்கி வருகின்ற வேளையில் நீரோட்டத்தின் வேகம் முன்னரைப் போலில்லாமல் தணிந்து இருக்கும். அவ்வாறே, பவுர்ணமி, அமாவாசை தினங்களில் முதல் மூன்று நாட்களிலும், அடுத்து வரும் மூன்று நாட்களிலும் காணப்படும் நீரின் வேகம், அட்டமி நாட்களில் குறைவாகவும் இருக்கும்.

உச்ச நேரங்கள் எப்போதும் ஓரே மாதிரி இருப்பதில்லை. தினமும் முக்கால் மணித்தியால வீதம் தாமதமாகிக்கொண்டே இருக்கும்...

இது நியதி... இயற்கை விதி...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 08

*1963 ஆனி மாதம் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை...*
*09ஆம் நாள்...*

பெரும் எதிர்பார்ப்போடு அன்றைய பொழுது விடிந்தது...

செனட்டர் நல்லையா அவர்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை ஏற்று நாடாளுமன்றத்தில் எடுக்கப்பட்ட உடனடி முடிவிற்கமைய, அன்றே தேடுதல் நடவடிக்கைக்கான முயற்சிகள் முடக்கி விடப்பட்டன...

திரிகோணமலை கடற்படைத் தளத்திலிருந்து புறப்பட்ட அதிவேகக் கடற்படை படகுகள் இரண்டு, குறித்த திசையில் சர்வதேசக் கடற்பகுதியில் கணிசமான தூரம் வரை சென்று முடிந்தவரை நோட்டமிட்டன.

காணாமற்போனதாகக் கூறப்பட்ட வள்ளத்தை அவர்களால் கண்டுகொள்ள முடியவில்லை. இருளான பின்னரே திரிகோணமலை கடற்படைத் தளத்திற்குத் திரும்பின அவை.

விமானப் படையினரின் விமானமும் கடற்பகுதியில் தேடுதலை மேற்கொண்டது.

சில மணித்தியாலங்களாக மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் எவ்வித தகவலும் அறியமுடியாமல் போய்விட்டது.

அன்று தொடங்கிய முயற்சி அன்றே முடிவுக்கு வந்தமை பெரும் ஏமாற்றமாகவே இருந்தது...

அரசாங்கம் எடுத்துக்கொண்ட முயற்சி கைகூடாமற்போனமைக்கு சில காரணங்களும் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணாமல் போய் ஏழு நாட்கள் கடந்தமையால் காற்றின் வேகத்திற்கு ஏற்ப வள்ளம் சென்றிருக்கக்கூடிய தூரத்தை துல்லியமாகக் கணக்கிட முடியாமல் போனமை, பரந்து விரிந்த - பல கடல்கள் கலக்கின்ற சமுத்திரத்தில் இயல்பாக இருக்கின்ற வேகமான நீரோட்டத்தை வள்ளத்தின் மிதப்புடன் ஒப்பிட்டுப் பார்க்கத் தவறியமை, நேற்றைய தினம் வங்காள விரிகுடாவில் மையங்கொண்டு வீசிய சூறாவளியால் வள்ளம் கடலில் அமிழ்ந்திருக்க வேண்டும் என்ற கருதுகோள், இலங்கை படையினர் வசம் (1971 இற்கு முன்னர்) இருந்த பற்றாக் குறையான வளங்கள் போன்றவற்றால், வள்ளம் காற்றின் வேகத்தால் தள்ளிச் செல்லப்பட்டு கணிசமான தூரம் சென்றுள்ளதை கிரகித்து, அவதானிக்க முடியவில்லை என்றே கருத இடமுண்டு...

***

காற்றின் அழுத்தம் சிறிதும் இல்லாமையால் மாறிவரும் நீரோட்டத்தின் இசைவுக்கு ஏற்றாற்போல் வள்ளம் வழிந்து சென்று கொண்டிருந்தது...

காலையிலேயே வெயிலின் அகோரத்தைத் தாங்க முடியாமல் கடல் நீரை பட்டையால் கோலி மாறி மாறிக் குளித்தனர்.

குளித்து சிறிது நேரம் வரைதான் ஆறுதல். பின்னர் 'வேதாளம் மீண்டும் முருக்க மரத்தில் ஏறின' கதைமாதிரித்தான்...

உப்பு நீரென்பதால் தேகத்தில் படிந்திடும் உப்பு இரட்டிப்பு அகோரத்தைக் கொடுத்தது.

சூரியன் மதியத்தைக் கடந்த நிலையில் அதன் வெப்பம் மேலும் அதிகரித்து உடலைப் பொசுக்கியதால், போயாவுடன் இருந்த கயிற்றை வள்ளத்தில் கட்டிவிட்டு அதன் முனையைப் பிடித்துக்கொண்டு கடலில் குதித்தனர்.

ஆபத்தான, உயிரினங்கள் வாழுகின்ற அந்தக் கடலில் உயிர் அச்சுறுத்தலையும் கருத்திற் கொள்ளாமல், தயக்கம் சிறிதேனும் இல்லாமல் கடலில் இறங்குவதற்கு தாங்க முடியாத வெப்பத்தின் அகோரமே காரணமாய் இருந்தது...

அரை மணித்தியாலத்துக்கும் மேலாக கடலில் மிதந்து குளித்து வள்ளத்தில் ஏறிக்கொண்டவர்களின் கண்கள் அகல விரிந்தன...

ஒருவரையொருவர் மகிழ்ச்சி பொங்க பார்த்துக்கொண்டனர்.

எல்லோரின் பார்வையும் ஒரே திசையில்...

"கப்பல்...!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்பல் ஒன்று வருவது தெரிந்தது...

வாயைப் பிளந்தனர்...

வள்ளம் அடையத் தொடங்கி இத்தனை நாளும் கப்பலையோ, வேறு கடற்கலத்தையோ கண்டதில்லை. அதனால் அக்களிப்பால் துள்ளினர்.

தங்களை நோக்கி வருகின்றது என்ற நம்பிக்கை உறுதியாக இருந்ததால் வேதனைகளை மறந்த மகிழ்ச்சி அவர்களில்...

"கெதியா வரமாட்டுதா...?"

ஆவேசத்தில் இராசகுலம் கேட்டாலும், மற்றவர் மனதிலும் இந்த ஆதங்கம் இருக்கவே செய்தது.

இயந்திரக்கூட்டின்மேல் இருந்தவாறு நெருங்கி வருவதைப் போல்த் தெரிந்த கப்பலை இமை மூடாமல் பார்த்தபடி இருந்தனர். இப்போது இவர்களுக்கு வெயிலின் அகோரம் பற்றிய அக்கறை இருக்க வேயில்லை.

நினைவிலெல்லாம் 'கப்பல் வருகுது, தங்களைக் காப்பாற்றப் போகுது, விரைவாக வீட்டுக்குப் போய்விடுவோம்' என்ற சிந்தனைதான்.

அதிலொரு சுகத்தைக் கண்டனர்.

எதிர்பார்த்தைப்போல கப்பல் நெருங்கி வந்ததும் அதனை முழுமையாக, தெளிவாகப் பார்க்கக் கூடியதாக இருந்தது.

"சரக்குக் கப்பல் போல இருக்கு."

"சரக்குக் கப்பலெண்டா என்ன! எதண்டாலும் எங்கள ஏத்திக் கொண்டு போனாலே போதும்."

தங்களை ஏற்ற வருகின்ற கப்பல் என்ற முடிவில், எவ்வாறேனும் தாங்கள் காப்பாற்றப்பட்டாலே போதும் என்ற எண்ணமே மேலோங்கி யிருந்தது.

கப்பல் நெருங்கி வர வர இவர்கள் உள்ளமும் குதூகலத்தில்...

ஒவ்வொருவரினதும் ஆவலை நிறைவு செய்வதைப்போல கப்பல் பக்கவாட்டில் நெருங்கி வந்தது.

மகிழ்விற்கு அளவேயில்லை...

"ஆபிரிக்காக்காறராக்கும் கறுப்பா இருக்கிறாங்க..."

"அவங்கதான்..."

ஆட்களை இனங்காணும் அளவுக்கு கப்பல் நெருக்கமாகத் தெரிந்தது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேன்மேலும் நெருங்கி வர, தம்மைக் காப்பாற்ற வருபவர்களை முகம்மலர வரவேற்பதைப்போல கைகளை உயர்த்தி, அசைக்க, பதிலுக்கு அவர்களும் அசைத்ததால் உற்சாகத்தில் துள்ளினர்.

மகிழ்வு கரை கடந்த வெள்ளமாக உள்ளத்தில் புரண்ட வாறிருக்கையில் திடீரென மாற்றம்...

கப்பலின் அணியம் திரும்பியது...

திரும்பிய திசையில் முன்னேறியது.

மகிழ்வில் இருந்தவர் இதயத்தில் பாறாங்கல் வீழ்ந்ததுபோல இருந்தது.

எதிர்பார்த்திருந்ததைப்போல் கப்பல் வள்ளத்தை தேடி வராமல் நேராகச் செல்வதைப் பார்த்ததும் முகத்தின் மகிழ்ச்சி காற்றிழந்த பலூன் மாதிரி சுருங்கியது...

பலவீனமான நிலையிலும் இதயம் வேகமாகத் துடிக்க ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

சென்ற கப்பல், திடீரெனத் திரும்பி வள்ளத்தின் மறு பக்கத்தால் வந்தது...

கவிழ்ந்து விட்டதாக கருதிய சந்தோஷம் மீண்டும் கிளர்ந் தெழுந்தது. சிரிப்புடன் கையை அசைத்தனர். ஆனால், இவர்களது மகிழ்வை மழுங்கடிக்கச் செய்வதைப்போல கப்பல் வள்ளத்தை நெருங்கி வராமல் அதனைச் சுற்றி வட்ட மடித்தது...

கணநேரத்தில் முகிழ்ந்த சந்தோஷம் காற்றாய்ப் பறந்தது...

சம்பந்தமே இல்லாமல் வட்டமடிப்பதை வினோதமாக பார்த்தபடி, இருவர் சாரத்தை கையிலெடுத்து அசைத்தனர், ஆபத்தில் உதவுமாறு கேட்பதைப்போல. ஏனையோர் கரங்களை உயர்த்தி, அசைத்து ஆதரவு கோரினர்.

இவற்றை கப்பலில் இருந்தவர்கள் கண்டுகொண்டதாகத் தெரியவில்லை.

கப்பல் வள்ளத்தை தேடி வராமலே சென்றது...

இவர்களது இறுதி முயற்சியும் தோல்வியடைந்தது.

"இவ்வளவு அருகா வந்த கப்பல், நடுக்கடலில அந்தரிக்கிற எங்களக் காப்பாற்றாம போயிற்றுதே! ஏன் போனதெண்டு தெரியயில்ல?"

"கடவுளே எங்களை ஏன் சோதிக்கிறீர்!"

நவின்சந்திராவின் கேள்விக்கு எல்வாட்டரின் வேண்டுதல்தான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிலாக இருந்தது.

கப்பல் செல்வதைப் பார்த்துக்கொண்டு நின்றவர்களுக்கு நடந்தவை கனவுபோல இருந்தது மட்டுமல்ல, கப்பலின் கப்டன் நடந்து கொண்ட விதமும் புரியாத புதிராக இருந்தது...

எதிர்பார்ப்பு புஸ்வாணமானதால், பேச்செதுவுமின்றி வள்ளத்தில் ஆங்காங்கு அமர்ந்து கொண்டனர், நம்பிக்கை புதைக்கப்பட்ட நிலையில்.

'இனிமேல் யார் உதவப் போகிறார்களோ' என்ற ஏக்கம் அவர்களைப் பெரிதும் பாதித்தது.

இந்த நிகழ்வுக்குப் பின்னர், தாங்கள் இனிமேல் காப்பாற்றப்பட போவதில்லை என்ற முடிவுக்கு வந்துவிட்டதால், உறவுகளின் நினைவுகள் உருவகம்பெற்று வேதனையை ஏற்படுத்தவும் செய்தது...

திடீரென, இரைச்சலோடு கூட்டாகப் பாய்ந்து வந்த மீன்களில் ஒன்று வள்ளத்துக்குள் பாய்ந்து துடித்துக்கொண்டு கிடந்தது.

கப்பலின் வருகையோடு இணைந்து வந்த மீன்கள் கப்பல் வட்ட மிட்டதால் இந்தச் சுற்றாடலில் தரித்து மீண்டும் புறப்படுகையிலேயே இவ்வாறு நிகழ்ந்துள்ளது.

பொதுவாகவே, கப்பலின் பிரமாண்டமான 'புறொப்ளரின்' சுழற்சியால் கலக்கப்படும் கடலடியின் தரைப்பகுதியிலிருந்து மேலெழுப வற்றை, கப்பலில் படிந்துள்ள செழும்பு மற்றும் வீசப்படும் கழிவுப் பொருட்களை உண்பதற்கென பலவகை மீனினங்கள் கூட்டமாக கப்பலைப் பின்தொடர்ந்து வருவதுண்டு.

அவ்வாறு கூட்டத்தோடு வந்த மீன்களில் ஒன்றுதான் வள்ளத்தில் பாய்ந்துள்ளது. அந்த மீன் ஒரு முளத்துக்கும் மேற்பட்ட நீளத்தையுடைய பாலை மீன்.

துடித்துக்கொண்டு கிடக்கும் மீனை, தங்களது அந்தரிப்போடு ஒப்பிட்டுப் பார்த்தவர்களுக்கு அதன்மேல் இரக்கம் பிறந்தது. மீனை வைத்திருந்து எதுவும் செய்யமுடியாததென்பதால் பிடித்து கடலில் இறக்கிவிட்டனர்.


மகிழ்வோடு செல்வதைப்போல் துள்ளலுடன் பாய்ந்தது.

அது அடைந்த மகிழ்வைப் பார்த்துக்கொண்டிருந்தவர்கள், தாங்கள் சிறைப்பட்டுள்ளதை நினைக்கையில் வேதனை வெகுவாகத் தாக்கியது...

வாய்விட்டு அழவில்லை... மௌனமாய் அழுவதை உரைப் பதற்கு விழிகள் வெளியேற்றிய நீரே சான்று...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 09

*1963 ஆனி மாதம் 24 ஆம் திகதி திங்கட்கிழமை...*
*10 ஆம் நாள்...*

பத்திரிகைச் செய்தி எவருக்கும் மகிழ்ச்சியைக் கொடுக்க வில்லை...

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம், எடுக்கப் பட்ட முயற்சிகள், அதன் முடிவுகள், வங்காள விரிகுடாவில் மையங் கொண்டு வீசிய சூறாவளியால் ஏற்பட்டிருக்கக்கூடிய பாதிப்பு என, பத்திரிகைகளில் முதன்மைச் செய்திகளாகவும், கேள்விக்குறியுடன் கூடிய விபரிப்புகளாகவும் வெளிவந்தன.

நல்ல செய்தியை எதிர்பார்த்து இத்தனை நாளும் காத்திருந்த உறவுகளுக்கும், ஊராருக்கும் ஏமாற்றமே எஞ்சியிருந்தது...

இஷ்ட தெய்வங்களின் ஆலயங்களுக்குத் தவறாது சென்று முன்வைக்கப்பட்ட வேண்டுதல்கள், உறுதியளித்த நேர்த்திகள், வெளிப் படுத்திய வேதனைகள், உருக்குலையாத நம்பிக்கைகள் அனைத்தும் சின்னாபின்னமாகி விட்டதா? அர்த்தமற்றதாகி விட்டதா?... கேள்விக் கணையாக அவர்களைத் தாக்கியது...

கடவுளரின் சன்னிதானத்தில் கண்ணீருடன் முன்வைத்த கோரிக்கைகள் பயனற்றது என்பதையோ, பத்திரிகையில் வெளிவந்த செய்திகளையோ ஏற்பதற்கு எவருமே தயாராயில்லை. அவர்களின் நம்பிக்கையில் தளர்ச்சியுமில்லை.

முதல் தடவையாக முன்னுரிமை கொடுத்து வெளிவந்த பத்திரிகைச் செய்தியால் படையெடுத்து வந்ததைப்போல இருந்தது சம்மாட்டியின் வீட்டுச் சுற்றாடல். உறவுகள், ஊரவர் மட்டுமல்ல தகவல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிந்த வேறு ஊர்களில் இருந்தும் பலர் வந்திருந்தனர்.

உறவுகளுக்கு என்ன பதில் சொல்வது என்று குழம்பிய நிலையில் சம்மாட்டி...

சம்மாட்டியின் குழப்பத்தால் உறவுகளின் அழுகுரல் உயர எழுந்தது...

***

புயற்காற்றின் பின்னர் இரண்டு நாட்களாக குறைந்திருந்த சோழகக்காற்று மீண்டும் சாதாரண வேகத்தில் வீசத் தொடங்கியது...

சோர்ந்து கிடந்த பாய் உசாரடைவது கண்டு, முன்னரைவிட உயரமாக இழுக்கப்பட்டது.

எல்லோரும் சோர்வுற்றவர்களாகக் காணப்பட்டனர்.

பாயின் உதவியுடன் வள்ளம் செல்லத் தொடங்கினாலும் சுக்கான் பிடிப்பதற்குக்கூட முடியாத நிலையில் மனதொடிந்து இருந்தனர். சுதாரித்துக்கொண்ட நவின்சந்திரா மட்டும் சுக்கான் பிடித்து வள்ளத்தை செலுத்திக்கொண்டிருந்தார். அது மண்டாடி மறுக்கமுடியாத பணி.

சிறிது நேரத்தின் பின்னர் வழமை நிலைக்குத் தம்மைத் தயாராக்கிக்கொண்ட மற்றவர்கள், எது வந்தாலும் ஒருமித்தே எதிர்கொள்வோம் அன்றேல் ஏற்றுக்கொள்வோமென்ற முடிவில் முன்னரைப்போலவே தொடர முன்வந்தனர்...

தொடரான பசி, அடங்காத தாகம், இரவில் தாங்கமுடியாத குளிர், பகலில் உடம்பைச் சுட்டெரிக்கும் வெயில்...

புயலுக்கு முன்னைய பயணத்தைவிட பிந்திய பயணம் பெரிதும் மாறுபட்டது. உடல் இளைத்து, உணர்வுகள் மரத்து, உயிர் பிழைக்கலா மென்ற எண்ணம் அருகிச்செல்லும் நிலையிலேயே இவர்களது பயணம் இருந்தது...

***

*11 ஆம் நாள் முதல் 16 ஆம் நாள் வரை...*

சோழகக்காற்றின் வீச்சுக்கேற்ற வேகத்தில் பயணித்துக் கொண்டி யிருந்தது வள்ளம்...

வழமையான அனுபவிப்புகள் இந்த ஆறு நாட்களிலும் ஒட்டிக் கொண்டபோதும், எதிர்பாராத அனுபவிப்புகளையும் எதிர்நோக்க வேண்டியுமிருந்தது.

பெரும் தாக்கமாகத் தெரிந்த குளிரைத் தடுப்பதற்கு பயன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்திய சாரம், உடலின் பலவீனத்தால் இப்போது போதுமானதாக இருக்கவில்லை.

துன்பத்தின்மேல் துன்பத்தை அனுபவிக்க வேண்டியிருந்தது...

உச்ச அகோரத்தை தணிக்க கடலில் இறங்கிக் குளிக்க முயன்றவர்களைத் தடுத்துவிட்டார் எல்வாட்டர். அதனால், பட்டையால் கோலியே அடிக்கடி குளித்தனர்.

உணவு, நன்நீர் இன்மை. மற்றும் குளிர், வெயிலால் ஐவரின் கண் பார்வையில் மங்கல் உண்டாயிற்று. எதையும் வழமையைவிட கூர்ந்து பார்த்தே இனங்காணக்கூடிய நிலைக்கு அவர்களை மாற்றிவிட்டது.

13 ஆம் நாள் பயணம் புதியதொரு அனுபவத்தைக் கொடுத்தது...

இதுவரை பயணித்த கடற்பகுதியைவிட சலசலப்பு குறைந்து அமைதி நிலவிய கடலாக இருந்ததால், வள்ளம் எங்கோ பெரும் சமுத்திரத்தில் செல்கிறது என்பது உறுதியானது.

இவ்வளவு தூரத்தில் நிற்கையில், எவரேனும் உதவிக்கு வருவார்கள் என்றிருந்த நம்பிக்கை, காலாவதியாகி கடலிலேதான் மரணம் என்ற எண்ணமே மேலோங்கியிருந்ததால் அந்த சமுத்திரத்தையே வெறித்துப் பார்த்தவாறு நின்றனர்.

வானத்தின் பிரதிபலிப்பு அந்த சமுத்திரத்தில் தெரிந்தாலும் வள்ளத்தில் நின்று செங்குத்தாகக் கடலைப் பார்க்கையில் கருமை நிறைந்ததாகக் காணப்பட்டதால் மிகவும் ஆழமான பகுதியாக இருக்க வேண்டுமென்ற எண்ணம் தோன்றியது. அதற்கு வலுவூட்டுவதைப்போல வள்ளம் சென்றுகொண்டிருந்த திசையில் ஆங்காங்கு ஓங்கில் (டொல்பின்), கடற் பன்றி, ஆமை, கருங் கண்ணிப்பாரை போன்ற கடல் வாழ் உயிரினங்கள் சிறு கூட்டங்களாக நீருக்கு மேலாக வருவதும் மூழ்கி மறைவதும் மீண்டும் சற்றுத் தள்ளி மேலெழுவதுமாக இருந்தன.

இடையிடையே மாற்றமடையும் நீரோட்டங்களால் தாம் வாழுகின்ற சுவாத்தியம் மாறுபடும்போது கடல்வாழ் உயிரினங்கள் மேலெழுவதும் இடம் மாறுவதும் இயல்பு.

ஓங்கில் வேகமாக ஓடக்கூடிய மீனினம் என்பதால் சாகசம் செய்வதைப்போல துள்ளிப் பாய்வதும் கணநேரத்தில் கனதூரம் சென்று திரும்புவதுமாக பயமற்றுத் திரிந்தன.

இந்த மீனினத்தைக் கண்ட பின்னர்தான், கடலில் குளிக்க வேண்டாமென தடுத்த எல்வாட்டரின் மதியூகத்தை மனதாரப் புகழ்ந்தனர்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றைக் கடந்து சற்றுத் தூரம் சென்றதும் கொம்பன் சுறா, வேளாச் சுறா இனங்கள் மேலெழுந்து உலாவந்தன. அவ்விடத்தில் வேறுவகை மீனினங்களைக் காண முடியவில்லை.

இவற்றை இரசனையோடு பார்த்தாலும், தங்களது உடல் இவற்றுக்கு ஒருநாள் இரையாகலாம் என்ற எண்ணம் தோன்றிட இதயம் படபடத்தது.

எற்கெனவே உடலால் சோர்வுற்றவர்கள், மனதாலும் சோர்வுற்றுச் செல்லும் நிலையில் கப்பல் ஒன்று தூரத்தில் வருவதைக் கண்டனர். அனைவர் முகமும் மலர்ந்தது. முன்னர் ஒரு தடவை அடைந்த ஏமாற்றம் நினைவில் தோன்றியபோதும், அதை ஓரம் தள்ளிவிட்டு மகிழ்ச்சியுடனும் எதிர்பார்ப்புடனும் காத்திருந்தனர்.

கப்பல் முன்னோக்கி வர, தங்களை நோக்கி வருவதைப்போல இருப்பதையும், நெருங்கி வருவதுபோல தெரிவதையும் உணர்ந்தனர். அதனால், அவர்களின் மகிழ்ச்சி இரட்டிப்பானது...

கப்பலுக்கும் இவர்களுக்கும் இடையிலான தூரம் குறுகித் தெரிந்தபோதும், இவர்கள் எதிர்பார்த்ததைப்போல் வள்ளத்தை தேடி வராமல், தொடர்ந்து சென்று மெல்ல மெல்ல மறைந்தது.

முன்னர் சந்தித்த ஆபிரிக்க நாட்டவர்களின் கப்பல் வள்ளத்தில் இருப்பவர்களுக்கு கையசைத்துச் சென்றது. ஆனால், இந்தக் கப்பல் இடையிலேயே திரும்பிச் சென்றதால், தங்களின் ஏமாற்றத்தை எண்ணி தங்களையே நொந்து கொண்டனர்.


பரந்த வெளியான கடற்பரப்பில் பூமியின் உருண்டை காரணமாக தூரத்தே தெரியும் கப்பல் பார்ப்பவரைத் தேடி வருவதைப் போலவும், மேலும் மேலும் நெருங்க வருவதைப் போலவும் இருப்பது இயற்கை. இதனை உணர்வதற்கான சந்தர்ப்பம் இதுவரை அமையாததால் இவர்களுக்கு இந்த சங்கடம் ஏற்பட்டது.

இந்த ஆறு நாள்களின் (11 - 16) பயணத்தில் மேலும் இரண்டு தடவைகள் கப்பல்களின் வரவைக் கண்டிருக்கிறார்கள். அப்போதெல்லாம் கானல் நீரைக்கண்டு ஆவலுற்று நெருங்க முனையும் மான்களின் உணர்வில் இவர்கள்...

இருப்பினும் முன்னைய அனுபவம் கற்றுக்கொடுத்த பாடத்தால் பொங்கிவந்த மகிழ்ச்சியை முடக்கியவர்களாய் எதிர்பார்ப்பை அடக்கியவர்களாகவே இருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 10

*1963 ஆடி மாதம் 01 ஆம் திகதி, திங்கட்கிழமை...*
*17 ஆம் நாள்...*

வெயிலின் வெப்பம் உடலைத் தீண்டிய பின்னரே ஒவ்வொரு வராக எழுந்தனர்...

தினந்தினம் முனைப்புப்பெறும் ஏக்கத்தோடு, கடலை நோட்ட மிட்டவர்களின் மனதில் இனம் புரியாத தாக்கம்...

தீர்வு கிடைக்காத வேதனை...

இவற்றின் மத்தியில் உடல் நிலை பாதிப்படைந்திருந்தாலும் மனதில் துணிவு, நம்பிக்கை மேலோங்கியே இருந்தது. அன்றேல் கற்பனை செய்தும் பார்க்க முடியாத நிலையில் பாதிப்புகளை ஏற்படுத்தும் சமுத்திரச் சூழலில் இத்தனை நாளும் உயிர் வாழ்ந்திருக்க முடியுமா?

காற்று வேகமாக வீசத் தொடங்கியதால் வள்ளமும் வேகமாகச் சென்றது.

கடல் ஆழம் காரணமாக அலைகளின் ஆர்ப்பரிப்பு பெரிதாக இல்லையாகையால், வகை வகையான மீனினங்களில் நடமாட்டத் தையும் மேலெழுந்து பாய்வதையும் பார்த்துக் கொண்டிருப்பதன் மூலம் சில வேதனைகளை மறக்கச்செய்து, ஆறுதலைக் கொடுத்தது.

உச்ச தாகத்தின்போது சொற்பமாக கடல் நீரை, இடையிடையே சிறுநீரைக் குடிப்பது...

உச்ச அகோரத்தின்போது கடல் நீரில் குளிப்பது...

சுக்கான் பிடித்து வள்ளத்தை திசையின்றிச் செலுத்துவது...

ஒவ்வொரு கணமும் ஏக்கத்தோடு கடல்வெளியைப் பார்ப்பது...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றிலேயே கவனத்தை செலுத்தி வந்த இவர்கள், தம்மை மறந்திருக்க மீனினங்களின் நடமாட்டம் இரசனையாகவும் நல்லதொரு பொழுது போக்காகவும் இருந்தது.

இரசனையில் பொழுதைக் கழித்தவர்கள், வள்ளம் பயணித்த திசையிலிருந்து திடீரென மாறிச் செல்வதைக் கண்டனர்...

காற்று மாறிவிட்டதோ என்ற சந்தேகம்...

வள்ளம் வேறு எங்கேனும் சுற்றப்போகிறதோ என்ற அச்சம் ஏற்பட்டதால் நவின்சந்திராவிடம் சொல்லி திசையறிகருவியை பார்வை யிட்டனர்.

வள்ளம் வடமேற்குத் திசை நோக்கிப் பயணித்துக் கொண்டி ருப்பதை திசையறிகருவி காண்பித்தது.

“காற்று சோழகக் கொண்டலாக (தென் கிழக்குப் பக்கமிருந்து வீசும் காற்று) மாறிட்டுதாக்கும். கொண்டலாக மாறீற்றெண்டா மழை பெய்யுதோ தெரியாது.”

“இவ்வளவு நாளும் நேர் சோழகமாகத்தானே இருந்தது.”

“நேர் சோழகமா வீசினா பயமே இல்லையே! கொண்டலை நினைச்சாத்தான் பயமாயிருக்கு, குளப்படியக் கொண்டுவந்திடும். முதலொருக்கா பட்ட அவஸ்தை காணாதா?.”

“அண்ணே! கடல் அலையக் கவனியுங்க அது நேராத்தான் போகுது. காத்து எங்களுக்கு இடப்பக்க கன்னத்திலதானே விழுகுது. சோழகக் கொண்டலெண்டா வள்ளம் போற மாதிரிக்கு எங்களுக்கு பிடரியிலயெல்லா விழவேணும். இது ஏதோ குறுக்கு நீரோட்டத்தின்ர வேலைதான்.”

கைகளை நீட்டிப் பார்த்து, நவின்சந்திரா கூறிய கருத்தை ஏற்றுக் கொண்டனர்.

“தம்பி! குறுக்கு நீரோட்டமெண்டா இந்தப் பிரதேசம் குடாவாக இருக்கவேணும்... இப்ப எங்க நிக்கிறோமெண்டு தெரியாமலிருக்கே!”

எல்வாட்டர் தனது அனுபவத்தையும், ஆதங்கத்தை வெளிப் படுத்தினார்.

கிழக்குப் பக்கமிருந்து ஓடிவரும் குறுக்கு நீரோட்டத்தின் வேகத்தால் வள்ளம் பக்கவாட்டுக்குத் தள்ளுப்படுகிறது என்ற முடிவுக்கு வந்தனர். அணியம் பாரமற்று மிதப்பதால் அதனை இலகுவாக வட மேற்குத் திசை நோக்கி நீரோட்டம் தள்ள, காற்றின் உந்தலால் முன்னோக்கிப் பயணிக்கிறது. அதுவே சோழகக் கொண்டல் காற்று என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

காற்றின் வேகம் மேலும் அதிகமாகிக்கொண்டிருந்ததால் அதற்கேற்ப வள்ளமும், கருமையான அந்தக் கடலை கிழித்துக் கொண்டு செல்வதுபோல தெரிந்தது.

வெயிலின் அகோரத்தை காற்றின் வேகம் கட்டுப்படுத்தத் தவறியதால் தேகத்தில் படிந்திருந்த உப்பு, உடம்புக்கு எரிவைக் கொடுத்தது. அதனால், வள்ளத்தின் மேற்குப்பக்க மறைப்பின் நிழலில் நால்வரும் அமர்ந்துகொண்டனர்.

இயந்திரக் கூட்டின் நிழலில் அமர்ந்து சுக்கான் பிடித்துக் கொண்டிருந்த நவின்சந்திரா, கானாத்தடி நேராக இருக்குமாறு கயிற்றால் இரண்டு பக்கமும் இழுத்துக் கட்டிவிட்டு ஏனையோருடன் அமர்ந்து கொண்டார்.

"இண்டைக்கு எத்தினையாம் திகதியண்ணே?"

"ஆருக்குத் தெரியும்?... கலண்டரா இருக்கு!... நாங்க பதினாலாம் திகதிதான் கடசியா தொழிலுக்கு வந்தனாங்க. அதுமட்டும்தான் தெரியும்.

"கடசியா வலை படுத்த அண்டைக்கு நாலாம் பிறையெல்லா?"

"அதுதானே நாயலைச்சலா அலையிறோமே!"

"அதுக்கேன் பிறையைக் குறைசொல்லுறாய்? அது ஒவ்வொரு மாதமும்தான் வந்துதானே போகுதே."

"அண்டைக்கு நாலாம் பிறையெண்டா பறுவமும் முடிஞ்சு அட்டமி இண்டைக்கோ நாளைக்கோ எண்டு இருக்கு. இரவுக்கு நிலவு கிளம்பிற நேரத்தைப் பார்த்தாத்தான் தெரியும். எப்படியும் பதினாறு பதினேழு நாளாக இருக்கும். இனிக் கணக்கப் பாருங்களன்."

விரல்களை மடக்கி நாட்களை எண்ணினர்.

"அண்ணே! இந்த மாதம் முப்பதிலையா, முப்பத்தொண்டி லையா முடியுது!"

விரல்களை மடித்து மேற்பக்க மொழியில் புட்டியை 31 ஆகவும், பள்ளத்தை 30 ஆகவும் நினைத்து தொட்டுப் பார்த்தார். ஆனிமாதம் பள்ளத்தில் வந்தது.

"ஆனிமாசம் முப்பதிலதான் முடியுது."

"அப்பிடியெண்டா இந்த மாதம் முப்பது அல்லாட்டி ஆடிமாதம் முதலாம் திகதியா இருக்கவேணும்."

"ரெண்டாந் திகதி மடுத் திருநாளெல்லா?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA JPL

“மடுவுக்குப் போவோமெண்டுதான் இருந்தனாங்க. மாதாவுக்கு அழைக்கச் சித்தமில்லையாக்கும்...”

இவர் முகத்திலும் வேதனையின் வெளிப்பாடு...

“மாதா எங்கள உயிரோட வைச்சிருந்தாவெண்டா வருசத்தில பத்துப் பதினொரு திருநாள் இருக்கு அதில ஒண்டுக்கு எப்பிடியும் போவோம்தானே!”

உரையாடலில் நேரம் போனதே தெரியாதுமல் இருந்தனர்...

இதுவரை வடமேற்கு திசை நோக்கிச் சென்ற வள்ளம், சூரியன் அடிவானிலிருந்து இரண்டு பனை உயரத்தில் தெரிகையில் சோழகக் காற்றுக்கு நேராகச் செல்லத் தொடங்கியது.

நீரோட்டத்தில் மாற்றம் ஏற்பட்டுள்ளது...

ஒரு மணித்தியாலம் வரை நிழலில் இருந்த யேசுராசா, கடையாலில் நின்று பட்டையால் கோலி குளித்துவிட்டு இயந்திரக் கூட்டைக் கடப்பதற்காக அதன் மேலே ஏறினார்...

“அண்ணே!... அண்ணே!...”

***

காலை பத்து மணிக்கு யாழ். மரியன்னை பேராலயத்தில் விசேட திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது...

திரளான மக்கள் குழுமியிருந்தனர்.

காணாமல் போன ஐந்துபேரும் மரணித்துவிட்டார்கள் என்ற முடிவில் குடும்ப உறவுகளால், பதினேழாம் நாள் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

**‘பிச்சை’** சடங்கின் அடையாளமாகவே இத்திருப்பலி இருந்தது. (தவிர்க் முடியாத காரணங்களால் நாட்கள் பிந்திச் செய்தாலுங்கூட பிச்சை எனவே கருதப்படுகிறது.)

திருப்பலியில் பங்கு கொள்வதற்கும் அதைத் தொடர்ந்து வீட்டில் நடைபெறும் வழிபாட்டிலும், மதிய உணவிலும் கலந்து கொள்வதற்குமென உறவினர், அயலவர், அறிமுகமானவர்கள் என ஐந்து குடும்பத்தை சேர்ந்தவர்களாலும் தனித்தனி அழைப்பு விடுக்கப்பட்டது.

ஒவ்வொருவரின் பெயரும் உச்சரிக்கப்பட்டு நடைபெற்ற திருப்பலி உறவுகளின் கண்ணீருடன் நிறைவடைந்தது...

அழைப்பை ஏற்று அக்கறையுடன் கலந்துகொண்டவர்களால் ஐவரினது வீடுகளும், அவரவர் வீடுகளுக்கு முன்னால் போடப்பட்டிருந்த கொட்டகையும் நிறைந்திருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறந்தவராகக் கருதப்பட்டவரின் படம் வீட்டில் வைக்கப் பட்டிருந்தது. படத்தின் முன்னால் மெழுகுவர்த்தி ஏற்றப்பட்டு, ஊதுபத்திகள் கொழுத்தப்பட்டிருந்தன.

பொதுவாக இறந்தவரின் சடலம் வைக்கப்பட்டிருந்த இடத்தில் செய்யவேண்டிய ஏழுச் செலவுச் சடங்கு, அவரது படம் வைக்கப்பட்டி ருந்த இடத்தில் நடைபெற்றது.

இறந்தவராகக் கருதப்பட்டவரின் குடும்ப உறவுப் பெண்கள் மற்றும் உறவினர்கள், அயலவர்கள், அறிமுகமானவர்களில் பெண்கள் விறாந்தையில் குழுமியிருந்து கட்டியணைத்தும், மார்பிலும் தலையிலும் அடித்து இழவு சொல்லி அழுதனர்.

இறந்தவரின் நற்குணங்களைக் சொல்லிச் சொல்லி அழுதனர்.

பார்த்தவர், கேட்டுக்கொண்டு இருந்தவர்களின் உள்ளத்துக் கசிவால் கண்களில் நீர் வழிந்தது.

இழவு சொல்லி அழுவதற்கோ, ஏழுச் செலவு செய்வதற்கோ ஐவரினதும் குடும்ப உறவுகள் விரும்பவில்லை. காணாமல்போன தமது உறவுகள் திரும்பி வருவார்கள் என்ற நம்பிக்கை அவர்களுக்கு இருந்தது.

இவர்களைத் தவிர்ந்த மற்றோரெல்லோரும், இதுவரை ஐவரும் இறந்திருப்பார்களென்ற முடிவையே கொண்டிருந்தனர். அதனையே வெளிப்படுத்தினர், வலியுறுத்தினர்...

இதற்கு மேலாக, அந்தச் சுற்றாடலிலுள்ள சிலர், 'ஐந்து பேரும் இறந்து ஆவிகளாகத் திரிகிறார்கள். அதனால்தான், இரவிரவா நாய்கள் குரைக்குது, ஊளையிடுகுது... ஆரோ நடமாடுவதுபோல கேட்குது... ஏழுச் செலவை செய்தால்தான் பரிகாரமாக இருக்கும்' எனவும் வற்புறுத்தினர்.

வேறு வழி இல்லாத நிலையாலேயே ஊரவர்களின் கூற்றை ஏற்று ஏழுச்செலவை செய்வதற்கு குடும்ப உறவுகளும் முடிவெடுத்தன.

பெரிய 'பனையோலைப் பாய்' விரிக்கப்பட்டு அதன்மேல் கணி சமான சோறு பரவப்பட்டிருந்தது. பாயைச் சுற்றிவர வைக்கப்பட்டிருந்த 25 வரையிலான ஓலைப் பெட்டிகளிலும் சோறு போடப்பட்டிருந்தன. இப்பெட்டிகள் உறவினர்களால் வைக்கப்பட்டவை.

இறந்தவர் வாழ்ந்தபோது அருந்திய காய்கறி, இறைச்சி, கட லுணவு வகைகள் தனித்தனி கறியாக இருபதுக்கு மேற்பட்ட கறிகள், பொரியல்கள், அவிக்கப்பட்ட நண்டு - குட்டூறு போன்றவைகள், சிற்றுண்டிகள், பழங்கள், இடியப்பம் - பிட்டு போன்ற பலகாரங்களுடன் அருந்திய பானங்களும் வைக்கப்பட்டிருந்தன. மதுபானம் அருந்தியவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டில் அதுவும் வைக்கப்பட்டிருந்தது.

சூழவிருந்த பெட்டிகளில் கறிவகைகளும், துண்டுகளாக்கப் பட்ட ஏனைய உணவுப்பொருட்களும் ஓரே அளவாகப் போடப்பட்டு மிகுதி பாயில் பரவிக்கிடந்த சோற்றில் போடப்பட்டன. பானங்கள் சொற்பமாகத் தெளிக்கப்பட்டன.

மதியம் 12.00 மணி... உறவினர் கூடியிருந்து விசேட இரங்கல் வழிபாடு நிகழ்த்திய பின்னர் இறந்தவரின் பிள்ளைகள், சகோதரர்கள் பாயில் கிடந்தவற்றை குழைத்து ஆரம்பித்துவைக்க தொடர்ந்து அனுபவமுள்ளவர்கள் அவற்றைக் குழைத்தபின் உறவினர்கள் போட்டி போட்டு அருந்தினார்கள். இது அவர்களின் உரிமைச்சோறு. இதை சாப்பிடுவதன் மூலம் அவர்களுக்கு மனநிறைவு ஏற்படுகிறது.

பந்தலில் ஐம்பதுக்கு மேற்பட்ட ஓலைப்பெட்டிகள் வைக்கப் பட்டிருந்தன. இப்பெட்டிகள் பிச்சைக்காரராலும், வறியவர்களாலும் வைக்கப்பட்டவை. இவை அனைத்திற்கும் சோறுகள் போடப்பட்டு பிரத்தியேகமாக ஆக்கப்பட்ட ஐந்து கறிகள் பகிர்ந்து போடப்பட்டன. (இதன் காரணமாகவே ஏழுச் செலவை 'பிச்சை' என அழைக்கும் வழக்கம் உண்டானது.) இவர்கள் எடுத்துச்சென்ற பின்னர் அழைப்பை ஏற்று வருகை தந்தவர்களுக்கு உலர்ந்த 'வாழைத்தடலி'ல் உணவு பரிமாறப் பட்டது.

பொதுவாகவே, வறியவர்களாயினும் பிச்சை நிகழ்வுக்கு சிறப்பான உணவு வழங்கி கௌரவிப்பர். அவ்வாறே இவர்களும் 'ஆமை' இறைச்சியில் சரக்குத் தூள்க் கறியும் மற்றும் மிளகாய்த் தூள்க் கறியும் ஆக்கி ஏனைய கறிவகைகளுடன் வழங்கினர்.

ஐந்து குடும்பத்தினரின் உறவுகளைப் பொறுத்தவரை பலரது வற்புறுத்தலினாலென்றாலும் உச்ச வேதனையுடன் தமது கடமையை முடித்து மனநிறைவு அடைந்தனர்...

***

யேசுராசாவின் உரத்த குரல்கேட்டு திடுக்கிட்டுப்போயினர்...

"என்ன யேசுராசா?"

"இஞ்ச வந்து பாருங்க..."

எதையும் தீர்மானிக்க முடியாதவர்களாய் இயந்திரக் கூட்டின் மேல் ஏறி அவன் சுட்டிக் காட்டிய அடிவானத்தை பார்த்ததும் ஆச்சரி யத்தால் கண்கள் விரிந்தன...

"என்ன இது, புகை போலத் தெரியுதே!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கடலில என்ன புகையப்போகுது?"

"கப்பல் ஏதும் எரியுதோ?"

"அப்பிடியும் இருக்கும்."

அதனையே வைத்தகண் வாங்காமல் பார்த்துக்கொண்டு நிற்கையில் மெல்ல மெல்லப் பூமி இருளானது...

முன்னிருட்டு என்பதால் தெரிந்த புகையும் மறைபட்டு விட்டது.

"கப்பல் எரியுதெண்டா இந்த இருட்டுக்கு நெருப்பின்ர கதிர் தெரியவெல்லாவேணும்! அது வேற என்னவோவாக்கும்."

கருத்துப் பரிமாற்றங்கள் நெடுநேரமாகத் தொடர்ந்தன...

இதனுடன், கடலில் குறுக்கு நீரோட்டம் வேகமாக இருக்கையில் வள்ளம் வடமேற்கு நோக்கிச் செல்வதும், வேகம் தணிந்ததும் நேராகச் செல்வதுமாக அதன் போக்கு இருப்பதை அவதானிக்கத் தவறவில்லை.

கிழக்கு அடிவானில் பாதிச் சந்திரன் எழுந்தான்...

கடிகாரத்தில் நேரத்தைப் பார்த்த நவின்சந்திரா, 'பதினொண்டரை' என்றார்.

"அப்பிடியெண்டா விடியத்தான் அட்டமி..."


இவர்களது கணக்கின்படி நாளைக்கு ரெண்டாம் திகதி. நாளைக்குத்தான் மடு மாதா திருநாள்...

ஐவரும் ஒன்றித்து மடு மாதாவை நோக்கி வேண்டுதல் செய்த பின்னர் படுக்கைக்குச் சென்றனர்...

நெடுநேரமாக உறக்கம் வர மறுத்தது, தூரத்தே தெரிந்த புகை பற்றிய விபரத்தை அறிய முடியாமையால்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 11

*1963 ஆடி மாதம் 02 ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை...*
*18 ஆம் நாள்...*

காலையில் சூரியஒளி பூமியில் பரவும் முன்னரே எழுந்து விட்டனர்...

நேற்று சாயந்தரம் அடிவானில் தெரிந்த புகை, என்னவென்று அறியவேண்டுமென்ற ஆவலில் தூக்கம் கலைந்தவர்களாய் எழுந்து, ஒளி வரும்வரை காத்திருந்தனர்.

திடீரென அதிர்ச்சி... வியப்பு...

மங்கிய தமது கண்களை நம்ப முடியாமல் துடைத்துத் துடைத்துப் பார்த்தனர்...

என்ன ஆச்சரியம், புகையாகத் தெரிந்த பகுதி மலையுச்சி போலத் தெரிந்தது. அதிலிருந்து புகைவது போலவும் இருந்தது. அதனால் என்ன வென்று ஊகிக்க முடியவில்லை.

முதன்முதல் பூமியைப் பார்க்கும் குழந்தையைப்போல அதனையே பார்த்தவாறு இமைகளை மூட மறந்திருந்தனர்.

பார்த்துக்கொண்டிருந்தவர்களின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை... இதுவரை அனுபவித்த துன்பங்களை மறந்து, தாக்கத் தொடங்கிய வெப்பத்தையும் மறந்து இயந்திரக் கூட்டின்மேல் அமர்ந்துகொண்டனர்...

இவர்களது மன வேகத்தைப்போல, காற்றின் வேகத்தால் வள்ளம் வேகமாக வடமேற்கு திசையை நோக்கியே போய்க் கொண்டிருந்தது.

அரை மணித்தியாலத்தின் பின்னர் மலை என்பது உறுதியான தால், தமக்கு நம்பிக்கை தரக்கூடிய அடையாளமாகக் கருதினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிது நேரத்தால் மலையின் பாதிக்குமேல் பார்க்கக் கூடியதாக இருந்தது...

கண் மூடித் திறந்தால் தவறவிட்டிடுவோமோ என்ற எண்ணத்தில் முடிந்தவரை மூடாதிருக்க முயன்றனர்...

நேரம் செல்லச் செல்ல மலையடிவாரத்தை சூழ்ந்துள்ள மரங்கள் தெரிந்தன...

அந்தப் பகுதி பச்சைப் பசேலெனத் தெரிந்தது...

அமர்ந்திருந்தவர்கள் எழுந்துகொண்டனர் புதுவாழ்வு கிடைத்ததைப்போல...

மரங்களோடு சேர்ந்து வெண்மணல் கரையும் தெரிந்தது...

கடவுளே! என்றழைத்து மனதார நன்றி கூறிய அவர்களது உடலும் உள்ளமும் அக்களிப்பால் துள்ளியது...

ஆற்றில் தவறி விழுந்தவன் கையில் மிதந்துவந்த மரக்கொப்பு கிடைத்த மகிழ்ச்சியை இவர்களில் காணக்கூடியதாக இருந்தது.

தாங்கள் எப்படியும் காப்பாற்றப்படுவோமென்ற நம்பிக்கை உதயமாகி, உறவுகளை சந்திக்கப்போகும் நாள் தூரத்திலில்லை என்று மனதுக்குள் மகிழ்ந்தனர்.

கிட்டத்தட்ட ஒரு மணித்தியாலத்தின் பின்னர் கடற்கரையைத் தெளிவாகப் பார்க்கக் கூடியதாக இருந்தது.

அந்தப் பகுதி விரிந்த குடாவைப்போலத் தெரிந்ததால் எல்வாட்டர் நீரோட்டம் பற்றிக் கூறியது அவர்கள் நினைவில் தோன்ற, அவரது அனுபவத்தை மாறிமாறிப் புகழ்ந்தனர்.

"வள்ளம் இப்பிடியே போனா குடாவுக்குள்ளதான் போகும் போல இருக்கு."

"அப்பிடிப் போகது தம்பி!. இவ்வளவு ஆழமான கடலா இருக்கிறதால, காற்றும் வேகமா வீசுறதால கரையில மடக்கடி பெரிசா இருக்கும். வீவலின்ர இழுவ கூடுதலா இருக்கும் அதனால வள்ளத்த கரைக்குக் கொண்டுபோக விடாது எண்டு நினைக்கிறன்."

எல்வாட்டர் கூறியவற்றை மற்றவர்களால் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தாலும், போகிறவரை போகட்டும் நெருங்கி வரேக்க யோசிப்போம் என்று எண்ணத்துடன், எப்போது வள்ளம் கரையை நெருங்கும் என்ற எதிர்பார்ப்புடன் காத்திருந்தனர்.

வள்ளம் கரையை நெருங்க நெருங்க ஆவல் மேலீட்டால் உடல் உரம் பெற்றதுபோன்ற உணர்வு...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதையும் எதிர்கொள்ளக்கூடிய துணிவு...

இதுவரை கடலில் தென்பட்ட அமைதி நிலை மாறி காற்றின் வேகத்துக்கு ஈடாக அலையும் எழுகின்றமை, கடலின் ஆழம் குறைந்து வருவதை உணர்த்திட, கரையை நெருங்கவுள்ளதை நினைத்தபோது தேனாக இனித்தது.

கண்பார்வையின் மங்கலால் துல்லியமாகத் தூரத்தை தீர்மானிக்க முடியவில்லை. கடலின் ஆழத்தை அறிவதற்காக கடையால் பக்கத்தால் நங்கூரத்தை கடலில் இறக்கினர்.

அது இறங்கிக்கொண்டே சென்றது. நங்கூரக் கயிற்றுடன் முடியப் பட்ட வலைகளைக்கூட இறங்கியும் நங்கூரம் தரையைத் தொட்டதாகத் தெரியவில்லை.

அரைவாசி வரை நங்கூரக் கயிற்றை இழுத்து வள்ளத்தில் கட்டி விட்டு அப்படியே தொடர்ந்தனர்.

நீண்ட நேரமாக அவதானித்து வந்த உயர்ந்த மலையைக் கடந்து வள்ளம் சென்றுகொண்டிருப்பதால், தாங்கள் எதிர்பார்த்துக் காத்திருந்த கரையைவிட்டு விலகிச் செல்வதைபோலிருக்க கலக்கம் உண்டானது.

காற்றின் வேகமும் குறைந்து செல்வதால், கடலில் வடு நீர் ஓடுவதாக இருக்கலாம் எனப் பேசிக்கொண்டனர்.

கடல் வடுவான நேரம் காற்று குறைவாக வீசுவது இயற்கை யாகையால், காற்றுக்கேற்பவே வள்ளம் முன்னேறி சென்றுகொண்டி ருக்கிறது என்ற நினைப்பில் கரையோடு ஒப்பிட்டுப் பார்க்கையில்தான் வள்ளத்தின் வேகத்தைக் உணரமுடிந்தது.

"இஞ்சினால கூட இப்பிடி ஓட ஏலாதே!"

"காத்து குறைஞ்சே இப்படி போகுதெண்டா, காத்து கடுமையா வீசேக்க...!"

"இவ்வளவு வேகமா வள்ளம் வந்திருக்கெண்டா, நாங்க நிக்கிற இடம் எவ்வளவு தூரமா இருக்கும்...!"

ஆச்சரியத்தால் தேகம் புல்லரித்தது...

இன்னமும் கரையின் தூரத்தை தீர்மானிக்க முடியாமையால் வள்ளத்தை அதன் திசையிலேயே செல்லவிட்டனர், எப்படியும் கரையை அடைவோமென்ற நம்பிக்கையில்...

நம்பிக்கைக்கு உயிரூட்டுவதாய், நங்கூரம் கடலடித் தரையைக் கௌவிப் பிடித்ததைப்போல வள்ளம் உலுப்பியது.

மகிழ்வுடன் நங்கூரத்தை மேலும் அரைவாசிக் கயிறு வரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழுத்துக் கட்டிவிட்டு அவதானமாகப் பார்த்தனர்.

வள்ளம் கரையை நெருங்கச் செல்வதை சந்தேகத்துக்கு இடமின்றி ஏற்றுக் கொண்டதால் பாயின் உயரத்தை சற்றுக் குறைத்தனர், வள்ளத்தின் வேகத்தைக் கட்டுப்படுத்துவதற்காக.

கரையைத்தேடி வள்ளம் குறுக்காகச் செல்லாமல் காற்றுக்கேற்ப நேராகச் சென்றிடினும், குடாப் பகுதியின் வளைவு காரணமாக கரை முன்னோக்கி அமைந்திருப்பதால் இவர்களுக்கு சாதகமான நிலையையே தோற்றுவித்தது.

கரை மிகவும் அண்மையில் இருப்பதுபோலத் தெரிந்தது.

கடலில் நங்கூரம் இழுபட்டு வருவது பாதிப்பை ஏற்படுத்தலாம் எனக் கருதியதால் நங்கூரக் கயிற்றை இழுத்து நங்கூரத்தை உள்ளே வைத்தனர்.

நேரமாக மேலும் கரையை நெருங்கிச் சென்றது வள்ளம்...

கண்கள் மங்கிய நிலையிலும் கரையின் தூரத்தை அவர்களால் ஓரளவு தீர்மானிக்கக் கூடியதாக இருந்தது...

கரையோரம் மிருகங்களின் நடமாட்டத்தை இனங்காணும் அளவுக்கு கரையை நெருங்கிவிட்டது வள்ளம்.

"நல்லாக் கிட்ட வந்திற்றோம் போலயிருக்கு... கரையைப் பாருங்க பக்கத்திலதான் இருக்கு. குதித்து நீந்திப் போவோமா?"

நவின்சந்திராவின் கேள்விக்கு உறுதியான பதில் மற்றவர்களிடம் இல்லை. ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்... மேலும் கரைக்குச் சென்றபின் இறங்குவோம் என்ற எண்ணத்தையே அவர்களது பார்வை உணர்த்தியது.

நவின்சந்திராவுக்கோ பொறுமையில்லை.

"எல்வாட்டர் அண்ணே! காற்று எதிரா இல்லாதபடியால வடிவா நீந்திப் போகலாம். எல்லாரும் வாங்க இறங்குவோம்."

"கரை தூரம் மாதிரியும் தெரியுது தம்பி. சரியாத் தெரியயில்ல. அதுக்கிடையில நீங்க இறங்கையா போறீங்க."

"ஓமண்ணே அப்படித்தான் யோசிக்கிறன்."

"நானும் உங்களோட வாறனண்ணே!"

இராசகுலம் கூற, மற்றவர்கள் கரையையே பார்த்தவாறு நின்றனர்.

"அப்ப, நாங்க இறங்கட்டாண்ணே!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“இறங்கப்போறண்டா இறங்குங்க. நாங்க கொஞ்ச தூரம் பார்த்து, கிட்ட வந்ததும் இறங்கிறம்.”

வள்ளத்திற்குள் கயிற்றுடன் கிடந்த ‘போயா’க்களில் இரண்டை எடுத்து நவின்சந்திராவும் இராசகுலமும் வயிற்றில் கட்டிக் கொண்டனர்.

வெற்று பரல்களில் ஒவ்வொன்றை எடுத்துக்கொண்டனர்.

நவின்சந்திரா காற்சட்டை அணிந்திருந்ததால் சாரத்தை கழுத்தில் சுற்றினார். இராசகுலத்தின் உள்ளாடை கிழிந்துவிட்டதால் சாரத்துடன் இறங்கத் தயாரானார்.

இருவரும் ஒருமித்துக் கடலில் குதித்து, பரலை ஒற்றைக் கையில் பிடித்தவாறு கரையை நோக்கி நீந்தத் தொடங்கினர்.

வள்ளம் மூவருடனும் முன்னோக்கிச் சென்றது. அவர்கள் நீந்திச் செல்வதைப் பார்க்க இவர்களுக்கும் உத்வேகம் பிறந்தாலும், இன்னமும் வள்ளம் கரைக்குப் போகட்டும் என்ற முடிவில் மாற்றமிருக்கவில்லை.

இருவரும் நீந்துகிறார்கள் என்று சொல்வதைவிட கடலின் மடக்கடி கரை நோக்கித் தள்ளிச் செல்கிறது என்றே சொல்லாம்...

நவின்சந்திரா வைத்திருந்த பரல் அவர் கையைவிட்டு தவறி விட்டது. வயிற்றில் கட்டிருக்கும் போயா நீரில் அமிழ விடாது என்பதால் தொடர்ந்து நீந்த, கடலின் மடக்கடி தள்ள இருவரும் விரைவாய் கரையைத் தொட்டார்கள்.

குறுகிய நேரத்தில் இவர்கள் கரையை அடைந்தாலும், பலவீனத்தால் உண்டான களைப்பால் சிறிது நேரம்வரை மடக்கடி ஒதுக்கி தூக்கித் தள்ளிய கரை மணலில் குப்புற படுத்துக்கொண்டனர்...

களைப்பு நீங்கித் தன்னைச் சுதாரித்துக்கொண்ட நவின்சந்திரா, எழுந்து ‘போயா’க்களை அவிழ்த்துவிட்டு இராசகுலத்திடம் வந்தார்.

குப்புறக் கிடந்தவாறு வருபவரை நிமிர்ந்து பார்த்தான் இராசகுலம்.

“எழும்பனடா...!”

“சாறம் கடலோட போயிற்றண்ணே!”

அப்போதுதான் அவதானித்த நவின்சந்திரா, தான் உள்ளாடையாக காற்சட்டை அணிந்திருந்தால் தனது சாரத்தைக் கழற்றிக் கொடுக்க, அதை அணிந்துகொண்டு கட்டியிருந்த ‘போயா’க்களை அவிழ்த்தான்.

“அவங்களும் வந்திருக்கலாம். பாத்தியா எவ்வளவு கெதியா வந்திட்டோம். அங்க பார், வள்ளம் போய்க்கொண்டேயிருக்கு...”

அதைப் பார்த்து இருவரும் வேதனையடைந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்மால் இனிமேல் எதுவும் செய்யமுடியாதென்ற நினைப்பில் துளிர்விட்ட சோகத்துடன் தரைப் பகுதியை நோக்கித் திரும்பினர்.

கடலோரமிருந்து நூறு அடிகள் வரை அகலமாக வெண்மணல் மற்றும் மிகச் சிறிய வகை ஊரிகள் கலவையாகக் கிடந்தன...

நீண்டு காணப்பட்ட கடற்கரையோரத்தில் சற்றுத் தூரத்தில் மிருகங்கள் கூட்ட மாக நின்றன. என்ன மிருகங்களென்பதை இவர்களால் அடையாளம் காணமுடியவில்லை.

வெண்மணலுக்கு அப்பால் புற்களும், பற்றைகளும், செடி, கொடிகளுமாக அடர்ந்து தெரிந்தன.

"ராசகுலம் நாங்க வந்திருக்கிற இடத்தப் பாரடா. கடலில தப்பி காடு - கரம்பையில மாட்டுப்பட்டிருக்கிறோம்."

"அதத்தானண்ணே நானும் யோசிக்கிறன்."

"நாங்க என்னதான் செய்யிறது! ஏதோ கடவுள் விட்ட வழி... எதண்டாலும் ஏற்றுக்கொள்ளத்தானே வேணும்.."

"இண்டைக்கு மடுமாதாவட திருநாளெல்லா? அவ கைவிட மாட்டாண்ணே!"

"உண்மைதான் ஏதோ நல்ல வழி கிடைக்கும் எண்டு நம்புவோம்."

காற்றில் சாதாரண வேகம் இருந்தபோதும், வெண்மணற் தரையிலிருந்து மேலெழுந்த அனலின் அகோரத்தால் உடலின் ஈரம் விரைந்து காய்ந்தது.

தேகம் காய்ந்ததால் உடலில் படிந்த உப்பினது அழற்சியாலும், அகோரத்தின் தாக்கத்தாலும், பசியினாலும் உண்டான உடற்சோர்வும் இருவரையும் பெரிதும் தாக்கியது.

தலை சுற்றுவதுபோல இருந்ததால் சிறிது நேரம் அங்கேயே தரித்து நின்றனர்.

"பசிக்குதண்ணே! வாங்களன் போய் வீடுகள் ஏதும் இருக்கா எண்டு பாப்போம்."

இவர்களின் நிழல் தரையில் சாய்வாக விழுந்து, நேரம் மதியத்தை தாண்டியதை உணர்த்திட ஒருவருக்கொருவர் ஆதரவாகக் கைகளைக் கோர்த்தவாறு நடந்தனர்.

கால் பாதங்கள் மென்மையடைந்திருந்ததால் நடக்கும்போது ஊரிகள் குத்தி வலியை ஏற்படுத்தியது. தாங்கிக்கொண்டு முகப்பில் வேலியைப்போல மறைத்திருந்த பற்றைகள் வரை சென்று விலக்கிப் பார்த்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணுக்கெட்டிய தூரம் புற்தரையாகவும் இடையிடையே பற்றை தொகுதிகளும், உயரமற்ற மரங்களும் தெரிந்தன. குடிமனைகள் காணப்படவில்லை.

குறுக்கிட்ட பற்றையைக் கடந்து புல்தரைக்குச் சென்றனர்.

சற்றுத் தூரத்தில் கூட்டம், கூட்டாக மான்கள் அலைவதைக் கண்டு தமது நிலையையும் மறந்து மகிழ்ந்தனர்...

சில வினாடிகளில் அதைவிடுத்துச் சுற்றிப் பார்த்த கண்கள், அண்மையில் ஒரு மனிதன் செம்மறி ஆடுகள் மேய்த்துக்கொண்டு நிற்பதைக் கண்டன...

கடவுளைக் கண்ட மகிழ்ச்சி...

அவனை நோக்கிச் சென்றனர்...

இவர்கள் வரவை உணர்ந்தோ என்னவோ அவன் தரித்து நின்றான்.

சீன நாட்டவரின் சாயல்போன்று காணப்பட்ட அந்த மனிதனை நெருங்கிச் சென்றனர்.

“பசிக்குதுங்க எங்கையும் சாப்பாடு எடுக்கலாமாங்க?”

இவர்களை அதிசயமாய்ப் பார்த்தவாறு நின்றான்...

அவனுக்குக் காது கேட்காதோ எனக் கருதிய நவின்சந்திரா, வயிற்றைத் தொட்டுக்காட்டி சாப்பிடுவதுபோல கைகளால் சைகை செய்தார்.

அதைக்கண்ட அவன், சற்று உரத்த தொனியில் ஏதோ கூறினான்.

இவர்களுக்குப் பயம் ஏற்பட்டது. தன்னைக் கேலி செய்வதாக நினைத்து, தங்களை ஏசுவதாகக் கருதி, பின்னோக்கிச் சென்றனர்.

இவர்கள் செல்வதை பார்த்துவிட்டு, ஏதோ கூறினான்...

புரியாமையால் இருவரும் ஒருவரையொருவர் பார்த்தனர்.

இவர்களது தடுமாற்றத்தை சிறிது நேரம் பார்த்துவிட்டு, ஏதோ நினைத்துக்கொண்டவனாக தன்னைத் தொடரும்படி சைகை செய்தவாறு நடந்தான்.

இவனது அழைப்புக்கு காரணம் ஏதும் இருக்கலாம் எனக் கருதி, அவனைத் தொடர்ந்தனர்.

பற்றையின் முன்னால் நின்ற அவன், அவ்விடத்தில் குவியலாய் நின்ற நாகதாளிச் செடியைக் காண்பித்தான்.

அதனையே பார்த்தவாறு நின்றனர், என்ன சொல்கிறான் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரியாமையால்.

அதுகண்டு, குவியலை நெருங்கச் சென்று அதன் பழத்தை தொட்டு, வாயைக் காண்பித்து சைகை செய்தபோதுதான் இவர்களுக்குப் புரிந்தது.

புரிந்ததன் அடையாளமாகத் தலையசைத்தனர்...

பக்கத்தில் 'காக்காய்' மரமும் நின்றது. அதனிலும் பழங்கள் நிறைந்து கிடந்தன. அதையும் காண்பித்த பின்னர்தான் அவன் முகத்தில் சிரிப்பைக் கண்டனர்...

இவன் செவிடு அல்ல மொழி விளங்கவில்லை என்பது இப்போது புரிந்தது. அவனை மனதுக்குள் வாழ்த்தினர்...

சற்றுத் தள்ளிச்சென்று நின்றுகொண்டான், இவர்கள் செய்வதை ஆவலாய்ப் பார்த்தவாறு.

'காய்ந்த மாடு கம்பில விழுந்த' மாதிரி இருந்தது இருவரதும் நிலை...

நாகதாளிப் பழத்தின் மேற்பக்கம் முள்ளுகள் இருப்பதையோ, பழத்துக்குள்ளே குருசு வடிவிலான முள்ளு இருக்கும் என்பதையோ, அந்த முள்ளுக் தொண்டையில் குத்தினால் உயிராபத்தை ஏற்படுத்தக் கூடும் என்பதையோ கருத்திற்கொள்ளாதவர்போல, செந்நிறமான அந்தப் பழத்தை ஆவலாய்ப் பிடுங்கி, பிய்த்தபோது குருசு முள்ளின் நினைவு வந்திருக்க வேண்டும். எப்படியோ அதைத் தவிர்த்து உண்டனர்.

கறுத்த நிறத்திலான காக்காய்ப் பழங்களையும் ஆய்ந்து ஆவலாய்ச் சாப்பிட்டனர். இரண்டுமே அவர்களின் அப்போதைய தேவைக்கு நிறை உணவாக இருந்தது.

பதினெட்டாவது நாள் உண்ணும் உணவல்லா?

சாப்பிட்டுக்கொண்டிருக்கையில் நெஞ்சுக்குள்ளே அடைப் பதைப்போல இருந்ததால், குடிப்பதற்கு நீர் எனச் சைகையால் கேட்க, புரிந்து கொண்டவனாய் இவர்கள் வந்ததற்கு எதிர்ப்பக்கத்தைச் சுட்டிக் காட்டியதும் அங்கே சென்றனர்.

ஒத்தையடிப் பாதை குறுக்கிட்டது... அதற்குப் பக்கத்தில் வாய்க்கால் போன்று நீரோடி தெரிந்தது.

தாவிச்சென்றனர்...

நீரோடியில் அரி நீராக ஓடிக்கொண்டிருந்ததால் அதற்குக் குறுக்கே கால்களை வைத்து மறித்து, அந்நீரை கோலிக் குடித்து உடனடித் தேவையை நிறைவேற்றிக்கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளர்ந்தெழுந்த பசி சிறிது தணிந்ததும் தம்முடன் கூடவே வந்து இறங்காமல் சென்ற மூவரினதும் நினைவு வந்தது. எப்படியும் இறங்கி யிருக்கவேண்டு மென்ற கருதலில் அங்கே நின்றவாறே கரையைப் பார்த்தனர்.

கண்பார்வைக்கு எட்டிய தூரத்துக்கு ஆள் நடமாட்டம் இல்லை. கரைக்கு அண்மையில் வள்ளமும் இல்லை. அகன்று திசைமாறிச் செல்வது போல் தெரிந்ததால் இதயம் வேகமாக துடித்தது...

"எங்கையும் இறங்கினாங்களோ அல்லாட்டி போய்க்கொண்டு தான் இருக்கிறார்களோ? கடவுளே! அவங்களுக்கு ஏதும் பிரச்சினை ஏற்படக்கூடாது."


இருவரும் ஒருமித்த வேண்டுதலோடு திரும்பினர்... சற்றுமுன் உதவி செய்தவன் ஆடுகள் மேய்வதைக் கண்காணித்தவாறு நின்றான்.

அவனுக்கு மொழி புரியாது என்பதால் மேற்கொண்டு எந்த உதவியையும் எதிர்பார்க்காமல் ஒற்றையடிப் பாதையின் முகப்பில் இருந்த மண்பிட்டியில் அமர்ந்து கொண்டனர்.

அந்த ஒற்றையடிப் பாதை புல், பூண்டுகளால் மூடப்படாமல் வெள்ளை மணலாக இருப்பதால், ஆட்கள் தொடராகப் பயன்படுத்து கிறார்கள் என்பது புரிந்தது...

தங்களது முடிவு சரியானது என்பதை அரை மணி நேரத்துக் குள்ளாக உணர்ந்துகொள்ள முடிந்தது...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 12

வானில் விடிவெள்ளி வருவதைப் போல, அந்த ஒற்றையடிப் பாதையால் ஒரு உருவம் வருவது தெரிந்தது...

சிறிது நேரத்தால் தனியனாய் வந்து கொண்டிருந்த மனிதனை தெளிவற்ற கண்களாயினும் பார்த்துணரக்கூடியதாக இருந்தது.

மேலும் நெருங்குகையில் நீளக் காற்சட்டையும் சேட்டும் அணிந்திருப்பது தெரிந்தது.

வருபவருக்கும் தாங்கள் சொல்லுவது புரியுமோ என்ற அச்சம்... அந்தக் கணம், தாங்கள் ஒழுங்காகக் கல்வி கற்காமையின் தாக்கம் முள்ளாக இருவர் இதயத்தையும் குத்திட, ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்...

நடந்து வந்தவர் அண்மையில் வந்தார். கடவுள் அனுப்பியவாரக அவரை நினைக்கத் தோன்றியதால் எழுந்து கைகளைக் கட்டியவாறு நின்றனர்...

இவர்களது கோலம் அவரைப் பார்க்கத் தூண்டியிருக்க வேண்டும். இவர்களையே பார்த்தவாறு முன்னால் வந்தார்...

"ஐயா பசிக்குது...!"

வார்த்தையாலும் செய்கையாலும் செய்தனர்.

அதுகண்டு தரித்து நின்றார்...

அவருக்கு விளங்கியிருக்கவேண்டும் என்பதை, முகத்தில் காணப் பட்ட கனிவு உணர்த்தியது...

மீண்டும் மாறிமாறிப் பார்த்தார்.

"இஞ்சின் பழுதாப்போய் வள்ளத்தில அடைஞ்சு வந்தனாங்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனக்க நாளாச் சாப்பிடயில்லையுங்க...”

அவரிடமிருந்து எந்த வார்த்தையும் வரவில்லையாயினும் உள்ளத்தில் உண்டான மாற்றத்தை முகமும், தலையசைப்பும் வெளிப் படுத்திட உள்ளத்தில் மகிழ்ச்சி...

‘தங்களோடு கூடவே வந்த மூன்று பேர் வள்ளத்திலே தங்களைக் கடந்து போனதால காணவில்லை’ என்று நவின்சந்திரா கூறியதும், தலையசைத்தவாறு கடலைப் பார்த்தார்.

இவர்கள் கூறியதை அவர் விளங்கிக் கொண்டுள்ளார் என்பதை வெளிப்டுத்தியது.

சிறிது நேரம் மௌனமாய் நின்ற அவர், சைகையால் கூப்பிட்ட வாறு தான் வந்த ஒத்தையடிப் பாதையால் அழைத்துச் சென்றார்.

உள்ளூர உருவான மகிழ்வில் அவரைப் பின்தொடர்ந்தனர்.

ஒரு மைல் தூரம் வரை சென்றதும் அங்கு சில குடிசைகள் காணப் பட்டன.

இருவரினது மகிழ்ச்சிக்கும் அளவே இல்லை...

புதியவர்களைக் கண்டதும் குடிசை வாசிகள் சிலர் வெளியே வந்தனர். அவர்களிடம் ஏதோ கூறுவதைப் பார்த்ததும் தங்களைப் பற்றித்தான் சொல்கிறார் என நினைத்துக்கொண்டனர்.

அடுத்த கணம் பலர் கூடிவந்து இருவரையும் சூழ்ந்து கொண்டு ஆச்சரியமாகப் பார்க்க, இவர்களும் உச்ச ஆச்சரியத்தில் அவர்களைப் பார்த்தனர்.

சிறுவர் முதல் பெரியவர் வரை ஆண்களும், பெண்களும் வித்தியா சமான உடைகள் உடுத்தியிருந்தனர்.

ஆண்களில் சிலர், ஆங்கிலேயர் கால இந்திய பொலிஸ்காரரின் காற்சட்டைக்கு ஒத்ததான முன்பக்க மடிப்புள்ள அகலமான காற்சட்டை யும், சிலர் வேஸ்டியினால் **‘தாறுபாய்ச்சி’** யும் உடுத்தியிருந்திருந்தனர்.

பெண்கள், நான்கு முள வேட்டியை நினைவிற் கொள்ளும் வகையில் பல நிறங்களிலான துணியின் ஒரு பக்க மேல் நுணியை, இடது பக்க விலாப் பகுதியில் சொருகி, அதைக்கொண்டு உடலின் முன்பக்கத்தை மறைத்தவாறு சுற்றி, பின்பக்கத்தால் எடுத்து இடது பக்க விலாவின் துணி முனையைச் சுற்றியெடுத்து, மார்பை மறைத்தவாறு, (தாவணி போடுவதைப்போல) வலது பக்க தோளை மூடி பின்னால் விட்டிருந்தனர். சிலர் சேலையினால் தாறுபாய்ச்சியும் உடுத்தியிருந்தனர்.

நாட்டுக்கூத்தில் வருகின்ற ஆண் பாத்திரங்கள் தாறுபாய்ச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடுத்தியிருப்பதை ஊரில் பார்த்துள்ளமை இருவரதும் நினைவுகளில்...

சிறிது நேரம்வரை இருவரையும் பார்ப்பதும், தமக்குள்ளே கதைப்பதுமாக நின்றனர்.

இறுக்கமான காற்சட்டையோடு மேலாடையின்றி நிற்பது நவின்சந்திராவுக்கு சங்கோஷமாக இருந்தது. எவரும் சாரம் உடுத்தியிராமையால் இராசகுலத்துக்கும் அவ்வாறே இருந்தது.

மேலும் சிறிது நேரம் நின்றுவிட்டு கலைந்து செல்லத் தொடங்கினர். இவர்கள் கதைப்பதில் எவற்றையேனும் இருவராலும் புரிந்து கொள்ள முடியவில்லை.

குடியானவர்கள் கலைந்து சென்ற சிறிது நேரத்தால், மர நிழலின் கீழ் புற்பாய் விரிக்கப்பட்டு அதில் இருவரையும் இருக்குமாறு சைகை செய்து, தண்ணீர் கலந்த சோற்றில் மிளகாய்த்தூள் தூவப்பட்டு மண் சட்டியில் கொடுக்கப்பட்டது.

பல நாட்களுக்குப் பின்னர் சோற்றைக் கண்ட ஆவலில் கோலிச் சாப்பிட முனைந்தும் விழுங்க முடியாமல் சொற்பமாக மென்று விழுங்கி, அந்தத் தண்ணீரைக் குடித்தபோது தேவாமிர்தமாக இருந்தது...

சிறிது நேரம்வரை இவர்கள் கூடவே இருந்த அந்த மனிதர், அந்த இடத்திலேயே படுக்குமாறு சைகை செய்துவிட்டு சென்றார்.

'இவருக்கு தமிழ் விளங்குது ஆனா, பேசிறாரில்லை' இருவரினதும் கண்டுபிடிப்பு.

அவர் செல்வதையே பார்த்துக்கொண்டு நின்ற இருவரும், தாங்கள் வணங்கும் தெய்வமே இவர் வடிவில் வந்திருப்பதாக பேசிக் கொண்டனர்.

இத்தனை நாளும் அனுபவித்த துன்பங்களுக்கு இப்போது ஓரளவேனும் விடிவு கிடைத்ததுள்ளது. மொழி தெரியாது விட்டாலும் அவர் செய்த உதவி பெரிது என்பதே அவர்களின் எண்ணமாக இருந்தது.

அடுத்து என்ன செய்யலாமென்ற சிந்தனைக்கு இடையில், தங்களோடு கூடவே வந்த மூவர் பற்றிய நினைவு இருவருக்கும் நெருடலாகவே இருந்தது.

அவர்களைப் பற்றிய சிந்தனையும் பேச்சுமாகவே இருந்தனர்...

'அவர்களுக்கு ஏதும் நடந்திருந்தா நாங்க வீட்டுக்குப் போய் என்ன பதிலைச் சொல்வது?' என்ற எண்ணம், இதயத்தை சம்மட்டி கொண்டு தாக்கியதைப்போல இருந்தது.

சிறிது நேரத்தால் துவிச்சக்கரவண்டியில் வந்து நின்ற ஒருவன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைகையால் அழைத்ததும் இருவரும் எழுந்தனர். நவின்சந்திராவை துவிச்சக்கரவண்டியில் ஏறுமாறு சைகை செய்து, ஏற்றிக்கொண்டு, புற்தரவைக்குக் குறுக்காக இருந்த ஒற்றையடிப் பாதையால் சென்றான்...

இரண்டு மைல் தூரம் வரை சென்றிருப்பான்.

அவன் தரித்த இடத்தில் ஜேக்கப்பும், எல்வாட்டரும், யேசுராசாவும் நிற்கக் கண்டதும் புதையல் கிடைத்த மகிழ்ச்சியில் நவின்சந்திரா.

நீண்டநாள் பிரிந்திருந்தவர்போல ஓடிச்சென்று கட்டியணைக்க எல்லோர் விழிகளிலும் விழிநீர்...

சிறிது நேரத்தின் பின்னர் வழமைக்கு வந்தனர்.

'சாப்பிட்டீங்களா?' என்று கேட்கும் மரபு தெரிந்திருந்தும் தனது நிலையோடு ஒப்பிட்டுப் பார்த்து, கேட்காமலே விட்டுவிட்டார்...

"நாங்க இறங்கின பின்னால நீங்க என்னண்டு...!"

"அது பெரிய கதையண்ணே..."

இளநகை உதிர்த்துவிட்டு, நிகழ்ந்தவைகளை விபரித்தார் யேசுராசா...

இருவரும் இறங்கிய பின்னரும் இறங்கத் தயங்கிய மூவரும் தொடர்ந்து வள்ளத்தைச் செலுத்திக் கொண்டிருந்தனர்...

வள்ளம் முன்னரைவிட கரையை நெருங்குவது போலிருக்க தாங்கள் எடுத்த முடிவு சரியானதுதான் என்ற மகிழ்ச்சி.

நவின்சந்திராவும் இராசகுலமும் என்ன ஆனார்களோ தெரியாது. அவர்களுக்கு முன்னரே கரையை அடைந்துவிடலாமென்ற கணிப்பு அவர்களிடம்.

ஆழ்கடலை தன்னகத்தேகொண்ட குடாப்பகுதியானது எத்தகை நிலையைக் கொண்டிருக்கும் என்பதை நன்குணர்ந்த எல்வாட்டரால்கூட தீர்க்கமான முடிவை எடுக்க முடியவில்லை.

நேரமாக, நேரமாக யோசனை உச்சத்தைத் தொட்டது...

வள்ளம் கரையை நோக்கி நெருங்கிச் செல்வதைப்போல் தோன்றினாலும் குடாவாக இருப்பதால் அது நிஜமில்லை, மாயை என்பதை உணர்ந்தபோது இதயம் படபடத்தது...

தவறு நடந்துவிட்டது... யோசிக்க மேலும் நேரமில்லை. வேறு தெரிவுமில்லை என்பதால், கடலில் பாய்வோமென யேசுராசா கேட்டபோது எல்வாட்டர் சம்மதிக்கவே இல்லை. வயதில் மூத்தவரான அவரின் உடல் பலவீனத்தால் அப் பகுதியின் சூழலை நினைத்தபோது உண்டான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயம் அவரை வெகுவாக ஆட்கொண்டது.

தானாவது பாய்வோமென முடிவெடுத்த யேசுராசா, போயாவை வயிற்றில் கட்டத் தொடங்கியதும் ஜேக்கப் இணைந்து கொண்டார்...

அதைப் பார்த்துக்கொண்டிருந்த எல்வாட்டர் விருப்பற்ற நிலையிலும் இறங்கத் தயாரானார்.

மூவரும் இரண்டு போயாக்கள் வீதம் வயிற்றில் கட்டியதும் யேசுராசா கடலில் குதிக்க, தொடர்ந்து ஜேக்கப்பும் பின்னர் எல்வாட்டரும் குதித்தனர்.

கணிசமான உயரத்துக்கு எழுந்த கடல் நீரின் மடக்கடி ஆட்களை இரண்டு மூன்று தடவைகள் தூக்கித் தள்ளியபோதும் எதிர்பார்த்த அளவில் கரையை நெருங்கத் தள்ளவில்லை.

அதை உணர்ந்து, உடலில் எச்சமாக இருக்கும் முழு வலிமை, துணிவு, நம்பிக்கையை ஒன்றுசேர்த்து கைகளால் வலித்து, கால்களால் உதைந்து முன்னோக்கி நீந்திக் கொடுக்க, மடக்கடி முன்னோக்கித் தள்ளி உதவியது.

கரையை நெருங்குகையில் காற்றும் நீரோட்டமும் முரண்படாத நிலையால் முனைப்புப் பெற்ற மடக்கடி தூக்கி இலகுவாக கரையேற்றி விட்டது.

தொடர்ந்து வந்த மடக்கடி மேலும் கரைக்குத் தூக்கித் தள்ளியது.

கடலில் பாய்ந்த தாமதத்தின் வரிசைப்படியே கரையேற்றப் பட்டதால் மூவருக்கும் இடையில் இடைவெளிகள் இருந்தன.

களைப்பு மிகுதியாகத் தாக்க இதயத்தின் படபடப்பும், உடலின் துடிப்பும் அதிகமாக இருந்ததால் கரையேறிய இடத்திலிருந்து எழுந்து நிற்கமுடியாமல் இருந்தது.

சிறிது நேரத்தின் பின்னர் களைப்பு நீங்கி எழுந்த யேசுராசா, காற்றின் திசைக்கேற்ப கரையோரமாக மற்றவர்களைத் தேடிச் சென்றார். மங்கிச் செல்லும் கண்களினால் குறிப்பறிய முடியவில்லை.

சற்றுத் தூரம் சென்றபின் ஜேக்கப் கரையில் இருக்கக் கண்டார்.

இருவருமாக எல்வாட்டரைத் தேடி நடந்தனர்.

கரையேறி இருக்கலாமெனக் கருதிய இடம் நோக்கிச் செல்கையில் ஒரு உருவம் கரையோரத்தில் கிடப்பது போலத் தெரிந்தது.

அவராக இருக்கலாமென்ற கருதலில் ஓடிச் சென்றனர்.

எல்வாட்டர்தான் குப்புறக் கிடந்தார்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் கிடக்கும் விதத்தைக் கண்டதும் தேகம் படபடத்தது. இதயத் துடிப்பு வேகமானது...

உடலை நிமிர்த்தி மணல்வரை தூக்கிக் கிடத்தி, அசைத்தனர் எவ்வித சலனமும் இல்லை...

மூக்கைத் தொட்டுப் பார்த்தபோது சுவாசம் இருந்தது. மயக்க நிலையில் கிடந்தார் அவர்.

தண்ணீர் அதிகமாக குடித்திருக்கலாமெனக் கருதி, குப்புற படுக்கவைத்து வயிற்றின் பின் பக்கத்தை அழுத்தினர்.

நீர் வெளிவரவில்லை...

கடல் நீரைக் கைகளால் கோலியெடுத்து வந்து மாறிமாறி முகத்தில் தெளித்தனர். சில தடவைகள் அவ்வாறு செய்த பின்னர் திடுக்குற்றவராய் எழுந்தார்.

அவர் வழமைக்கு வரும்வரை அந்த இடத்திலேயே இருந்துவிட்டு கைத்தாங்கலாக அழைத்துவந்து மர நிழலின் கீழ் இருக்கையிலேயே அந்தக் குடியானவர் இவர்களைக் கண்டுள்ளார்...

இவற்றைக் கேட்டுக்கொண்டிருந்த நவின்சந்திராவுக்கு கோபம் அதிகமானது.

"நான் கேக்கேக்க வந்திருந்தா நீங்க இப்பிடிக் கஷ்டப்படத் தேவையில்லையே! உங்களுக்கு ஏதெண்டாலும் நடந்திருந்தா நாங்க வீட்டபோய் என்ன சொல்லுறது...?"

எதுவும் கூறாது குற்ற உணர்வில் தலை கவிழ்ந்து நின்றனர்.

"நல்லா அகல போனதால நீங்க செத்திருப்பீங்க. அல்லாட்டி எங்கோ தூரமாப் போய் என்ன ஆனீர்களோ எண்டெல்லாம் நாங்க நினைச்சுக்கொண்டிருக்கிறோம்."

"இப்ப அப்பிடி ஒண்டும் நடக்கயில்லைத்தானே!... அண்ணே! உங்கள அலை தூக்கின உயரத்தப் பார்த்து நீங்க செத்திருப்பீங்க எண்டெல்லா நாங்க நினைச்சோம்."

தலை கவிழ்ந்த நிலையில் யேசுராசா கூறியதும் கவலை விடை பெற்றதைப்போலச் சிரித்தனர்.

மேற்கொண்டு தாமதியாமல் வந்தவழியே மூவரையும் கூட்டிக் கொண்டு சாதாரண நடையில் குடிசைகளை அடைந்தனர்.

கூடவந்த குடியானவர், சட்டிகளில் தண்ணீர் கலந்த சாதத்தை எடுத்துவந்து கொடுத்து அவர்களை அருந்தும்படி சைகை செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவலாய் கோலி, வாய்க்குள் திணித்தபோதும் அவர்களால் உண்ண தொண்டை இடம்கொடுக்கவில்லை...

சொற்பமாக சோறு சாப்பிட்டு அதற்குள்ளிருந்த தண்ணீரைக் குடித்தனர்...

இருள் முற்றாக மூடிக்கொண்டது...

குடிசைகளிலிருந்து வெளித்தெரியும் ஒளிக் கதிர்களைத்தவிர வேறு வெளிச்சம் இருக்கவில்லை.

ஒரு மணித்தியாலம் வரை இருளாகவிருந்த பகுதி சந்திரனால் ஒளி பெற்றது.

ஐந்து சட்டிகளில் இரவு உணவை எடுத்து வந்திருந்தனர்.

எவரும் உணவு உண்ணும் நிலையிலில்லை. வயிற்றில் சிறிதளவு பசி இருந்தாலும் உண்ண விருப்பமற்றவர்களாகவே இருந்தனர். அதனால் இரண்டு சட்டிகளை மாத்திரம் பெற்றுக்கொண்டு ஏனையவற்றைத் திருப்பிக் கொடுத்தனர்.

எம்மவரின் பால்க் கஞ்சிபோல இருந்தது. சாப்பிட இலகுவாக இருந்ததால் கலந்து சாப்பிட்டனர்.

நேரம் அதிகரித்துச் செல்ல விழித்திருக்க முடியாமலிருந்ததால் அந்த வெளியில், காற்றின் தாலாட்டில் படுத்துக் கொண்டனர்...

பதினெட்டு நாட்களில் முடிவுற்ற குருஷேத்திரப் போரைப் போன்று அமைந்துவிட்டது இவர்கள் நிலை. குருஷேத்திரப் போரிலே பல்வகைப் பலங்கொண்ட கௌரவ சேனையை, ஆதரவு நாட்டுப் படைகளை எதிர்த்து நின்றனர் பாண்டவர்கள்.


இவர்களோ சீறிடும் காற்று, பொங்கியெழும் கடல், சுட்டெரிக்கும் வெயில், கொட்டும் மழை, சுழன்று வீசும் சூறாவளி, பட்டினி, தாகம் போன்ற இயற்கை எதிரிகளை எதிர்த்து நின்றனர்.

அங்கே தர்மம் வென்றது...

இங்கே நம்பிக்கையும் உறுதியும் வென்றது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 13

*1963* ஆடி மாதம் *03* ஆம் திகதி, புதன்கிழமை...

காலையில் உடல் அசதி நீங்கி, உறக்கம் கலைந்து எழுந்தனர்...

அருகாமை இருந்த குடிசைக்குச் சென்று கரி எடுத்து, பல்துலக்கி, நீர் பெற்று முகத்தையும் கழுவிக்கொண்டு, திரும்பவும் படுத்த இடத்தில் அமர்ந்துகொண்டனர்.

நேற்று இருவரையும் அழைத்து வந்த அந்த மனிதர் அந்நேரம் அவ்விடம் வந்தார்.

மொழி புரியாத மற்றும் முற்றிலும் வறிய மக்கள் வாழும் இட மாகத் தெரியும் இந்தக் கிராமத்தில் தொடர்ந்து தங்கியிருப்பதில் உள்ள சங்கடத்தை நினைத்துக்கொண்ட நவின்சந்திரா, அந்த மனிதரை நெருங்கி தாங்கள் வந்திருப்பதை பொலிசாருக்கு அறிவிக்குமாறு கூறினார்.

புரிந்துகொண்டதற்கு அடையாளமாக தலையை அசைத்த அவர், உடனேயே அங்கிருந்து சென்றார்.

தயக்கமற்ற மனிதநேய செயற்பாடுகளால் இவர்கள் உள்ளத்தில் நிறைந்துவிட்டார் அந்த மனிதர்...

அவர் சென்று ஒரு மணித்தியாலமாவது இருக்கலாம் பொலிஸ் ஜீப் வந்துதரித்தது.

ஐவரும் எழுந்து கொண்டனர்...

பொலிசாருடன் அந்த மனிதரும் இருந்தார். இவர்களோடு கூடவே வந்திருந்த சால்வை போட்ட, தலையில் வழுக்கை விழுந்த ஒருவர் இவர்களை சைகையால் அழைத்தார்.

அவரை நெருங்கினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வணக்கம்"

"வணக்கம் ஐயா!"

பொலிஸாருக்கு முன்னிலையில் அவர் தமிழில் கூறிய வணக்கத்திற்கு இவர்களும் பதில் கூறினர்.

"எங்க கடத்தல் சாமான்கள மறைச்சு வைச்சிருக்கிறீங்க?"

ஐவரினது இதயங்களும் திக்கென்றது... ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்... சிறிதும் தயக்கமில்லாமல், தங்களது நிலையையும் பாராமல் இடியாந்தரமாகக் கேட்ட அந்த வழுக்கையன் தமிழனாகத்தான் இருக்க வேண்டும் என நினைத்தனர்.

"ஐயா! நாங்க கடத்தல் செய்து வரயில்லயுங்க. தொழில் செய்ய வந்தனாங்க. இடையில இஞ்சின் பழுதாப்போயிற்று. அதால அடைஞ்சு இஞ்ச வந்து சேந்திற்றோமுங்க..."

"அப்பிடியெண்டா வள்ளம் எங்கே?"

"நாங்க கடலில பாஞ்சு நீந்திற்றோம். அது அப்பிடியே அடைஞ்சு போயிற்றுங்க."

"நீங்க இலங்கையரா? இந்தியரா?"

"இலங்கையர்."

"இலங்கையில எங்கே?"

"யாழ்ப்பாணம்."

"யாழ்ப்பாணம்..."

கூறியவாறு யோசித்தவர், இளநகையுடன் இவர்களைப் பார்த்தார்.

"யாழ்ப்பாணமா...! நீங்க அங்கயிருந்து பாஞ்சா வந்தனீங்க...?"

"இல்லையய்யா, முல்லைத்தீவிலதான் தங்கியிருந்து தொழில் செய்தனாங்க. அந்தக் கடலில இருந்துதான் அடைஞ்சு வந்தனாங்க"

"சரி, நீங்க இப்ப எந்த இடத்தில நிக்கிறீங்களெண்டு தெரியுமா?"

"தெரியாதையா..!"

"கடலால அறுநூற்றி ஐம்பது மைல் தூரத்தில உள்ள ஓரிசா..."

"ஓரிசாவா...?"

"கடலால அறுநூற்றி ஐம்பது மைலா? அப்பிடியெண்டா தரையால...!"

எல்லை கடந்த ஆச்சரியத்தில்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதாலதான் கேக்கிறன் நீங்க சொல்லுறத நம்பலாமா? எதென்றா லும் மறைக்காமச் சொல்லுங்க..."

"ஐயா! எங்களட கோலத்தைப் பார்த்தா தெரியயில்லையாங்க... சாப்பாட்டை மறந்து எத்தினையோ நாளாச்சு. நேற்றுத்தான் கொஞ்சமா சாப்பிட்டனாங்க. அதுமட்டும் வெறும் வயிறுதான்."

"நீங்க தொழில் செய்யேக்க இஞ்சின் பழுதாய்ப்போனது எண்டு சொல்லுறீங்களே! அது எத்தினையாம் திகதி?"

"போனமாசம் பதினாலாம் திகதியய்யா."

"அண்டைக்கே அடையத் தொடங்கீற்றிங்களா?"

"மூன்று நாளாக நங்கூரம் போட்டுக் கிடந்தனாங்க, ஆராவது உதவிக்கு வருவாங்கெண்டு. ஆனா, ஆருமே வரயில்ல. அதால அடைய விட்டனாங்க."

"இண்டைக்கு மூன்றாம் திகதி. இஞ்சின் பழுதாய்ப்போனது போனமாசம் பதினாலாம் திகதி. பதினெட்டு நாள் சாப்பிடாம இருந் திருக்கிறீங்ளெண்டத நம்பமுடியாம இருக்கு... சரி அங்க இருங்க..."

மர நிழலின் கீழ் அமர்ந்துகொண்டனர்.

கூறிவிட்டு பொலிசாரின் பக்கம் சென்ற மொழிபெயர்ப்பாளர், அவர்களோடு உரையாடுவது தெரிந்தது.

பொலிஸார் குறிப்பெடுத்துக் கொள்ளுவதைப் பார்க்கையில் தாங்கள் கூறியதை பொலிசாரிடம் சொல்லுகிறாரென ஊகித்தனர்.

ஐவரையும் சைகையால் கூப்பிட்டார் மொழிபெயர்ப்பாளர்.

"உங்கள் பெயரையும் வயதையும் சொல்லுங்க."

ஐந்துபேரும் தனித்தனியாக பெயரையும் வயதையும் கூற அதைப் பதிவு செய்வதற்கு மொழிபெயர்ப்பாளர் துணைசெய்தார்.

"ஐந்து பேரும் யாழ்ப்பாணம்தானே!"

"ஓமுங்க..."

கையொப்பம் பெறப்பட்டது.

"நீங்க சொன்னதெல்லாம் பதிஞ்சிருக்கு. இந்தப் பதிவுகள கலெக்ரரட்ட கொடுக்கவேணும். அவர்தான் என்ன செய்யவேண்டு மென்று முடிவெடுப்பார்... சரி நீங்க அங்க இருங்க..."

தமது தலைவிதியை நொந்தவாறு சென்றனர்.

சிறிது நேரத்தின் பின்னர் ஐவரும் இருக்குமிடத்தைத் தேடி வந்தார் மொழி பெயர்ப்பாளர்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னை எல்லாரும் மன்னிக்க வேண்டும். தமிழாக்களெண்டா இப்பிடித்தான் கதைக்கவேணும். அல்லாட்டி இஞ்ச நிக்கிறவங்களும் பொலிஸ்காரரும் என்னை மாட்டிவிட்டிடுவாங்க... அப்பிடி நடந்து கொண்டதால இப்ப பொலிஸ் ஏற்றுக்கொண்டிற்றாங்க."

மொழிபெயர்ப்பாளர் மெதுவாகக் கூறியதைக் கேட்டதும் இவர்களுக்கு மனப்பயம் நீங்கி ஆறுதல் உண்டானது போலிருந்தது.

சிறிது நேரம் அமர்ந்து உரையாடினார் அவர்...

தான் புவியற்றுறை சார்ந்த வேலை செய்ததால இலங்கை உட்பட பல நாடுகள் பற்றிய விபரங்களை அறிந்திருப்பதாக கூறினார். இவரோடு, உரையாடிய பின்னர்தான் இவர்கள் வந்திறங்கிய கிராமத்தைப் பற்றியும் அறிய முடிந்தது...

'ஆரியபள்ளி' நகரத்திலுள்ள ஒரு குக்கிராமம் இது. வறிய மக்களைக் கொண்ட அபிவிருத்தி இல்லாத கிராமமாக உள்ளது.

இங்கு வசிப்பவர்கள் சிறிய அளவில் விவசாயம் செய்வதுடன் தோட்டமும் செய்கின்றனர். செம்மறி ஆடுகள் வளர்ப்பும், வெகு தூரம் சென்று கூலிவேலையும் செய்துவருகின்றனர். கடற்றொழில் எவரும் செய்வதில்லை... தார் வீதிகள் இல்லை. மணல்பாதை மற்றும் ஒற்றையடிப் பாதைகளே பாவனையில் உள்ளன. துவிச்சக்கர வண்டிதான் இவர்களின் பிரதான போக்குவரத்துச் சாதனம்.

"அவர்தானே உங்களக் கண்டு கூட்டிவந்தவர்."

அங்கு நின்ற அந்த மனிதரைச் சுட்டிக்காட்டிக் கேட்டார்.

"ஓமுங்க ஐயா...!"

முகம் மலரப் பதிலளித்தனர்.

"அவர் இந்த கிராமத்துப் பிள்ளைகளுக்குப் படிப்பிக்கிற மாஸ்ரர். கொஞ்சம் தமிழ் விளங்கும். ஆனால் தமிழ் பேசமாட்டார். உங்களப் பற்றி தான் கிரகித்துக் கொண்டத பொலிசில சொல்லியிருக்கிறார். அவர் சொன்னத நம்பினதாலதான் அவங்க இங்க வந்து விசாரிக்கிறாங்க. அல்லாட்டி பொலிஸ் ஸ்ரேஷனுக்குத்தான் போகவேணும். அங்க ஒரு நாளோ, இரண்டு நாளோ இருக்கவேண்டிவரும்."

"நன்றி ஐயா!"

கரம் குவித்தனர்...

பதிலுக்கு அவரும் கரம் குவித்தார்.

உணர்வு மேலீட்டால் ஐவர் கண்களும் கலங்கின...

"இந்தக் கிராமத்தில உங்களுக்கு ஒரு பிரச்சினையும் இராது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவங்களுக்கு தமிழ் தெரியாது. அதுதான் கஷ்டமா இருக்கும். இப்ப நாங்க போயிற்று மத்தியானம் சாப்பாடு கொண்டுவாறம்... நீங்க சாதம் சாப்பிடுவீங்கதானே!"

"ஓமுங்க ஐயா!"

"ஐயா உங்கட்ட ஒண்டு கேக்கலாமா?"

"நல்லாக் கேளுங்க..."

"நீங்க பேசிற தமிழைப்பாத்தா எங்கட ஆக்கள் பேசுறதப் போல இருக்கு நீங்க இலங்கையரா?"

"இல்லை... என்னட பிறப்பு வளர்ப்பெல்லாம் கேரளா. தமிழ் நாட்டில திருநெல்வேலியில சில வருஷங்கள்கள் வேலைசெய்திருக்கிறன். மற்றப்படி நீண்ட காலமாக இங்கதான் இருக்கிறன்."

சிரித்தபடி கூறிவிட்டுச் சென்ற அவர், பொலிஸாருடன் ஜீப்பில் செல்வதைப் பார்த்தவாறே இருந்தனர்...

"பெரிய கண்டத்தில இருந்து தப்பின மாதிரி இருக்கு. ஒரு வேளை எங்களக் கொண்டுபோய் பொலிஸ் ஸ்ரேசனில அடைச்சு வச்சிருந்தாங்களெண்டா, ஒண்டுமே விளங்காத இந்த இடத்தில நாங்க என்னதான் செய்யிறது. அவங்க நினைச்சாங்களெண்டா என்னவும் செய்யலாம்தானே!"

"முன்பின் தெரியாத அந்த ஐயாவட உதவி இருந்தபடியால நாங்க தப்பியிருக்கிறோம்."

"எல்லாம் கடவுள் காட்டின வழிதான்... ஏன் கன தூரத்துக்குப் போவான். எல்வாட்டர் அண்ணனுக்கு நடந்தத நினைச்சுப் பாருங்க. மடக்கடி தூக்கி மண்ணுக்க எத்திவிட்டபடியா அறிவில்லாம கிடந்தும் உயிருக்கு ஆபத்தில்லாம எழும்பினார். அப்பிடியில்லாம தண்ணியிலேயே கிடந்திருப்பாரெண்டா, அல்லாட்டி நாங்க இவரைக் காணாம இருந்தி ருந்தா இப்ப இவரை உயிரோட காண ஏலுமா?"

"இவ்வளவு மடக்கடி இருந்தும், குடாக்கரை எண்டபடியா வீவல் வேகமில்லாம இருந்தது. அதுவும் வேகமாக இருந்திருந்தா இவர எங்க காணுறது."

"பதினெட்டு நாளும் சாப்பிடாம இருந்து உயிரோட இருக்கிறத தமிழில பேசின அவரே நம்பவில்லையெண்டா பாருங்களன்."

"உண்மைதான்! இன்றுவரை கடவுள் எங்களக் கைவிடயில்லை."

இனிமேல் என்னென்ன நடக்கும் என்று தீர்மானிக்க முடியா விட்டாலும் உயிர் தப்பியுள்ளதை நினைத்த கணம் உண்டான சந்தோஷத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில் உரையாடல் உச்ச தொனியில் இருந்தது.

இவர்களது உரையாடலைக் கவனித்த குடியானவர்களில் சிலர், ஒன்றுசேர்ந்து தமக்குள்ளே மாறிமாறிக் கதைத்தவாறு நின்றனர்.

மொழிபெயர்ப்பாளர் கூறிச் சென்றவாறு, ஒரு மணியளவில் மதிய உணவுடன் ஜீப்பில் வந்திறங்கினார்.

முதலில் வந்தவர்களைவிட மேலும் சில பொலிஸாரும் கூடவே வந்திருந்தனர்.

ஒவ்வொருவருக்கும் உணவுப் பொதியை மொழிபெயர்ப் பாளரே கொடுத்தார்...

"சாப்பிடுங்க, நாங்க ஒரு இடத்துக்குப் போயிற்று வாறோம்."

கூறிவிட்டு ஜீப்பில் ஏறிச் சென்றனர்.

அவர் சென்ற பின்னர் சாப்பாட்டுப் பொதியில் ஒரு பொதியைப் பிரித்துப் பார்த்தனர்.

தாராளமான சோறு, இறைச்சிக் கறி, இரண்டு மரக்கறிகள் இருந்தன. அவற்றை ஒருவர் சாப்பிட முடியாதெனக் கருதி, இரண்டு பொதிகளை மட்டும் எடுத்துக்கொண்டு ஏனைய மூன்று பொதிகளையும் அங்கு நின்ற குடியானவர்களிடம் கொடுத்தனர்.

இரண்டு பொதிகளையும் பிரித்து, ஒன்றாய்க் குழைத்து உருண்டையாக்கிப் பகிர்ந்து சாப்பிட்டபோதும், மிச்சமே இருந்தது.

அதற்குள் பல தடவைகள் தண்ணீர் குடித்துக்கொண்டனர்.

ஜீப் திரும்பி வந்ததும் தேடிவந்த மொழிபெயர்ப்பாளர், இவர்களை ஜீப்பில் ஏற்றிச் செல்லப்போவதாக கூறியதுடன், அங்கு நின்ற குடியானவர்களுக்கும் அவர்கள் மொழியில் கூறினார்.


சிறிது நேரத்தால் புறப்படும்போது ஆசிரியருக்கும் அங்கு நின்ற குடியானவர்களுக்கும் கரம் குவித்து நன்றிகூறி, கண்கலங்க விடை பெற்றனர்...

"ஐயா நாங்க எங்க போறோம்?"

"பழியா என்ற ஊருக்கு..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 14

'பழியா'...

இந்தியாவின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள 'ஓரியா' மொழி பேசும், 'ஓரிசா' (ஓடிசா) மாநிலத்தின் முப்பது மாவட்டங்களில் ஒன்றான, 'கஞ்சாம்' மாவட்டத்தில், ஓர் ஊரே 'பழியா'...

வடக்கு- சார்க்கண்ட் மாநிலம், வடகிழக்கு- மேற்கு வங்காளம், கிழக்கு மற்றும் தென்கிழக்கு- வங்காள விரிகுடா, தெற்கு- ஆந்திரப் பிரதேசம், மேற்கு- சத்தீசுகர் மாநிலம் என்பன ஓரிசாவின் எல்லைகளாக அமைந்துள்ளன.

90% மேற்பட இந்து மதத்தவர் வாழும் இம்மாநிலத்தின் தலைநகரின் பெயர் 'புவனேசுவரம்'. ஓரியா, வங்காளம், தெலுங்கு, இந்தி, உருது ஆகிய மொழிகள் பேசப்படுகின்றன

தாதுவளங்களை நிறைவாகக்கொண்டதுடன், மலை மற்றும் நதிவளங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

நக்சலைட் - மாவோயிஸ்ட் போராளிகளால் அரசுக்கும் பொது மக்களுக்கும் பெரிதும் அச்சுறுத்தல் ஏற்படும் மாநிலங்களில் ஒன்றாக ஓரிசா மாநிலம் உள்ளது. வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர் தொகை அதிகமென்பதால், நக்சலைட் தீவிரவாதிகளுக்கு ஆதரவு பெருக வாய்ப்பாக உள்ளது.

அங்குள்ள முப்பது மாவட்டங்களில் ஒன்பது மாவட்டங்கள் அச்சுறுத்தல் பகுதிகளாகும். அவற்றில் 'கஞ்சாம்' மாவட்டமும் ஒன்று.

'கஞ்சாம்' மாவட்டத்தின் தலைமையகமாக 'சத்ரபூர்' பிரதேசம் உள்ளது.

முல்லைத்தீவிலிருந்து கடலில் தத்தளித்துவந்த ஐந்து பேரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளத்துடன் அடைந்துவந்து கரையேறிய பிரதேசமும் 'சத்ரபூர்' தான்.

இப்பிரதேசத்தில் சத்ரபூர் நகருக்கு அண்மையிலுள்ள புறநகர்ப் பகுதியில்தான் 'பழியா' என்னும் ஊர் உள்ளது. பழியாவிலிருந்து கணிசமான தூரத்தில் கடற்கரையோரமாக அமைந்துள்ளதே 'ஆரிய பள்ளி' நகரம் (ஐவரும் கரையேறிய கடற்கரை).

சத்ரபூர் பிரதேச எல்லைக்குட்பட்ட ஆரியபள்ளி நகரத்தில் பல குக்கிராமங்கள் உள்ளன. அவற்றிலொரு குக்கிராமத்துக் கடற்கரையில் தான் ஐந்துபேரும் கரையேறி ஒருநாள் தங்கியிருந்துள்ளனர்.

வள்ளத்தில் அடைந்து வருகையில் இவர்களால் முதலில் அவதானிக்கப்பட்ட மலைச் சிகரம் பஞ்சாப் மாநிலத்தில் உள்ளது. அம்மாநிலத்தின் வடக்கே இருப்பதுதான் கஞ்சாம் மாவட்டமும் சத்ரபூர் பிரதேசமுமாகும்...

கணிசமான தூரம் பயணம் செய்த ஜீப், பி.ப. நான்கு மணி யளவில் ஒரு கட்டடத்தின் முன்னால் நின்றது. ஐந்துபேரும் விபரம் புரியாமல் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டதை அவதானித்த மொழி பெயர்ப்பாளர்;

"பயப்படாம இறங்குங்க. இது, பழியா ஊரிலுள்ள அரசாங்க ஹொஸ்பிற்றல்..."

தயக்கம் நீங்கியபோதும், ஜீப்பை விட்டு இறங்க அவர்களுக்குக் கூச்சமாக இருந்தது. வள்ளத்திலிருந்து கரையேறியபோது அணிந்திருந்த அதே காற்சட்டை மற்றும் சாரத்துடன் மேலாடை இல்லாமல் நின்றனர்.

தாங்கள் யாழ்ப்பாணத்தில் அணிந்துகொள்கின்ற உடைகளை நினைக்கையில் சிரிப்பு வந்தது.

ஜீப்பிலிருந்து இறங்கி அந்தப் பகுதியை நோட்டமிட்டனர்.

ஓரளவு விசாலமான வைத்தியசாலையாக இருந்தது. அருகாமை உள்ள வீதியில் குடிமனைகள், விற்பனை நிலையங்கள், வேறு கட்ட டங்கள் இருப்பதையும் பார்க்கக்கூடியதாக இருந்தது.

மொழிபெயர்ப்பாளர் குறிப்பிட்ட ஊரின் மையப் பகுதியாக இருக்கவேண்டும் என நினைத்தனர்.

தாங்கள் கரையேறி தங்கியிருந்த கடற்கரைக் கிராமத்தை ஒப்பிட்டுப் பார்த்தனர்... மலைக்கும் மடுவுக்குமுள்ள வித்தியாசம்.

வீதியில் ஆட்கள் நடமாட்டம் சுமாராக இருந்தது. அவர்கள் அணிந்திருந்த உடைகள் இவர்கள் கரையேறிய குக்கிராமத்தவர் அணிகின்ற உடைகளைப் போலில்லை. மிகச் சிலர் மட்டும் தாறுபாய்ச்சிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடை அணிந்திருப்பதைக் காணக்கூடியதாக இருந்தது.

"நீங்க ஒன்றுக்கும் யோசிக்கத் தேவையில்லை. என்னோட வாங்க..."

இவர்களது மௌனத்தை, அச்சத்தில் யோசிப்பதாகக் கருதிய மொழிபெயர்ப்பாளர், கூறியவாறு வைத்தியசாலைக்கு உள்ளே அழைத்துச் சென்று பதிவுகள் மேற்கொள்ளுவதற்கான ஒத்துழைப்பை வழங்கினார்.

இருக்கக்கூடிய நோய்கள் பற்றி விசாரிக்கையில், கேட்கப்பட்ட நோய்கள் பற்றி இவர்கள் அறிந்திருக்கவில்லையாதலால், அதற்கான பதிலும் இருக்கவில்லை.

சாப்பிடாமல் பதினேழு நாட்கள் இருந்தமையால் உணவு விழுங்க கடினமாக இருப்பது, பசி இன்மை, உடல் உபாதையுடன் உடல் மெலிவு ஆகியவற்றையே கூறமுடிந்தது.

பதிவுகள் முடிவுற்றதும் தனியான ஒரு விடுதியில் அனுமதிக் கப்பட்டு, நான்கு பொலிசார் காவலுக்கு விடப்பட்டனர்.

தனித்தனிக் கட்டில் ஒவ்வொருவருக்கும்.

விலங்கிடப்படாத கைதிகளைப்போல பொலிசாரின் கண் காணிப்புக்கு மத்தியிலே இரவும், பகலும் தங்கவேண்டிய நிலை...

வைத்தியசாலையில் குளிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால், ஒரு வாளி தண்ணீருக்குள் குளித்து முடித்துவிட வேண்டும்.

மாற்றுடையாக காற்சட்டைகள் கொடுத்தனர். அவற்றில் சிறிய கிழிவுகளும் இருந்தன.

மொழிபெயர்ப்பாளர் விடைபெற்றுச் சென்றார்...

ஓரளவு மன நிறைவுடன் இன்றைய பகல் விடைபெற்றது.

சோர்வு மேலோங்கி இருந்ததால் நிறைவான உறக்கமாகவும் இருந்தது...

மறுநாள் காலை வைத்தியரால் நன்கு பரிசோதிக்கப்பட்டு ஊசி மூலம் மருந்துகள் ஏற்றப்பட்டன...

குளிகை மருந்துகளும் கொடுக்கப்பட்டன...

மூன்றுவேளை மருந்தும் இலகுவான உணவாக றஸ்க்கும், பிஸ்கற்றுகளும் வழங்கப்பட்டன.

முடி திருத்தி, முகச்சவரம் செய்வதற்கு ஏற்பாடு செய்திருந்தனர்.

இவர்களுக்கென ஒதுக்கப்பட்ட விடுதியைவிட்டு வெளியேற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டிய அவசியம் இருக்கவில்லை. வேறு விடுதிகளுக்கும் செல்வ தில்லை. மருந்து, உணவு, ஓய்வு, உறக்கம் இவ்வாறே இரண்டு நாட்கள் நகர்ந்த நிலையில், மூன்றாம் நாள் திடீரென பசி அதிகமாக இருந்தது...

பரிசோதிக்க வந்த வைத்தியரிடம் வயிறைக் காண்பித்து பசிப்ப தாக சைகையால் கூறியதும் புரிந்துகொண்டதன் அடையாளமாகத் தலையை அசைத்தார்.

சிறிது நேரத்தின் பின்னர் உப்புமா வழங்கப்பட்டது...

அதன் அளவோ 'யானைப் பசிக்கு சோளம் பொரி மாதிரி' இருந்ததால் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்...

மூன்று வேளையும் அதேயளவு உப்புமாதான்...

மறுநாள் சற்று அதிகமாக வழங்கப்பட்டபோதும் போதுமான தாக இருக்கவில்லை.

இவர்கள், கடலில் கடினமான வேலை செய்வது மட்டுமல்ல, கடலில் பசி அதிகமாக இருக்கும் என்பதால் சோற்றைத் தாராளமாக சாப்பிடவேண்டிய தேவை இருந்தது. அவ்வாறு சாப்பிட்டுப் பழகியவர் களுக்கு கொடுக்கப்பட்ட உப்புமா போதுமானதாக இருக்கவில்லை.

ஐந்தாம் நாள் காலையில் வைத்தியர் பரிசோதனை முடித்துச் சென்ற பின்னர் அவித்த உருளைக்கிழங்கும் இறைச்சியும் வழங்கப் பட்டது. அதுவும் உப்புமாவின் அளவிலேயே இருந்தது. அவர்களின் பசிக்கு ஈடு கொடுக்கவில்லை.

சிறிது நேரம் சுவரைப் பார்த்தவாறு யோசித்துக் கொண்டி ருந்தார் நவின்சந்திரா.

"எழும்பி வாங்கடா...!"

ஏதோ முடிவெடுத்தவர்போல யேசுராசாவையும் இராசகுலத் தையும் பார்த்துக் கூறிவிட்டு எழுந்தார். விபரம் புரியாதுவிட்டாலும் எழுந்தனர்.

எல்வாட்டரையும் ஜேக்கப்பையும் தவிர மூவரும் விடுதியி லிருந்து புறப்பட்டு வெளியே சென்றனர்.

இதனை அவதானித்த பொலிஸாருக்கு, இவர்கள் செல்வதற்கான காரணத்தை கேட்கவோ, விசாரிக்கவோ மொழி தடையாக இருந்ததால் வேறு வழியின்றி அவர்களைப் பின்தொடர்ந்து சென்றனர்.

வைத்தியசாலை வளாகத்தை விட்டும் வெளியேறினர்.

முதல் தடவையாக வெளியேறியிருந்தாலும் ஏற்கெனவே பழகியவர்கள்போல வைத்தியசாலை வெளிவீதியால் சென்று, ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டடத்தின் முன்னால் நின்று அக்கறையாகப் பார்த்தனர்.

முன்பக்க விறாந்தையில் சட்டத்தரணிகள் பலர் நிற்பதைக் கண்டதும், நீதிமன்றம் என்ற முடிவில் அதைக் கடந்து செல்ல இவர்களைக் கண்காணித்தபடியே தொடர்ந்தனர் பொலிஸார்.

உணவகம் ஒன்றின் முன்னால் செல்கையில், கண்ணாடி அலுமாரியில் பலவகை உணவுகள் வைக்கப்பட்டிருப்பது தெரிந்தது.

அவற்றைப் பார்த்ததும் வாய் ஊறியது, பசி உயிர்த்தெழுந்தது.

வயிற்றைக் குடையும் பசியைப் போக்கச் சாப்பிடுவதற்கு இவர்கள் கையில் பணம் இல்லை. எவரிடமாவது கைமாற்றாய் வாங்கக் கூடிய வசதியுமில்லை.

'ஊரில் இப்படியொரு இக்கட்டான நிலையைச் சந்தித்ததேயில்லை...'

அவர்கள் உள்ளத்தைத் தொட்டுச் சென்றது நினைவு...

அந்நிய நாட்டில் அநாதரவாய் நிற்கையில், பணத்துக்கு என்ன செய்வது என்ற சிந்தனையே மூவருக்கும். அதைப் பற்றிய உரையாடலே இவர்கள் மத்தியில்.

சிறிது நேரத்தின் பின் உரையாடலினூடே இனங்கண்ட விடயத்தை செய்வதற்கு ஒருசேர முடிவெடுத்தவர்களாக, தேநீரகத்தின் ஒரு பக்கத்தில் வரிசையாய் நின்று வருபவர்களிடம் இரப்பதற்காக கையேந்தத் துணிந்தனர்...

உணவகத்தின் முன்னால் மூவரும் நிற்பதால் ஆறுதலடைந்த பொலிஸார் நின்ற இடத்திலேயே நின்றவாறே கண்காணித்தனர்.

தொழிலில் மீன்கள் தொகையாக பிடிபடும் போதிலெல்லாம் அள்ளி அள்ளிக் கொடுத்த கைகள், வருபவர்களிடம் சைகை செய்து பசியை உணர்த்தின .

பசியென்று வந்தவர்களுக்கு புசிப்பதற்கு உணவு கொடுத்த கரங்கள் உணவுக்காக ஏந்தின...

திரைப்படங்களில் சிலவற்றில் தாங்கள் பார்த்த காட்சிகள் நினைவில் வந்துபோக கண்கள் கலங்கின... இதயத்தைக் கல்லாக்கிக் கொண்டு நின்றனர்...

உணவகத்தில் நுழைபவர்களில் சிலர், வரிசையாய் நிற்கும் இவர்களைக் காணாததைப் போலவே நடந்துகொண்டனர். சிலர், நின்று பார்த்துவிட்டுச் சென்றனர்...

அந்நிய நாட்டவர் என இனங்கண்ட சிலர், கதைப்பதற்கு மொழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரியாதென கருதியதாலோ என்னவோ, நின்று இரக்கத்துடன் பார்த்து விட்டு சில்லறை நாணயங்களைப் பகிர்ந்து கொடுத்துச் சென்றனர்.

இவ்வாறு நிகழ்கையில், உணவகத்தில் நுழைய முனைந்த ஒருவர் திரும்பி இவர்களை உற்றுப் பார்த்துவிட்டு சைகையால் உள்ளே வருமாறு அழைத்தார். இவர்கள் தயங்கியவாறு உள்ளே சென்றதும் அங்கிருந்த நீண்ட மேசைக்கு முன்னால் போடப்பட்டிருந்த வாங்கில் அமருமாறு சைகை செய்தார்.

மாற்றுடையின்மையால், பொருத்தமற்று காற்சட்டை அணிந்த வாறு இருப்பதால் சங்கோஜம் ஏற்பட்ட அதேவேளை, ஊரில் மாறி மாறி அணிந்து செல்லும் வேஷ்டி, சேட்டு, சாரங்களை நினைத்துக் கொண் டனர்.

உள்ளே அழைத்து வந்தவர், உணவகச் சிப்பந்தியிடம் ஏதோ கூற, மூவருக்கும் வாழை இலை போடப்பட்டு, சிறிய வட்டமான பொங்கி யிருந்த பலகாரம் மூன்றும் கிழங்குக் கறியும் வைத்தான் சிப்பந்தி.

இவர்கள் சாப்பிடாமல் அவற்றைப் பார்த்துக்கொண்டிருப்பதை அவதானித்த சிப்பந்தி, ‘பூரி’ என்று கூறி தெளிவுபடுத்தினான்.

இதற்கு முன்னர் இதனை சாப்பிடாதிருந்தாலும், மற்றவர்கள் ஆர்வமாய் அருந்துவதுகண்டு தாமும் அருந்தினர்.

கிழங்குக் கறி எம்மவரது கறியைப்போன்றில்லை. இருப்பினும் சுவையாகவும், பூரியோடு சேர்த்துச் சாப்பிட ஏற்றதாகவும் இருப்பதாகப் பேசிக்கொண்டனர்.

பூரியை ஏந்திய தட்டோடு சிப்பந்தி வந்தான். மேலும் சில பூரிகள் சாப்பிடவேண்டுமென்ற எண்ணம் தோன்றினாலும் கூச்ச மேலீட்டால் ஒன்று எனக் காண்பித்ததும், தலா ஒன்றும் கறியும் வைத்துவிட்டுச் சென்றான்.

சாப்பிட்டு முடிந்து கை கழுவி வருகையில்;

“குட்...!”

சிப்பந்தி இவர்களைப் பார்த்துக் கேட்டது புரிந்ததால் சிரிப்புடன் தலையசைத்துவிட்டு, உணவு வாங்கித் தந்தவருக்கும், சிப்பந்திக்கும் கரம்கூப்பி நன்றி சொல்லி வெளியேறினர்...

செல்லும்போது தமக்குக் கிடைத்த சில்லறைகளை பார்த்தனர். அவற்றின் வடிவம் மாறியிருந்தாலும், எழுத்துக்கள் புரியாதிருந்தாலும் இலக்கங்கள் 1, 2, 5 என இருப்பவற்றைக்கொண்டு கைவசமுள்ள பணத்தை கணக்கெடுத்தவாறு வைத்தியசாலை வளாகத்தில் நுழைந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரே விடுதிக்குச் செல்லாது வைத்தியசாலையின் இடது பக்கம் செல்வதைப் பார்த்ததும் பொலிஸார் தலையிலடித்துக் கொண்டனர்.

சென்ற திசையில், சற்றுத் தூரத்தில் குளமொன்று தெரிந்திட அதனைப் பார்த்து வரும் நோக்கில் அங்கே சென்றனர்.

பொலிஸாரும் பின் தொடர்ந்தனர்.

ஓரளவு விசாலமான குளமாகத் தெரிந்தது...

ஆண்களும் பெண்களுமாக குடங்களில் நீர் கோலிச் செல்வதை அவதானித்து குடிநீராக இருக்கலாமென்ற முடிவில் திரும்பினர்.

இவர்களைப் பின்தொடர்ந்து வந்த பொலிஸார் அப்போதுதான் குளத்தைப் பார்த்திருக்கவேண்டும். வெறித்துப் பார்த்தவாறு தமக்குள்ளே பேசிக்கொள்ளும் தன்மையைப் பார்க்கையில் ஏதோ அதிசயத்தைக் கண்டதைப்போன்ற மகிழ்ச்சி அவர்களில் தெரிந்தது.

திரும்பிச்சென்று, விடுதிக்குள் இவர்கள் நுழைந்த பின்னர்தான் பொலிஸாருக்கு நிம்மதி.

தாங்கள் வெளியே செல்கையில் கண்டவற்றை, கடையில் கையேந்தி நின்றதை, பூரி சாப்பிட்டதை எல்வாட்டரிடமும் ஜேக்கப்பிடமும் கூறியபோது, எல்வாட்டரின் முகத்தில் இத்தகை மாற்றம் வருமென்று எதிர்பார்க்கவில்லை... நவின்சந்திராவை வெறித்துப் பார்த்தார்...

"தம்பி நீங்களா பிச்சை எடுத்துச் சாப்பிட்டனீங்க... கேட்கவே கவலையாயிருக்கு. எத்தினபேர் உங்கட குடும்பத்தால பசியாறுறாங்க. எங்களில ஆருமே பசிக்குதெண்டு பக்கத்து வீட்டுக்குப் போறளவுக்கு விட்டு வைக்கயில்ல கடவுள். ஆனா இண்டைக்கு...!"

கூறிவிட்டு, கண்கலங்கியது எல்வாட்டர் மட்டுமல்ல, எல்லோரும்தான்...

அமைதி, அந்தக் கணத்திலிருந்து விடுதியை தன்னகப்படுத்திக் கொண்டது...

சிறிது நேரத்தால் எல்லோரும் வழமைக்குத் திரும்பிய நிலையில், நவின்சந்திராவின் இருமல் சத்தம் கேட்கப் பார்த்தனர்.

"அண்ணே! 'பாம்பு தின்னிற ஊருக்குப் போனா நடுமுறி நமக்கெண்டுதான் இருக்கவேணும்' எண்டு நீங்கதான் அடிக்கடி சொல்லுவீங்க... நாங்க இப்ப அந்த நிலையிலதானே நிக்கிறோம்... நாங்க விரும்பியா இஞ்ச வந்தனாங்க, விரும்பியா இதச் செய்தனாங்க. பசிக் கொடுமையில செய்தோம். கடலோட போகவேண்டிய எங்களை விதி கொண்டுவந்து விட்டிருக்கு. என்ன செய்யிறது என்றே தெரியயில்ல."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவின்சந்திரா கூறிவிட்டு ஒவ்வொருவராக நோட்டமிட்டார்.

"எங்களடையும், எங்கட சொந்தங்களடையும் மன்றாட்டால குடலொட்டி, உடலொட்டியெண்டாலும் ஒரு இடத்தில வந்து சேந்திருக்கிறோம். அதுக்காக பிச்சை எடுத்து எங்களை நாங்களே கேவலப் படுத்துறதா?"

"உங்கட கோபத்தில நியாயமிருக்கண்ணே! ஆனா, ஒண்ட யோசிச்சு பாருங்க. நாங்க இப்பிடியான உடுப்பை வாழ்க்கையில போட்டிருக்கிறோமா? அதை இப்ப போடுறோம்தானே! இந்த ஒரே உடுப்பை எத்தின நாளைக்கு போடுறோம். சாப்பாட்டைப் பாருங்க, எங்களால சாப்பிட முடியாம இருக்கேக்க விடுங்க. இப்ப நாங்க சாப்பிடக் கூடியதா இருக்கேக்க பாதி வயிற்றுக்கூடக் காணாத சாப்பாடு... குறப்பட்டினியிலதானே கிடக்கிறோம்..."

குறுக்கீடு இன்மையால் இடைவெளி விட்டுத் தொடர்ந்தார்...

"எங்களுக்குத் தேவையா இருக்கெண்டு ஆரட்டையும் போய்க் காசு கேட்டா தருவாங்களாண்ணே...! ஏன், நாங்கதன்னும் ஊரில புறத்தியாருக்கு அப்பிடிக் குடுத்திருக்கிறோமா?... இண்டைக்கு வயிறாற சாப்பிட்டோம். ஒரு ரூபா வரை காசும் கிடைச்சிது. கையேந்தின படியாத்தான் கிடைச்சுது. களவு எடுக்கவில்லையே! இங்க இருக்கிற மட்டும் எங்கட குறைஞ்ச அளவான தேவையை எண்டாலும் நிறைவு செய்யிறதுக்கு கையேந்தினா தவறில்லையெண்டு நினைக்கிறனண்ணே!"

மீண்டும் அமைதி குடிகொண்டது.....

இரவு ஏழு மணியளவில் ஐவரையும் சைகையால் அழைத்த பொலிஸார் நால்வரும், வைத்தியசாலையின் இடது பக்கமாகக் கூட்டிச் சென்றனர்.

பயம் தொற்றிடத் தயங்கித் தயங்கி அவர்கள் பின் சென்றனர்... வைத்தியசாலையிலிருந்து விசிறும் ஒளித் தெறிப்பு இருளின் கனதியைக் குறைக்க, சற்றுத் தூரம் சென்ற பொலிஸார் குளத்தின் ஓரம் தரித்தனர்.

தாங்கள் காலையில் பார்க்கவந்த குளமென்பதை இனங்கண்ட மூவரும், குடிநீருக்குப் பயன்படுத்தும் குளத்திற்கு பொலிசார் எதற்காக அழைத்து வந்தார்கள் என்று புரியாத நிலையில்...

இவர்களின் சந்தேகத்துக்குப் பதில் கூறுவதைப்போல, சுற்றிவர நோட்டமிட்ட பொலிஸார், உடைகளைக் கழைந்துவிட்டு குளத்தில் இறங்கினர்.

"குளிப்பதற்காத்தான் இங்க வந்திருக்கிறார்கள்...!"

விடை கிடைத்தது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐவரையும் வருமாறு சைகை செய்தனர். நிர்வாணமாகச் செல்வதற்கு கூச்சம் தடையாக இருந்தபோதும், இரவு என்பதால் மறுக்காது இறங்கினர்...

குளிர்மையான அந்த நீர் உடலுக்கு இதமாக இருந்தது.

எவரது இடையூறுமின்றி, நேரத்தைக் கருத்திற் கொள்ளாமல் குளித்துக்கொண்டேயிருந்தனர். இருபத்தி மூன்று நாட்களுக்குப் பின்னரான நிறைவான குளிப்பாக இருந்தது.

இவர்கள் கரையேறாது இருப்பது கண்ட பொலிஸார், வருமாறு பலமுறை அழைத்ததால் கரையேறி, அந்த வெட்டையில் நின்று உடலின் ஈரத்தை உலரச்செய்த பின்னர் காற்சட்டையை அணிந்துகொண்டு விடுதியை வந்தடைந்தனர்.

நல்ல உறக்கமாக இருந்ததால் காலையில் தாமதமாக எழுந் தாலும், வைத்தியர் வருவதற்குள் முகம் கழுவி வந்துவிட்டனர்.

வழமைபோல் வைத்தியர் பார்வையிட்டுச் சென்ற பின்னர், காலை உணவையும் சாப்பிட்டுவிட்டு, எல்வாட்டர் மட்டும் அமர்ந்திருக்க ஏனைய நால்வரும் படுத்துக்கிடந்தனர்.

பேச்செதுவுமின்மையால் நீடித்த அமைதியைக் குழப்புவது போல இருந்தது எல்வாட்டரின் செருமல்...

நால்வரும் அவரையே பார்த்தனர்.

"இண்டைக்கு ஒருத்தரும் வெளியால போகயில்லையா? போறண்டா வாங்களன் நானும் வாறன்..."

தீயை மிதித்ததைப்போல சட்டெனத் துள்ளி எழுந்தனர்...

மகிழ்வும் துள்ளி எழுந்தது...

அடுத்த கணம் புறப்பட்டனர்...

ஐந்து பேருமாக வெளியே செல்வதை பார்த்துக்கொண்டு நின்ற பொலிசார், தடுத்து நிறுத்த முனையவில்லை. இதுவரை பொலிஸாரால் எவ்வித தொந்தரவும் இல்லாமையால் இவர்களும் அவர்களைப் பெரிதுபடுத்தவில்லை.

வெளியே வந்தவர்கள், நவின்சந்திராவின் ஆலோசனைப்படி எல்வாட்டர், ஜேக்கப், இராசகுலம் ஒரு குழுவினராகவும் தானும் யேசுராசாவும் ஒரு குழுவினராகவும் இணைந்து கொண்டனர்.

யேசுராசாவும் நவின்சந்திராவும் நீதிமன்றத்தின் முன்னால் நிற்க, மற்றக் குழுவினர் உணவகத்துக்குச் சென்றனர்.

உணவோ, பணமோ எதுவாக இருந்தாலும் தமக்கு எவ்வகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிலும் பயன்படும் என்ற எண்ணமே இருந்தது.

புதிய முயற்சி, புதிய தெரிவு... உள்ளத்தின் நச்சரிப்புகளை ஒதுக்கி வைத்துவிட்டு, சங்கோஜத்தைப் புறந்தள்ளி ஒரு மணித்தியாலம் வரை அந்தத்த இடங்களிலேயே நின்றனர்.

பலரினதும் இரக்கப் பார்வை இவர்களை நோக்கி இருந்தாலும், பார்த்தவர்கள் எல்லோரும் பகிர்ந்துகொண்டவர்களல்லர்...

'நாங்களும் ஊரில் இப்படித்தானே!' நினைவைத் தொட்டது.

உணவகத்துக்குச் சென்றவர்களுக்கு சாப்பாடும் சில்லறையும் கிடைத்தன. நீதிமன்றத்தில் நின்றவர்களுக்கு சில்லறைகளும் பிஸ்கட்டும் கிடைத்தன.

கிடைத்த சில்லறைகளுடன் சந்தித்த ஐவரும், அந்தப் பகுதியில் வேறு உணவகங்கள் இருக்கக்கண்டால் தொடரும் நாட்களில் வயிற்றுப் பசியைப் போக்குவதற்கு உதவியாய் இருக்கும் என்ற நோக்கில் நேர் வீதி மற்றும் குறுக்கு வீதிகளால் இரு பிரிவாகச் சென்று, உணவகத்தை அடையாளம் கண்டு யேசுராசாவும் நவின்சந்திராவும் அங்கு நின்றபோது உணவு கிடைத்ததால் வயிறாற சாப்பிட்டனர்.

இவ்வாறு வயிற்றை நிறையச்செய்ய உணவகங்களைத் தேடிச் சென்று இரந்து சாப்பிடும் முயற்சியோடு நாட்கள் தொடர்ந்தன...

இந்நாட்களில் ஒருநாள் பத்திரிகையாளர் வந்திருந்தனர். கொச்சைத் தமிழில் கேட்டனர். இவர்கள் கூறியதை எவ்வளவு தூரம் கிரகித்துக் கொண்டார்களோ தெரியவில்லை. ஐவரையும் ஒன்றாக நிழற்படம் எடுத்துச் சென்றனர்.

சேமிப்புகளும் அதிகரித்தன...

சில்லறைகளாக இருந்தவைகள் ரூபாக்களாக மாறின.


உணவகங்களில் உணவு கிடைக்காது போனாலும் சில்லறைகள் எப்படியும் கிடைக்கும்.

உணவு கிடைக்காத நாட்களில் சேகரித்த பணத்தைக் கொடுத்து சாப்பிட்டுக்கொண்டனர்.

நிகழ்வுகள் மாற்றமின்றி தொடர்கையில், வைத்தியசாலை நிர்வாகத்தினர் எப்படியோ ஓரளவு தமிழ் தெரிந்த ஒருவரை அழைத்து வந்திருந்தனர்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## 15

*1963* ஆடி மாதம் *15* ஆம் திகதி, திங்கட்கிழமை...

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பன்னிரெண்டாம் நாள்.

காணாமற்போய் முப்பத்தி ஓராவது நாள்...

ஐவரும் இறந்துவிட்டதாக கருதப்பட்டு ஏழாம் நாளுக்கு உரித்தான பிச்சை கொடுத்த பதின்நான்காவது நாள்...

யாழ்ப்பாணத்தில் உள்ள குடும்ப உறவுகளின் நினைவுகளும், கனவுகளும் ஐவரைப் பற்றியதாகவே இருந்தது.

எந்நேரமும் கவலையும், கண்ணீருடனும் காணப்பட்டனர். உழைத்திடத் தொழிலுக்குச் சென்றவரைப் படத்தில் பார்க்க வேண்டிய பரிதாப நிலை...

இறுதியில்கூட ஒரு தடவையேனும் முகத்தைப் பார்க்க முடிய வில்லையே என்ற ஆதங்கம் நாளும் பொழுதும் தாங்கமுடியாத வேதனையாக உயிர்பெற்ற வண்ணமிருந்தது...

இந்த நிலையில்தான், ஊர் வழக்கப்படி உறவினர், அயலவர், நண்பர்கள் ஒன்றிணைந்து இறந்தவரை நினைவுகூரும் முப்பத்தி ஓராவது நாள் வந்தது.

ஊரவர்களின் வற்புறுத்தல், முன்வைக்கப்பட்ட - ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களால், நம்பிக்கையில்லாத நிலையிலும் இறந்த தாக இழவு கொடுத்து, சமூக - விழுமிய முறையில் ஏழாம் நாள் கிரிகைகள் செய்து உள்ளத்தை ஆற்றுப்படுத்தியவர்கள், ஊர் வழமையலமைந்த முப்பத்தி ஓராவது நாள் நினைவுகூரலைச் செய்ய முன்வரவில்லை.

காணாமற்போனதாக அறியப்பட்ட இருபத்தி ஓராவது நாளன்று ‘ஐவரும் உயிரோடு இருப்பதாக’ கசிந்த தகவலே நினைவு கூரலை செய்ய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்வராமைக்குக் காரணமாகும்...

பல நாட்களாக எடுக்கப்பட்ட முயற்சிகள் எதுவும் கைகூடாத நிலையில், இறந்துவிட்டதாக முடிவெடுக்கப்பட்டு உரிய முறைகள் அனுஷ்டிக்கப்பட்ட நிலையில் இப்படியொரு தகவல் வெளியானது.

வைரலாக பரவியபோதும் ஏற்றுக்கொள்ளக்கூடிய விபரங்கள் அடங்கியிராமையால் முழுமையான தகவலாக இருக்கவில்லை.

யாரால் காப்பாற்றப்பட்டார்கள்?

யாரால் பாதுகாக்கப்படுகிறார்கள்?

யாரால் தகவல் வெளியானது?

போன்ற விபரங்கள் வெளித்தெரியாமையால் ஆதாரமற்ற, அநாமதேயத் தகவலாகவே நோக்கவேண்டியிருந்தது.

காணாமற் போனவர்களின் உறவுகளால்கூட இதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அதேவேளை மறுப்பதற்கும் தயாரில்லை.

***

ஐவரையும் கலெக்ரர் சந்திக்க அழைத்திருப்பதாக தமிழ் தெரிந்தவரால் கூறப்பட்டதும் உச்ச மகிழ்வில் ஐவரும்...

“கலெக்டர் ஐயா தமிழ் ஆள்தான். அவரோட நீங்க நேரடி யாகவே கதைக்கலாம். பத்து மணிக்கு பொலிஸ் ஜீப் வந்து உங்களை ஏற்றிப் போகும். சரிதானே...!”

அவரது வார்த்தைகளால் மகிழ்ச்சி இரட்டிப்பானது.

முதல் தடவையாக கலெக்டரோடு நேரடியாகக் கதைக்கக்கூடிய சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தமைக்காக கடவுளுக்கு நன்றி கூறினர்.

இனிமேல் நல்லதே நடக்கும் என்ற நம்பிக்கை பிறந்ததால் குதூகலத்தில் என்ன செய்வதென்று தெரியாத நிலை...

கலெக்ரரிடம் செல்லவுள்ள ஆவலில் வாசலையே பார்த்துக் கொண்டு இருந்தனர்.

காலை பத்து மணிக்கு முன்னரே இரண்டு பொலிஸாருடன் ஜீப் வந்து தரித்தது.

வைத்தியசாலை பதிவேட்டில் ஒப்பமிட்டுவிட்டு அழைத்துச் சென்றனர் பொலிஸார்.

‘பழியா’ நகரிலுள்ள கலெக்ரரின் பணிமனையின் முன்னால் ஜீப் தரித்ததும் உள்ளே அழைத்துச் சென்றனர்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் அணிந்திருந்த காற்சட்டை அவர்களுக்கே வெறுப் பாகத் தெரிந்தது. மேலாடை இல்லாது காற்சட்டையுடன் கலெக்ரர் முன்னால் செல்லவேண்டிய துர்ப்பாக்கிய நிலையை எண்ணிக் கலங்கினர்.

பொலிஸாருக்கு நடுவில் கைதிகளைப்போல நடந்து சென்ற வர்கள், விசாலமான அறையில் வட்டமான மேசையின் முன்னால் போடப்பட்டிருந்த கதிரைகளில் கௌரவமாக அமர்த்தப்பட்டனர்.

கலெக்டர் வருவதைக் கண்டதும் எழுந்து நிற்கையில், தங்களை தாங்களே மாறிமாறிப் பார்த்து குறுகிப்போயினர்.

"உட்காருங்க..."

கலெக்டரின் வாயிலிருந்து வந்த தமிழ் வார்த்தையைக் கேட்ட உணர்ச்சிப் பெருக்கோடு அமர்ந்தனர்.

"நீங்கள் பதினெட்டு நாட்கள் கடலில் தத்தளித்து அடைந்து வந்தது பற்றி பொலிஸ் றிப்போட்டில இருக்கிறது. நீங்க அடைந்திருக் கக்கூடிய துன்பத்தை நான் உணருகிறேன். அதைவிட இந்தக் கோலத்தில் உங்களைப் பார்க்க வேதனையாக இருக்கிறது."

கலெக்டரின் கண்கள் கலங்கின...

"நான் ஒரு தமிழன். தமிழ்நாட்டில் தஞ்சாவூரைச் சேர்ந்தவன். (பதிவைப் புரட்டிப் பார்த்துவிட்டு) ஓ! நீங்க சிலோனில யாழ்ப்பாணமா? ஐந்து வருசத்துக்கு முன்னர் நான் யாழ்ப்பாணம் வந்திருக்கிறன். அதனால் யாழ்ப்பாணத்தவரைப் பற்றி நன்றாக அறிவேன். நீங்க எந்தக் கூச்சமு மின்றி என்னோட பேசலாம். உங்களுக்குத் தேவையான உதவிகளச் செய்யவேண்டியது என்னட கடமை."

அலுவலகப் பணியாளனுக்குச் சைகை செய்தார்...

அடுத்தகணம் பழச்சாறு பரிமாறப்பட்டது. கலெக்டரும் சேர்ந்து அருந்தினார்.

"நீங்க பதினெட்டு நாட்கள் கடலில மட்டுமில்லை இங்கையும் சரியாக் கஷ்டப்படுகிறீங்க எண்டு பார்க்கத் தெரியுது. எல்லா இடமும் யாழ்ப்பாணம் மாதிரி வருமா? சரி! நீங்க இப்ப என்னட்ட வந்திருக்கிறீங்க சொல்லவிரும்புகிறதைச் சொல்லுங்க..."

"ஐயா! ஆஸ்பத்திரில எங்களுக்குத் தாற சாப்பாடு அரை வயித்துக் கும் காணாது. பசி தாங்க ஏலாம பிச்சை எடுத்தும் சாப்பிடுறோம்."

"பிச்சை எடுத்தா...?"

வார்த்தையோடு முகத்தில் தெரிந்த மாற்றத்துடன் கண்கள் கலங்க, கைக்குட்டையால் முகத்தை மூடிக் கொண்டார்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுகண்டு அடக்கமுடியாமல் இவர்களும் அழுதனர்...

"நடந்த தவறுக்காக உங்களிடம் மன்னிப்பு கேட்கிறன். இனி மேல இப்படி நடக்காது. நீங்க களவாக நுழையவில்லையே அது ஒரு விபத்து. அதில உங்கட தவறு ஒண்டுமில்ல. அதனால் உங்களை விருந்தாளி களாகப் பார்க்கவேண்டியது எங்கட கடமை."

"உடுப்புகள் இல்லையய்யா!"

"கவலைப்படாதீங்க, சாப்பாட்டை தாராளமாய் தருமாறு ஹொஸ்பிற்றல் டொக்டரோட கதைக்கிறன். ஹொஸ்பிற்றலால வெளியே வரும் வரைக்கும்தான் உங்களுக்கு சிரமம். அதுக்குப் பின்னர் என்னட கண்காணிப்பிலேயே வச்சிருக்கப்போறன். இண்டைக்கே தேவையான உடுப்புகள் வாங்க ஏற்பாடு செய்யிறன்..."

ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரித்தவர்கள், நன்றியுணர்வுடன் கரம் குவித்தனர்...

"வேறு ஏதேனும் தேவையெண்டாலும் சொல்லலாம்..."

"இவ்வளவும் செய்ததே எங்களுக்கு பெரிய உதவியாக இருக்கு. இதோட சேர்த்து எங்களை ஊருக்கு அனுப்பி வச்சீங்களெண்டா புண்ணியமா இருக்கும்."

"நீங்க யோசிக்கத் தேவையில்லை... பொலிஸ் றிப்போட் கிடைச்ச உடனேயே தகவல் அனுப்பிவைச்சிற்றேன். இப்போதுதான் உங்களை சந்தித்திருக்கிறேன். அடுத்து விரிவான அறிக்கையை தயாரித்து அனுப்புவேன். நான் நேரடியாகக் கையாளுற விடயமில்லை. ஓரிசா அரசும், மத்திய அரசின் வெளியுறவுத்துறையும், சிலோன் அரசும் சேர்ந்தே இதைக் கையாள முடியும்... நல்லதே நடக்கும். இப்ப நீங்க இவர்களோட போய் உடுப்புகள வாங்கிக் கொண்டு போங்க... ஏதேனும் தேவையிருந்தா பிறகு கூப்பிடுகிறன்."

கலெக்டர் கரம் கூப்பினார்.

இவர்களும் பதிலுக்கு நன்றி தெரிவித்து கரம் கூப்பினர்.

கலெக்ரர் விடைபெற்றுச் சென்றாலும் ஐவரின் உள்ளத்தி லிருந்தும் விடைபெறாமல், உயர்ந்த இடத்தைப் பிடித்துக் கொண்டார்...

பஜாருக்குக் கூட்டிச்சென்றனர் பொலிஸார். சன நடமாட்டம் அதிகமாக இருந்த அந்தப் பகுதியில், தாங்கள் அணிந்திருந்த உடையுடன் புடவைக் கடைக்குச் செல்வதற்குத் தயக்கமாக இருந்ததால் ஜீப்பினுள்ளே இருந்தனர். பொலிஸார் அவர்களை விட்டபாடாயில்லை. வருமாறு அழைத்தனர். தங்களது நிலையை அவர்களிடம் சொல்லிப் புரியவைக்க முடியாத நிலைமை இவர்களுக்கு...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈற்றில், வேறு வழியில்லாமையால், குற்றவாளிகள் போல கூனிக் குறுகிய நிலையில் தலை கவிழ்ந்தவாறு அவர்களுடன் கடையினுள் நுழைந்தனர்.

பொலிஸாருடன் வந்திருப்பதால் அங்கு நின்ற அனைவரது கண்களும் இவர்களை நோக்கியதாகவே இருந்தன.

கலெக்டரின் அறிவுறுத்தலின்படி, இவர்களின் விருப்பத்திற்கேற்ப கைலி (சாரம்), சேட், பெனியன், துவாய், உள்ளாடை ஆகியவற்றில் ஒவ்வொரு சோடி கொள்வனவு செய்துகொடுத்ததும், விரைந்து வெளியேறிய பின்னர்தான் ஓரளவு அமைதி கிடைத்தது.

பொலிஸார் மீண்டும் வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்...

பழைய உடைகள் தேவையற்ற நிலையில் ஒதுக்கப்பட்டு, புதிய உடைகளை அணிந்தபடியால் முன்னரைப் போலல்லாமல் எவ்வித கூச்சமோ, தயக்கமோ இன்றி வைத்தியசாலையை வலம் வந்தனர்.

அன்று வைத்தியசாலையில் தாராளமான உணவு வழங்கப் பட்டது... கவனிப்புகளும் வழமையைவிட மாறுபட்டதாக இருந்தது.


போதிய அளவு உணவு கிடைத்ததால், அணிவதற்குப் பொருத்த மான உடைகள் கிடைத்ததால் கையேந்தி நிற்கும் நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்க முடிவெடுத்தனர்.

மற்றவர்போன்று சங்கோஜமின்றி நடமாடத் தொடங்கினர்.

இது அவர்களில் ஏற்பட்ட மாற்றம் என்றே கூறலாம்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 16

*1963 ஆடி மாதம் 20 ஆம் திகதி சனிக்கிழமை...*

ஓரிசா மாநிலத்தை வந்தடைந்த பதினெட்டாவது நாள்...

வைத்தியசாலையில் அனுமதித்த இருபத்தொராவது நாள்...

கலெக்ரரின் ஏற்பாட்டில் மூன்று அறைகள், மண்டபம், சமய லறை, மலகூடம், கிணறுடன் கூடிய, 'பங்களா' என அழைக்கப்பட்ட கட்டடத்தில் தங்க விடப்பட்டனர்.

இந்த பங்களா 'பழியா'விலேயே உள்ளது. இவர்கள் சிகிச்சை பெற்ற வைத்தியசாலையிலிருந்து பத்து மைல் வரையான தூரத்தையும் கலெக்ரரின் அலுவலகத்திலிருந்து மூன்று மைல் வரையான தூரத்தையும் கொண்டுள்ளது.

வேறு மாநிலங்களிலிருந்து வருகைதரும் அலுவலக விருந் தினர்கள் தங்குவதற்கென கட்டப்பட்ட கட்டடமே இது. இரண்டு பிரிவு களாகப் பிரிக்கப்பட்டு ஒரு பிரிவு இவர்களுக்கென ஒதுக்கப் பட்டிருந்தது.

பங்களா ஒப்படைக்கப்பட்ட அன்றைய தினம் கலெக்டரும் வந்திருந்தார்.

பங்களாவுக்கென ஒரு காவலாளியும், ஐவரின் பாதுகாப்புக்கு மென இரண்டு பொலிஸாரும் நிமிக்கப்பட்டிருந்தனர். தினமும் 'உடன் கறி' வாங்கிக் கொடுப்பதற்கும், நான்கு நாட்களுக்கு ஒருமுறை உணவுப் பொருட்கள் கொள்வனவு செய்து கொடுப்பதற்குமென ஒருவர் நியமிக் கப்பட்டிருந்தார்.

அன்று, கலெக்ரர் விடைபெறும்போது தனது அலுவலக முகவரியைக் கொடுத்து, தேவை ஏதேனும் இருப்பின் அலுவலக நேரத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திக்குமாறும் கூறிச் சென்றதும் மகிழ்வுடன் உள்ளே நுழைந்தனர்...

பங்களாவுக்கு 200 யார் தூரத்தில் தொடருந்து நிலையம் உள்ளது. ஓரிசாவின் மத்திய தொடருந்து நிலையமான புவனேஸ்வரர் தொடருந்து நிலையத்திலிருந்து தெற்கு நோக்கிய மாநிலங்களுக்குச் செல்லும் தொடருந்து இந்த வழியாகவே செல்கிறது.

குடிமனைகள் மிகக் குறைவாகவும், அவை கொட்டில்களாகவும் இருந்தன. பங்களாவைத் தவிர தொடருந்து நிலையமும் அருகிருந்த பயணிகள் தங்கு மண்டபமுமே சீமேந்துக் கட்டடங்களாகும்.

நான்கு தடிகள் நடப்பட்டு, கூரையிட்டு, அதனுள் மூன்றடி உயரத்தில் அட்டாளை கட்டி, வெற்றிலை, பாக்கு, புகையிலை, பீடி, சுருட்டு, சிகரெற் போன்ற சிறிய பொருட்கள் விற்பனை செய்யும் கடைகள் அப்பகுதியில் இருந்தன.

பக்களா இருந்த பகுதி ஆடம்பரமற்ற பகுதியாக இருப்பினும், ஐவரும் ஓரிசாவின் 'ஆரியபள்ளி' நகர்க் கடற்கரையை வந்தடைந்த 'பதினெட்டாவது நாளிலே' இத்தகையதொரு பங்களாவில் குடியேறிக் கொண்டதை தங்கள் வாழ்வில் ஏற்பட்ட மாற்றமாகவே கருதினர்.

விரும்பிய உணவை, விரும்பிய நேரத்தில், விரும்பிய அளவில் தாங்களே சமைத்து உண்ணக்கூடியதாக இருந்தது.

வாழ்வுக்கு உகந்த வசதியாக இருந்தது.

சுதந்திரமாக உலாவி வரக்கூடிய அனுமதி இருந்தது.

ஒவ்வொரு வாரமும் முகச்சவரம் செய்வதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது.

மேலாக கலெக்ரரின் அன்பும், ஆதரவும் இருந்தது...

இவர்கள் அனுபவித்த துன்ப, துயரங்களைக் குறைக்க ஆற்றுகை செய்யும் நோக்கில் திரைப்படத்திற்கு அழைத்துச்செல்ல கலெக்டரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தும் இவர்கள் செல்ல விரும்பவில்லை.

கலெக்ரரின் ஏற்பாட்டின்படியே கிரமமாக எல்லாம் நடந்தன.

தினமும் காலை 'பரோட்டா'வும் (ரொட்டி) மதியம் மற்றும் இரவில் சோறும் இவர்களின் உணவாக இருக்கும்.

ஒவ்வொரு வாரமும் மாறுகின்ற முறையில் காலை உணவை நவின்சந்திராவும் இராசகுலமும், மதிய மற்றும் இரவு உணவை ஜேக்கப்பும் யேசுராசாவும் சமைத்துக்கொள்வர். பாத்திரங்கள் கழுவுவது எல்வாட்டரின் வேலையாக இருந்தது.

உடன்கறியாக செம்மறி ஆட்டிறைச்சி தினமும் வழங்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரில் அதிகமான நாட்கள் மீன் சாப்பிட்டு பழகியவர்களுக்கு செம்மறி ஆட்டின் இறைச்சியை தொடர்ந்து சாப்பிடுவது சங்கடமாக இருந்தது.

ஞாயிறு தோறும் ஆமை இறைச்சியை சாப்பிடும் இவர்கள், வாரத்தில் இடையில் ஒருநாள் மாட்டு இறைச்சியை சாப்பிடுவதால் ஆட்டு இறைச்சி சாப்பிடும் தேவை குறைவாக இருந்தாலும் செம்மறி ஆட்டு இறைச்சி சாப்பிட்டதே இல்லை.

சில குடியானவர்கள் இடையிடையே மீன்கள் கொண்டு செல்வதைக் கண்டுள்ளதால், அவர்கள் எங்கிருந்து எடுத்து வருகிறார்கள் என்று அறியும் நோக்கில், அவர்கள் சென்றுவரும் பாதையால் சென்றனர். ஒரு மைல் வரையான துரத்தில் ஏரி ஒன்று தெரிந்தது.

நீளமான விசாலமான ஏரியாகவும் இருந்தது. ஏரிக்கு வடக்குப் பக்கத்தால் பாதையும் ஒன்று தெரிந்தது. அதுவே ஏரிக்கான பிரதான பாதையாகும் என ஊகித்தறிந்தறிந்தால் அங்கே சென்றனர்.

அந்த வீதிக்கு அண்மையில் சில வியாபாரிகள் மீன் நிறுத்தெடுத்த வாறிருந்தனர். ஏரியில் சிறிய கட்டுமரங்கள் பலவற்றில் வீச்சுவலை வீசி பிடித்துவரும் மீன்களையே வியாபாரிகள் கொள்வனவு செய்கின்றனர்.

வியாபாரிகளிடம் சைகையால் கேட்டுவிட்டு ஒவ்வொருவராக அவர்கள் கொள்வனவு செய்யும் மீன்களுக்கு பனிக்கட்டி உடைத்துப் போட்டு உதவி செய்தனர். கூலியாக மீன்கள் கிடைத்தன.

ஏரியில் பிடிக்கப்படும் மீன்களை சாப்பிடக்கூடிய சந்தர்ப்பமோ தேவையோ இவர்களுக்கு இதுவரை இருக்கவில்லை. இருப்பினும் இறைச்சியிலிருந்து விடுபடுவதற்காய் சமைத்து உண்ண முடிவெடுத்தனர்.

வியாபாரிகள் கொடுத்த மீன்கள் தாராளமாக இருந்ததால் அன்றைய சமையலுக்கும், மறுநாள் சமைப்பதற்கு ஏதுவாகப் பொரித்து வைப்பதற்கும் எடுத்துக்கொண்டு மிகுதியையும், அன்று தரப்பட்ட இறைச்சியையும் காவலாளி மற்றும் பொலிசாரிடம் கொடுத்து மனநிறைவு அடைந்தனர்.

இடையிடையே இவ்வாறு செய்வதுண்டு. இதனால் அவர்கள் மூவரும் இவர்களுடன் அன்பாக, அக்கறையாகப் பழகலாயினர். தாமாக சில உதவிகளைச் செய்ய முன்வருவர்.

பங்களாவுக்கு முன்னால் 'மதகு' ஒன்று இருந்தது. அந்த மதகுதான் இவர்களின் பிரதான பொழுதுபோக்கு இடம்...

அதில் அமர்கையில் ஊரிலே எந்நேரமும் ஆட்களை சுமந்து கொண்டிருக்கும் மதகுகள் நினைவில் தோன்றின...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிழலான நேரம் தொடங்கி இரவு நெடுநேரமாக அதனிலிருந்து அரட்டையடித்தவாறே இருப்பர்.

தினமும் எதாவதொரு விடயம் அரட்டைக்காக காத்திருக்கும்.

இதுதவிர, கடலில் தத்தளித்துக்கொண்டிருந்த பதினெட்டு நாட்களின் அனுபவங்கள் மற்றும் பங்களாவுக்கு வரும்வரை தரையில் எதிர்கொண்ட பதினெட்டு நாட்களின் அனுபவங்களையும் பகிர்ந்து கொள்வர். இடையிடையே ஒருவர் மாறி ஒருவர் குற்றச்சாட்டுக்களையும் முன்வைப்பர்.

அந்தப் பகுதியில் முக்கியமான ஒன்றாக தொடருந்து நிலையம் உள்ளது. இது வெயில் நேரப் பொழுது போக்குக்கு ஏற்ற இடமுமாகும்

ஓரியா மொழி புரிந்திடாமை மற்றும் தமது உள்ளக்கிடக்கையை மற்றவர்களுக்கு வெளிப்படுத்தக்கூடிய ஆங்கில அறிவு இல்லாமையால் குடியானவர்களுடன் பழகமுடியாதுள்ளமை வேதனையைக் கொடுக் கவும் செய்தது. இதனால், எங்கும் செல்வதையோ, அங்குள்ளவர்களோடு உறவாடுவதையோ தவிர்க்கவேண்டியுள்ளதாலே இவ்விடங்களிலே தமது நேரத்தைப் போக்கினர்.

நக்சலைட் தீவிரவாதிகள் நடமாடும் பகுதி என்பதால் பொலிஸா ரின் கண்காணிப்பு அதிகமாக இருந்தது. அவர்களின் சந்தேகம் தம்மீது திரும்பலாம் என்ற அச்சமும் ஒருகாரணம்.

இரண்டு வாரம் கழிந்த நிலையில், ஆரம்பத்தில் மனதிலிருந்த அச்சம் மெல்ல மெல்ல விலகிட அந்த இடத்தை தென்பு ஆக்கிரமித்தது. அடிக்கடி காண்பவர்களின் அறிமுகம் பெருகிட, மனதிலெழுந்த துணி வால் அந்தச் சுற்றாடலில் நடமாட்டத்தை அதிகரித்துக் கொண்டனர்.

அங்கே குடிமனைகள் குறைவாக இருந்தாலும் தொடருந்து நிலையம் வரையுள்ள வீதியில் ஆட்களின் நடமாட்டமும் துவிச்சக்கர வண்டிகளின் நடமாட்டமும் கணிசமாக இருந்தது.

காரணத்தை அறிந்துகொள்ளும் நோக்கில் அந்த வீதியால் சென்று வர முடிவெடுத்து ஒருநாள் புறப்பட்டுச் சென்றனர்.

ஒரு மைல் வரையான தூரத்திற்கு அப்பால் குடியிருப்புப் பகுதி இருந்தது. அங்கே கொட்டில்களாகவும் கட்டடங்களாகவும் கணிசன மான குடிமனைகள் காணப்பட்டன. குறுக்கு வீதிகளும் பல ஆங்காங்கு இருப்பதை ஆச்சரியமாகப் பார்த்தனர்.

பெரும்பாலும் காற்சட்டை அணிந்திருந்த ஆண்களதும், ஆரிய பல்லை கடற்கரை கிராமத்தில் அணிந்திருந்தது போன்ற உடையுடனான பெண்களதும் நடமாட்டம் கணிசமாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாரம், சேட் அணிந்திருந்த இவர்களை வேடிக்கையாகவே பார்த்தனர்.

அவர்களில் சிலர் மதகிலோ அன்றேல் தொடருந்து நிலையத்திலோ இவர்களைக் கண்டிருக்கவேண்டும். அவர்களது புன்னகை அதனை உணர்த்தியது.

அவர்கள் ஏதோ சொல்கிறார்கள், இவர்களுக்கோ அவை புரியவில்லை. புன்னகை மட்டுமே பதிலாக இருந்தது.

அங்கிருந்து சைகையால் விடைபெற்று சற்றுத் தூரம் செல்கையில் டெனிஸ் விளையாட்டு மைதானம் ஒன்று இருந்தது. அவ்விடத்தில் சிறிது நேரம் தரித்து வாசலூடாக விளையாட்டைப் பார்த்தவாறு நின்றனர்.

அந்நேரம் மைதானத்திற்குள் நுழையவந்த சிலர், இவர்களைக் கண்டதும் அந்நியர் என்பது புரிந்ததால், சில்லறைகள் கொடுத்துச் சென்றனர்.

வைத்தியசாலை வீதியில் இவர்கள் கையேந்திய நாட்கள் நினைவில் தோன்றி மறைந்தன...

மதகுக்குத் திரும்பியதும் கிடைத்த சில்லறையில் பீடா வாங்கிப் போட்டுக்கொண்டனர்.

இப்படியே நாட்கள் தொடர்ந்தபோதும் டெனிஸ் மைதானத்திற்குச் செல்வதை மட்டும் தவிர்த்துக்கொண்டனர்.

மதகில் இவர்கள் இருக்கும்போது, அல்லது குடிமனைகள் இருக்கும் பகுதிக்குச் சென்றுவரும்போது எதிர்ப்படுகின்ற குடியானவர்கள் கனிவோடு பார்ப்பர். புன்னகையால் மகிழ்விப்பர்.

அவர்களில் சிலர் பங்களா காவலாளி மற்றும் பொலிஸார் மூலம் இவர்களைப் பற்றி அறிந்து வைத்திருக்கிறார்கள். இதனால், இவர்களது வரலாறு பலருக்கும் பரவலாயிற்று. இதுவே அவர்களின் கனிவான பார்வைக்கும் புன்னகைக்கும் காரணமாக இருந்தன.

சிலர் கதைப்பதற்கு முயற்சிப்பார்கள். மொழி தடையாக இருப்பதால் ஒதுங்கிக்கொள்வார்கள்.

தினமும் பிரதான குடியிருப்பு வரை சென்று வருவது இவர்களின் பிரதான செயலாக இருந்ததால் மாற்றுடை தேவையாக இருந்தது. அத்துடன், இவர்கள் இப்போது நன்றாகத் தேறியுள்ளதால் கைவசம் இருந்த சேட் இறுக்கமாகவும் இருந்தது. அவற்றைப் பெற்றுவருவதற்காக கலெக்ரரை சந்திக்கச் சென்றிருந்தனர்.

அந்நேரம் அவரது மனைவியும் பிள்ளைகள் இருவரும் கூடவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்ததால் இவர்களை அறிமுகம் செய்துவைத்தார் கலெக்ரர்.

தமது குடும்பத்தைத் தவிர வேறு எவரோடும் தமிழ் கதைக்க முடியாதிருப்பதால் இவர்களோடு நெடுநேரமாக கதைத்து தமது ஆவலை நிறைவேற்றிக்கொண்டனர்.

கலெக்ரரிடம் தாங்கள் வந்தவிடயத்தைக் கூறியதும் அதற்கான ஏற்பாட்டைச் செய்து முன்னரைப்போல ஒவ்வொரு உடையிலும் ஒரு சோடி கிடைக்க ஏற்பாடு செய்தார்.

அடிக்கடி காண்கின்ற பலர், நன்கு அறிமுகமானவர்களாகி விட்டதால் 'நொடியா' என்று அழைத்துச் சிரிப்பதை வழமையாகக் கொண்டிருந்தனர். 'நொடியா' என்பது தேங்காய். 'தேங்காய் சாப்பிடு கிறவர்கள்' என்ற பொருளிலேயே அவ்வாறு அழைத்தனர். இடை யிடையே பீடா, பீடி போன்றவற்றை வாங்கிக் கொடுப்பார்கள்.

நாளாக நாளாக அன்னியோன்னியமாய் பழக ஆரம்பித்தனர். சில பொருட்களின் தமிழ்ச் சொற்களை கேட்டு மனனம் செய்ததுடன், அவர்களும் சில சொற்களைச் சொல்லித்தரலாயினர்.

இவ்வாறே பங்களாவில் குடியேறி ஒரு மாதம் வரை நாட்கள் நகர்ந்தன...

இந்நாட்களில், மீண்டுமொருமுறை கலெக்ரரின் அலுவலகம் சென்றிருந்தனர். அவ்வேளை வாசலில் நின்ற பொலிஸார் நுழைய விடாமல் தடுத்தமையால் அவர்களுடன் முரண்பட்டே நுழைய முடிந்தது.

கலெக்ரரைச் சந்தித்து தாங்கள் ஊருக்கு செல்வது பற்றி அறிய முயற்சித்தபோதும் தீர்க்கமான பதிலை அவரால் கூறமுடியவில்லை. ஏமாற்றத்துடன் திரும்பினர்.

இவ்வாறே கலப்பு நிலையில் நாட்கள் நகர்ந்தாலும், ஊரவர் களோடு பழகுவதற்கு உள்ள மொழித் தடையைத் தவிர பிரச்சினைகள், நெருக்குவாரங்கள், தொந்தரவுகள் இல்லாமல் ஓரளவு யாழ்ப்பாணத்தில் வாழ்ந்ததுபோன்ற உணர்வு இருந்தது.

தற்போது கிடைத்த சுதந்திரமான வாழ்வில், வேறு தேடல்கள் இல்லாமையால் ஊரிலுள்ள உறவுகளின் நினைவுகள் அவர்களைச் சுற்றிச் சுழன்றுகொண்டே இருந்தன. எப்போது சந்திக்க முடியும் என்ற ஏக்கமே வெகுவாகத் தாக்கியது...

இடையூறுகளின்றி இருக்கின்ற இந்நாட்களிலாவது தாங்கள் உயிருடன் இருப்பதை உறவுகளுக்குத் தெரியப்படுத்தலாமென்று எண்ணினாலும் அதைக்கூட நிறைவுசெய்ய முடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியின் முக்கியத்துவத்தை புரிந்துரணமுடியாத ஆயிரத்து தொழாயிரத்தி ஐம்பதுகளில், வருவாய் ஒன்றையே முக்கிய இலக்காகக் கொண்டு மிகச் சிறுவயதில் கடற்றொழிலுக்குச் செல்லத் தொடங்கியதால் பாடசாலைக் கல்வியைப் பெற முடியவில்லை.

இவர்களின் எதிர்காலத்துக்குப் பாரிய பின்னடைவைக் கொடுக் கலாமென்பதை பெற்றோர்கூட உணரத் தவறிவிட்டனர். வாழ்வியல் சூழலில், வாழ்தலுக்கான போராட்டத்தில் வருவாயின் தேவை பிரதான காரணியாக இருந்தது.

பெற்றோரும், மற்றோரும் உணரத் தவறிய காரணத்தால் இன்று இவர்கள், கையாலாகாத நிலையில் குறுகி நிற்கவேண்டியேற்பட்டது. தாங்களடைந்துள்ள இக்கட்டான நிலையால் ஒவ்வொரு நிமிடத்தையும் உறுத்தலிலேயே கடக்கவேண்டியுமிருந்தது.

இவர்களைப் பொறுத்தவரை இதுவரை தாமாகக் கடிதம் எழுத வேண்டிய தேவையோ, அவசியமோ ஏற்பட்டதில்லை என்றே சொல்ல லாம். அதனால், கடிதம் எழுதுகின்ற அனுபவமும் இருக்கவில்லை.

சில சந்தர்ப்பத்தில் பிறர் மூலமாக தகவலை எழுதி அனுப்பி யதுண்டு. இங்குள்ள சூழலில் அவ்வாறும் செய்ய முடியவில்லை.


தினந்தினம் கடிதம் எழுதக்கூடிய சந்தர்ப்பத்தையே எதிர் பார்த்துக் காத்திருந்தனர்...

தமிழ் தெரிந்த ஒருவர் சந்திக்க மாட்டாரா, எங்கள் தகவல்களை எழுத்தில் எழுதி அல்லது முகவரியையாவது ஆங்கிலத்தில் எழுதித் தரமாட்டாரா? என்ற ஏக்கத்தில் தேடியலைந்தனர்...

அந்த நாள் இவ்வளவு நெருங்கி வருமென்று இவர்கள் எதிர் பார்க்கவேயில்லை...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 17

புரட்டாதி மாதம் 21, 22 ஆம் திகதிகளில் ஓரிசா மாநிலத்தின் தலைநகர் புவனேசுவரத்தில் துடுப்பாட்டப் போட்டி நடைபெற்றது. அப் போட்டி நிகழ்வுகளை விவரணையாகத் தொகுத்தளிக்க, பி.பி.சி. சர்வதேச ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தை சேர்ந்த குழுவினர் வந்திருந்தனர்.

அதனோடு ஒட்டிய சிறப்பு நிகழ்வாக ஓரிசாவிலுள்ள பல நகரங்களுக்கும் சென்று அங்குள்ள சிறப்புக்கள், நிகழ்வுகளை விவரணை யாக ஒலிப்பதிவு செய்யும் திட்டத்தின் ஒரு அங்கமாக சத்ரபூருக்கு வந்தவர்கள், மரியாதையின் நிமித்தம் மாவட்டக் கலெக்ரரை சந்திக்க பழியா நகருக்கு வந்திருந்தனர்.

அவர்கள், தங்களது நோக்கம் பற்றிக் கூறியபோது இலங்கையைச் சேர்ந்த ஐந்து பேர் கடலில் தத்தளித்து கரை சேர்ந்து, தங்க வைக்கப் பட்டுள்ள தகவலைக் கலெக்ரர் தெரிவித்தார். முக்கியமான தகவல் எனக் கூறிய குழுவினர், அவர்களைச் சந்திக்கும் விருப்பத்தை தெரியப்படுத்த, அதற்கான ஏற்பாட்டைச் செய்து கொடுத்ததுடன், அக்கணமே விப ரத்தை தமிழில் எழுதி பணியாளன் மூலம் பங்களாவுக்குக் கொடுத் தனுப்பியிருந்தார்.

* * *

1963 புரட்டாதி மாதம் 26 ஆம் திகதி வியாழக்கிழமை...

பி.பி.சி. வானொலி நிகழ்ச்சிக் குழுவினர் மூவர், ஒலிவாங்கி மற்றும் பதிவுசெய்யும் கருவிகளுடன் ஐந்து மணியளவில் பங்களாவுக்கு வந்திருந்தனர். அவர்களில் ஒருவர் மொழி பெயர்ப்பாளராவர்.

ஐவரும் கரம் கூப்பி வந்தவர்களை வரவேற்றனர்.

அவர்களும் கரம்கூப்பினர்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்களைப் பற்றிய விபரம் உலகமெல்லாம் தெரியவரப் போகின்றது, ஊருக்கும் தெரியவரும் என்ற மகிழ்வில் அவர்களுக்கு கையுங்காலும் ஓடவேயில்லை.

தமிழில் வணக்கம் கூறிய மொழிபெயர்ப்பாளர், மற்ற இருவரையும் அறிமுகம் செய்து வைத்தார்.

அவர்களில் ஒருவர் ஐரோப்பியராகவும் இருவர் ஆசியாவைச் சேர்ந்தவர்களாகவும் இருந்தனர்.

"நாங்கள் உலகமெல்லாம் ஒலிபரப்பப்படுகின்ற பி.பி.சி. ஆங்கில செய்தி சேவை நிறுவனத்திலிருந்து வந்திருக்கின்றோம். உங்களைப் பற்றிய விபரத்தை மாவட்டக் கலெக்ரர் மூலமாக அறிந்து உங்களைச் சந்திக்க வந்திருக்கின்றோம். நீங்கள் ஒத்துழைத்தால் உங்களைப் பற்றிய தகவலை எங்களால் ஒலிபரப்ப முடியும்."

"எங்களுக்கு சந்தோஷமுங்க. நாங்க என்ன செய்யவேணுமோ சொல்லுங்க."

"இவர்கள் கேட்பதை நான் உங்களுக்குச் சொல்லும்போது அதற்கான பதிலை உங்களில் ஒருவர் அல்லது இருவர் கூறலாம். யார், யார் கூறப்போகிறீர்கள்?"

நால்வரும் நவின்சந்திராவை சுட்டிக் காட்டினர்.

"நல்லது... உங்களுடைய பெயர்!"

"பீற்றர்... நவின்சந்திரன் என்றே அழைப்பர்."

"ஒவ்வொருவரும் பெயர்களை உங்களுங்கள் குரலிலேயே பதிவு செய்யப் போகிறார்கள். 'மைக்' ஒருவருக்கு முன்னால் கொண்டு வரப்படும்போது அவர் தனது பெயரைக் கூறலாம்."

தலையசைத்தனர்.

ஆங்கிலத்தில் சில தகவல்களை பதிவு செய்த பின்னர் ஒலிவாங்கி ஒவ்வொருவர் முன்னாலும் கொண்டுவரப்பட்டது. அப்போது அவர்கள் தத்தமது பெயரைக் கூறினர்.

இதைத் தொடர்ந்து தொகுப்பாளர் ஆங்கிலத்தில் கேட்க, மொழிபெயர்ப்பாளர் அதனை தமிழுக்கு மொழிமாற்றம் செய்ய, நவின்சந்திரா உரிய பதிலை அளித்தார். அப்பதிலை ஆங்கிலத்துக்கு மொழி மாற்றம் செய்தார் மொழிபெயர்ப்பாளர்.

"நீங்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள்?"

"இலங்கை."

"இலங்கையில் எந்த இடம்?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"யாழ்ப்பாணம்."

"இந்த இடம் ஓரிசா என்று அறிஞ்சிருக்கிறீர்கள்தானே?"

"ஆம் ஐயா!"

"இவ்வளவு தூரம் கடந்து உங்களால் எப்படி வரமுடிந்தது."

"நாங்கள் இலங்கையில் முல்லைத்தீவில தங்கியிருந்து மீன்பிடித் தொழில் செய்துகொண்டிருக்கையில்..."

இயந்திரம் பழுதடைந்தது முதல் உதவிக்காக காத்திருந்தமை, முடியாமையால் காற்றோடு சேர்ந்து கடலில் அடைந்தமை, உணவு தண்ணீர் இல்லாமல் பட்ட அவலம், ஓரிசாவை அடைந்ததன் பின்னர் நடந்தவை அனைத்தையும் சுருக்கமாகக் கூறி முடித்தார். நவின்சந்திரா.

நவின்சந்திரா கூறுகின்றபோது அவர் கூற்றைப் பகுதி பகுதியாக நிறுத்தி ஆங்கிலத்தில் பதிவுசெய்தார் மொழிபெயர்ப்பாளர். அது நவின்சந்திராவுக்கும் பேருதவியாக இருந்தது.

என்ன காரணத்தால் நடந்தது என்பதை மட்டும் கூறாமல் மறைத்து விட்டார்.

"இங்குள்ள மக்கள் உங்களுடன் எவ்வாறு பழகுகிறார்கள்."

"அவர்களின் மொழி தெரியாததால எங்களால் பழக முடியவில்லை. நாங்கள் வேறு நாட்டவர் என்பது அவர்களுக்குத் தெரிந்திருக்கிறது. எங்களுடைய பிரச்சினைகளை அறிந்திருக்கிறார்கள். எந்தச் சந்தர்ப்பத்திலையும் எங்களை வெறுப்பதாகக் காணவில்லை. எதிரே கண்டால் சிரித்தவாறே செல்கிறார்கள். அவர்களுக்குத் தமிழ் தெரியாததே எங்களோட பழகத் தடையாக இருக்கும் என நினைக்கிறேன்."

"நீங்கள் இங்க வந்து எத்தனை நாள்?"

"ஆடி மாசம் ரெண்டாம் திகதி வந்தனாங்க... இண்டைக்கு..."

சுவரில் கிடந்த கலண்டரை நவின்சந்திரா பார்க்கவும், மொழி பெயர்ப்பாளர் முந்திக்கொண்டார்.

"ஐப்பசி மாசம் மூன்றாம் திகதி."

"பாருங்களன், மூன்று மாசத்துக்கு மேலாகிற்று."

"இவ்வளவு காலம் இங்குதான் இருக்கிறீங்களா?"

"இன்னும் எவ்வளவு காலமோ...! எவ்வளவு கெதியா போக முடியுமோ அவ்வளவு கெதியாப் போறதைத்தான் விரும்புகிறோம்."

"நீங்கள் இங்கு இருக்கிறதை அறிந்து இலங்கை அரசாங்கம் ஏதேனும் நடவடிக்கை எடுத்ததா?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“தெரியாது...”

“இந்திய அரசாங்கம்...!”

“அறிவித்திருக்கிறதா கலெக்ரர் சொன்னார். முடிவு தெரியாது. அவர் எங்களுக்கு நிறையவே உதவி செய்திருக்கிறார்.”

“நீங்க எங்களிடமிருந்து என்னத்தை எதிர்பார்க்கிறீங்க?”

“நாங்க ஐந்துபேரும் உயிரோட இருக்கிறோம் என்றதை றேடியோவில சொன்னாலே போதும். உலகமெல்லாம் கேக்கிற உங்கட றேடியோவ எங்கட ஊரில ஆராவது கேட்க மாட்டாங்களா? கேட்டு வீட்டில சொல்லமாட்டாங்களா?”

“உங்கட எதிர்பார்ப்பு நிச்சயமாக நிறைவேறும்... எங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கிய உங்கள் ஒவ்வொருவருக்கும் பீ.பீ.சி. வானொலி சேவையின் நன்றிகள். நீங்கள் விரைவில் உங்கள் குடும்பங்களோடு இணைய எமது வாழ்த்துக்கள்... அதற்கான முயற்சிகளை நாங்களும் முன்னெடுக்க தயங்கமாட்டோம்... நன்றி.”

குரல்ப் பதிவு முடிவுற்றதும் இரு பகுதியினரும் வெவ்வேறு வகையான மனநிறைவுடன் சிறிது நேரம் தமக்குள்ளே உரையாடிக் கொண்டிருந்தனர்.

“இப்ப எங்கட்ட கேட்டதையெல்லாம் எப்ப றேடியோவில சொல்லுவீங்க.”

“எப்பிடியும் ஒரு கிழமைக்குள்ள ஒலிபரப்பாகும், சந்தோஷம் தானே!”

“ஓமுங்க ஐயா எல்லாருக்கும் நல்ல சந்தோஷம்.”

“வீட்டுக்கு நீங்க கடிதம் போடுறனீங்கதானே!”

“இல்லை ஐயா...”

“ஏன்?”

“இங்கிலிசில விலாசம் எழுதத் தெரியாது...”

“ஓ மை கோட்...”

“அதனாலதான் கடிதம் போடயில்லையா?”

“இங்க ஆரட்ட கேக்கிற...!”

மொழிபெயர்ப்பாளர் இருவரிடமும் கூறிட, வியப்பில் அவர்கள்.

“நாங்க உதவி செய்யிறோம். இண்டைக்கு எப்படியும் ஒரு கடிதமாவது போடவேண்டும்... நீங்க அந்த றெயில்வே ஸ்ரேஷனுக்கு வாங்க. அங்க உங்களச் சந்திக்கிறோம்.”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் புறப்பட, ஐவரும் தொடருந்து நிலையத்தை நோக்கி விரைந்தனர்.

அரை மணித்தியாலத்துக்கு மேலாகியும் அவர்கள் வராமை ஏமாற்றமாக இருந்தது. பாதையையே பார்த்துக்கொண்டு நின்றனர்.

சிறிது நேரத்தின் பின்னர் அவர்களது வாகனம் தொடருந்து நிலையத்துக்கு முன்னால் வந்து தரிப்பதைக் கண்டதும் 'போன உயிர் திரும்பி வந்தது' போல இருந்தது இவர்களுக்கு...

சிரித்தவாறு 'எயரோகிராம்' உடன் இறங்கி வந்தார் மொழி பெயர்ப்பாளர்.

"இந்த எயரோகிராமை வாங்கி வரத்தான் நேரம் தாமதமாகிற்று மன்னித்துக்கொள்ளுங்க."

கூறிவிட்டு, நவின்சந்திராவை அழைத்து முகவரியைக் கூறுமாறு கேட்டார்.

தகப்பனின் முழுப்பெயர் மற்றும் முகவரியைக் கூறியதும் 'எயரோக்கிராமில்' எழுதிக்கொண்டு அதனை நவின்சந்திராவின் கையில் கொடுத்தார்.

"இந்தப் பக்கம் வெறுமையா இருக்கு. இதில நீங்க எழுத வேண்டியதை எழுதிவிட்டு, இங்க காட்டியிருக்கிறமாதிரி மடிச்சு, அந்தா தெரியுது பாருங்க பெட்டி, அதில போட்டுவிடுங்க... சரிதானே!"

"நன்றி ஐயா!"


"இந்தப் 'பென்'னையும் வைத்திருங்க உதவியா இருக்கும்."

மூவரும் விடைபெற்றுச் சென்றனர்.

அவர்கள் செல்வதையே பார்த்துக்கொண்டு நின்ற இவர்களுக்கு சொர்க்கத்தில் நிற்பதுபோன்ற மகிழ்வு...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 18

*1963 புரட்டாதி 30 ஆம் திகதி, திங்கட்கிழமை...*

முல்லைத்தீவிலிருந்து காணாமல் போன 108 ஆம் நாள்...

இறந்து விட்டதாகக் கருதப்பட்டு, இரங்கல் திருப்பலியுடன் 'பிச்சை' (ஏழுச் செலவு) கொடுக்கப்பட்ட 91 ஆவது நாள்...

அன்று அதிகாலை புனித யாகப்பர் ஆலயத் திருந்தாதி மணி ஒலித்துக்கொண்டிருந்து...

போதிய வெளிச்சமற்ற இருளில் ஈருருளியில் வந்த ஒருவர் செல்வநாயகத்தின் வீட்டின் முன்னால் இறங்கினார்...

ஆள் வரவைக் கண்டதும் ஊருக்குத் தெரிவிப்பதைப்போல நாய்களின் குரையல்... அதைக்கேட்டுப் பக்கப் பாட்டு பாடுவதைப் போல தூரத்தில் ஊளையிடும் சத்தம்...

சில மணித்துளிகள் ஆலய மணியின் ஒலியோடு நாய்களின் குரையலும், வீட்டுப் படலையில் தட்டப்படும் சத்தமும் கலந்து ஒலித்தது.

இந்தச் சத்தங்கள் அயல் வீடுகளில் இருக்கும் சிலரது உறக்கத்தை கலைக்கவும் செய்தது.

"செல்வநாயம் அண்ணே!... செல்வநாயம் அண்ணே!"

ஆலய மணியொலியும், படலையில் தட்டும் சத்தமும் அடங்கி, அழைப்பின் குரலொலி மேலோங்கியபோதும் நாய்களின் குரையல் மட்டும் அடங்காத நிலையில்...

திடுக்குற்று விழித்த செல்வநாயகத்தின் இதயத்தில் இனம் புரியாத படபடப்பு...

யாராக இருக்கலாமென்ற உள்ளப் போராட்டம்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ஆரது...”

“செல்வநாயம் அண்ணே நான் வாஸ்... அண்ணே! ஒருக்கா வாங்க...”

விபரம் புரியாமல் மிரண்ட நிலையில், இதயத்தின் படபடப்பு தொடர, கதவைத் திறந்துகொண்டு முற்றத்துக்கு வந்தார் செல்வ நாயகம். அவரைப் பின்தொடர்ந்தாள் மனைவி...

உறக்கம் கலைந்த இருபக்கத்து வீட்டாரும் வீட்டுக் கதவைத் திறந்து பார்த்தபடி வாசலில் நின்றனர்...

“ஆர் தம்பி!”

படலையை திறந்தவாறு கேட்ட செல்வநாயகம், அங்கு நின்றவரை அடையாளம் கண்டுகொண்டார்...

“தம்பி நீங்களா? என்ன இந்த நேரத்தில... உள்ள வாங்க...”

“ஒரு முக்கியமான விசயம் சொல்லுறதுக்காக வந்தனான்.”

“என்ன விசயம் தம்பி...”

முற்றத்திலிருந்து வீட்டுக் கதவை நெருங்கும் முன்னரே வாஸ் என்று அழைக்கப்படும் டோமினிக், விரைந்து சொல்லி முடிக்கவேண்டும் என்ற ஆர்வத்தால் கூறிக்கொண்டிருந்த தகவலைக் கேட்டதும், தலையில் கை வைத்தவாறு தரையில் குந்திவிட்டார் செல்வநாயகம்...

அதிசயமா, புதுமையா என்ற ஆச்சரியத்தில், கணவனின் பக்கம் அமர்ந்தாள் மனைவி...

கேட்டுக்கொண்டு நின்ற பக்கத்து வீட்டார் நம்பமுடியாமல் வாயைப் பிளந்தனர்...

வழமைக்கு மாறாக விடியலின் ஒளிக்கு முன்னரே விழித்துக் கொண்டது ஊர்...

எங்கும் பரபரப்பின் வெளிப்படுத்தல்...

விபரம் அறிந்திடும் துடிப்பு பரவலாக...

ஆவல் மேலீட்டில் விரைந்து வந்தவர்களால் செல்வநாயகம் சம்மாட்டியின் வீடும், முன்பக்க வீதியும் நிரம்பிக்கொண்டது...

குழுமி நின்றவர்களிடையே பலதரப்பட்ட கருத்துக்கள், வாதங்கள்...

‘உண்மையா? கட்டுக்கதையா?’ என்று மலைப்போர் ஒரு புறம்...

‘முன்னரும் இப்படியொரு கதை வந்து சுவடே தெரியாம மறைந்து போனதே’ என ஏற்க மறுப்போர் ஒரு புறம்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

‘இத்தனை நாளாச்சு சாத்தியமே இல்லை’ என்று வாதம் புரிவோர் ஒருபுறம்...

‘பொய்தான் கூறுகிறார்கள்’ என்ற கருதலில் நகைப்போர் ஒருபுறம்...

‘கட்டு கேட்டபோது சொன்னது சரியாப்போச்சு’ என்ற நம்பிக்கையாளர் ஒருபுறம்...

‘இவர்கள் சொல்லுறதை நம்பக்கூடியதாக இல்லையே!’ என்ற கருத்தை வெளிப்படுத்துவோர் ஒருபுறம்...

இன்னமும் என்னென்னவோ வெளிப்படுத்தல்கள்...

கருத்துகளின் பரிமாற்றக் களமாக இருந்தது அந்த இடம்.

இவற்றுக்கிடையே உண்மையை அறிந்துகொள்ளும் நோக்கில் ஓடிவந்த, இறந்து விட்டதாகக் கருதப்பட்டவர்களின் குடும்ப உறவுகள், ஆட்களை விலக்கி நகரமுடியாமல் நகர்ந்தனர்...

சம்மாட்டியின் வீட்டுக்குள் போவதற்குள் அவர்களது செவிகள் உள் வாங்கிய பலரது கூற்றுகள் எரிமலைக் குழம்பாக உள்ளத்தில் கொதித்துக் கொண்டிருந்தது...

அவற்றைப் புறந்தள்ளிய ஐந்து குடும்பத்தினரும் ஒருவாறாக சம்மாட்டியின் வீட்டிற்குள் புகுந்துவிட்டனர்.

சம்மாட்டியைச் சுற்றி நின்றவர்கள் வந்தவர்களுக்கு வழிவிட்டு தாமாக விலகிக் கொண்டனர்.

“சம்மாட்டி நாங்க கேள்விப்பட்டதெல்லாம் உண்மையாங்க.”

“என்னண்டு நான் சொல்லுற. லொறி வைச்சிருக்கிற வாஸ்தான் விடியப்புறம் வந்து சொன்னவர். ஓடைக்கரை றோட்டில அவரட வீட்டுக்கு தள்ளியிருக்கிற மலையாளத்து மாஸ்ரர் ஒருவர் சாமத்தில றேடியோவில கேட்டவராம். நடந்த சம்பவத்தையும் சொல்லி எல்லாற்ற பேரையும் சொன்னவங்களாம்.”

“எங்க நிக்கிறாங்கெண்டு சொன்னவங்களாமா?”

“ஓமாம்! அடைஞ்சுபோய் ஓரிசாவில இருக்கிறாங்களாம்.”

“இப்பவே போய்க் கூட்டிவாங்களன்.”

“ஓரிசா என்ன பக்கத்திலையா இருக்கு!”

“கன தூரமாங்க?”

“இந்தியாவிலேயே சரியான தூரம்.”

“எப்பிடியும் கூட்டி வரத்தானே வேணும்.”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“அவசரப்படாதேயுங்க. இதெல்லாம் நாங்க செய்யக்கூடிய வேலை இல்லையுங்க. அப்பிடி நாங்க செய்யலாமெண்டா எப்பவோ செய்து முடிச்சிருப்போமே. இந்திய அரசாங்கமும் இலங்கை அரசாங்க மும்தான் செய்யவேணும்.”

“அரசாங்கத்ததான் கேளுங்க... போட்டாலையும், பிளெயி னாலையும் தேடினதாகச் சொல்லி பம்மாத்துக் காட்டினாங்க. கண்டு பிடிச்சவங்களா? அப்பயெல்லாம் வள்ளம் அடைஞ்சுகொண்டுதானே இருந்திருக்கும். கண் தெரியயில்லையா அவங்களுக்கு. அப்ப கண்டு பிடிச்சிருந்தா இத்தனை நாளும் விட்ட கண்ணீரும், பட்ட அவலம் ஏன் எங்களுக்கு...”

“முடிஞ்சதைக் கதைச்சு ஒரு பிரயோசனமுமில்லை. எங்களால முடிஞ்சவரை முயற்சி எடுப்போம். முதலில எங்களுக்கு விசயத்தச் சொன்ன மலையாளத்து மாஸ்ரரட்ட போய்க் கதைச்சுப்போட்டு வந்து என்ன செய்யலாமெண்டு யோசிப்போம். அவரும் செய்யவேண்டியது பற்றிச் சொல்லுவார்தானே!... இவங்க இவ்வளவு நாளும் ஒரு கடிதமாவது போடாம விட்டிற்றாங்களே...!”


“உயிரோட இருக்கிறாங்களெண்டு தெரியாம செத்திட்டதாக பிச்சை குடுத்திருக்கிறோமே...! சொல்லச் சொல்ல கேட்டுதுகளா சனங்கள். நாய் ஊளையிடுகுது, ஆவி நடமாடுது எண்டு எத்தின கதையச் சொல்ல பிச்சை செலவு செய்ய என்ன பாடு படுத்திச்சிதுகள்...!”

அழுகையும் விக்கலும் அந்த இடத்தை ஆக்கிரமித்தது...

மறுநாள் ஈழநாடு தினசரியில் வெளியான முழுமையான விபரம் பலரையும் ஆச்சரியத்துக்குள்ளாக்கியது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 19

*1963 ஐப்பசி 10 ஆம் திகதி, வியாழக்கிழமை...*

எந்தக் சோழகக்காற்று இவர்களுக்குத் துன்பத்தை ஏற்படுத்தி பதினெட்டு நாட்களும் அலைக்கழித்ததோ அந்தக் காற்று, இப்போது வீரியமிழந்ததாய் இடையிடையே முகங்காட்டுவது மட்டுமல்ல, வாடைக் காற்றாகவும், கொண்டல் காற்றாகவும், கச்சான் காற்றாகவும் மாறி மாறி நிரந்தரமற்ற தன்மையை வெளிப்படுத்தி கொண்டிருந்தது.

கோடை - கொண்டல் காலமென அழைக்கப்படும் இம்மாதத்தில் எந்தவொரு காற்றும் வேகம் கொள்ளமாட்டாது. அதனால் மழைப் பொழிவுகள் இடம்பெற வாய்ப்புண்டு.

இன்று பிற்பகல் திடீரெனப் பெய்த மழையால் மதகில் இருந்த ஐவரும் பங்களாவுக்குச் செல்கையில் நன்றாகத் தோய்ந்துவிட்டனர். துடைத்து, உடைமாற்றி ஆரவாரமின்றி அமர்ந்திருந்தனர், மழை பெய்வதைப் பார்த்தவாறு...

குறித்த இடத்தையே சுற்றிச் சுற்றி வந்ததுடன், தினமும் மதகிலேயே நேரத்தைப் போக்கிக்கொண்டிருந்த ஐவரிடமும் மாறுதலைக் காணக்கூடியதாக இருந்தது.

சிந்தனையோடும் சோர்வுடனும் காணப்படுபவர்களின் முகத்தில் மகிழ்வின் கீறல்கள்... ஊமைக் காயமாய் வருத்தியவை விலகிச் செல்வதைப் போன்ற உணர்வு அவர்களிடம்...

வீட்டுக்கு கடிதம் எழுதி அனுப்பிய அக்களிப்பு, தங்களைப் பற்றிய விபரம் வானொலி மூலம் வெளிவந்திருக்கும் என்ற நம்பிக்கை, விரைவில் உறவுகளைச் சந்தித்து மகிழலாம் என்பதில் உண்டான உறுதியே இவர்களின் மனதிற்கு ஆறுதலைக் கொடுத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளத்தில் நம்பிக்கையும், அக்களிப்பும் நிறைந்திருக்கும்போது உடல் மாற்றம் காண்பதும், ஆறுதல் அடைவதும் இயற்கைதானே! அந்த மாற்றத்தால், அந்தப் பகுதிவாழ் குடியானவர்களுடன் உண்டான நெருக்கத்தால் ஒரு மாதம் விரைந்தே கழிந்தது...

மூன்றாவது தடவையாகக் கலெக்ரரைச் சந்திக்கச் சென்றிருந் தனர். வழமையான வரவேற்பும் உபசரிப்பும் மாற்றமின்றி இருந்தாலும், இவர்களை இலங்கைக்கு அனுப்புவது பற்றிய தீர்க்கமான பதிலை அவரால் கூறமுடியவில்லை.

அவர் முகத்தில் திடீரென ஏற்பட்ட வேதனைச் சாயலைக் கண்டதால் இவர்களிதயம் திக்கென்றது. கலெக்ரரின் வழமையற்ற மாற்றத்தில் ஏதோ சிக்கல் இருக்கிறது என்பதால், மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் இருக்கிறார் என ஊகித்தவர்களாய் விடை பெற்றனர்.

உள்ளக்கூட்டில் நிறைந்திருந்த அக்களிப்பு, நம்பிக்கை, உறுதி யைக் கல்லெறிந்து கலைத்தது போன்ற நிலையால் பலவாறான சிந்தனைகள்...

***

*1963 கார்த்திகை மாதம் 09 ஆம் திகதி, சனிக்கிழமை...*

காலை எட்டு மணியளவில் ஐவரும் தங்கியிருக்கும் வீட்டுக்கு புதிதாக இரண்டு பொலிஸார் வந்திருந்தனர்.

'தொடருந்தில் செல்லவேண்டும் புறப்பட்டு வாருங்கள்' எனச் சைகையாலும், வார்த்தையாலும் அவர்களால் உணர்த்த முனைந்ததை இவர்களால் புரிந்துகொள்ள முடிந்தது. அந்த பக்குவத்தை இவர்கள் அடைந்திருந்தார்கள்.

காரணம் விளங்காதுவிட்டாலும் கலெக்ரரின் ஏற்பாடாக இருக்கலாமெனக் கருதி, தாமதியாது தயாரித்த ரொட்டியைச் சாப்பிட்டு, புறப்படத் தயாராகினர்.

இந்தத் தகவல் காவலாளி மற்றும் காவலுக்கு உள்ள பொலிசார் மூலமாக பீடாக் கடைக்காரருக்கு தெரியவந்தது. அவர் மூலமாக இவர்கள்மீது அனுதாபம்கொண்டு பழகுபவர்களுக்கும் பரவியதை இவர்கள் அறியவில்லை...

சாரம், சேட், பெனியன், துவாய், உள்ளாடையில் ஒவ்வொன் றையும் புடவைப் பையில் எடுத்துக்கொண்டு காத்திருந்தனர்.

சிறிது நேரத்தின் பின்னர் கைக்கடிகாரத்தைப் பார்த்த பொலிஸார், சைகையால் இவர்களை அழைத்து, தொடருந்து நிலையம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கிச் செல்கையில் வழிமறித்த பீடாக் கடைக்காரரும், சில குடியான வர்களும் இவர்களைக் கட்டியணைக்கையில் கண்களிலிருந்து தொடராக நீர் வெளியேறியது.

இவர்களாலும் அழுகையைக் கட்டுப்படுத்த முடியவில்லை. சிறிது நேரம் அழுது, ஓய்ந்து விடைபெற்றனர்...

தொடருந்து நிலைய மேடையிலுள்ள கடிகாரம் 9.30 எனக் காண்பித்தது... சில மணித்துளிகளில் தொடருந்து வந்த தரித்தது. அதில் ஏறிக்கொண்டதும், முற்பதிவு செய்து ஒதுக்கப்பட்டதைப்போல் கருதக் கூடிய வகையில் குறித்த தொடருந்து பெட்டிக்கு அழைத்துச் சென்றனர்.

அந்தப் பெட்டி, உறங்குவதற்கேற்ற வசதியுடன் கூடிய இருக்கை களைக் கொண்டதாக இருந்தது.

தங்களுக்கு விடிவு கிடைத்துள்ளதை எண்ணியவாறு மகிழ்வு மேலோங்க, கலெக்ரரை நன்றியுடன் நினைத்துக்கொண்டு பயணத்தை மேற்கொண்டனர்...

கண்ணுக்கு விருந்தான இயற்கைக் காட்சிகள், வயல்கள், அடர்த்தியான மரங்கள், நகரங்களிலுள்ள குடியிருப்புகள் எனப் பலவற்றை பார்வையிட்டவாறு இவர்களது பயணம் அமைந்தது.

பொலிஸாருக்கு தமிழ் தெரியாது, இவர்களுக்கு ஓரியா மொழி புரியாது. எந்தவொரு அந்நிய மொழியிலும் முதல் அறிந்துகொள்வது தூஷண வார்த்தை என்பது யதார்த்தமாய் மாறிவிட்டதால், அவற்றில் சிலவும் ஒரு சில பொருட்களின் பெயர் மற்றும் சொற்களையும் தவிர வேறெதுவும் புரியாது. இந்நிலையில் அவர்களுடனான உரையாடல் இன்றியே பயணம் தொடர்ந்தது.

மதியம் தாண்டிய பின்னர், ஒரு தொடருந்து நிலையத்தில் தரித்தது இவர்கள் பயணித்த தொடருந்து. பொலிஸாரில் ஒருவர் இறங்கினார்.

இதுவரை தொடருந்து தரித்து நின்றதைவிட அதிக நேரம் தரித்து நின்றதால், விபரம் அறியும் நோக்கில் சாளரத்தால் எட்டி மேடையைப் பார்த்தனர். பயணிகளின் நடமாட்டம் கணிசமாக இருந்தன.

ஆங்காங்கு கூடைகளுடன் நின்ற ஆண்களும் பெண்களும் பொதிகள் விற்பனை செய்வதும், சிலர் போத்தல்கள் மற்றும் சிறிய பிளாஸ்ரிக் பைவர்களில் தண்ணீர் வார்ப்பதுமாக இருந்தனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து புறப்படும் இரவு தபால் தொடருந்து பயணத்தின்போது கொடிகாமத்தில் உணவுப்பொதி விற்பனை செய்வதை நினைத்துக்கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA JPL

இறங்கிய பொலிஸ், ஐந்து பொதிகள் மற்றும் நீர் நிரம்பிய பிளாஸ்ரிக் பைவரை எடுத்துவந்து, இவர்களிடம் கொடுத்து சாப்பிடுமாறு கையால் சைகை செய்தார்.

பொதியில் சோறும் காய், கறியும் கலந்து குளைசாதம் போல இருந்ததால் சாப்பிடக்கூடியதாக இருந்தது.

பொலிஸார் தமக்கெனப் பொதி வாங்கிக்கொள்ளாமல் தாம் கூடவே எடுத்துவந்த உணவைச் சாப்பிட்டனர்.

சிறிது நேரத்தால் உரத்து ஒலி எழுப்பியது தொடருந்து... இடைவெளிவிட்டு மீண்டும் ஒலி எழுப்பியதும் புறப்பட்டது...

இரண்டு பகலும் இரண்டு இரவும் பயணத்தைத் தொடர்ந்த தொடருந்து, இவ்வாறே காலை, மதியம், இரவு என உணவருந்துவதற்கு ஏதுவாகத் தரித்தே சென்றது.

இரவு பகலென்றில்லாமல் தூக்கம் வரும்போதெல்லாம் உறங்கி எழுந்த இவர்களுக்கு, நீண்ட தொடருந்து பயணம் புதிது என்பதால் உடலில் உபாதை ஏற்படவும் செய்தது. தாங்கள் இலங்கைக்குச் செல்லவுள்ளதை நினைத்துச் சகித்துக்கொண்டனர்.

ஓய்வற்ற தனது நீண்ட பயணத்தின் பின்னர், மூன்றாம் நாள் காலையில், மங்கிய சூரிய ஒளி நேரத்தில், தொடருந்து நிலையமொன்றில் தரித்தது.

அதனுடைய இறுதித் தொடருந்து நிலையமாக இருக்க வேண்டும். பயணிகள் முண்டியடித்துக்கொண்டு இறங்கினர். அனைவரும் இறங்குவதால் உண்டான நெரிசலால் சற்றுத் தாமதமாக இவர்களை இறக்கி அழைத்துச் சென்றனர் பொலிஸார்..

அங்கு செவிவழி புகுந்த தமிழ் உரையாடலைக் கேட்கக் கேட்க இவர்களுக்கு உள்ளூர மகிழ்வு...

அந்த மகிழ்வோடு மேடையால் நடந்து முன்பக்கம் வந்தனர். அங்கும் பெரிய கூட்டமாக இருந்தது. அந்த இடத்தில் ‘தமிழ்நாடு/ சென்னை மத்திய புகையிரத நிலையம்’ எனப் பெரிய எழுத்தில் பொறிக்கப்பட்டிருத்தை வாசித்த பின்னர்தான் தாங்கள் நிற்கும் இடத்தை அறிந்துகொண்டனர்.

இரட்டிப்பு மகிழ்ச்சி...

சொந்த இடத்துக்கு வந்ததுபோன்ற உணர்வு...

தயக்கமில்லாமல் எவரோடும் கதைக்கலாமென நினைத்தபோது தேனாக இனித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிது நேரத்தால் அங்கு வந்து தரித்தது ஜீப். அதில் இவர்களும் பொலிஸாரும் ஏறிக்கொண்டதும் புறப்பட்டு, 'மத்திய காவல்துறை நிலையம்' என எழுதப்பட்டிருந்த கட்டடத்தில் தரித்தது.

மீண்டும் பொலிஸ் நிலையத்தில் இறக்கப்பட்டதால் விலகிச் சென்ற பயம் மெல்லத் தொடங்கியது.

உள்ளே அழைத்துச்சென்ற ஓரிசா பொலிஸார், இவர்களை ஒப்படைத்து, ஒப்பம் பெற்று வெளியேறினர்.

இவர்கள் நன்றியுடன் கரம் குவித்தனர்...

✶✶✶

*1963 கார்த்திகை மாதம் 11 ஆம் திகதி, திங்கட்கிழமை...*

*அன்பாக உரையாடினர் காவல் துறையினர்...*

இவர்களுக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை... வெட்டப் படவுள்ள ஆடுக்கு முதலில் இலை, குழை போடுவதுபோல இதுவும் இருக்குமா என நினைக்த் தோன்றியது...

அங்கு இருந்த ஒரு தண்ணீர்த் தொட்டியைக் காண்பித்து, குளிக்கலாம் எனக் கூறியதும் இனம் புரியாத மகிழ்வு ஐவருக்கும்.

அந்தத் தொட்டியில்தான் காவல்துறையினரும் குளித்துக் கொண்டிருந்தனர்.

பக்கத்திலிருந்த சலூனைக் காண்பித்து, அது திறக்கப்பட்டதும் முடிதிருத்தி, முகச் சவரம் செய்துகொள்ளுமாறி கூறி அங்கிருந்த வாங்கில் இருத்திவிட்டனர்.

சலூன் திறக்கப்பட்டதும் பொலிஸார் கூறியவாறு செய்து வந்து, தாங்கள் அணிந்திருந்த உள்ளாடையோடு தொட்டியில் கிடந்த நீரை வாளியால் கோலி குளித்து, செங்கல்லை சீமேந்துக் கட்டில் உரசி எடுத்த தூளைக்கொண்டு பற்களைத் தேய்த்துக் கொண்டனர்.

நன்றாகக் குளித்து உலர்த்திய பின்னர் தாங்கள் கூடவே எடுத்து வந்திருந்த உடையை மாற்றிக்கொண்டு காவல் நிலையத்துக்குள் சென்றனர்.

ஐவருக்கும் பாலில் கலந்த கோப்பி வழங்கப்பட்ட பின்னர், நடந்த விபரங்களைக் கேட்டுப் பதிவுசெய்து கொண்டனர்.

காலை உணவாக இட்லி வழங்கப்பட்டது...

காவல்துறையினரின் கவனிப்பு இவர்ளை மெய்மறக்கச்செய்தது.

அருகாக இருந்த தமது தங்குவிடுதிக்கு அழைத்துச்சென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓய்வெடுக்குமாறு கூறி வெளியேறினர்.

ஆரம்பத்தில் இருந்த சந்தேகம் விலகிக்கொண்டது.

பிரயாணக் களைப்பை போக்க ஓய்வு தேவைப்பட்டதால் படுத்துக்கொண்டனர்.

பி.ப. ஒரு மணியளவில் அங்கேயே மதிய உணவு வழங்கப் பட்டதும் சாப்பிட்டு, மீண்டும் ஓய்வெடுத்துக்கொண்டு, பி.ப. நான்கு மணியளவில் காவல் நிலையத்துக்கு வந்தனர்.

"நீங்க இங்க அண்மையில இடமேதும் பார்க்கப்போறண்டா போயிற்று வாங்க. சைக்கிள் தேவையெண்டா அந்தா இருக்கிற சைக்கிளில எடுத்துப் போங்க. உங்களுக்கு இடம் புதுசா இருக்கும் கவனம். இருட்டுக்கு முன்னே இங்க வந்துவிடவேணும்"

சைக்கிளில் மெட்ராசில் சில இடங்களைப் பார்க்கக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்தைப் பெருமையாகக் கருதியதால் மறுக்க விரும்ப வில்லை.

"ஓமுங்க ஐயா! நாங்க கொஞ்சநேரம் இடத்தப் பார்த்திட்டு வந்திடுவோம்."

அந்த சுற்றாடலிலுள்ள வீதிகள் பற்றிக் கேட்டறிந்து, சைக்கிள் ஓடக்கூடிய நவின்சந்திரா, யேசுராசா, ஜேக்கப் ஆகியோர் தனித்தனி சைக்கிளில் புறப்பட்டனர்.

காவல்துறையினர் கூறிய வீதியால் மவுண்ட் வீதி வரை சென்று, அவ்வீதியிலும் கொஞ்சத் தூரம் பயணித்து சில கட்டடங்கள், விற்பனை நிலையங்களைப் பார்வையிட்டு, வந்த வீதியால் திரும்பி ஆறு மணிக்கு முன்னரே காவல் நிலையத்தை வந்தடைந்தனர்...

மெட்ராசையே சுற்றிவந்த மகிழ்ச்சி மூவருக்கும்...

பார்க்கத் தவறிய இருவருக்கும் தாங்கள் பார்த்தவற்றைப் பெருமையாகக் கூறி மகிழ்ந்தனர்.

"இப்ப போய் றெஸ்ற் எடுத்துக்கொள்ளுங்க. பத்து மணிக்கு தனுஸ்கோடி போற றெயின் இருக்கு அதில நீங்க போகவேணும்."

'தனுஷ்கோடி' என்ற சொல்லைக் கேட்டதுமே தேகம் சிலிர்த்து உள்ளம் குளிர்ந்தது. அங்கிருந்து கப்பல் தலைமன்னாருக்குப் போய் வருவதை இவர்கள் அறிந்திருக்கிறார்கள். இலங்கைக்குச் செல்லப் போகிறோம் என்ற மகிழ்வால் துள்ளிக் குதிக்கவேண்டும் போல இருந்தது. ஆனால், அந்த இடம் அமைவாக இருக்கவில்லை.

காவல்துறையினர் கூறியதற்கமைய விடுதியில் ஓய்வெடுக்கச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றாலும். எல்லை கடந்த சந்தோஷத்தால் உயரப் பறப்பதைபோல உணர்ந்ததால் ஓய்வு அவர்களுக்கு தேவைப்படவில்லை.

எட்டு மணியளவில் இரவு உணவு வழங்கப்பட்டது.

இரவு ஒன்பது மணியளவில் ஜீப்பில் கூட்டிவந்த காவல் துறையினர், தனுஷ்கோடி செல்லும் தொடருந்தில் படுக்கக்கூடிய வசதியான இருக்கைகளுள்ள பெட்டியில் அமரச் செய்தனர்.

"ஓரிசா பொலிஸ், உங்களை எங்களிடம் ஒப்படைத்தனர். அவர்களுக்கு உங்களை இங்கே விட்டுவிட்டால் போதுமென்ற எண்ணமே தவிர, உங்கள் விடயமாக கலெக்ரரைத் தவிர மாநில அரசிடமிருந்து எந்த உத்தரவையும் பெற்றிருக்கவில்லை. சிலோனில இருந்து துன்பப்பட்டுவந்த தமிழர்களான உங்களது நிலையை அறிந்த ஏ.எஸ்.பி. ஐயா, மனமிரங்கி செய்த உதவிதான் இத்தனையும். நாங்க சட்டப்படி செய்யிறண்டா உங்களை லொக்கப்பில வைக்கவேணும். அதுக்குப்பிறகு அலுவலெல்லாம் செய்து முடிய எவ்வளவு காலம் செல்லுமோ தெரியாது. அதனாலதான் ஐயா இப்படிச் செய்தவர். நீங்க யோசியாதையுங்க நிச்சயமா குடும்பத்தோட சேர கடவுள் துணை யிருப்பார்."

"நன்றி ஐயா!"

கரம் குவித்து நன்றி கூற, அவர்களும் பதிலுக்கு கரம் குவித்து விடைபெற்றனர்.

காவல்துறையினர் இதுவரை செய்த மனிதாபிமான உதவிகளுக் கான காரணம் இப்போதுதான் வெளிச்சமானது.

உணர்வுப் பெருக்கால் கலங்கிய கண்களுடன் பேச்செதுவுமின்றி மௌனமாயினர்...

பத்து மணியளவில் தொடருந்து புறப்பட்டது...

முற்றிலும் தமிழர்களாலேயே நிறைந்துள்ள தொடருந்து என்பதால் அச்சமின்றி பயணித்தாலும், கைவசம் நுழைவுச்சீட்டு இல்லாமை மனதை உறுத்தவே செய்தது.

"ஓரிசாவில் இருந்து வரேக்க பொலிஸார் கூடவே இருந்ததால் பயமிருக்கவில்லை. இப்போ நாங்கள் மட்டுமே இருக்கிறோம். சிலவேளை ரிக்கற் செக்கர் வந்தால்..."

வாயைப் பிளந்தனர்.

"என்ன செய்யிறது?"

"மெட்ராஸ் காவல்துறை தங்களால முடிஞ்சதை செய்திருக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறாங்க. அந்தரிச்ச இடத்தில இந்த உதவி மறக்கமுடியாத பெரிய உதவி. சரி, எதுவாயிருந்தாலும் வரும்போது பார்ப்போம்.''

நவின்சந்திராவின் பதிலால் உண்டான தற்துணிவில் பயணத்தைத் தொடர்ந்தனர்.

தொடராக இரண்டு நாட்கள் மேற்கொண்ட தொடருந்து பயணத்தால் உண்டான தாக்கம் முற்றாக நீங்காத நிலையில், இரவின் அமைதியைத் துரத்தும் தொடருந்தின் இரைச்சலால் உறங்குவதும் எழுவதுமாகவே இருந்தனர். இருப்பினும் பயண தூரமும், களைப்பும் பெரிதாக இருக்கவில்லை.

திருச்சி, மதுரை போன்ற முக்கிய நகரங்களைக் கடந்து மண்டபத்திற்கு தொடருந்து வருகையில் நன்றாக விடிந்து விட்டது.

மண்டபத்திலிருந்து இராமேஸ்வரம் செல்வதற்குள்ள ஒரேயொரு பாலமான 'பாம்பன் தொடருந்து தரைவழிப் பாலத்தால்' பயணித்த போது கடலின் மேலாகப் பறப்பதைப் போல உணர்ந்தனர்.

பாலத்தில் பக்கத் தடுப்பணை இல்லாததாலும் பாலம் கண்களுக்குப் புலப்படாமல் இருப்பதாலும் அவ்வாறான உணர்வு ஏற்பட்டிருக்கலாம்.

பாம்பன் தொடருந்து தரைவழிப் பாலத்தை இவர்கள் மன்னாரில் தங்கியிருந்து தொழில் செய்கையில் கண்டிருக்கிறார்கள்.

தீடைக்கு (இராமர் அணை) முன் பக்கத்தால் வெகு தூரம் சென்று, அப்பாலம் தெளிவாகத் தெரியும் வரையான பகுதியில் பல தடவைகள் தொழில் செய்திருக்கிறார்கள். ஆனால், பாலத்தில் பயணிப்பது இதுதான் முதற் தடவை என்பதால் மகிழ்வாக இருந்தது.

திடீரென தொடருந்தின் பயணம் தடைப்பட்டது...

பயம் தொற்றிக்கொண்டதால் புரியாமல் விழித்தனர். கடல் மட்டும்தான் விசாலமாகத் தெரிந்தது. தொடருந்து நிலையம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. சங்கடத்தால் அங்குமிங்கும் பார்ப்பதை அவதானித்தார் பயணி ஒருவர்.

"கப்பல் போறதுக்காக இது நிக்குது சார்..."

"கப்பல் போறதுக்கா...!"

'பயணி கூறியதில் இவர்களுக்கு தெளிவில்லை. கப்பல் போவதற்கும் இதற்கும் என்ன சம்பந்தம்?'

மனதில் கேள்வியாய்த் தோன்றிட ஒருவரை ஒருவர் பார்த்தனர். இவர்களது சங்கடத்தைப் புரிந்துகொண்ட பயணி விபரித்தார்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழமான இந்த பாக்குநீரிணையில் கப்பல் போக்குவரத்தும் நடைபெறுகின்றது. நீரிணையை ஊடறுத்து பாலம் கட்டப்பட்டிருப்பதால் அதன் கீழாகக் கப்பல் செல்வதற்கு ஏதுவாக, பாலத்தின் நடுப்பகுதியை உயர்த்தும் முறையில் வடிவமைத்துள்ளனர். இதனால் இதனை 'கொடுங்கைப்பாலம்' என்றும் 'இராட்டணப் பாலம்' என்றும் சொல்லுவர்.

பாலத்துக்குக் கீழாக கப்பல் கடக்கவுள்ள சந்தர்ப்பத்தில் குறித்த இடத்தில் தொடருந்து நிறுத்தப்படும். பாலத்தின் கீழாகக் கப்பல் கடப்பதற்கு வசதியாக, தொடருந்து பாதை மையத்திலிருந்து இரு பக்கத்தாலும் குறுக்கே இரண்டாகப் பிளந்து உயர எழும். அப்போது கப்பல் அப்பகுதியைக் கடந்து செல்லும்.


கப்பல் கடந்ததும் உயர எழுந்த கொடுங்கைப்பாலம் பதிந்து முன்னரைப்போல் சேர்ந்துகொள்ளும். அதன் பின்னரே தொடருந்து பயணிக்க அனுமதி கிடைக்கும்.

பயணி குறிப்பிட்டதைப்போல சரக்குக் கப்பல் ஒன்று பாலத்தை நெருங்கி வருவதையும், பாலத்திற்குள் நுழைவதையும், மறு பக்கத்தால் வெளியேறுவதையும் இவர்களால் பார்க்கக்கூடியதாக இருந்தது.

சிறிது நேரத்தால் அங்கிருந்து புறப்பட்டு இராமேஸ்வரத்தில் தரித்த தொடருந்து, மீண்டும் தனுஷ்கோடி நோக்கிப் பயணித்தது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## 20

*1963* கார்த்திகை மாதம் 12 ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை...

தனுஷ்கோடி துறைமுக தொடருந்து நிலையத்தை வந்தடைய காலை ஒன்பது மணியாகி விட்டது...

'வில்' போன்ற கூர்மையான முனையையுடைய தரையமைப்பைக் கொண்டதால் தனுஷ்கோடி (வில்முனை), (தனுஷ் என்பது வில், கோடி என்பது முனை) என அழைக்கப்படுகிறது.

செழிப்பு மிக்க, உறக்கமற்ற நகரங்களில் இதுவும் ஒன்றாகும்.

அங்கு காணப்பட்ட கத்தோலிக்க மற்றும் இந்து ஆலயங்களும் பெரிய, சிறிய கட்டடங்களும், பலவகை விற்பனைக் கடைகளும் அந்தப் பகுதியின் செழிப்புக்கு சான்று பகர்ந்தன.

இந்தியாவின் ஏனைய பகுதிகளுக்கு இங்கிருந்து செல்லக்கூடிய ஒரேயொரு தரைவழிப் போக்குவரத்து, மண்டபம் வரை நீண்டுள்ள பாம்பன் தொடருந்து தரைவழிப் பாலமாகும். இதனால், தொடருந்து இருக்கைகளை கையகப்படுத்தி வைத்திருந்து பயணிகளிடம் பணம் பெறுவதில் தரகர்களின் ஆதிக்கம் அதிகமாக இருக்கிறது.

மண்டபத்திலிருந்துதான் ஏனைய போக்குவரத்து சேவைகளைப் பெறமுடியும்.

"இண்டைக்கு தலைமன்னாரிலிருந்து வாற கப்பல் நாளைக்குத் தான் இங்கயிருந்து வெளிக்கிடுமாம்."

துறைமுகத்துக்குச் சென்ற நவின்சந்திராவும் யேசுராசாவும் கூறியவாறு வந்தனர்.

ஐவருக்கும் பசி எடுத்தது... உணவு கிடைக்கக்கூடிய எந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்க்கமும் இல்லை.

ஓரிசாவில் பிச்சை எடுத்து சேகரித்த சில்லறைகளில் எஞ்சியிருந்த சில்லறைகளை எடுத்து, அண்மையில் திறந்திருந்த உணவகத்தில் பணிஸ் வாங்கிவந்து சாப்பிட்டு, தொடருந்து மேடையில் இருந்த தண்ணீர்க் குழாயில் தண்ணீர் குடித்து அப்போதையப் பசியைப் போக்கிக் கொண்டனர்.

மதியமும், இரவும் அவ்வாறே கையிலிருந்த சில்லறைக்கு ஏற்ப சாப்பிட்டு, தரித்து நின்ற தொடருந்து பெட்டியில் உறங்கச் சென்றனர்.

தமது சுய மரியாதையை கைவிட்டு கையேந்தி நின்றதால் கிடைத்த பணம், தங்கள் வயிற்றுப் பசியைப் போக்க உதவியதை நினைத்தபோது தேகம் சிலிர்த்தது...

***

கார்த்திகை மாதம் 13 ஆம் திகதி, புதன்கிழமை...

காலையில் பொழுது புலரும் நேரம்...

தொடருந்து மேடையில் பயணிகள் நடமாட்டத்தின் சத்தம் கேட்டு எழுந்தவர்கள், ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தனர்.

தங்களைப் போலவே இரவு தொடருந்தில் உறங்கிய பயணிகள் பொதிகளுடன் இறங்குவதும் செல்வதுமாக இருந்தனர். தாங்களும் விரைந்து செயற்பட்டு தொடருந்து கழிவறையில் முகம் கழுவி உடனேயே துறைமுகப் பகுதிக்குச் சென்றனர்.

ஒவ்வொரு பயணியும் தம்மோடு கணிசமான பொதிகளை வைத்திருந்தனர். இவர்கள் வசம் சிறிய புடவைப் பைகளே இருந்ததால், காலை ஒன்பது மணியளவில் பயணிகள் நுழையத் தொடங்கியதும் சுற்றி, வளைந்து மற்றவர்களைக் கடந்து முன்னேற வசதியாக இருந்தது. சிலரிடம் ஏச்சு வேண்டவேண்டியுமிருந்தது. அநேகர் இலங்கையர்களாகவே இருந்தனர்.

வரிசையில் செல்பவர்கள் பத்துப் பத்துப் பேராக உள்ளெடுக்கப்பட்டனர். ஒவ்வொரு உள்வாங்கலுக்கு இடையிலும் நேர இடைவெளி இருந்தது.

அவ்வாறு உள்ளெடுக்கப்பட்ட பத்துப் பேருடன் சென்ற இவர்களிடம் நுழைவுச்சிட்டை இருக்கவில்லை... கடவுச்சீட்டும் இருக்கவில்லை. தலையடித்துக் கொண்டார் அங்கு நின்ற அதிகாரி.

தாங்கள் கடலில் தத்தளித்து ஓரிசாவை அடைந்த விபரத்தைக் வேதனையுடன் கூறி சாப்பிடக்கூட பணம் இல்லை என்றனர்.

மனமிரங்கிய அதிகாரி, குடிவரவு குடியகல்வு உயர் அதிகாரியிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுப்பி வைத்தார்.

அவரிடம் தங்களுக்கு நடந்த அனைத்தையும் சுருக்கமாக கூறி முடிப்பதற்கிடையில் கண்ணீர் முந்திக்கொண்டது.

இவர்களது கூற்றை ஏற்றுக்கொண்ட அந்த அதிகாரி, ஆறுதல் கூறிவிட்டு காரைக்குடிக்குச் சென்று அங்கிருக்கும் கலெக்ரரிடம் விபரத்தைக் கூறி கடிதம் எடுத்துவருமாறு ஆலோசனை கூறினார்.

ஏற்றுக்கொண்டு வெளியேறியவர்கள், தொடருந்து நிலைய கருமபீடத்தில் விசாரித்து, பத்து மணியளவில் மதுரைக்குப் புறப்பட்ட தொடருந்தில் ஏறிக்கொண்டனர்.

மதுரையில் இறங்கி, பிறிதொரு தொடருந்தின் மூலம் காரைக்குடி (செட்டிநாடு) வந்தடைய பி.ப. நான்கு மணியாகிவிட்டது. அந்நேரம் அலுவலகங்கள் பூட்டப்பட்டிருக்கும் என்பதால் எங்கு செல்வதென்று புரியாமல் தொடருந்து நிலைய மேடையிலுள்ள வாங்கில் அமர்ந்து கொண்டனர்.

அரை மணித்தியாலம் வரை அங்கிருந்தவர்களுக்கு பசி எழுந்த பின்னர்தான் தாங்கள் இன்று முழுவதும் சாப்பிடவில்லை என்பது நினைவுக்கு வந்தது.

பசியைப் போக்கும் நோக்கில் தொடருந்து மேடையிலிருந்த தண்ணீர் குழாயில் தண்ணீர் குடித்து வயிற்றை நிரப்பினர்.

இது அவர்களுக்குப் புதிதல்லவே...

மீண்டும் இருக்கையில் அமரச் செல்கையில் இரண்டு வாலிபர்கள் இவர்களை நெருங்கி வந்தனர்.

"நீங்க இலங்கையரா?"

"ஓம் தம்பி."

"எந்த இடம்?"

"யாழ்ப்பாணம்."

"யாழ்பாணத்தில எங்க?"

"ஏன் தம்பி கேக்கிறீங்க?"

"நாங்களும் இலங்கையர்தான். யாழ்ப்பாணத்தில மயிலிட்டியில இருக்கிறோம்."

"மயிலிட்டியா! அங்க எனக்கு கனபேரைத் தெரியும்."

நவின்சந்திரா தனக்கு அறிமுகமான சம்மாட்டிமார் மற்றும் சில தொழிலாளரின் பெயர்களைக் கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் கூறிய சம்மாட்டிமாரை அவர்கள் அறிந்திருப்பதால் புன்னகை தவழ இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர்.

"அவர்களை உங்களுக்கு என்னண்டு தெரியும்."

"நாங்க குருநகரில இருக்கிறனாங்க..."

"குருநகரெண்டா தெரியவரும்தான். களைச்சுப்போய் வந்திருக் கிறீங்க... இதில இருங்க கதைப்போம்."

ஏழு பேரும் வரிசையாக வாங்கில் அமர்ந்தனர்.

"உங்களப் பார்த்தா பெரிய சிக்கலில் மாட்டுப்பட்டு இருக்கிற தைப்போல தெரியுது. எங்களால ஏதும் உதவிசெய்ய ஏலுமண்டா செய்யிறோம். ஏன் இப்படி இருக்கிறீங்க எண்டு சொல்லுறீங்களா."

"அது பெரிய சோகக் கதைதம்பி. எதிரிக்குகூட இப்படி நடக்கக் கூடாது. தம்பி! நைலோன்வலைத் தொழில்தான் எங்கட தொழில். முல்லைத்தீவில தொழில் செய்தனாங்க..."

எனத் தொடங்கி, தொழிலுக்குப் புறப்பட்டதிலிருந்து நடந்த துன்ப நிகழ்வுகள், வேதனைகளென இற்றைவரை நடந்தவற்றைக் கூறிமுடித்தனர்.

கண்கலங்க இருவரும் அக்கறையாய்க் கேட்டுக்கொண்டி ருந்தனர்.

சில வினாடிகள் மௌனம்...

"நீங்க ஒண்டுக்கும் யோசிக்க வேணாம் நாளைக்கு நாங்களே கலெக்ரரட்ட கூட்டிப்போறோம்... சாப்பிட்டீற்றிங்களா?"

"இல்லை தம்பி..."

தலை குனிந்தவாறு கூறினார் எல்வாட்டர்.

"வாங்க கடையில ஏதும் சாப்பிடலாம்."

"தம்பி தவறாக நினைக்காதீங்க. எங்கட்ட காசு இல்லை..."

"உங்கட்ட காசப்பற்றி ஏதும் கதைச்சனாங்களா? பசியாயிருப் பீங்க வாங்க."

அண்மையிலிருந்த உணவகத்துக்குக் கூட்டிச் சென்றனர். அந்நேரம் அங்கு சாப்பாடு இல்லாததால் சிற்றுண்டிகளே சாப்பிடக் கூடியதாக இருந்தது.

உணவகத்தை விட்டு வெளியேறினர்.

"தம்பி உங்களப் பற்றி ஒண்டும் சொல்லயில்லையே!"

"என்னட பேர் அழகரட்டினம். இவனட பெயர் பரந்தாமன்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

‘அழகப்பா கல்லூரியில்’ படிக்க வந்தனாங்க. இங்கதான் வீடெடுத்து தங்கியிருக்கிறோம்... நீங்க இரவுக்கு எங்கட வீட்டிலேயே தங்கலாம்... வாங்க வீட்டபோய் பேசுவோம்.”

வீட்டுக்கு அழைத்துச் செல்கையில் இவர்கள் கல்வி கற்கும் கல்லூரியைக் கடந்தே செல்லவேண்டியிருந்தது.

பிரமாண்டமான கட்டடம் அது.

காரைக்குடி ‘செட்டிநாடு’ என்று அழைக்கப்படுவதற்கு ஏற்றாற் போலவே செல்வம் கொழிக்கும் இடமாகத் தெரிந்தது அந்தச் சுற்றாடல்.

விதம் விதமான வர்ணக் கலவையில் காணப்பட்ட அழகிய உயர்ந்த கட்டடங்கள், வீடுகள், ஒழுங்கமைக்கப்பட்ட வீதிகள், அலங் கரிக்கப்பட்ட வீதியோரங்களைப் பார்த்து மெய்மறந்தவர்களாக அவர்களது வீட்டை அடைந்தனர்.

சிறிது நேர ஓய்வின் பின்னர் ஒவ்வொருவராக குளித்து வந்ததும் இரவுணவாக அழகரட்ணத்தால் தயாரிக்கப்பட்ட சட்னியுடன் கூடிய தோசையை எல்லோரும் சேர்ந்து சாப்பிட்டனர்.

சாப்பாடு முடிந்தபின் நாலுமுள வேஷ்டியும் சேட்டும் ஒவ்வொரு வருக்கும் கொடுக்கப்பட்டது.

“ஏன் தம்பி இதெல்லாம்?”

“பறவாயில்லையண்ணே!... நாலுமுள வேட்டியை உடுத்தி சேட்ட வெளியால விட்டாத்தான் இங்கத்தைய ஆக்கள் மாதிரித் தெரியும். உடுத்திக்கொண்டு வெளிக்கிடுங்க...”


“எங்க தம்பி?”

“தியேட்டரில ‘செக்கண்ட் சோ’ படம் பாக்கப்போவோம்... சிவாஜி கணேசன் நடிச்ச ‘இரத்தத்திலகம்’ ஓடுது.”

ஐவரது வாயிலிருந்தும் வெளியேறிய உமிழ்நீரைத் துடைத்துக் கொண்டனர்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 21

*1963* கார்த்திகை மாதம் *14* ஆம் திகதி, வியாழக்கிழமை...

சில நாட்களின் பின்னர் நல்ல உறக்கமாக இருந்ததால் உடல் வருத்தம் நீங்கியவர்களாக காலையில் எழுந்தனர்.

காலை உணவை முன்கூட்டியே அருந்தி, பரந்தாமன் கல்லூரிக்குச் செல்ல, எட்டு மணியளவில் ஆறு பேரும் கலெக்ரரின் அலுவலகத்திற்கு வந்துவிட்டதால், அங்கு போடப்பட்டிருந்த வாங்குகளில் முதல் வரிசையில் இருக்கக்கூடியதாக இருந்தது.

நாலுமுள வேஷ்டியுடனே வந்திருந்தனர்... எட்டரை மணி யளவில் அலுவலகத்தில் நுழைந்தார் கலெக்ரர்.

ஒன்பது மணியளவில் பணியாளன் அழைத்ததும் அழகரட்ண மும் ஐந்து பேரும் உள்ளே சென்றனர்.

“வணக்கம் ஐயா!”

ஆறுபேரும் கரம் கூப்பிக் கூற, அவரும் பதிலுக்கு கரம் கூப்பி வணக்கம் கூறினார்.

“நான் அழகப்பா கல்லூரியில படிக்கிறன். இவங்க இலங்கையில இருந்து வந்திருக்கிறாங்க!”

ஐவரையும் தனித்தனியாகப் பார்த்தார்.

“என்ன தேவைக்காக என்னட்ட வந்திருக்கிறீங்க...”

நடந்தவைகளை விபரித்தார் அழகரட்ணம்... அவரது விபரிப் பைக் கேட்டபடி மற்றவர்களை அவதானித்தவாறிருந்தார் கலெக்ரர்.

“கேட்கவே வேதனையாக இருக்கு. நீங்க எவ்வளவு வேதனையை அனுபவித்திருப்பீங்க!...”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறிய கலெக்ரரின் முகத்தில் இரக்கம் இருந்தது...

மேசையிலிருந்த மணியை அழுத்தி பணியாளனை அழைத்து, அவன் மூலமாக எழுதுவினைஞர் வரவழைத்து, அவரிடம் விபரத்தைக் கூறி கடிதம் தயாரிக்குமாறு பணித்தார்.

"நீங்க அவரோட போய் உங்களட பெயர் மற்றும் அவர் கேட்கும் விபரங்களைக் கூறுங்க."

எழுதுவினைஞர் ஆறு பேரையும் அழைத்துச் சென்றார்.

அரை மணித்தியாலத்தால் கடிதத்துடன் முன்னே சென்ற எழுது வினைஞரைப் பின்தொடர்ந்தனர் அறுவரும்.

கடிதத்தைப் படித்துப் பார்த்து ஒப்பமிட்ட கலெக்ரர் அரச இலச்சினை பதித்து அழகரட்ணத்தின் கையில் கொடுத்தார்.

"எல்லாம் விபரமாக எழுதியிருக்கிறன். நீங்க ஒன்றுக்கும் யோசிக்கத் தேவையில்லை. விரைவாக குடும்பத்தோடு சேர்ந்து கொள்ள எனது வாழ்த்துக்கள்... சந்தேஷமா போயிற்றுவாங்க."

"நன்றி ஐயா!"

எல்லோரும் கரம் குவித்து நன்றிகூறிப் புறப்பட்டனர்.

"நீங்க பிரச்சினை இல்லாம இலங்கை போறதுக்கு ஏற்ற வகையில் கடிதம் தந்திருக்கிறார் கலெக்ரர். நீங்க றெயினுக்கோ, கப்பலுக்கோ ரிக்கற் எடுக்கத் தேவையில்லை. இந்தக் கடிதத்தைக் காட்டினாலே போதும்."

கடிதத்தை வாசித்து முடித்த அழகரட்ணம் கூறியதைக் கேட்டதும் மகிழ்வை வெளிப்படுத்த முடியாமல் அவனை மாறிமாறிக் கட்டியணைத்தனர்.

"தம்பி! மெட்ராசில இருந்து தனுஷ்கோடி வரேக்கையும், இங்க வரேக்கையும் ரிக்கற் இல்லாமத்தான் வந்தனாங்க. அதனால, பயந்து பயந்துதான் இருந்தனாங்க. இனிமேல் அந்தப் பயம் இல்லை."

கூறிவிட்டுச் சிரித்தார் யேசுராசா...

காலை பத்து மணிக்கு மேலானதால் அழகரட்ணத்தின் வீட்டுக்குச் சென்று, மதிய உணவை ஒன்றிணைந்து சமைத்து, மகிழ்வுடன் அருந்தினர்.

"தம்பி வேட்டியும் சேட்டும் கழுவவேணும் சவுக்காரம் தாங்களன்"

"ஏனண்ணே கழுவுறீங்க?"

"இப்பிடியே விட்டுட்டு போறதா தம்பி!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“உங்கள விட்டுற்று போகச் சொல்லி ஆரண்ணே சொன்னது? இது உங்களுக்குத் தந்ததுதான்... ஏனண்ணே என்னை சகோதரமா ஏற்கயில்லையா?”

ஐந்து பேரின் கண்களும் கலங்கின...

“மன்னிச்சுக் கொள்ளுங்க தம்பி...”

“நீங்க எங்களுக்குத் தம்பி மட்டுமல்ல... எங்களைப் பொறுத்த வரை வாழ்நாளில் மறக்கமுடியாதவர்...”

“ஒருவருக்கு ஒருவர் செய்யிற கடமைதானேயண்ணே!”

“அதுக்கும் உங்களைப்போல மனம் வேணுமே.”

“சரியண்ணே! நீங்க கொஞ்சநேரம் படுங்க. ஏழு மணிக்கு றெயினுக்குப் போகவேணும்.”

“தம்பி உங்கட விலாசத்த எழுதித் தாறீங்களா?”

“அதுக்கென்ன...”

கூறியவாறு ஒரு பேப்பரில் தனது பெயர் முகவரியை எழுதிக் கொடுத்தார் அழகரட்ணம்...

மாலை ஏழு மணிக்கு தனுஷ்கோடி செல்லவுள்ள தொடருந்து பெட்டியிலுள்ள இருக்கையில் அமர்ந்திருந்தனர் ஐந்து பேரும்.

அழகரட்ணமும் பரந்தாமனும் தொடருந்து பெட்டியின் உள்ளே நடை பாதையில் நின்றவாறு உரையாடினர்.

“தம்பி! நீங்க ரெண்டுபேரும் செய்த உதவிகள மறக்க ஏலாது. உங்கட அன்பளிப்பான வேட்டியும் சேட்டும் என்றைக்கும் உங்களை நினைவூட்டிக் கொண்டேயிருக்கும்... இது முகஸ்துதி இல்லைத்தம்பி, உண்மை... நாங்க கடிதம் போட்டா நீங்க போடுவீங்கதானே!”

“போடாம இருப்போமாண்ணே! நாங்க ஊருக்கு வந்தா கட்டாயம் உங்களப் பாக்க வருவோம். உங்கட வீடுகளுக்கு வாறது சுகமண்ணே. இந்தச் சம்பவத்தைச் சொல்லி ஆரட்ட கேட்டாலும் உடனேயே வீட்டைக் காட்டுவாங்கயில்லையா...”

எல்லோரும் மனம்விட்டுச் சிரித்தனர்.

“அண்ணே எங்கட்ட கொஞ்ச இலங்கைக் காசு இருக்கு. அதை வைச்சிருந்து எங்களுக்குப் பிரயோசனமில்லை. அதத் தாறம் நீங்க கொண்டுபோங்க அங்க உங்களுக்குத் தேவைப்படும்.”

தங்கள்மீது அவர்கள் கொண்டுள்ள அக்கறையை எண்ணி புளகாங்கிதம் அடைந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“தம்பி நீங்க படிக்கிறதால நல்லத யோசிக்கிறீங்க...”

தொடருந்து ஒலி எழுப்பியதும் பணத்தைக் கொடுத்துவிட்டு விடை பெற்றனர்...

***

*1963 கார்த்திகை மாதம் 15 ஆம் திகதி, வெள்ளிக்கிழமை...*

தனுஷ்கோடியில் தொடருந்து தரித்த நேரம் முதல் அப் பெட்டியிலேயே உறக்கத்தில் இருந்தவர்கள், இலங்கை செல்லவுள்ள சிந்தனையால் விழித்து தொடருந்து நிலைய மேடையை பார்த்தனர். கடிகாரம் ஐந்து மணியைக் காண்பித்தது.

அக்கணமே எழுந்து தொடருந்து கழிவறையில் காலைக் கடனை முடித்து, முகம் கழுவி, உடையைச் சீர்செய்துகொண்டு தத்தமது மாற்றுடைகள் உள்ள பையுடன் துறைமுகத்திற்குச் சென்றனர்.

அந்நேரம் அங்கே குறைந்த ஆட்களே வரிசையில் நின்றதால், இவர்களும் இணைந்துகொண்டனர்.

வாயில் கதவு திறந்ததும் மூன்றாவது பத்துப் பேருடன் உள்ளே சென்றனர்.

கலெக்ரரின் கடிதத்தைக் கொடுத்ததும் எந்தவொரு கேள்வியு மின்றி, குடிவரவு குடியகல்வு அலுவலகத்திற்கு அனுப்பி வைத்தனர். அங்கு கடிதத்தில் அரச முத்திரை பதித்து, உள்ளே செல்ல அனுமதித்தனர். பொதிகள் இல்லாமையால் சுங்கப் பிரிவிலும் தடையிருக்கவில்லை.

மதியத்துக்குப் பின்னர் கப்பல் புறப்பட்டது.

கப்பல் பயணித்த பாதையில் கடலை இரசிப்பதில் இவர்களுக்கு நாட்டமிருக்கவில்லை.

பயங்கரமான ஆழ்கடலில் பதினெட்டு நாட்கள் மிதந்தவர் களல்லவா? அத்துடன் இந்தப் பகுதியில் பல தடவைகள் தொழில் செய்துமிருக்கிறார்கள்.

கப்பலின் மேற் தளத்தில் விரிக்கப்பட்டிருந்த படங்குதான் படுப்பதற்கும் இருப்பதற்கும் பொதுவாக இருந்தது. கடந்த நாட்களில் தாங்கள் எதிர்கொண்டவற்றை மீட்டியவாறு, யாழ்ப்பாணம் செல்லும் பூரிப்பில் அதுசார்ந்த நினைவுகளோடு, எதிர்காலம் பற்றிய கற்பனையில் மூழ்கியவர்களாய் உறங்கிவிட்டனர்...

இரைச்சல் கேட்டு கண்விழித்து பார்த்தபோது தலைமன்னார் துறைமுகம் மிக அண்மையில் தெரிந்தது. அதைப் பார்க்க எழுந்த பயணி களின் ஆரவாரமே இரைச்சலாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிது நேரத்தால் தொடருந்து பாதையுடனான தலைமன்னார் துறைமுக மேடையில் கப்பல் அணைக்கப்பட்டது.

பொதிகளைக் காவியவாறு இடிபட்டும் இடறுப்பட்டும் பயணிகள் இறங்க ஆரம்பித்தனர். முன்னே சென்றுவிடவேண்டு மென்ற துடிப்பு அவர்களிடம்...

ஐந்து பேரும் புடவைப் பையுடன் நின்றதால் மற்றைய பயணி களுக்கு முன்னரே தலைமன்னார் துறைமுக மேடையில் கால் வைத்தனர்.

உள்ளம் குளிர்ந்து உடல் சிலிர்த்தது...

உற்சாகத்தோடு விரைந்து, குடிவரவு குடியகல்வு பகுதியை அடைந்தனர்.

கலெக்ரரின் கடிதத்தைப் படித்த அதிகாரி, அதில் அரச இலச்சினை பதித்து, ஒப்பமிட்டு, ஒப்படைத்து, தனது உதவியாளருடன் இவர்கள் சிரமமின்றி வெளியேற ஆவன செய்தார்.

வெளியே வந்தபோது தொடருந்து நிலைய மேடையில் கணிசமான ஆட்கள் நின்றனர். அவர்களைக் கண்டதும் உள்ளத்திலும் உடலிலும் ஏற்பட்ட மாற்றத்தை புரிந்துகொள்ளவே முடியவில்லை.

இத்தனை நாட்கள் இடைவெளியின் பின்னர் சொந்த நாட்டில் கால் பதித்திருக்கிறார்கள். அதுவும் வருடத்தில் சில வாரங்கள் தங்கி யிருந்து தொழில் செய்துவந்த தலைமன்னாரிலே நிற்கிறார்கள்...

பொங்கியெழுந்த உணர்வலைகளை ஓரங்கட்டிவிட்டு அங்கு காணப்பட்ட சிறிய உணவகத்தில் வடையும், தேநீரும் அருந்தினர்.

பணத்தை எடுத்துக் கொடுத்தபோது அழகரட்ணத்தின் முகம் அதனில் தெரிவதை மானசீகமாக உணர்ந்தனர்...

தொடருந்து, மேடையில் தயார் நிலையில் நின்றதால் அதனில் ஏறிக்கொண்டனர்.

முன்னர் பல தடவைகள் இங்கிருந்து யாழ்ப்பாணத்துக்கு பயணம் செய்துள்ளதால், யாழ்ப்பாணம் செல்வதாயின் மதவாச்சியில் இறங்கி, கொழும்பிலிருந்து வருகின்ற தொடருந்தில் ஏறியே பயணத்தைத் தொடர வேண்டுமென்பதை அறிவர்.


இரவு 9.00 மணி...

இவர்களையும், இவர்களின் கட்டுக் கடங்காத கற்பனையையும் சுமந்துகொண்டு பயணித்தைத் தொடர்ந்தது தொடருந்து...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசனநூலகம்
21 NOV 2017
மாநகரசபை
யாழ்ப்பாணம்




# 22

*1963 கார்த்திகை மாதம் 16 ஆம் திகதி, சனிக்கிழமை...*

*யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டு சென்ற 161 ஆவது நாள்...*

*முல்லைத்தீவு ஆழ்கடற்பகுதியில் தத்தளித்து, காற்றோடும் நீரோட்டத்தோடும் அடைந்து சென்ற 155 ஆவது நாள்...*

*இறந்தவர்களாகக் கருதப்பட்டு பிச்சை என்னும் ஏழாம்நாள் செலவு செய்யப்பட்ட 138 ஆவது நாள்...*

யாழ்ப்பாண தொடருந்து மேடையில் கால் பதித்தபோது ஐவரினது தேகமும் புல்லரித்தது... உணர்வு ஆக்கிரமித்தது... விழிகளில் நீர் நிரம்பியது...

தாய்நாட்டு மண்ணில் நிற்பதால் வெளிப்பட்ட புத்துணர்வு இதுவரை பட்ட துன்பங்ளை மறக்கச் செய்தது...

தரைக்கு மேலே எழுவது போன்ற உணர்வு... அந்நேர மகிழ்வுக்கு அளவே கிடையாது...

பயணிகள் வரிசையாகச் சென்று வாசலில் நின்ற ஊழியரிடம் பயணச்சிட்டையை ஒப்படைத்துச் சென்றவாறிருந்தனர்.

இவர்கள் மன்னாரிருந்து புறப்படும்போது பயணச்சிட்டை எடுக்கவில்லை. இடையில் பரிசோதகர் வந்தால் கலெக்ரரின் கடிதம் துணை செய்யும் என்ற நம்பிக்கை இருந்தது. தொடருந்தில், பரிசோதகர் வரவில்லை. ஆனால் இங்கே!

தற்துணிவுடன் கலெக்ரரின் கடித்தை அவரிடம் நீட்ட, அதை அவர் என்னென்று நினைத்தாரோ தெரியவில்லை. ஆட்களின் நெருக்கத் தால் வாங்கிப் பார்க்காமலேயே வெளியே செல்ல அனுமதித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதனை செய்ததைப்போன்ற மகிழ்வுடன் வெளியேறினர்.

தொடருந்து நிலையத்தின் வெளி விறாந்தையில் இருந்த மணிக்கூடு 5.30 எனக் காண்பித்தது...

கார்த்திகை மாதமென்பதால் இருள் இன்னமும் விலகாதிருந்தது. அந்த இருளோடு இருளாக சென்றுவிட வேண்டுமென்பதால், ஓட்டமும் நடையுமாக அவரவர் வீட்டை வந்தடைந்தனர்.

இறந்தவராகக் கருதப்பட்டவர் கண்முன்னே நிற்பதைக் கண்ட அவரவர் வீட்டுக் குடும்ப உறவுகள் உரத்துக் குரல் கொடுத்து அழுதனர்...

அக்கம் பக்கத்தார் அழுகுரல் கேட்டு சூழ்ந்துகொண்டனர்.

இதுவரை சுமந்த வேதனையையும், ஏக்கத்தையும், தற்போது அடைகின்ற சந்தோஷத்தையும் வெளிப்படுத்துவதாகவே அவர்களின் அழுகை இருந்தது.

பிரிந்தவர் மீண்டும் சேர்ந்திடும்போது அழுவதால் உண்டாகும் நிம்மதி கோடி கிடைத்தாலும் நிகரில்லாததல்லவா? அதனை அந்நேரத்தில் அவர்களும் உணர்ந்தனர்...

உணர்ந்த நிம்மதிக்கு தூபமிடுவதைப்போல சூரியனும் தன்னொளியால் பூமியின் இருளைக் கழைந்தான்...

***

ஐந்து பேரும் காணாமல் போய்விட்டதாக அறியப்பட்டபோது ஊரில் காணப்பட்ட எழுச்சி மாற்றமின்றி இருந்தது.

அந்நாட்களில் செல்வநாயகத்தின் வீட்டின் முன் வீதியில் குவிந்து நின்றவர்கள், இப்போது ஐந்து பேரின் வீடுகளிலும் பிரிந்து நின்றார்கள்.

மாறி மாறி ஒவ்வொரு வீட்டுக்கும் சென்று சுகம் விசாரிப்பதும் நடந்தவை பற்றி விசாரிப்பதுமாகவே பலரும்...


இவ்வாறே அன்றும், மறுநாளும் ஐந்து பேரினது வீடுகளும் காட்சியளிந்தன...

குடும்ப உறவுகள், உறவினர், அயலவர், அறிமுகமானவர்கள் வெளிப்படுத்திய உணர்வுகளால், ஐந்து பேரும் பதினெட்டு நாட்கள் அன்னம் - தண்ணீர் இல்லாமல் துடித்த துடிப்புகள், நாளும் பொழுதும் அடைந்த இன்னல்கள், எதிர்கொண்ட துன்பங்கள், உயிர்வாழத் தவித்த தவிப்புகள் அனைத்தையும் மறந்தவர்களாய் புதிய வாழ்வுக்குத் தயாரானார்கள்...

அதைப் பறைசாற்றுவதாக, சந்தோஷத்தை வெளிப்படுத்துவதாக மறுநாள் நிகழ்வு இருந்தது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 23

*1963* கார்த்திகை மாதம் *18* ஆம் திகதி, திங்கட்கிழமை...

யாழ். மரியன்னை பேராலயத்தில் காலை *7.00* மணிக்கு நடைபெற்ற திருப்பலியில் கணிசமான மக்கள்...

உயிர் காத்து, உடல் நலத்தோடு அழைத்துவர கருணை கூர்ந்த இறைவனுக்கு நன்றி செலுத்துவதற்கான நன்றித் திருப்பலியாக இருந்தது.

திருப்பலி முடிவில் குடும்ப உறவுகளின் விருப்பப்படி உறவினனான பஞ்சநாயகத்தின் ஏற்பாட்டில், ஆலயத்தின் முகப்பில் ஐந்து பேருக்கும் மாலை அணிவித்து, நாதஸ்வர மேளத்துடன் அழைத்து வரப்பட்டனர்.

இறந்துவிட்டதாக முடிவெடுத்து ஊர் வழமைப்படி சடங்குகள் செய்யப்பட்ட ஐந்துபேரும் உயிருடன் வந்துள்ளதை பறைசாற்றும் நிகழ்வாகவும் இந்த ஊர்வலம் அமைந்தது.

பாங்ஷால் வீதி, சென் பற்றிக்ஸ் வீதி, கடற்கரை வீதி, மவுண் கார்மல் வீதி வழியாக வந்த ஊர்வலம், மத்திய கிழக்கு வீதியில் சம்மாட்டி செல்வநாயகத்தின் வீட்டுடன் நிறைவுபெற்றது.

அங்கிருந்து தனித்தனி குழுக்களாகப் பிரிந்து, ஐவரினதும் வீடுகளுக்கும் அவரவர் சார்ந்த உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள், அறிமுகமானர்களால் அழைத்துச் செல்லப்பட்டனர்.

ஒவ்வொரு வீட்டிலும் திருமணவிழாவை நினைவூட்டும் வகையில் கொட்டகை போட்டு, அலங்கரித்து, விழாவுக்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பந்தல் முகப்பில் ஆராத்தி எடுத்து, சந்தனப் பொட்டிட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்பூட்டி, வருகைதந்தவர்களுக்கு கேக், பிஸ்கட், குளிர்பானம் வழங்கி கௌரவித்தனர்.

அந்தப் பகுதியே விழாக்கோலம் பூண்டதைப் போலக் காணப்பட்டது...

***

"சம்மாட்டி... சம்மாட்டி..."

அழைப்புக் குரலால் திடுக்குற்றவராகக் காணப்பட்ட நவின் சந்திரா, தான் எதிர்பார்த்துக் காத்திருந்த தனது போட், தொழிலாளருடன் நிற்பதை அப்போதுதான் கண்டார்.

"சம்மாட்டி என்ன செய்கிறீங்க?"

"நான்... நான்... உங்களத்தான் பாத்துக்கொண்டு நின்றனான்."

"மீன் கிடந்தாப்போல பிந்தீற்று. வாடிக்குப் போகப்போன னாங்க நீங்க நிக்கிறதக் கண்டாப்போல இஞ்ச வந்திற்றோம்..."

"காத்து பிலத்து வீசுதுதானே அதால ஏதோ யோசினையில நிண்டிற்றன்... நானும் போட்டில வாறன்..."

படகில் ஏறிக்கொண்டார்...

தொகையான மீன்களுடன் மீன் வாடியை நோக்கிச் சென்றது படகு...

**கலையார்வன்**

■■■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA JPL

# பின்னிணைப்பு

## தடித்த எழுத்திலுள்ள சொற்களுக்கான விளக்கம்

**வளிச்சல்** : கடலில் இறக்கப்பட்ட வலைகள், கடல் நீரோட்டத்தில் படகோடு வளிந்து செல்வது.

**வலை படுக்கும் நேரம்** : தொடராக கடலில் இறக்கப்பட்ட வலைகளில் மீன்கள் பிடிபடுவதற்காக விடப்படும் நேரம்.

**ஒதுக்கு** : காற்றுத் தடுப்பு.

**கூறைப்பாய்** : காற்றில் வள்ளத்தைச் செலுத்துவதற்காக 'இரட்டு' எனப்படும் தடித்த காரிக்கன் துணியையும், விசேட தயாரிப்பான மெல்லிய முறுக்குக் கயிற்றையும் இணைத்து, வள்ளத்துக்கு ஏற்ற அளவில் தயாரிப்பது.

**மண்டாடி** : தொழில் நுணுக்கங்களையும் நுட்பங்களையும் அறிந்தவர், தொழிலை வழிநடத்துவதுடன் அது சார்ந்த முடிவுகளையும் எடுப்பவர்.

**தண்டையல்** : வள்ளத்தை உரிய இடத்துக்குச் செலுத்துவதற்கு ஏதுவாக சுக்கானைப் பயன்படுத்துபவர்.

**கடையால்** : வள்ளத்தின் கூர்மையான பின்பக்கம். வள்ளத்தின் சம அளவான உயரம்.

**திரட்டுக்கால்** : வள்ளத்தின் விளிம்புக்கு மேல் உயர்ந்திருக்கும் கட்டை.

**மடக்கடி** : காற்றின் நீரோட்டத்தின் உந்தலுக்கு ஏற்றாற்போல் அலைகள் கரையை நோக்கி வேகமாகத் தாக்குதல்.

**அணியம்** : வள்ளத்தின் கூர்மையான முன்பக்கம். அதன் உயரமான பகுதி.

**வீவல்** : கரைவந்த அலை திரும்பிச் செல்லுதல். அவ்வேளை கடல் நோக்கிய இழுவை அதிகமாக இருக்கும்.

**சுருக்கு மடி** : வட்டமாக பல சுற்றுகளில் நூலினால் பின்னப்பட்ட கூம்பு போன்ற வடிவிலுள்ள பொறி.

**லோமியா** : பல நூலிழைகள் சேர்ந்த, இரண்டு அங்குலத்துக்கும் மேற்பட்ட விட்டத்தைக் கொண்ட, இறுக்கமான திரியை உடையது. இதனை எரியச் செய்வதற்கு டீசல் பயன்படுத்தப்படும். சூழ்லாம்பு என்றும் அழைப்பர்.

**சுக்கான்** : படகை வேண்டிய திசைக்குத் திருப்புவதற்கென கடையாலில் பொருத்தப்பட்டிருக்கும் தடித்த பலகையினாலானது.

**பாகக் கயிறு** : தலைப்பில் இரும்புக் குண்டு கட்டப்பட்ட நீண்ட கயிறு. கடலின் ஆழத்தை அறியப் பயன்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணியக் கொம்பு : வள்ளத்துக்கு மேலே உயர்ந்திருக்கும் அணியத்தின் இணைப்பு மரம். வள்ளத்துக்கு ஏற்ற அளவில் செம்மைப் படுத்தப்பட்டிருக்கும் இதனில் எவரும் கால் வைப்பதில்லை.

பாதங் கழுவிய தண்ணீர் : விரும்பிய கடவுளரின் உருவச் சிலையின் பாதத்தைத் தொட்டுக் கழுவிய நீர்.

போயா : ஒரு வகை கலவையில் செய்யப்பட்ட மிதப்பு.

மோவலை : வலையின் மேல் பகுதி. மேற்பக்கம் மிதந்து வேலிபோல் நிற்பதற்காக சிறிய 'போயா'க்கள் பல கட்டப்பட்டிருக்கும்.

ஒட்டம் : வள்ளத்தை சுற்றிவர இருபக்கத்து மேல் விழிம்புகளில் கனமான ஒரு சாண் அளவுள்ள பலகையால் தொடராக இணைக்கப்பட்டிருப்பது.

மடவலை : வலையின் கீழ்ப்பகுதி. அதன் முனையில் கட்டப்பட்டுள்ள கற்களின் உதவியால் கடலின் நிலத்தடி வரை அமிழ்ந்து நிற்கும்.

வங்குகள் : மனித உடலின் மார்பு எலும்புகளைப் போன்று, வள்ளத்திற்கு உருவம் கொடுக்கும் வகையில், அணியம் முதல் கடையால் வரை அமைந்திருக்கும் வேப்பமரக் கட்டைகள்.

கானாத்தடி : தேவைக்கேற்ப சுக்கானை திருப்புவதற்கு அதனில் செருகப்படுகின்ற தடி.

கூத்துவாரி : பாய்மரத்தை வள்ளத்தின் நடுவில் நிறுத்தி வைப்பதற்கேற்ற வகையில் வள்ளத்துக்கு குறுக்காக பொருத்தப்பட்டுள்ள துவாரமிடப்பட்ட கனமான பலகை.

பருமல் : இழுத்து விரிக்கப்பட்ட பாயின் மேற்பகுதியை பாய்மரத்துடன் இணைத்துக் கட்டும் வைரமான மரக்கோல்.

ஆஞ்சான் கயிறு : பாய்மரத்தின் முனையிலுள்ள கப்பியின் ஊடாகச் செலுத்தி பாயை உயர்த்தி இழுக்கப் பயன்படும் கயிறு.

மான்பாடு : தண்ணீர் சலனமற்று அமைதியாக இருப்பது. கடலினடியில் மீன்கள் திரளாக நிற்கையில் கடலின் மேற்பரப்பில் காணப்படும் திரவப்படிவாகவும் இருக்கும்.

வடு : வற்று.

வெள்ளம் : பெருக்கு.

பிச்சை : மரணமடைந்தவருக்குச் செய்யப்படும் ஏழாம் நாள் செலவு.


தாறுபாய்ச்சி : கால் வரை நீளமுள்ள கொடுக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிவந்தவை...

| | | |
|---|---|---|
| 01. தடுமாறும் சாஸ்திரங்கள் | *(கவிதைத் தொகுப்பு)* | 1993 |
| 02. தமிழ்ச்சோலை | *(அறிவியல்)* | 1994 |
| 03. அவலத்தின் இராகங்கள் | *(கவிதைத் தொகுப்பு)* | 1995 |
| 04. செயல்முறைக் கணிப்பொறி | *(அறிவியல்)* | 1998 |
| 05. கணிப்பொறி 2000 | *(அறிவியல்)* | 2001 |
| 06. களம் தந்த களங்கம் | *(தென்மோடிக் கூத்து)* | 2003 |
| 07. குருநகர் கலைமாட்சி | *(பதிவுகள்)* | 2003 |
| 08. கடலலைகள் கொஞ்சும் நகர் | *(பதிவுகள்)* | 2006 |
| 09. குருதிக் குளியல் | *(குறுநாவல்கள்)* | 2007 |
| 10. ஆன்மீகத்தில் குருநகர் மக்கள் | *(பதிவுகள்)* | 2008 |
| 11. ஆகுதி | *(சிறுகதைத் தொகுப்பு)* | 2009 |
| 12. தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குரிய முன்னோடிக் குறிப்புகள் | *(அறிவியல்)* | 2009 |
| 13. கூத்துக்கள் - 5 | *(தென்மோடிக் கூத்துக்கள்)* | 2009 |
| 14. குறுங்கூத்துக்கள் | *(தென்மோடிக் கூத்துக்கள்)* | 2011 |
| 15. உப்புக்காற்று | *(நாவல்)* | 2012 |
| 16. வேப்பமரம் | *(நாவல்)* | 2013 |
| 17. அறுவடை | *(காவியம்)* | 2014 |
| 18. கடல் கடந்த நாட்கள் | *(பயண அனுபவப் பதிவுகள்)* | 2015 |
| 19. வெள்ளைச்சேலை | *(நாவல்)* | 2016 |
| 20. அந்த 18 நாட்கள் | *(நாவல்)* | 2017 |







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்ற விருதுகள்

## நூல் விருதுகள்













கடலலைகள் கொஞ்சும் நகர்

*வடக்கு மாகாண கல்வி அமைச்சின் விருது* 2007

குருதிக் குளியல்

*வடக்கு மாகாண கல்வி அமைச்சின் விருது* 2008

கூத்துக்கள் - 5

*அரச இலக்கிய (சாஹித்திய) விருது* 2010

*தமிழியல் விருது* 2010

குறுங்கூத்துக்கள்

*அரச இலக்கிய (சாஹித்திய) விருது சான்றிதழ்* 2012

இலங்கை இலக்கியப் பேரவையின் விருது 2012

உப்புக்காற்று

*அரச இலக்கிய (சாஹித்திய) விருது* 2013

*வடக்கு மாகாண கல்வி அமைச்சின் விருது* 2013

*தமிழியல் விருது* 2013

இலங்கை இலக்கியப் பேரவையின் விருதுத் தெரிவு 2013

வேப்பமரம்

இலங்கை இலக்கியப் பேரவையின் விருதுத் தெரிவு 2014

அறுவடை

*வடக்கு மாகாண கல்வி அமைச்சின் விருது* 2015

கடல் கடந்த நாட்கள்

*அரச இலக்கிய (சாஹித்திய) விருது* 2016

*வடக்கு மாகாண கல்வி அமைச்சின் விருது* 2016

## வேறு விருதுகள்


கலாபூஷணம் *(கலாசார அலுவல்கள் திணைக்களம்)* 2014


யாழ் ரத்னா *(யாழ் பிரதேச கலாசார பேரவை)* 2014

தேசிய மட்ட சாதனையாளர் 2017

## சிங்கள மொழி மாற்றம்

கறதிய சுலங் *(கலாசார அலுவல்கள் திணைக்களம்)* 2015












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்புகளுக்காக...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்புகளுக்காக...

KOHA JPL

259789



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நிகழ்வோடு சம்பந்தப்பட்டவர்கள்




வஸ்தியாம்பிள்ளை பிரான்சீஸ்
(செல்வநாயகம்)
24.02.1924 - 07.12.2009
விஜயன் படகுச் சம்மாட்டி



தம்பு எட்வாட்டர் (எல்வாட்டர்)
11.10.1933 – 21.04.1991
தொழிலாளி



தம்பு ஜேக்கப்
23.07.1936 – 01.09.2016
தொழிலாளி




பத்திநாதர் பீற்றர்
(நவின்சந்திரன்)
31.01.1943
மண்டாடி



ஆசீர் யே சுராசா
28.10.1944 –17.01.2000
தொழிலாளி



செபமாலை இராசகுலம்
06.09.1946
தொழிலாளி




ISBN 978-955-0197-07-1

ஜெயந்த் சென்ரர்
021 222 9021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org